ஆராய்ச்சி

Aaraaichi

காலாண்டுப் பத்திரிகை

ஆசிரியர்

நா. வானமாமலை

மலர் 3 இதழ் 1

வாழ்த்து

P. C. JOSHI.
Jawaharlal University, New Delhi.

ஆராய்ச்சிக்கு,

உன் பிறந்தநாளுக்கு என் வாழ்த்து. குழந்தைதான்; ஆயினும் விரைவில் மனிதனாகிவிட்டாய்.

ஆராய்ச்சி தமிழர்கள் தங்கள் பழமையான பண்பாட்டில் தங்களைப் புதிதாக உணரவும், சுயநலக்காரர்களும், பேராசைக்காரர்களும் புகுத்தி வைத்திருக்கும் தீமையான அம்சங்களை தங்கள் பண்பாட்டிலிருந்து விலக்கி ஒதுக்கவும் துணை புரிகிறது. முன்னேறுகிற மக்களின் பாதையைச் சுத்தமாக்குவது சுலபமான வேலையன்று. ஆராய்ச்சி இத்தகைய தன்னலமற்ற, மக்களை உயர்த்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இளைஞர்களும், முதியவர்களுமான உறுதிமிக்க ஆய்வாளர் குழுவொன்று ஆராய்ச்சியின் நிழலில் சேர்ந்துள்ளது. இணைந்து நில்லுங்கள். அறிவாளிகளையும், மனச்சாட்சியுடையவர்களையும் உங்களோடு இணைத்துக் கொள்ளுங்கள். தமிழர்கள் முன்னேறுகிறபோது, புதிய புதிய சிந்தனை அடுக்குகளை அவர்களுக்கு வெளிப்படுத்துங்கள். இந்திய மக்களின் உயர்வானதும், ஒற்றுமையை வலுப்படுத்துவதுமான சிந்தனைகளைத் தூண்டுங்கள்.

அதுவரை உங்களுக்கு ஓய்வில்லை.

பி. ஸி. ஜோஷி

ஆராய்ச்சி

மலர் 3] [இதழ் 1

8 வது இதழோடு ஆராய்ச்சிக்கு இரண்டு ஆண்டுகள் நிறைவு ஆகிறது. முதல் இதழ் வெளிவந்து இரண்டு ஆண்டுகளும் எட்டுமாதங் களும் ஆகிவிட்டது. நான்கு இதழ்களை ஓராண் டாகக் கணக்கிட்டால் மூன்று ஆண்டுகள்தான் ஆகிறது. பிற ஆய்விதழ்களை நோக்கும் பொழுது இதுவோர் பெரிய முன்னேற்றமே. ஆய்விதழ்களில் சில இரண்டு இதழ்களோடு வெளிவர இயலாமல் நின்று விட்டன. சில ஆய்விதழ்கள் காலாண்டுக்கு ஒரு முறை வெளி வரத் திட்டமிட்டு இரண்டாண்டுகளில் இரண்டு மூன்று இதழ்களை வெளியிட்டுவிட்டு நின்று போயின. மிகவும் பணபலமுள்ள ஓர்சர்வதேசியத் தமிழியல் ஆய்வுப்பத்திரிகை படாடோபமாக 2 இதழ்கள் வெளியிட்டு நின்றுவிட்டது.

இவ்விதழ் 9வது இதழ். ஆண்டென்றால் மூன்றும் ஆண்டுத்துவக்கம். சென்ற இரண்டு ஆண்டுகளில் இவ்விதழ் சில அறிவுத் துறை களில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. பல துறைகளிலும் தமிழ் மொழியை நுழைய விட்டிருக்கிறது. இலக்கியம், சமயம் ஆகிய துறையில் தேங்கிக் கிடந்த தமிழை, தற்கால அறிவுத் துறைகளில் பாயவிட்டிருக்கிறது. நாம் தமிழ்ப் பணிமட்டும் செய்யவில்லை. அறிவுப் பணியும் செய்கிறோம். நவீன அறிவியல் உலக மக்களின் பழமையான சிந்தனைகளையெல்லாம் புரட்சிகரமாக மாற்றிவருகிறது. இது இயற்கை விஞ்ஞானத் துறைகளில் மட்டுமல்லாமல், சமுதாய அறிவியலிலும் டார்வின் காலமுதல், எங்கல்ஸ், கார்டன்சைல்டு, மாலினுவ்ஸ்கி முதலிய மானிடவியல், சமுதாயவியல் விஞ்ஞானி களுடைய சிந்தனைகள் தற்பொழுது எல்லா அறிவியல்களையும் பாதித்துள்ளன. இலக்கியம், வரலாறு, பண்பாடு ஆகிய சிந்தனைத் துறைகள் அதற்கு விலக்கல்ல. எனவே தமிழ்ப் பண் பாட்டையும், இந்தியப் பண்பாடுகளையும் இன்றைய சமுதாய — மானிடவியல் ஆய்வு முடிவுகளின் வெளிச்சத்தில் அவற்றை மறுமதிப் பீடுகள் செய்ய ஆராய்ச்சி முயன்று வருகிறது. பழமையில் தேங்கி புதுமையான இன்றைய அறிவியல் உலகிற்கு வரத் தயங்கும் தமிழ் ஆய்வையும், வரலாற்று ஆய்வையும், பண் பாட்டையும் ஆராய்ச்சி, அறிவியல் வளர்ச்சி யின் அகன்ற களத்திற்கு அழைத்துவரச் செயல் புரியும். நமது பழமையை இன்றைய வளர்ச்சி பெற்ற விஞ்ஞான முறையியல்களால் துருவி ஆராய்ந்து, சமய, இன, பழமைப்பற்று வக்கி ரங்களில் இருந்து விடுவித்து, இயற்கை விஞ்ஞா னங்களைப்போல, சான்று தேடுதல், பகுத்தாய் தல், ஒப்பிட்டு ஆய்தல், தருக்கரீதியாக அனு மானித்தல் போன்ற ஆய்வு முறைகளைப் பயன் படுத்தி ஆராய்ந்து உண்மையை நிறுவ முயலும்.

பசித்தவன் பழங்கணக்குப்பார்த்த கதையை நாம் அறிவோம். தற்காலத்தின் பொருளாதார, அரசியல், பண்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதவர்கள் தான், பிரச்சினைகளை மறந்து தாத்தா தாசில் பண்ணிய கதையில் மனம் ஆழ்ந்து போவார்கள். பழம்பெருமை தற்கால வளர்ச்சிக்குத் துணைசெய்யும் வரைதான் அதனை மதித்தல் வேண்டும். பழமைக்குத் திரும்ப ஆசைப் படுகிறவர்கள், தற்காலப் பிரச்சனை களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் அழிந்து போவார்கள். அவர்கள் பண்பாடும் மறக்கப் படும். புதிய பண்பாட்டு வெள்ளத்தில் பழமை யின் சுவடுதெரியாமல் போய்விடும். வாழ்க்கை யில் முன்னேற்படைத்த பண்பாடு பயன்படாமல் பூமியினடியில் அகழ்வாராய்ச்சியாளரது மண் வெட்டிகளுக்கு மட்டும் அகப்படும் பண்டை நாகரிகங்கள் பல. அவ்வாறு அவை அழிந்த தற்குக் காரணம், தற்கால அறிவியல், பண் பாட்டு வாழ்க்கை வளர்ச்சிக்கேற்ப பண்டைப் பெருமையுடைய நாகரிகங்கள் வளர்ச்சி பெறுமையும், தற்கால அறிவியல் சமுதாய வளர்ச்சிக்குப் பண்டைய சமுதாயங்களின்

பண்பாடும், அறிவியல் வளர்ச்சியும், சமுதாய வளர்ச்சியும் ஈடு கொடுக்க முடியாமற் போனதுமேயாகும்.

இவ்வரலாற்றுண்மைகளிலிருந்து கற்றுக்கொண்டு நமது நாடு உலக அறிவியல் நிலைக்கும், பண்பாட்டு நிலைக்கும் தன்னை உயர்த்திக்கொள்ளுதல் வேண்டும். தனது பண்பாட்டில் புதுமை புகுவதையும், பழையன கழிவதும் அவசியம். பழமையில் தற்காலத்திலிருந்து வருங்காலத்திற்கு முன்னேறுவதற்குரிய கூறுகளை வயப்படுத்திக்கொண்டு, புதுமையின் முன்னேற்றப் பாதையில் விமான வேகத்தில் செல்ல நாம் முயலுதல் வேண்டும்.

ஆராய்ச்சி இந்நோக்கத்தை நோக்கி முன்னேறும்.புதுத்துறை ஆய்வுகளைவெளியிடும். பழமையை இன்றைய அறிவு வளர்ச்சி நிலையிலிருந்து நோக்கி, மதிப்பிட்டு, இன்றைய வளர்ச்சிக்குப் பயன்படுத்த முயலும்.

இவ்விதழிலேயே,இம்முயற்சியின் ஆரம்பக் கூறுகளைக் காணலாம். தற்காலத் தமிழ் நாவல்களை முழுமையாக, படைப்பின் சமுதாய அடித்தளத்தோடும், பண்பாட்டுச் சூழலோடும் சேர்த்து, அதன் இலக்கியப் போக்கையும்,குறிக்கோளையும் மதிப்பிட முயலுகிற நான்குகட்டுரைகளை வெளியிடுகிறோம். இம்முறையியல் தமிழுக்குப்புதிது. தமிழ் இலக்கிய விமர்சனத்தில் 'இலக்கியத்தரம்' என்ற பெயரில் விமர்சக மன்னர்கள் குண்டாந்தடியைப் பிரயோகித்து வருகிறார்கள். அவர்களுடைய வக்கிரங்களுக்கேற்ப இந்த குண்டாந்தடி சுழலும்.இவ்விதழின் கட்டுரைகளில் படைப்புகளை சமூக அடித்தளத்தோடும்,பண்பாட்டுச் சூழலோடும் கொண்டுள்ள தொடர்புகளை, வெளிப்படுத்தி, படைப்பாளியின் இலக்கியப் படைப்பு முறையியலையும், நோக்கையும் ஆய்வாளர்கள் ஆராய்ந்துள்ளார்கள்.

நம்முடைய குறிக்கோளுக்கு ஏற்ப, இந்திய வரலாற்றிலுள்ள வக்கிரப் பார்வைகளைப் பற்றியும், அவற்றை அறிந்து ஒதுக்கிவிட்டு, நேரான விஞ்ஞான முறை வரலாற்று ஆய்வுமுறைபற்றியும் ஓர் கட்டுரை வெளியிடப்படுகிறது.ரொமீலா தப்பார் அவ்வக்கிரங்களை எடுத்துக்காட்டுகளோடு இனம்காட்டி, அறிவியல் முறையான வரலாற்று ஆய்வு இன்னதென்று சுட்டிக்காட்டி அதன்படியே இந்தியாவின் வரைபடிமமாகச் சித்தரித்துக்காட்டியுள்ளார். மூன்று கட்டுரைகளில் முதல் கட்டுரை இவ்விதழில் வெளியாகியுள்ளது. இன்னும் இரண்டு கட்டுரைகள் தொடர்ந்து வெளியாகும்.

தமிழக வரலாற்று ஆதாரங்களைத் திரட்டி வெளியிடுவதும், அவற்றிலிருந்து நமது வரலாற்றை முறையாக புனர்நிர்மாணிப்பதும் நமது நோக்கம். இவ்விதழிலேயே இம்முயற்சி துவங்குகிறது. புகார் பற்றிய கட்டுரையைப் பாருங்கள். இலக்கியச் சான்றுகளை, அகழ்வியல் சான்றுகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்கள். இதுபோன்ற முயற்சிகள் தொடரும்.அடுத்துவரும் இதழ்களில் கொற்கை, வடாற்காடு வீரக்கற்கள், பண்டைக் கேரள வீரக்கற்கள் போன்ற ஆதாரங்கள் ஆராயப்படும்.

இலக்கிய ஆராய்ச்சியும் பெரிதும் வலுப்படுத்தப்படும். சைன பௌத்த இலக்கியங்கள், தற்கால இலக்கியம், இலக்கிய விமரிசன ஆய்வுகள் ஒவ்வொரு இதழிலும் இடம்பெறும்.

செய்திகள், சிந்தனைகள் என்ற பகுதியில் நமது இதழ் ஈடுபட்டுள்ள ஆய்வுத்துறைகளில் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் உண்மைகளை வெளியிட்டு அவற்றின் மீது ஆசிரியர் கருத்துக்களும் கூறப்படும்.

அட்டைப்படம், ராஜராஜன், கருவூர்தேவர் இருவரது உருவப்படங்கள். இதுகுறித்து ராஜராஜனைப்பற்றிய தொல்பொருள்கள் என்ற கட்டுரையில் படியுங்கள்.

இனி இதழின் உள்ளேயும் ஆய்வுக்கட்டுரைக்குத் தொடர்பான படங்கள் வெளியிட முயலுவோம் இவ்விதழில் புகாரில் அகப்பட்ட பண்டைய காசுகள்,சம்பாபதிகோயில், தெய்வம் முதலியன வெளியிடப்படுகின்றன.

நோக்கம் பெரிது.முயற்சியும் பெரிதாயிருக்க வேண்டும். உங்கள் ஆதரவு அதைவிடப் பெரிதாயிருக்கும் என நம்புகிறேன்.

நா. வானமாமலை

ராஜராஜ தேவனைப் பற்றிய தொல்பொருள்கள்

நா. வானமாமலை

பல்லவர் பேரரசுக்குப் பின்னர் தமிழ்நாடு உள்ளடக்கிய ஒரு பேரரசை நிறுவியவன் ராஜராஜதேவன். தமிழ் நாட்டுச் சிற்றரசர்களை யும், முடிமன்னர்களையும், வென்று ஓர் தமிழ்ப் பேரரசை நிறுவி, அதனைக் கேரளத்திலும், மைசூரின் ஓர் பகுதியிலும், ஆந்திரத்திலும் விரிவடையச் செய்தவன் ராஜராஜன். அவனது மகன் ராஜேந்திரன் கங்கை வரையிலும் படை யெடுத்துச் சென்றான். சாவகம் ஆகிய தீவுகளை யும் வென்றான். ஆனால் அவனது புகழ் இவற் றால் எல்லாம் நிலைத்திருக்கவில்லை. அவனைப் போன்றேஇந்தியாவில்படைவலிமையால்பேரரசு நிறுவியபல மன்னர்கள் இருந்தனர். சந்திரகுப்த மௌரியனும், சமுத்திரகுப்தனும், ஹர்ஷதேவ னும், சதகர்ணியும், புலிகேசியும், விக்கிரமாதித் தனும், மகேந்திரவர்மனும் அவனது மகன் நரசிம்மவர்மனும், அவன் மரபில் உதித்த நந்திவர்மர்களும், கேரளமன்னன் குலசேகர னும், பாண்டிய மன்னர்கள் குலசேகர பாண்டி யனும், சுந்தரபாண்டியனும், விஜயநகர ராயர் களும், முகலாயச் சக்கரவர்த்திகளும், பாபர் முதல் ஔரங்கசீப் வரை படைவலிமை கொண்டு வலிமை குன்றிய அரசுகளை வென்று பேரரசு நிறுவி, சில நூற்றாண்டுகள் அவர்களும், அவர் கள் வழிவந்தோரும் ஆண்டிருக்கிறார்கள்.

அவர்களுள் சிலர் கலைகளும், சிற்பமும் நிலைத்து நிற்பது கண்டு தங்களது புகழை நிலை யாக்கிக் கொள்ளக கலைகளுக்கும், சிற்பங்களுக் கும் ஆதரவு தந்தார்கள். மாமல்லபுரத்துச் சிற்பங்கள் மகேந்திரவர்மன் புகழையும், தஞ்சைப் பெருங்கோயில் ராஜராஜன் புகழையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

ராஜராஜன் தனது புகழையும், தனது சமய நம்பிக்கைகளையும், தான் அமைத்த தான தருமங்களையும், அவற்றிற்கென விடுத்த நிலங் களையும் நெடுநாள் நிலைத்திருக்கச் செய்ய விரும்பினான். சமய ஆர்வத்தாலும், புகழார் வத்தாலும் ஆயிரக்கணக்கான சிற்பிகளுடைய வேலைத்திறனாலும், கைவன்மையாலும் கோயில் கட்டுவித்தான். கலைகளின் வளர்ச்சிக்கு அவனது புகழார்வமும், சமய நம்பிக்கையும் காரணங்களாயிருந்தன. கோயிலில் சமயக் குரவர் சிலைகளையும், தெய்வச் சிலைகளையும் செய்து வைத்ததோடு, தனது சிலையையும், தனது பட்டத்தரசியின் சிலையையும் செய்து வைக்கச் செய்தான்.

அதுமட்டுமின்றி பெரிய கோயில் சுற்றுச் சுவரில் ஓவியங்கள் தீட்டுவித்தான். சுந்தர மூர்த்தி நாயனாரும்,சேரமான் பெருமாள் நாயனா ரும்,வெள்ளை யானைமீதும்,குதிரைமீதும்அமர்ந்து கைலாயம் செல்லும் காட்சியை வரையச் செய் தான். அவன் போற்றிய நாயன்மாரது கதை களின் நிகழ்ச்சிகளையும் வரையச் செய்தான். அதனோடு அவனுடைய குருநாதரான கருவூர்த் தேவருக்குப் பின்னால் நிற்பது போலத் தன் உருவத்தையும் வரையச் செய்தான். இவை நிகரற்ற வரலாற்றுச் சான்றுகள். சிலையை இன்று காணோம். ஆனால் சித்திரம் இருக்கிறது. சா. கணேசன் அவர்கள், அச்சித்திரங்கள் கருவூர்த்தேவருடையதும், ராஜராஜனுடையதும் அல்ல என்று கூறுகிறார். ஆனால் உட்சுற்று சுவரில் காணப்படுவதாலும், அவன் காலத்தில் பக்திபாராட்டி, சிலையெடுத்த நாயன்மார் கதை கள் இருப்பதாலும், தன் சிலையை தன் காலத் திலேயே கோவிலினுள் வைக்கச் செய்தவனாத லாலும், அச்சித்திரத்தை அவனே ஆணையிட்டு வரையச் செய்திருக்கக் கூடும் என்றே தோன்று கிறது.

பெரியகோவில் தவிர வேறு கோயில்களி லும் அவனுடைய சிலைகள் உள்ளன. அவை

சமகாலத்தனவாக இல்லாவிடினும், சமகாலத்து பெரியகோவில் சிலையை மாதிரியாகக் கொண்டு செய்யப்பட்டிருக்க வேண்டும். கும்பகோணத் தருகிலுள்ள திருவிசலூரில் உள்ள கோவிலில் ஒரு சிவலிங்கத்தை ஒரு ஆணும் பெண்ணும் வணங்குவது போன்ற ஒரு சிலையுள்ளது. இது ராஜராஜனும் அவன் மனைவி உலோக மாதேவியாகவும் இருக்கலாம் என்று நீலகண்ட சாஸ்திரியார் கருதுகிறார். சிலர் அது பிற்காலச்சிலை என்கிறார்கள். திருநறையூரிலுள்ள சௌடேஸ்வரர் கோவிலில் ராஜராஜன் சிலையென்று நம்பப்படும் ஓர் சிலை யுள்ளது. அதில் அவன் ராஜகம்பீரத்தோற்ற முள்ள இளைஞனாகச் செதுக்கப்பட்டுள்ளான். கோவிந்தப்புதூரில் உள்ள கலிங்கஜயேச்சுரர் கோவிலில் ராஜராஜன் சிலையொன்றுள்ளது. கைகூப்பியவாறு தாடியுடையவனாய் ராஜராஜன் சித்தரிக்கப்பட்டுள்ளான். பெரிய கோயிலில் இன்று காணப்படும் ராஜராஜன் சிலை அவன் காலத்தில் மூவேந்த வேளான் என்ற அதிகாரி செய்து வைத்ததாகச் சாசனம் குறிப்பிடும் சிலையன்று என்று நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார்.

இவ்வாறு அவன் காலத்திய சிலைகளும், அவனுக்குப் பிற்காலத்துப் பழைய சிலைகளும் தஞ்சை மாவட்டக் கோவில்களில் உள்ளன.

அவனைத் தமிழர்கள் மறக்க மாட்டார்கள். தமிழ்ச் சிற்பக் கலைக்கும், எழுத்துருவத்திற்கும், நிருவாக முறைக்கும்,தேவார இலக்கியத்திற்கும் சித்தாந்த சாத்திரத்திற்கும் அவன் பணிபுரிந் துள்ளான். அவன் கலைப்பணிக்காக அமர்த்திய நடன மாதர் முறை இன்றில்லை. அவனுடைய நிருவாக அமைப்பு அதாவது பிராமணர், பிராம ணரல்லாதாராகிய நிலப்பிரபுக்களின் ஆதிக்க அமைப்பு இன்றில்லை. ஆனால் அவன் கட்டிய கோயிலினால் அவன் வளர்த்த சிற்பக்கலையும், தேவாரத்தால் ஏற்பட்ட மொழிவளர்ச்சியும், வரிவடிவச் சீர்திருத்தத்தால் மொழிக்கு ஏற் பட்ட வளர்ச்சியும் மறக்கவொண்ணாததே.

அவனுடைய சிற்பங்கள், சித்திரங்கள் தேடினால் அகப்படும். அவை நமது வரலாற்று இயலுக்கு இன்றைய புதிய சிலையை விடப் பெரிதும் முக்கியமானவை.

தஞ்சைப் பெரிய கோவில் சித்திரம் முகப்புப் படமாக வெளியிடப்படுகிறது.

“தாமரை”

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு கிளையின், கலை இலக்கிய மாத இதழ்)

நிறுவியவர் : **ப. ஜீவானந்தம்**

சிறுகதைகள், கவிதைகள், திறனாய்வுக் கட்டுரைகள், இலக்கிய விவாதங்கள் நிறைந்த மாத இதழ்

ஒவ்வொரு மாதம் 10-ம் தேதி வெளிவரும்

ஆண்டுச் சந்தா ரூ. 8-00

தனி இதழ் காசு. 0-60

ஆசிரியர்,

பிராட்வே, **சென்னை.**

புதுக் கவிதையில் புதிய போக்கு.

கனவுகள் + கற்பனைகள் - காகிதங்கள்

நா. வானமாமலை

கனவுகள் உள் ஆழத்தில் உறக்கத்தில் எழுந்து நனவில் முகிழ்ப்பவை. கற்பனைகள் நனவிலேயே தோன்றிப் பறப்பவை. ஆயினும் இவையிரண்டிற்கும் கட்புலனாகாத வேர்கள் சமுதாய உறவுகளே. அவற்றின் தடைகளினால் உள்ளத்தில் வளரும் கனவும், கற்பனையும் சிறைப்படுத்தப்பட்டு வாழ்க்கையின் இன்பமாக மாறிவிடாமல் வறண்டு போகின்றன. வறட்சியைத்தான் மீரா காகிதமாக்கிவிட்டார்போலும்.

தற்காலப் பணஉறவுச்சமுதாயத்தில்வாழ்க்கையின் மதிப்புகளுக்கு அடிப்படையே பணம் தான். அமெரிக்காவில் 5,000 டாலர் யோசனை, 1000 டாலர் அழகு, 10,000 டாலர் பரிசுக்குரிய புத்தகம். 2,000 டாலர் மதிப்புடைய வெண்கலச் சிலை, 20,000 டாலர் வருமானம் தரக்கூடிய அறிவியல் திட்டம்(Project) என்று கலைமுயற்சிகளுக்கும், அறிவியல் முயற்சிகளுக்கும் கலைப் பொருள்களுக்கும் டாலரில்தான் மதிப்பு வைக்கிறார்கள். ஸ்டாலினது மகள் ஸ்வெட்லானாவின் புரளிக் கதைகளை, 7 லட்சம் டாலர் விலை கொடுத்து வாங்கி, அவளது சுயசரிதையாக வெளியிட்டன, அமெரிக்கப் பொய் விலைப் பத்திரிகைகள். பொய்க்குக்கூட விலையுண்டு முதலாளித்துவ உலகின் தலைநகரில்.

மனித உணர்வுகளில் மிகவும் நுண்மையும் அழகும் வாய்ந்தவை, இளமைக்காலக் கனவுகளும் கற்பனைகளும். இவை அழகிய மொட்டுக்கள். மலர்வதற்குரிய தோட்டமின்றி அவை வாடிவிடுகின்றன. தோட்டத்தின் சொந்தக்காரன் பண மதிப்பையேயன்றி அழகைக் காண முடியாத குருடன். இவ்வுணர்வுகளைக் கவிஞர்களும், கலைஞர்களும் போற்றினாலும்,வாடிவிடும் இதனைப் பார்த்து சோகஉணர்வும் கொண்டனர். பண மதிப்புச் சமுதாயத்தில், திருமண உணர்வும் ஓர் பண-உறவே. இதனை நான் விளக்க வேண்டியதில்லை.

எனினும் பண மதிப்பே, வாழ்க்கையின் அடிப்படை மதிப்பாக இருக்கும் ஒரு சமுதாயத்தின் திருமணக் கருத்தையும், மனித உணர்வு மதிப்பை (human value)யே வாழ்க்கையின் அடிப்படை மதிப்பாகக் கருதும் மனித மதிப்புச் சமுதாயத்தின் திருமணக் கருத்தையும் ஒரே ஒரு அனுபவத்தின் மூலம் குறிப்பிட்டுக் காட்டலாம் என எண்ணுகிறேன்.

என்னோடு ஒரு முதிய இந்திய எழுத்தாளர் மாஸ்கோவிற்கு வந்தார். அவர் இளமை முழுவதையும் ஆயுதப் புரட்சி இயக்கத்தில் பங்கு கொண்டதற்காகச் சிறையில் கழித்தவர். 44 வயதில் திருமணம் செய்துகொண்டார். தமது இந்தி இலக்கிய அறிவைப் பயன்படுத்தி நன்றாகச் சம்பாதித்தார். டெல்லியில் வீடு கட்டினார். பையனை இங்கிலாந்தில் வாணிபக் கணக்கியல் கற்க அனுப்பினார். சொந்தக்கார் வாங்கினார். அவருக்கு ஐந்து பெண்கள் உள்ளனர். திருமணமாகவேண்டும். அவருடைய வாழ்க்கைப் பிரச்சினை அது. அவர்களுள் இருவருக்கு கல்லூரிக்

காதல் ஏற்பட்டு அக்காதலர்களேயே மணந்து கொள்ள விரும்புகிருர்கள். கல்லூரிக் காதலாயினும்சரி, கட்டி வைக்கப்படும் கணவனுயினும் சரி, அவருடைய சாதியில் வரதட்சணையின்றிக் கலியாணம்செய்துகொள்ள மாட்டார்களாம். இவருடைய வசதிகளைப்பார்த்து அதிக் வரதட்சணை கேட்கிருர்களாம். ஒவ்வொரு பெண்ணுக்கும் 20,000 ரூபாய் கலியாணத்திற்காக வேண்டுமாம். அப்படி செலவழித்துவிட்டால் அவருக்கும் அவருடைய மனைவிக்கும், ஒரே மகனுக்கும் வீடுமட்டும்தான் மிஞ்சுமாம். அது 2 லட்சம்தான் பெறுமாம். என்ன செய்வது! என்று இவர் கவலைப்படுகிருர். இந்தக் கவலையோடு தான் மாஸ்கோவில் இளம்பெண்களைப் பார்த்து அவர்களுடைய பெற்ருேர்களுக்காகக் கவலைப்பட்டார்.

ஒருநாள் எங்களுடைய ரஷ்ய மொழி பெயர்ப்பாளர் ஸெர்கேயிடம் அவர் கேட்டார் "உங்களுக்குச் சகோதரிகள் உண்டா?"

"உண்டு. ஐந்து தங்கைகள்"

"ஐயோ பாவம்" என்று தனது அனுதாபத்தை அவருக்குத் தெரிவித்துக் கொண்டார்.

மொழிபெயர்ப்பாளருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர் தனக்கு அனுதாபம் தெரிவித்ததற்கு காரணம் கேட்டார்.

"இந்த ஐந்து பெண்களேயும் மணம் செய்விக்க உங்கள் பெற்ருேர்களுக்கு எவ்வளவு செலவாகும் என்றும் நினைத்துத்தான் நான் அனுதாபம் தெரிவித்தேன்" என்ருர்.

"கலியாணம் என்ருல் பணம் எதற்கு?" என்ருர், மொழி பெயர்ப்பாளர், அப்பாவித்தனமாக.

"பின்னே, மணமகனுக்கு வரதட்சிணை, கலியாணச் செலவு, நகைகள், விருந்து"

ஸெர்கேக்கு எதுவுமே விளங்கவில்லை.

"மணமகனுக்கு ஏன் பணம் கொடுக்க வேண்டும்? கலியாணத்துக்கு என்ன செலவு? விருந்துக்கு என்ன? ஒருமாதச் சம்பளத்தில் பத்தில் ஒருபங்கு செலவாகுமா?" என்ருர்.

இந்தி எழுத்தாளர் திடுக்கிட்டார். இங்கு ஒரு கலியாணத்துக்கு என்ன செலவாகும்?" என்ருர்.

அவர் பதில் சொல்லாமல் உடனே எங்களே யுக்ரேனே ஒட்டல் விருந்து மண்டபத்திற்கு அழைத்துச் சென்ருர். 25 விருந்தினர்களுக்கு ரிஸெர்வ் செய்யப்பட்ட மேஜைகளைப் பார்த்தோம். மேஜை மீது மதுக்கிண்ணங்கள் இருந்தன. ரஷியனில் "திருமணம்" — "வாழ்க....... ...... (மணமகன், மணமகளின் பெயர்களாக இருக்கலாம்.)

22 பேர் வந்தார்கள். மேசை நாற்காலிகளில் அமர்ந்தார்கள். மணமகன் மணமகள் யார் யாரென்று தெரியவில்லை. அவர்கள் உட்கார்ந்ததும் இரண்டு மலர்ச்செண்டுகளை மணமக்களிடம் நண்பர்கள், கொடுத்தார்கள். அவர்கள் எல்லோருமே சமவயதினர். மணமக்களின் தாய் தந்தையர்கள் வரவில்லை.

மணமக்களைச் சுற்றியிருந்த நண்பர்கள் ஒரு பாடகியை ஏற்பாடு செய்திருந்தனர். அவள் பாடினுள். பிறகு விருந்து. ஒவ்வொருவரும் வெவ்வேறு உண்டிகளுக்கு ஆர்டர் செய்து பணம் கொடுத்தார்கள். மணமகனும் மணமகளும் வாட்கா வாங்கி எல்லோருடைய கிண்ணங்களிலும் ஊற்றினுர்கள். எல்லோரும் எழுந்து நின்ருர்கள். ஒருமடக்கு குடித்தார்கள். ஒருவன் "கசக்கிறது" என்ருன். உடனே எல்லோருடைய கண்களும் மணமக்கள் மீது திரும்பின. மணமக்கள் இறுகத்தழுவி உதடுகளில் முத்தமிட்டனர். மறுபடி ஒருமடக்கு — மறுபடி "கசக்கிறது" என்ற குரல். மறுபடி முத்தம். சில தடவைகளுக்குப்பிறகு மணமகள், "இனிக்கிறது" என்று சொல்லுகிருள். எல்லோரும் சிரிக்கிருர்கள். பெண்கள் "இவ்வளவு சீக்கிரம் இனிக்கலாமா"? என்று கேட்கிருர்கள். பிறகு நீண்ட நேர ரஷிய விருந்து. பிறகு நடனம்.

ஸெர்கே சொன்னுர். கசக்கிறது என்பதைச் சொல்லி, இனிக்கிறது என்று மணமகள் சொல்லும் வரை திருமண நிகழ்ச்சியாம். இனி இவர்கள் பதிவு — அலுவலகத்தில் பதிந்து கொள்ளுவார்களாம்.

"என்ன செலவாகலாம்?"

வாட்காச் செலவு 20 ரூபிள். விருந்தறை வாடகை 5 ரூபிள், விருந்துச் செலவு அவர ரவருடையது 5 ரூபிள். மணமகளுக்குச் செலவு கிடையாது. பாடகிக்கு ஊதியம் 10 ரூபிள்.

உடை, வழக்கமாகத்தைக்கிற புது உடைகள், ஆபரணங்கள் இல்லை. வரதட்சிணை இல்லை.

பரிசுகள்—உண்டு ஏராளமாக. மணமகன் டெலிவிஷன் தொழிலாளி; மணமகள் ஆசிரியை டெலிவிஷன் தொழிலாளிகள் பரிசளிப்பார்கள். இவளுடைய சக ஆசிரியர்கள் பரிசளிப்பார்கள், தாய்தந்தையர்கள் பரிசளிப்பார்கள், இவர்கள் தனி ஆஸ்டல்களில் வசிக்கிறார்கள், இனி இரண்டு அறை கொண்ட வீட்டிற்குப் போய் விடுவார்கள்.

"இவர்கள் ஏன் கலியாணம் செய்து கொண்டார்கள்?" இந்தி எழுத்தாளர்.

செர்கே, "நாம் ஏன் சாப்பிடுகிறோம்?" என்று கேட்டார்.

"அதுவல்ல; இவர்கள் ஒருவரையொருவர் ஏன் வாழ்க்கைப் பங்கினர்களாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள் என்று தெரிந்துகொள்ளவே இக்கேள்வியைக் கேட்டேன்" என்றார்.

"அதுவா? இவன் அவளை நூலகத்தில் சந்தித்தான், அடிக்கடி அவர்கள் சந்தித்தார்கள். அவள் எலெக்ட்ரானிக் விஞ்ஞானம் பற்றி அறிந்துகொள்ளப்படித்தாள். அவனும் படித்தான். சேர்ந்து ஓர் மாலைப்பள்ளியில் எலெக்ட்ரானிக்ஸ் படித்தார்கள். ஒருவரது இயல்பு அடுத்தவருக்குப் புரிந்தது. புரிந்தபின் பிடித்தது. முக்கியமாக அவனுக்குத் தனது தொழிலில் தேர்ந்தவன் என்றும், பிற தொழிலாளருக்கு உதவுபவன் என்றும் புகழ் இருந்தது. அவள் நல்ல ஆசிரியை-சமூக மதிப்புப்பெற்றிருந்தாள். அவளுடைய மாணவ-மாணவியர் அவளைக்கண்டதும் துள்ளிக் குதித்தனர், இத்தகைய தனி— ஆர்வங்கள் - சமூகப் பொறுப்புணர்வுகள் இவற்றைக்கண்டும், தங்கள் உள்ளுணர்வான காதல் சரியான திசையில்தான் செல்லுகிறதென்றும் கண்டு ஒருவரையொருவர் மணந்துகொள்ளத் தீர்மானித்தனர். தீர்மானத்தைப் பெற்றோர்களிடமும், நண்பர்களிடமும் கூறினர். பெற்றோர்கள் மணமகள், மணமகனது தனிப்பண்புகளையும் சமூகப் பண்புகளையும் (individual traits, social traits) பற்றி விசாரித்தார்கள். நண்பர்கள்இங்கு மணவிழாக் கொண்டாடத் தீர்மானித்தார்கள். இந்த விழா மகிழ்ச்சியாக இருக்கவில்லையா?"

"உங்களுக்கு மணமான இருவரில் யாரை யாவது தெரியுமா?" என்று செர்கேயை நான் கேட்டேன்.

"மணமகள் என்னோடு ஆசிரியர் கல்லூரியில் படித்தவள். நன்றாகத் தெரியும்"-செர்கே.

அதற்குள் மணமகள், மணமகனை அழைத்துக்கொண்டு எங்கள் மேசைக்கு வந்தாள். நாங்கள் இந்திய விருந்தினர் என்று காட்ட நம் நாட்டுக் கொடியும், சோவியத் கொடியும் இணைத்து மேசை மீதிருந்தன.

அவள் கேட்டாள், "இந்திய விருந்தினர்களா?"

"ஆம் இவர் பேராசிரியர் வானமாமலை. 25 வருட ஆசிரிய அனுபவம். பண்பாட்டு ஆய்வாளர், கம்யூனிஸ்டு. இவள், லுயூபோமோவா மணமகள். இவர் நிகிதாவ்லாடிமாவ், மணமகன்" இருவரும் தங்கள் கையிலிருந்த செண்டுகளை என்னிடம் கொடுத்தார்கள். கைகுலுக்கினார்கள்.

மணமகன் ரஷியனில் ஏதோ சொன்னான். எதிர்பாராதவிதமாக மணமகள் என்னை முகத்தில் முத்தமிட்டாள். செர்கே, 'நீங்களும்......' என்றார். நான் அவள் முகத்தில் முத்தமிட்டேன். மணமகன் என்னைத் தழுவி முத்தமிட்டான். நான் அவர்களுக்கு வாழ்த்துக் கூறினேன்,

'உங்கள் இன்பம் வளர்க. இருவரும் உங்கள் அறிவுத் திறனால் சோவியத் நாட்டிற்குச்சிறந்த பணிபுரிக. கம்யூனிஸத்தைக் நிர்மாணிக்க உங்கள் அறிவுத்திறன் வளரட்டும். கம்யூனிஸ உலகில் வாழ இளஞ் செடிகளை நீங்கள் நட்டுக் கொடுங்கள்' ரஷியனில் மொழிபெயர்த்தவுடன். எல்லோரும் கைதட்டினார்கள்.

சோஷலிஸ அமைப்பில்மணமுற்காலகனவுக் கற்பனைகளுக்கும் அதாவது காதல் செடியில் அரும்பும் மொட்டுக்கும், மலர்க் கொத்துகளுக்கும், மணவாழ்க்கையாகிற செடிவளரும் நிலத்திற்கும் முரண்பாடுகள் இல்லை. நிலம் வளமான நிலம். கனவு கற்பனை மொட்டுகள் வளருகிற மனிதநேச நிலமே, இச்சமுதாயத்தின் இயல்பான தரை. மனிதமதிப்புகளே, சமுதாயத்தின் மதிப்புகள், அதாவது, காதல், கற்பனை, கனவுகள் எல்லாம். இவை வாடுவதில்லை. மொட்டு மலர்ந்து காய்த்துக் கனிந்து … …

இனி நமது கனவு+கற்பனை≈காகிதங்களுக்கு வருவோம்.

நமது சமூக வாழ்க்கையிலிருந்து மீரா தொடங்குகிறார். பாரதி கூறியதுபோல கவிதையில், காப்பியத்தில், புராணத்தில் காதலை ரசிக்கும் தமிழன், கிணற்றோரத்தில், ஆற்றோரத்தில் காதலென்றால் சீறுகிறான். அதனைக் கொன்று பாடைகட்டி அனுப்புகிறான்.

ஆம்; நமது சமுதாய வாழ்க்கையில் திருமணப் பொருத்தம் என்பது ராசிப்பொருத்தம், நட்சத்திரப் பொருத்தம், ஜாதகப் பொருத்தம், சமுதாய உறவுப்பொருத்தம், அதாவது பொருள் நிலைப்பொருத்தம், பிறகு சாதிப்பொருத்தம், அதாவது பொருளாதார நிலை சமமானதாகவும் அல்லது தம்மைவிட ஓர் மட்டம் உயர்வாகவும் சாதி ஏணியில் ஒருபடியாகவும் இருத்தல் வேண்டும்.

மணமகன், மணமகளது தனி இயல்புகள், அதாவது உருவம், ஆர்வங்கள், கனவுகள் கற்பனைகள், அறிவுத்திறன் இவையாவும் முக்கியமான பொருத்தங்கள் அல்ல. அதாவது மனிதப் பண்புப் பொருத்தம் திருமணத்திற்கு முக்கியமான பொருத்தம். எனவே இயல்பான மனிதப் பொருத்தங்களான கனவுகள், கற்பனைகள். மனிதநேசம், காதல் எல்லாம் இளமையின் ஒளிமிக்க உள்ளக்கிளர்ச்சிகளாக இருந்து, அவற்றிற்கு இடமில்லாத சமுதாயத்தில் வேறு பொருத்தங்களுக்கு இடங்கொடுத்து வாடிப் போகின்றன.

இந் நிலையிலிருந்து முன்னுரையை முடிவுரையாக எழுதுகிறார் மீரா.

“என்வேட்கையே,
நீ இவ்வளவு தாமதமாக வந்து
இவ்வளவு விரைவாகப் புறப்பட்டு விட்டாயே!
நீ வந்தபோது இனிமேல்தான் என்வாழ்க்கை
தொடங்கப் போகிறது என்று எண்ணினேன்.

… … நீயோ முடிவுரை
எழுத வந்திருக்கிறாய்.

என் வேதனை உன் விழிகளை நனைக்கிறது.
என் அந்தரங்கமே,

இதோ உன் சொல்லோவியம் … …
நம் உள்ளப்புணர்ச்சிக்குப் பிறந்த உயிரோ

வியம்… … உன் காலடியில் வைக்கிறேன்”

உள்ளப்புணர்ச்சி மனிதமதிப்புகளால் நிகழ்வது. உடல்புணர்ச்சியாம் திருமணப் பிணைப்பு மனிதமதிப்பற்ற தற்காலச் சமூகமதிப்புகளால் நிகழ்வது. மனித மதிப்பு, சமூகமதிப்பால் மிதிபட்டுச் சாகிறது. நல்ல சோக கீதத்தோடு தான் சாகிறது.

இந்த சோக கீதம் எவ்வளவு கம்பீரமாக ஒலிக்கிறது. ஹெலனுடைய வாழ்க்கையைப் போல, அன்னாகரீனாவின் உள்ளத்துடிப்புபோல, ஜூலியத்தின் கீதத்தைப்போல, சகுந்தலையின் ஏமாற்றத்தைப்போல, இந்த மாபெரும் மனித சோக சுமையை தாங்கிக்கொண்டு முகவுரையான முடிவுரை பிறந்துவிட்டது.

பிறகு வாழ்க்கையின் மனிதத்தன்மை வெளியாகும் ஒரு குறுகிய காலத்தின் இன்பம் கிளர்ச்சி, ஒளி முதலியவற்றால் உடலும் உள்ளமும் தூண்டப்பட்டு, கனவு, கற்பனை ஏறிய கவிதைகளாக வெளிப்படுகின்றன.

இது ஐந்திணை அல்லது ஏழுதிணை அகவொழுக்கமன்று.

கனவும், கற்பனையும் உண்மையாகிவிடும் என்று நம்புகிற இளமை எழுச்சி, சமுதாய மதிப்புக்கள் என்ற தூக்குமரத்தைக் காண்பதில்லை.

இன்றுவளர்ந்துள்ள அறிவுநிலையின் பரப்பு, இன்று முன்னேறியுள்ள மனித ஆற்றல் வரம்பு, சோஷலிஸ அமைப்பு, மனித இயல்புகளைத் தாங்கும் விளைநிலமாகவும், மனித ஆற்றலின் விரைவூக்கியாகவும் இருப்பதை அறிந்த அறிவு, இவையாவையும் கலந்து நனவுலக மொழிக் கோவைகளால் கவிதை ஊற்றுகப் பிறக்கிறது. உலகப் புதுக்கவிதை மரபு தரும், படிம உத்திகளால் கனவுகளையும் கற்பனைகளையும் சித்திரங்களாகவும், அகப்படிமங்களாகவும் ரசவாதம் செய்து மீரா அளிக்கும் புதுக்கவிதைகளின் தாக்கம் நமது ரசிகர்க்ள் உள்ளத்தில் இனிய மலர்களாக மலராமற்போகாது.

இளமைக்காதல் வேறொன்றையும் வேண்டாத ஒருமையுணர்ச்சியாக, சில கணங்களாவது உண்மையாக நீடிக்கிற தல்லவா? வெறும் கானல் நீராக இல்லாமல், உள்ளத்தில் நிலையான பதிவையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும் மாபெரும் கிளர்ச்சியல்லவா!

"காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்"
என்று பாரதி பாடினுர்.

இளமையில் அதுவே மனிதனை இயக்கு சக்தியாக அதனை அனுபவிப்பவருக்குத் தெரிகிறது. இந்த உணர்வு மின்னலையே மீரா இப்படிக் கூறுகிருர்.

மின்னல் இருளின் கனத்தைக் கிழிக்கும் பொழுதுதான் இருளின் அடர்த்தி நமக்குப்புரிகிறது. சுதந்திர வேட்கை கனன்று எரியத் தொடங்கும் பொழுதுதான் அடிமைத்தனத்தின் அசிங்கம் நமக்கு விளங்கத்தொடங்குகிறது. இதனைப்போலவேதான் காதல் என்னும் இனிய நீரோடைபாய்ந்த பின்னர்தான் இளைஞனுக்கு தனது முந்திய வறண்ட, வாழ்க்கையை அறிய முடிகிறது என்று கவிஞர் மீரா கூறுகிருர்.

நீ எனக்குத் தாகவெறி தந்தாய்;
பிறகு தான் —
என் இதயம் வறண்ட நிலமாய்க் கிடந்தது
எனக்குப் புரிந்தது.

துறவு பற்றிப் பேசிப் பெருமைப்படும் நாட்டில், உலக அறிவும் இன்பங்களும் கீழ்த்தர உண்மையென்றும், வெறுமையையும், உள்ளத்தையும், துழாவுதலை உயர்தர உண்மையென்றும் கருதுகிற தத்துவத்தை, சுகத்துக்கு குறைவில்லாதவர் சொல்லிக் கொண்டிருக்கும் இந் நாட்டில், இளங்கோவையும், கம்பனையும், பாரதியையும், ஷெல்லியையும், விட்மனையும் பின்பற்றி. மீரா கூறுகிருர்.

நான் துறவியாகப் போகிறேன்
பற்றுகள் அனைத்தும் முற்றும் நீக்கிப்
பரம்பொருளிடம் மட்டும்
பற்றுவைக்கும் துறவிகளைப்பற்றி
நீ கேள்விப் பட்டிருப்பாய்.
நான்
சகல பற்றுக்களையும் வீசியெறிந்துவிட்டு
உன்மீது மட்டும் பற்று வைக்கும்
துறவியாகப் போகிறேன்.

வீசியெறிந்து விட்டு
நான் சகல பற்றுக்களையும்
உன்மீது மட்டும் பற்று வைக்கும்
துறவியாகப் போகிறேன்,

'வீசி யெறிந்ததுவிட்டு' என்ற எளிய சொற்களில் கவிஞர் இளமையின் காதலுணர்ச்சியின் வலிமை முழுவதையும், படிமம், உவமை எதுவுமின்றிக் காட்டி விடுவதில் முழுமையான வெற்றியடைந்து விடுகிருர்.

மகிழ்ச்சி ஏக்கம், அழகுக்கிளர்ச்சி ஆகிய மனித உணர்வுகளை யெல்லாம், சமுதாயஉணர்வு - உவமைகளால் அகவெளியீட்டுச் சித்திரங்களாக கவிஞர் படைக்கிருர். இதுவோர் சிறந்த உத்தி. அதிலும் ஒரு பகுதிமக்களின் தற்கால வேட்கையை, காதல் இன்ப வேட்கைக்கு உவமை கூறும் போக்கு புதுமையாக உள்ளது.

சங்க காலத் தலைவனுடைய காதலில் புகழ்ச்சியிருக்கும். ஆனுல் இப்படித்தான் பேசப்படவேண்டும் என்ற விதியின்படிதான் அவன் பேசுவான். பொங்கும் உணர்ச்சிக்கு புதிய சொற்கால்வாய் அமைத்துக்கொள்ளமாட்டான்'

உலக இன்பத்தைச் சிற்றின்பம் என ஒதுக்கிக் கற்பனையான தெய்வ நாட்டத்தைப் பேரின்பம் என்ற நாட்டில், இந்தப் போலிக் கற்பனையை ஒழிக்கப் பாரதி "எத்தனைகோடி இன்பம் வைத்தாய்" என்று பாடினுன். இன்பத்தின் உருவத்தை வரைந்து காட்டும் பொழுது பாரதி,

"காணிநிலம் வேண்டும், முத்துச்சுடர் போல நிலவொளி வேண்டும், பத்தினிப் பெண் வேண்டும் என்று கேட்டான். தமிழகத்தின் அழகுணர்வுச்சிகரங்களில் மிகச்சிறந்தது அது.

தனது மூதாதையை மிஞ்சிவிடுகிருர் மீரா.
"என் மூதாதை ஒருவன்,
பராசக்தியிடம் வரம் கேட்டான்.
காணி நிலம்
மாடமாளிகை
தென்னந்தோப்பு
அது இது என்று வேண்டி
இறுதியில் ஒருபத்தினிப்பெண்ணைக்கேட்டான்
நான் கேட்டால்
உன்னை மட்டும்தான் கேட்பேன்
உன்னைப் பெற்ருல்
உலகத்தில் உள்ள
எல்லாம் பெற்ற மாதிரித்தானே

காதலைப்பற்றிய நவீன சிந்தனைகளைத் தொல்காப்பியத்தில் காண்போர் உள்ளனர். வருங்காலமனைத்திற்கும் ஒரு காதலன் என்ன பேசவேண்டும் என்பதை அவர் சொல்லிவிட்ட தாக வரலாற்றையும், வளர்ச்சியையும் அறியா தவர்கள் தொல்காப்பியர் காலத்திலேயே வாழ்ந்துவிட்டுப்போகட்டும்.

நாம் தொல்காப்பியர் காலத்திலோ, நம்பியகப்பொருள் ஆசிரியர் காலத்திலோ, பாட்டியல் காலத்திலோ வாழவில்லை. ஒன்றிற்குப்பின் ஒன்ருக அகப்பொருள் இலக்கணங்கள் தோன்றியதே, பிற்கால வாழ்க்கையில் புதிய உணர்ச்சிப்போக்குகளும் அவற்றின் வெளியீடுகளும் தோன்றியதற்கேற்ப புதிய இலக்கண விதிகள் தோற்றுவிக்குப்படவேண்டிய அவசியம் நேர்ந்தது என்பதுதானே!

தலைவன்தான்ஏற்றமுடையவன். அவனேடு ஊடினுலும், கற்பு அவனை அவனுக்குப் பணியச் செய்கிறது. ஆனுல் பிரெஞ்சுப் புரட்சிக்கும், சோவியத் புரட்சிக்கும் பின்தோன்றிய சமத்துவம் என்னும் உயரிய கொள்கைக்காக மக்கள் புரட்சிகளை உருவாக்குகிற காலத்தில் காதலில் சமத்துவம் புகுந்துகொள்கிறது.

"நான் மகரயாழ்;
உன் மணிக்கரம் தீண்டினுல் போதும்
என்னுல் உனக்குப் பெருமை வரும்
உன்னுல் எனக்கு வாழ்வுவரும்

உணர்ச்சிகளின் சமத்துவம் இங்கே விளக்கம் பெறுகிறது.

காதலுக்காக ஏங்கி, அதன் வருங்கால அழிவை எண்ணிக் கவலையுறும் கவிஞர் அக்கொடுமையை வருணிக்க கொடுமைகளில் எல்லாம் கொடுமையான ஏகாதிபத்தியக் கொடுமையை உவமையாகத் தேர்ந்தெடுக்கிருர்

ஏகாதிபத்தின் கொடுமைக்கு இரையாகும்
ஓர்சிற்றரசைப்போல்

வாடி வருந்தும் என் மேனியைப் பார்"

மிகமிகச் சாதாரணமான உவமைகள் வருமிடம் பொறுத்து ஒளிபெற்றுச் சிறப்படைகின்றன.

மடிநிறைய ரோஜா மலர்களைப்
பறித்து வைத்திருக்கும்
தோட்டக்காரன் மகள் போல்
என்மனம் நிறைய உன் நினைவுகளைச்
சேர்த்து வைத்திருக்கும் மகிழ்ச்சியில்
மயங்கி வருகிறேன்

தோட்டக்காரன் மகள் ரோஜாவைச் சேகரிக்கிருள். அது அவளுக்கு சொந்தம் என்ற மயக்கம். சமுதாய விதியின்படி அது தோட்டச்சொந்தக்காரனுக்கல்லவா சொந்தம். அழகுணர்வில் 'மயங்கி' அவள் தன்னுடையதென்று எண்ணுகிருள். காதலனும் தனது காதலுணர்வில் மயங்கி, சமுதாய விதியான பணமதிப்பை மறந்து இவள் தனக்குச் சொந்தமென்றுஎண்ணி காதல் மலரைக் கொண்டுவருகிருன்.

'காலங்கழித்து வராதே' என்று கூறும் காதலன்,

"தேரோட்டம் முடிந்தபிறகு
திருவிழாக் காணவரும்
ஒரு பக்தனைப்போல
வண்டி போனபிறகு
நிலையம் வந்து சேரும்
ஒரு பயணியைப்போல
நோயாளி மடிந்த பிறகு
மருந்து வாங்கிவரும்
ஒரு சொந்தக்காரனைப்போல"
வாசலில் நின்றவாறு
உன் வீட்டையே நோக்குகிறேன்
எல்லையில் நின்ற வாறு
நாடுகடத்தப்பட்ட ஒரு தேசாபிமானி
தன்நாட்டை ஏக்கத்தோடு பார்ப்பதைப்
போல!

'சில்லான் கைதி' என்ற பைரனின் கவிதையும், 'லஜபதிராய் பிரலாபம்' என்ற பாரதியின் கவிதையும் தேசாபிமானியின் ஏக்கத்தை வருணிக்கின்றன. ஆனல் 'எல்லையில் நின்றவாறு' "தன் நாட்டை ஏக்கத்தோடு பார்ப்பதுபோல" இவை ஏக்கச்சித்திரத்தின் வளர்ச்சியைக் காட்டும் அழகுக்கோடுகள்

புரட்சியில் மலர்ந்த சோவியத் பூமியின்
கூட்டுப் பண்ணைகளைப்
படங்களில் பார்த்து மலைக்கும்
ஓர் இந்திய உழவனைப்போல்
வியப்படைகிறேன்.
அந்த வியப்பில் ஆழ்ந்தபடியே
உன்னை எழுப்பாமல் நிற்கிறேன்.

உழவனது பண்ணை ஏக்கம் (land hunger) பல முற்போக்கு நாவல்களின் கலைப்பொருளாகியுள்ளது. இங்கு 'நில ஏக்கம்' பிடித்த 'இந்திய உழவன் கூட்டுப்பண்ணைகளைப் படங்களில் பார்த்து' மலைக்கிருனும்.

இது அவனது நில ஏக்கத்தை, சமுதாய உணர்வாக உயர்த்தி, துண்டு நிலத்துக்குப் பதிலாக அவன் அடையவேண்டிய சமுதாய உயர்வின் குறிக்கோளாக சோவியத் பண்ணையைக்காட்டி, அந்த உன்னதமான சமுதாய ஏக்கத்தை, வேட்கையை, காதலியின் அழகைப் பார்க்கும்போது காதலன் உள்ளத்தில் எழும் மலைப்புக்கு உவமையாகக் குறிக்கிருர்.

'கிழித்தெறிந்து விடாதே' என்று தன் காதலியை வேண்டிக்கொள்ளும் காதலன் அடுக்கிக்கூறும் உவமைகளைப்பாருங்கள்.

"பாறைமேல் முளைக்கும் புற்களைப் போல்"
"வயல்களில் முளைக்கும் களைகளைப் போல்"
ஒன்றுக்கும் உதவாத துண்டுக் காகிதங்
களைப் போல்"

முதலிரண்டும் பைபிள் உவமைக் கதைகளில் வரும் பழங்கல உவமைகளே. ஆனல் புல்லையும் களையையும் புதுமை ஒளிபாய்ச்சி பொன் முலாம் பூசிவிடுகிறது காகித உவமை.

புற்கள் உலரும், களைகள் கிள்ளி எறியப்படும் ஒன்றுக்கும் உதவாத துண்டுக்காகிதங்கள் கிழிக்கப்படும். மனிதமதிப்பு போற்றப்படாத சமுதாயத்தில், பணமதிப்பையே போற்றும் சமுதாயத்தில் காதல் துண்டுக்காகிதம் தானே! இந்த கசப்பான சோக உணர்வெழுப்பும் உண்மையை மிகச்சாதாரணமான பழைய, புதிய உவமைகளால் வெளிப்படுத்திநூலின் இதயத்தை இங்கே ஒலிக்க வைத்துள்ளார்.

இக்காதலின் முடிவு சோகமாகத்தானே இருக்கவேண்டும். இது சமூக 'விதி'யை மீறிய மனித உணர்வல்லவா? பணமதிப்பை மீறுகிற மனித உணர்வின் எழுச்சியல்லவா? எனவே இதற்கு ஓர் அகால மரண முடிவு உண்டு. இராவணன் மரணம் போல, முத்துப்பட்டன் மரணம் போல, சரக்ரடீசின் மரணம் போல, ஜூலியஸ் ப்ஃயூசிக்கின் மரணம் போல, ஸாக்கோவான்செட்டியின் மரணம் போல, பகத்சிங்கின் மரணம்போல, பாலுவின் மரணம் போல காம்பீர்ய நாதத்தோடு முடிக்கிருர் கவிஞர். இம்மரண காம்பீர்யம் மனித உணர்வுகளை வாழவைப்பதற்காக, மனித விரோத மதிப்புக்களைத் தகர்க்கும் சமுதாய விடுதலைப்போராட்டமாக, மனித மதிப்புக்களை மட்டும் அடிப்படையாக, "Every thing for Man" என்ற மனித சாசனப்பிரகடன முழக்கமாக. நமது உள்ளத்தைத் துடிக்கச்செய்கிறது.

நான் புறப்படப்போகிறேன்
என்று தெரிந்ததும்
என் நேயர்கள் எல்லோரும்
என் அருகில் வருத்தமாக நிற்கிருர்கள்;
"ஜனசக்தியின் ஒளியில் அரும்பி
ஒரு மகாகவியாக
மலர்ந்து கொண்டிருந்த நீ
இடையில் இப்படி
ஒரு பலவீனத்தின் கரம்பட்டுக்
கருகி விட்டாயே!"
"அந்தப்பாதையிலே வளர்த்த
வசிகரமான கனவுகளையும்
கற்பனைகளையும்
விட்டுச் செல்லுகிறேன்"

பண மதிப்பும் ஆதிக்க மதிப்பும் சமூக நியதிகளாகவுள்ள சமுதாயங்களில் இச்சோக ஒலம் காலம் காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆனுல் இம்மனித உணர்வுகளே கவிதைகளாகின்றன. மனித இதயங்களை ஊக்குவிக்கின்றன.

மனித உணர்வின் இனிமையான, நளினமான காதல் வேட்கை, காதல் கனவு இவற்ருல் ஏற்படும் கற்பனை ளே நுண்கலைகளின் பொருள்.

இது மரணத்தில்கூட, காம்பீர்யமான மனித கீதத்தோடு கண்மூடுகிறது. உலக மக்கள் பண மதிப்புடைய சுரண்டல்சமுதாயத்தை நொறுக்கி அதனிடமிருந்து "மனிதனுக்கே எல்லாம்" என்ற முழக்கத்தைப் பொறித்த கொடியேற்றி சோஷலிச சமுதாயத்தைப் படைக்கிறபோது, மிகச் சிறந்த மனித மதிப்பின் வெளிப்பாடான காதல், இயேசு புத்துயிர்பெற்றது போலவும், அதற்குமுன் பருவத் தேவதையான ஆஸிரிஸ் ஆண்டுதோறும் இறந்து மறுபடி பிழைத்தது போலவும் நைல் பெறுகும்தோறும் பலியிடப் பட்ட ஹோரஸ் மீண்டும் மீண்டும் உயிர்த் தெழுந்தது போலவும் மகத்தான வலிமை யோடு உயிர்த்தெழும்.

இப்போதைக்கு கனவு + கற்பனை ≈ காகிதங் கள்தான்.

ஆனுல் கனவு + கற்பனை = முழு மனித மதிப்பு;என்னும் காலம், மனிதன் மனித உணர்வு களோடு முழு மனிதனுக வாழ்கிற காலம் உலக முழுவதற்கும் வரத்தான் போகிறது. அதனை மனிதனே உருவாக்குவான்,

பூமியின் வயது என்ன?

இத்தலைப்புடைய ஓர் விஞ்ஞானநூலை பாட்ரிக் எம், ஹர்லி என்ற அமெரிக்க விஞ்ஞானி எழுதியுள்ளார். அவர் தரை அமைப்பு இயல், கதிர்வீச்சு உலோகங்களின் தன்மை, தாதுப்பொருள்கள் கிடைக்குமிடங்கள், கடல் தரை ஆய்வு, தற்கால விண்வெளியியல் ஆய்வுகள், வானநூல் ஆய்வுகள் ஆகிய பலதுறை அறிவையும் பயன்படுத்திச் சில முடிவுகளுக்கு வந்துள்ளார். இது புராணக் கருத்துக்களையும், சமயநூல் கருத்துக்களையும் மறுக்கிறது.

நமது உலகிலுள்ள மூலகங்கள், உருண்டை வடிவமாகத் திரண்டது 650 கோடி முதல் 7 கோடி ஆண்டுகளுக்குள்தான் இருத்தல் வேண்டும். சூரியன் 600 கோடி வருஷங்களுக்கும் பக்கத்தில் சுருங்கிக் கோள உருவம் பெற்றது. நமது உலகில் 700 கோடி முதல் 650 கோடி ஆண்டுகள் வரையுள்ளகாலத்தில் இருந்த ஆதி மூலகங்கள் 450 கோடி ஆண்டுகளுக்கு முன் பல்வேறு ரசாயன வழிகளில் இணைந்து பல்வேறு தற்கால மூலகங்களின் ஆவிகளாயின. உலகின் தரை 280 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது.

தரை தோன்றிய காலத்தில் உயிரிகளோ, அவற்றின் அடிப்படை மூலங்களான கனமூலக் கூறுகளோ தோன்றியதில்லை. —நா. வா.

மாதவியும் வசந்தசேனையும்

கா. சுப்பிரமணியன் எம். ஏ.,

[மாதவி சிலப்பதிகாரத்தில். வருகிற ஆடல் மகள். வசந்தசேனை மிருச்சகடிகத்தில் வரும் கணிகை. இவ்விரு இலக்கியப் படைப்புகளிலும் மிகுந்த ஒற்றுமையான இயல்புகள் உள்ளன. மாதவியும் வசந்தசேனையும் திருமணத்திற்குத் தகுதியில்லாத சமூகப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இருவரும் அரசரால் கௌரவிக்கப் பெற்றவர்கள். செல்வச் செழிப்பில் திளைத்தவர்கள். ஒருவனோடு வாழ விரும்பியவர்கள். சாதி ஒழுக்கத்திற்கு முரணான ஆசை கொண்டவர்கள். மனித உணர்வான காதலுக்கும், சாதி ஒழுக்க விதிகளுக்கும் ஏற்படும் முரண்பாட்டில் அவர்கள் சிக்கிக்கொள்ளுகிறார்கள். இம்முரண்பாடுகளை இருவேறு விதங்களில் கவிஞர்கள். தீர்த்துவைக்கிறார்கள். கணிகையர் வாழ்க்கைப் பிரச்சினை பண்டைக் கால இந்தியக் கவிஞர்களைக் கவர்ந்துள்ளது என்பதை இப்பாத்திரப் படைப்புகள் மூலம் காண்கிறோம். கா. சுப்பிரமணியன், இருபாத்திரங்களின் ஒற்றுமை, வேற்றுமைகளையும், அவர்களது வாழக்கைப் பிரச்சினையையும், கவிஞர்களது தீர்வு முறையையும் ஆராய்கிறார்.

ஆசிரியர்.]

1.0 மாதவியும் வசந்தசேனையும் கணிகையரான இலக்கிய பாத்திரங்கள். மாதவி, சிலப்பதிகாரத்தின் காதல் தலைவி. வசந்தசேனை, மிருச்சகடிகத்தின் காதல் தலைவி. இருவரையும் இரு கவிகள், கற்பனையில் படைத்த சமுதாய வளர்ச்சி நிலைக்கட்டம், ஒருவிதமானதாகவே தோன்றுகிறது. இக்கதாபாத்திரங்களை, அவற்றின் சமுதாய அடிப்படைப்பின்னணியோடு ஒப்பிட்டு ஆராய இக்கட்டுரையில் முற்படுகிறேன்.

1.1 மாதவியும் வசந்தசேனையும் கணிகையர் குலத்தில் பிறந்தவர்கள். கணிகையர் குலம், ஒரு சமுதாய நிறுவனமாக வளர்ச்சி பெற்றுவிட்ட காலகட்டத்தை இவ்வாசிரியர்கள் சித்தரிக்கின்றனர். அவ்வமைப்பின் தோற்றத்தை, சமூக அமைப்பு வரலாற்றின் அடிப்படையில் ஆராய்தல் வேண்டும்.

1.2 சமூக அமைப்பின் பரிணாம வளர்ச்சியைத் தற்கால இனக்குழு சமுதாயங்களை ஆராய்ந்து மார்கன் வரையறுத்துக் கூறினார். எங்கல்ஸ் அதனைப் பயன்படுத்தி, பழங்கால, கிரேக்க, ரோம சமுதாயங்களை ஆராய்ந்து சமுதாய பரிணாம வளர்ச்சி முறையியலை, எல்லாச் சமுதாயங்களுக்கும் பொதுவானதென நிறுவினார். அவருடைய ‘ origin of Private Property, Family and State’’ இத்துறை ஆய்வுக்குச் சிறந்ததோர் அடிப்படையை அமைத்துள்ளது. இம்முறையில் கார்டன் சைல்டு, அகழ்வியலுக்கும், மானிடவியலுக்கும் பொருந்துமெனக் கருதி, தனது ஆய்வுகளில் எங்கல்ஸின் முறையியலைப்பெரிதும் பின்பற்றுகிறார். எனவே வளர்ச்சி முறையில் இனக் குழுக் கூட்டுகள், வர்த்தக சமுதாயங்களாக மாறும்பொழுதுதான் தனிச் சொத்துரிமை தோன்றியது என்றும், அதனோடுதான் ஏகதார மணமுறை தோன்றியது என்றும் எங்கல்ஸ் கூறுவதை ஏற்றுக்கொள்ளலாம்.

1.3 சங்க முற்கால வாழ்க்கையிலும், வடநாட்டு வேதமுற்கால வாழ்க்கையிலும், சொத்துரிமையும், ஏகதார மணமும் தோன்றுமுன், குழு மணமுறையும், பல கணவர் மணமுறையும் நிலைகொண்டிருந்தன. இதற்குச் சான்றாக, தனிச் சொத்துரிமை தோன்றாத தற்காலச் சமுதாய அமைப்புகளில் காணப்படும் கோட்டுல் அமைப்பையும், பல கணவர் மண முறையையும் காட்டலாம்.

1.4 சங்க காலத்தில் நிலவுடைமை வாழ்க்கை ஆதிக்கம் செலுத்தியதால், ஏகதார முறையின் செல்வாக்கு ஓங்கியது. குறிஞ்சி நிலத்தில் தனிச் சொத்துரிமை தோன்றியபின் ஏகதார மணமுறையும் தோன்றியது. ஆயினும் அதற்குமுனிருந்த பால்-வாழ்க்கை முறைகள் எச்சங்களாக நின்றன.

1.5 சங்ககாலம், இனக்குழு மக்கள் அழிந்து நிலவுடைமையும், நாகரிக வாழ்க்கையும் தோன்றிய காலம். மனித சமுதாயத்தின் ஆரம்பகால முறையான கூட்டாக ஆடிப்பாடும் வழக்கம், மாறிப் பின்னர் காலப்போக்கில் கலைக் குழுக்கள் தொழில் முறைக் கலைக் குழுக்களாக மாறுகின்றன. அக்கலைஞர்கள் தாம் பாணர், பொருநர், பாடினி, விறலியர் போன்றவர்கள். அவர்களைப்பற்றிச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

1.6 அவர்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்ததாக அறிகிறோம். அவர்களில் ஆடல், பாடல், அழகுடன் கலையும் பால் இன்பமும் தந்தவர்கள் 'விறலி' எனப்படுவர். அவ்விறலியரைப் 'போகம் புரக்கும் பொதுவர்' 1 என்பர்.

1.7 எவ்வாறு மருத நில வாழ்வு, மனித சமுதாயத்தின் நாடோடி வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி இட்டதோ, அவ்வாறு விறலியரும் மருத நிலத்தில் நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு நிலையான வாழ்க்கையைத் தொடங்குகின்றனர்.

1.8 குழு வாழ்க்கையில் நடனமும் இசையும் உளமகிழ்ச்சிக்காகத் தோன்றியவையல்ல. குழு வாழ்க்கையின் ஒற்றுமையை நிறுவி இயற்கையோடு போராடும் ஊக்கத்தை வளர்ப்பதற்காகவே அவை நிகழ்த்தப் பெற்றன. வள்ளை, துணங்கை, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை முதலிய ஆட்டங்கள் குறிப்பிட்ட பயன்வேண்டி குழுமக்கள் ஆடியவையே. இவை குழுவாழ்க்கை அழிந்த பின்னும் பழமையின் எச்சங்களாக மிஞ்சின.

குழு வாழ்க்கை அழிந்ததற்குப் பின், வர்த்தக சமுதாயத்தில், தொழில் பிரிவினை பெரிதும் வளர்ந்தது அப்பிரிவினையில் கலையும் ஓர் தொழிலாயிற்று. கலையானது விலைபெறும் உழைப்பாகிவிட்டது.

இந்நிலையில்தான், சங்க காலப் பாணர், புலவர், விறலியர், பாடினியர் முதலிய கலைஞர்கள் இருந்தனர். ஆற்றுப்படைச் செய்யுளின் வளர்ச்சியை ஆராய்ந்தால், இவர்கள் புரவலர்களை நாடிச் செல்வதையும் இனக்குழுத்தலைவர்கள், இவர்களைப் புரப்பதையும் காணலாம். அரசு வலுவடைந்து அரசன் மக்களிடமிருந்து பிரிந்து அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தத்தொடங்கிய முடியுடை மன்னர் தோற்றத்திற்குப்பின் சில நூற்றாண்டுகளில் இவர்கள் தெருக்கூத்தாடிகளாகவும், பரத்தையராகவும், ஊடிய தலைவியரையும் தலைவர்களோடு கூட்டுவிப்பவர்களாகவும் மாறுகின்றனர்.

1.9 குழு வாழ்க்கையழிந்து, தனிச் சொத்துரிமை வளர்ச்சியடைந்தபொழுது, கூட்டு வாழ்க்கையழிந்த ஆரம்பகாலத்தில், நாடோடிக் கலைஞர்களாக இருந்த பாடினியும் விறலியும், சொத்துரிமையுடையவர்களின் 'பொதுவர்' ஆயினர். தனிச் சொத்துரிமையோடு, ஏகதார மணமும், பரத்தைமையும் தோன்றுகின்றன என்ற எங்கல்ஸ் கூற்றை, சங்ககாலப் பெண் கலைஞர்கள் வரலாற்றை ஆராய்ந்து மெய்ப்பிக்கலாம். இவர்கள் மற்றையத் தொழில் செய்வோரைப்போலவே, கலையையும், பரத்தைமையும் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர்.

1.10 மாதவியும் வசந்தசேனையும் பாத்திரங்களாக உருவாக்கப்பட்டு, அவர்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுங்காலம் நிலப்பிரபுத்துவ முடியாட்சி முறையில், வணிக வர்க்கம் பெருவாழ்வு பெற்றுவிட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. மன்னரும் வணிகரும் சமுதாயத்தில் ஆளும் வர்க்கத்தினர். அவர்கள் ஏகதார மணமுறை வழக்கத்தை வாரிசுரிமைக்கு அடிப்படையாக ஏற்படுத்திக்கொண்டனர். பரத்தையரைக்கலை நுகர்ச்சிக்கும் இன்ப நுகர்ச்சிக்கும் கருவிகளாக்கிக்கொண்டனர். இதனை எங்கல்ஸ் கூறுகிறார்:-

2.0 "இந்தப் பொதுமகளிர் முறையை நேரடியாகக் குழுமணத்திலிருந்து வந்ததாக, கற்புரிமையை வாங்குவதற்குச் செலுத்தும் காணிக்கைக்காகப் பெண்கள் புணர்ச்சிக்கு இணங்குவதிலிருந்து வந்ததாக அடையாளம் கண்டு கொள்ளமுடியும்" 2 ப. 150

"அடிமை உழைப்புக்குப் பக்கத்திலேயே இங்குமங்குமாகக் கூலியுழைப்பும் தோன்றுகிறது; அதே சமயத்தில், அதன் அவசியகரமான தொடர் பொருளாக, சுதந்திரமான பெண்கள் விபசாரத்தைத் தொழிலாகக் கொள்வதும் பெண்ணடிமையின் நிர்ப்பந்த ஆத்ம சமர்ப்பணத்துக்குப் பக்கத்திலேயே தோன்றுகிறது," 3 ப. 151

"மற்ற எந்தச் சமுதாய ஸ்தாபனமும் போலத்தான் பொதுமகளிர் முறையும் ஒரு சமுதாய ஸ்தாபனம்" [4] ஆகும். (ப. 152)

இவர்களோடு பகை மன்னர் நிலங்களிலி ருந்து கவரப்பட்ட மகளிராகிய 'கொண்டி மகளி ரும்' பரத்தையர் வாழ்வை மேற்கொள்ள நேர்ந் ததையும் நாம் சேர்த்துக்கொள்ளலாம்.

பண்டைக்காலப் பரத்தையர் வாழ்வை, தாயுரிமை-குழுமணம்-நாட்டுக் குழு-பரத்தைமை என்ற வரிசைமுறை மாற்றமாகக்காணமுடியும்.

பரத்தைமை பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு விளக்கி யுள்ளார்.

"மருதத்தின் ஒழுக்க முறையான ஊடலின் சமூக, பொருளாதார முக்கியத்துவம் எளிதில் புரியக்கூடியதே. மருத நிலத்தில் வேளாண் மையின் வளர்ச்சியானது விரிவான தனி நில வுடமை வளர்ச்சிக்கு அடிகோலியது. இப்பகுதி யில்தான் நாம் முதல் முறையாக உடமையற்ற வேலையாளைக் காண்கிறோம். [5]

அவர்களுடைய உழைப்பின் பயனில் வாழ்ந்து, தாங்கள் உழைக்கும் அவசியமில்லாத ஓர் சமூகப் பகுதி தோன்றுகிறது. அவர்கள் உடைமையாளர்களாகின்றனர்.

"இத்தகைய செழுமையான நிலப்பிரபுத் துவ அமைப்பில், வீரயுகத்தின் விறலியர்கள் பரத்தையாக மாறியது வியப்பை அளிக்கும் செயலன்று. அரசியல் ஆதிக்கத்தின், பொரு ளாதார அடிப்படையில் ஏற்பட்ட மாற்றத்தால் (கொள்ளையடிப்பதிலிருந்து உற்பத்தி செய்வது வரை) வீரயுகத்தின் பெண் குலக் கலைஞர்கள் நிலப்பிரபுத்துவ யுகத்தில் பரத்தையர்களாக மாறினார்கள்." [6]

சொத்துரிமைதான் இச்சமுதாயத்தின் அடிப்படை உரிமை.

"பரத்தைமை சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மண உறவுக்கு வெளியே இன்பங்காணும் வாயிலாக விளங்கிற்று. ஏனெ னில், சொத்துரிமைக்கும், குடும்பம், பரம்பரை உரிமைக்கும் இடையூறு செய்யாத ஒரு தனி யுரிமையாக இது திகழ்ந்தது." [7] (1971 ஜுலை மலர் 3. இதழ் 2. ப 348 ஆராய்ச்சி)

2.1 இவ்விளக்கம் சிலப்பதிகாரம், மிருச்சகடிகா ஆகிய இரு நூல்களையும் ஆராய மிகவும் துணை புரிவதாகும். பரத்தையரால் குலமகளிர் வாழ்க்கை பாதிப்புக்குள்ளாவதனை இவ்விளக்கம் தெளிவுபடுத்துகிறது.

2.1.1 **பரத்தையர் இயல்பை** இந்நூல்கள் நன்கு விளக்குகின்றன.

பரத்தையர் பொருளாசை பற்றி அவை தெரிவிக்கும் கருத்துக்களைக் காணலாம்.

காசினைப் பறிக்கும் காமன் கைக்கசை; விலைமகள்; [8] (ப. 83; பா. 21). பொருளாசையால் பலமரம் நாடும் புள் போன்றவர் [9] (ப. 180: பா. 116) பொன்காரணமாகத் தம்மை நம்பும் ஆடவரை இன்புறவும், துன்புறவும் செய்துதாம் துன்பமடையாதவர் [10] (ப. 181: பா. 120) அத்த மனச் சூரியன் மறையுங்காலும், செந்நிறம் பெற்றுப் பின்னர் ஒழிவதுபோல, பொருள் உள்ளவரை அன்பு வைத்துப் பின்னர் நீங்குவர். 'காகத்து இடுபொருள் பறிக்கும் மாதர்' 'பொரு ளற்றவனைச் சாற்றைப் பிழிந்து சக்கையைப் போல ஒழிப்பர். [11] (ப. 181, 182 பா. 121) வறுமைமிக்க காமுகர்களை வெறுத்தொதுக்கு வர் [12] (ப. 112) கள்ளுண்ணும் விலைமாதரால் பொருளின்மையால் விடப்பட்டவர்கள், மனைவி மக்கள், செல்வங்களை இழந்தவராயினர். [13] (ப. 198)

2.1.2 மணிமேகலை நூலும், தேனையுண்ட வண்டு பூவைத் துறப்பதுபோல கைவிட்டுவிடக் கூடிய பொருள் கொள்ளுதலையுடையவர் (கொண்டி மகளிர்) (18:19-20) [14] பலருடைய கைப்பொருளைக் கவர்ந்து வாழ்பவர்; பிறர் செல்வத்தைப் பெற்று லட்சுமி போன்றுகி, செல்வமிழந்தவர்களைத் துறக்கும் இயல்பினர் (1. 8. 21-22) செல்வம் இல்லை என்றால் கைய சைத்துப் போய்விடு என்று குறிப்பால் சொல்லு பவர் [16] (16:10) என்கிறது.

2.1.3 ஆடல் கணிகையரின் **அழகினை** 'மன் மேதன் பேழை'[17] என மிருச்சகடிகா (ப: 83, பா. 21) கூறும். தவத்தோராயினும், வண்டு போன்ற காமுகராயினும், காமத்திற்குப் புதிய பேதையராயினும் அவர்கள் கண்வலைப்பட்டு விட்டால் தங்கியே செல்லச் செய்யும் தெய்வ மகள் போன்றவர் [18](ப.14:160-165)எனச்சிலம்பு கூறும். 3.0 கணிகை ஒருத்தி **ஒருவர்க்கு மட்டுமே உரியவள் அல்லள்** என்பதனை இந்நூல்கள் நன்கு வெளிப்படுத்தியுள்ளன. கணிகை 'போகம் புரக்கும் பொதுவர்' என வருணிக்கப்படுகிறாள்.

3.1 பிறர் வயப்படாதவள் (ப. 83; பா, 21) [19] காமுகர் தம் விரலால் தடவும் யாழ் போன்றவர் [20] (பா. 22) வரைவில் மகளிர் வாழ்க்கைக்கு அருந்துணை இளைஞர் [21] (ப: 88; பா.29) பிறப்பிலேயே பிறர்க்குரியவள் [22] (ப. 89) கணிகை வழியிடை தோன்றிக் காணும் பூங்கொடி; அந்தணனும் அறிவிலனும் தோய் வாவி; மயிலும்காகமும் கூடும்கொடி;யாவரும்செல்லப் பயன்படும் தோணி [23] (ப. 89; பா. 30) நெடுங் கடல் திரையை ஒப்ப நிலையிலா மனத்தர் [24] (ப. 181; பா. 121) இன்ப விளையாட்டிற்கு இல்லம் [25] (ப. 231; பா. 172). ஒருத்தனை மனத்தில் நினைப்பர்; வேறு ஒருத்தனைக் கண்களால் ஈர்ப்பர்; இன்னொருத்தனை வீரியம் ஒழுக்குவிப்பர் பின்னும் ஒருத்தனை உடலினால் தழுவி ஊக்குவர் [26] (ப. 182; பா. 122) தாழ்ந்த குலத்தருணி போல, மின்னல் ஓரிடத்திலும் நிலைப்பதில்லை [27] (ப. 221; பா. 150)

3.2 நாட்டு மக்கள் காண அரங்கேறி ஆடல், பாடல், அழகு காட்டவேண்டும். வண்டாகிய நாணுடைய கரும்பு வில்லில் அரும்பாகிய கணைகளை மன்மதன் தூவ, பிறழும் நீண்ட கண்களால் வலைவீசிக் காண்பவரை அகப்படுத்த வேண்டும்; அவரை வீட்டிற்கு அழைத்துவந்து இசைபொருந்திய மயக்கு மொழியால் நலன்களைத் தேடிக்கொள்ளவேண்டும். [28] (மேகலை 18: 103-111) யாழ் கைமாறுதல் போல மாறும் இயல்புடையவர். கணிகையர் பலர் கைப் பொருளைக் கவர்ந்து வாழ்பவர் [29] (18:11:22) நகர நம்பியர் திரிதரு மறுகை நாடி நிற்பவர்கள் [30] (சிலம்பு 3:168) வரணக்காப்பு என்னும் வரையறை இல்லாதவள் [31] (5:81 மே)

3.3 கணிகையருக்குக் கன்னியாயிருக்கையில் காவல் கிடையாது; திருமணத்தில் உள்ளகாவல் இல்லை; தன் கணவன் இறந்தபின் உள்ள காவல் இல்லை; நெஞ்சைக் கற்பு நெறியில் செலுத்தும் காவல் இல்லை; பிறரைக் காணுமல் கொண்டவனையே தெய்வமாகக் கருதிப் பிறதெய்வம் பேணுத பெண்டிரல்லர்; [32] (18;97-102 மேகலை) காதலன் இறந்தபின் உயிர் போகாவிடில் தீப்புகும் பத்தினிப் பெண்டிர் கடமை அவர்க்கு இல்லை [33] (18:11-22 மேகலை)

அதனுலேயே, 'மாதவியும் மணிமேகலையும்' தாபதக்கோலம் தாங்கினமை எல்லோருடைய நகைப்பிற்கும் இடமாயிற்று என்கிருள் சித்திராபதி [34] (மேகலை 18:7-8). இதேகருத்தை மீண்டும் சித்ராபதி அரசியிடம் சொல்லுகிருள், "நாள்தோறும் பரிசம் தருபவன் இறந்து விட்டான் என்று மாதவி,மாதவர் பள்ளிஅடைந்தது கேலிக்குரிய செயல். அதுபோலவே, 'அரங்கக் கூத்தி'யாகிய மணிமேகலை பௌத்த பிக்குணியாகி பிச்சை எடுத்துண்ணும் வாழ்க்கை விவேகமல்ல. இவ்விருவர் செயலும் நாடகக் **கணிகையர்க்குரிய தகுதியுமில்லை; தன்மையுமில்லை**" [35] (மேகலை: 24:19-24) என்கிருள்.

4.1 கணிகையரை இந்நூல்கள் வெகுவாகப் **பழித்துரைக்கின்றன**. ஆயினும் அவர்களே க்கதைத் தலைவர்களின் காதல் தலைவியர்களாக இருக்கிருர்கள்.

4.1.1 ஆடல் மகள்; வேசை; ஆசைப் பரத்தை; குடிகேடி; இழிவுறும் அவாவினர் [36] (ப. 83: பா. 121) தேவடியாள் மகள் [37] (ப. 95) ஒழுக்கம் பூண்டோர் கணிகையரை 'ஈமமாலை போல' இழித்தனர் [38] (ப. 181: பா 120) தாமரை மலையுச்சியில் தோன்ருது; குதிரைக்குரிய நுகத்தைக் கழுதை தாங்காது; யவம் என்னும் தானியம் விதை நெல்லாக முளைக்காது; அவைபோல, 'தோமுறு கணிகையர் தூயர் அல்லரால் [39] (ப. 231; பா. 172) தானம், சீலம், தவிர்ந்தவள் [40] (ப. 295; பா. 239) பொல்லாமை உருவினர், செருக்கு, வஞ்சகம், மாயை, பொய்ம்மை ஆகிய எல்லாம் உண்டாவதற்கோர் பிறப்பிடம் [41] (ப. 231: பா. 172)

4.1.2 முனிவரும், கற்றோரும், மதிநுட்பமுடையோரும் பிணி என்று விலக்குவது கணிகையர் வாழ்வு; அது இழிவானது. 42 (சிலம்பு 11:180-3) 'கணிகையர் சலம் புணர்கொள்கைச் சலதியர்' அதாவது பொய்சொல்லும் பொய்த்தியர். 43 (சி. 9:69) மாயப் பொய் பல கூட்டும் மாயத்தார். 44 (சி. 7 கட்டுரை) கற்பில்லாதவர்; தவவுணர்வில்லாதவர்; தாசிக்குலத்தார்; வருணக் காப்பு என்னும் வரையறை இல்லாதவர். 45 (மே. 5. 81-82)

4.1.3 'உருவிலாளன் ஒரு பெரும் சேனை' 46 எனக் கணிகையரைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. அவரைக் கணிகையர் 47 (5;224), காவல் கணிகையர் 48 (5:50) ஆடல் மகள் 49 (8:109) ஆடல் கூத்தியர் 50 (5:50) பூவிலை மடந்தையர் 51 (5:51) மங்கலத் தாதியர் 52 (6:125) கடைகழி மகளிர் 53 (14;71) நாடக மடந்தையர் 54 (22:142) பண்ணியல் மடந்தையர் 55 (22:139) என்றெல்லாம் கூறுகிறது.

5.1 அக் கணிகையர், அறுபத்திநான்கு கலைக்கற்றவர். அவர்கள் வாழ்வது இரு பெரும் வீதிகளில் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. 56 (14:167) இவ்வீதிகளுக்குச் சிறுதனம் பெறுந்தனம் பெறுவார் வீதி என அரும்பத உரைகாரரும்; அடியார்க்கு நல்லாரும்கூறுகின்றனர். 57 (ப: 362&380) அவர் பெறும் பணத்தைப் பொறுத்தே இப்பாகுபாடு அமைந்துள்ளது.

'அரங்கக் கூத்தி'யராக சித்திராபதி (மே: 24:22) வருணிக்கும் கணிகையர் நாலுவகைப் படுவர்58. அவர்கள் தலைக்கோலரிவை, வாரம் பாடும் தோரிய மடந்தை, தலைப்பாட்டுக்கூத்தி, இடைப்பாட்டுக் கூத்தி ஆவர். அவர்க்குத் தலை வரிசை 1008 கழஞ்சு பொன் பரிசம் பெறுகை நூல் வழக்கு 59 (சி: 14:154, 159) 'முட்டில் பாணரும் ஆடியல் மகளிரும், எட்டொடு புணர்ந்த ஆயிரம் பொன் பெறுவர்' என அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டுவார் 60 (ப: 120)

அவர்கள் 'அரசர்க்கு ஆடுங் கூத்தா'கிய 'வேத்தியலை'யும் 'எல்லோர்க்கும் ஒப்ப ஆடுங் கூத்தா'கிய 'பொதுவியலை'யும் அறிந்து ஆட வல்லவர் 61 (ப: 360 அரும்பதவுரை)

ஆசைப்பட்டு அரசு வைகும் மனை அவர்கள் மனை 62 (ப. 14:147 ப. 360 அரும்பதவுரை) பண்ணும் அவற்றின் திறங்களும் பழித்த இன் சொல்லினர். 63 (ப.14:166) அவர்கள் கண்வலைப் பட்டால் பொறுத்தற்கரிய அறிவும் திரியும். 64 (ப: 14:160, 161)

5.2 அரங்கக் கூத்தியரிடம் காணப்பெறும் வழக்கொன்றை சிலம்பும் மேகலையும் கூறுகின்றன. 'சுடுமண் ஏரு வடுநீங்கு சிறப்பின் முடியரசு ஒடுங்கும் கடிமனை வாழ்க்கையர்' என்று சிலம்பு 65 (14: 146-147) கூறுகிறது.

அடியார்க்கு நல்லார் 'பதியிலாரிற் குடிக் குற்றப்பட்டாரை ஏழு செங்கற் சுமத்தி ஊர் சூழ்வித்துப் புறத்திடுதல் மரபு' என உரை கூறியுள்ளார் 66 (ப: 377) 'சாதிக்குற்றப் பட்டால் தலையிலே செங்கல் ஏற்றி ஊர் சூழ்வித்துக் கழித்துவிடுதல் மரபு' என அரும்பத உரைகாரர் (ப: 360)67 கூறியுள்ளார்.

ஆனால் மேகலையில்

"சுடுமண் ஏற்றி அரங்கு சூழ்போகி
வடுவொடு வாழும் மடந்தையர் தம்மோர்
அனையேன் ஆகி அரங்கக் கூத்தியர்
மனையகம் புகாஅ மரபினன் என்றே
வஞ்சினம் சாற்றி' உதயகுமாரனிடம்

மணிமேகலையை ஏற்கச் செய்வதாகத் தோழியர் சூழ, சித்திராபதி, தேரில் காற்று வேகத்தில் செல்லுகிறாள் 68 (18: 33-41)

இதனால் அரங்கக் கூத்தியரில் குடிக்குற்றப் பட்டவரை, சுடுமண் எற்றி, ஆடலரங்கைச் சுற்றச்செய்துஅப்புறப்படுத்தி விடுவர், அவர்க்கு அதன்பின் அரங்கக் கூத்தியர் வாழும் வீட்டில் புக உரிமையில்லை எனத் தெரிகிறது. அதோடு அரங்கேறும் உரிமையையும் இழந்துவிடுவர்.

5.3 இங்கு சொல்லப்படும் குடிக்குற்றம் என்றால் என்ன? கணிகை வாழ்க்கையை வாழ மறுப்பதே குடிக்குற்றமாகும். அதாவது துறவு பூணுவது, ஒருவனோடு வாழ உடம்படுவது முதலியவை **குடிக்குற்றமாகும்.**

ஆகவே ஒரே ஆடவருடன் நிலைத்த தொடர்பு கொள்ளவோ பெறவோ கணிகையருக்கு உரிமையில்லை. அவர்களுடைய பரத்தைமை வாழ்க்கையை விட்டு விலகாதபடி பல சட்டங்களை சமூகம் விதித்திருந்தது.

ஒருவனைக் காதலனுகக் கணிகை தேர்ந் தெடுப்பது, சந்தேகமின்றி ஒரு முறையாக ஏதாவது ஒரு வடிவில் அமைவது பாசன் கதை யில் இருப்பதற்கிணையாக, கணிகையரின் கதா இலக்கியங்களிலும் காணலாம். அக்காதலுக் காக அவள், **சட்டம் அவர்களை வற்புறுத்தி நடக்கத் தூண்டும் மரபுரிமையையும் (குலத் தொழிலையும்), எளிதில் விலக்க முடி யாததுமான அழைப்புக்களையும்** துறப்ப தைக் காணலாம்'' *69* என்னும் மேற்கோள் (The Sanskrit Drama-Keith-P. 133 Mriccha-katika) சட்ட அடிப்படையில் அக்கொள்கை நிலவிவந்ததை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

இச்சட்ட அடிப்படையை நினைவூட்டும் வகையிலேயே சித்திராபதி உதயகுமரனிடம் பேசுவதும் உள்ளது. துறவுபூண்ட மணிமேகலை கணிகை குலப்பெண், ஆகவே அவளை அடை வதில் தவறில்லை'. *70* என்கிருள், (18: 55, 66)

5.4 இனி அரங்கேறும் உரிமை இல்லாமல் போனுல் என்ன என்னும் வினு எழலாம். மாதவி யின் தாய் சித்திராபதி, மாதவியிடம், மணிமேகலையைப்பற்றி வினவுவதில் இக் கேள்விக்கு விடைகிடைக்கிறது *71* (சி.30:10-22)

அதாவது அரங்கேறும் உரிமை இழந்தவர் செல்வந்தர்களால் விரும்பப்படாதவர் ஆவர். அதனுல் செல்வச் செழிப்பு அவர்களுக்கு இல்லாமல் போகும். **அதனையே தண்டனை யாக** அச்சமுதாயம் அரங்கக் கூத்தியர்க்கு வழங்குகிறது எனலாம்.

5.5 காதலரொடு பொழுதைக் கழிக்கும் கடை கழி மகளிர்க்கு தேர், சிவிகை,மணிக்கால்அமளி, உய்யானத்தில் அரசனோடு மகிழும் மகிழ்ச்சி யெல்லாம் உண்டு. அத்தோடு சாமரைக்கவரி, தமனிய அடைப்பை, உடைவாள் முதலியன எடுக்கும் உரிமையையும் அரசன் கொடுப்பான். அவை எக்காலத்தும் மாருத வாழ்வையுடைய அம்மடந்தையர் நாடோறும் புதுமணம் புணர்ந்து வாழ்வர். அவ்வருத்தம் நீங்கிச்செருக் கேற, வேலைக்காரி பொன் கிண்ணத்தில் மதுத் தர, அதனைப் பருகி பின்னும் மயங்குவர். அம் மயக்கத்தால் கிறங்கி, கண்கள் விழியிடைச் செருகும். அதனைத் தமது இனம் என வண்டு சுழலும், அந்த வண்டை தமது மாலையைப் பறித்து விரட்டுவர். முன்பு புலவிக் காலத்தில் மனத்திலுள்ள குறையைக் கணவன் கைசேர்த் துக்கொண்டு கூறுவாள். அவ்வுரையை நாவால் நவில முடியாமல் குழறுவாள்.அது கேட்பார்க்கு நகை விளைவிக்கும். கடைக்கண்ணுல் செய்யும் பூசலோடு, வில் போன்ற புருவங்கள் வளைய, பொட்டிட்ட நெற்றியில் வியர்வை தோன்றும். இவையெல்லாம் தீரும் நேரத்தை எதிர்பாத்து வருந்தியவராய்ச் செல்வரும் அரசரும் காத்தி ருப்பர். அவர்கள் வாழும் தெருவை, **செழுங்குடி செல்வரோடு வையங்காவலர் மகிழ்தருவீதி** எனச் சிலம்பு கூறுகிறது. *72* (14: 126-145)

6.1 இனி, மாதவி, வசந்தசேனை ஆகிய இருவரின் **செல்வப் பெருக்கைக்** காணலாம்.

மாதவி வீடு, 'வானுற நிவந்த மேனிலை' உடையது *73* (8:17) அது 'நெடுநிலை மாடம்' கொண்டதாகும் *74* (13:69). 'நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றம்' *75* உடையது, (4:27)

'இல்வளர் முல்லையோடு மல்லிகை அவிழ்ந்த பல்பூஞ்சேக்கைப் படுக்கையை' உடையவள் *76* (4:27, 28)

மாதவி, 'அணிமேகலையார் ஆயிரவர் சூழ வாழும் கணிகை. *77* (15:38)

'மாந்தளிர் மேனி' மாதவி, 'வேந்துறு சிறப்பின் விழுச்சீர் எல்தியவள்' *78* (15:21) மணிமேகலை பெயர்சூட்டுவிழாவன்று, மங்கல மடந்தை மாதவி தன்னேடு கோவலன், செம் பொன்மாரி செங்கையின் பொழிகிற செல்வச் செழுப்புக் காட்சியைச் சிலப்பதிகாரம் காட்டு கிறது. *79* (15:40, 41)

வசந்தசேனை வீடு, ஆகாயமளாவியது, *80* (ப:193) புட்பக விமானம் போன்றது, *81* (ப:192) பொற்கதவு உடையது, விருப்பு வெறுப்பில்லார் பார்வையும் வன்மையால் ஈர்க்கும் தன்மை யது. *82* (ப: 194)

இந்திரனது உத்தியான வனம்போல இக்கணிகை இல்லம் விளங்குகிறது *83* (ப:199) மூன்றுலகமும் ஓரிடத்தில் காணப்பட்டதாக

விளங்குவது 84 (ப: 201) இது விலைமகள் இல்லமோ? அன்றிக் குபேரன் கிருகத்தின் அளவோ? 85 (ப: 202) என வியப்பிற்குரியதா கிறது.

மாதவி, வசந்தசேனை ஆகிய இருவரும் 'போகம் புரக்கும் பொதுவர்'. கலை இன்பத்தை யும் காம இன்பத்தையும் அரசர்க்கும் வணிகர்க் கும் அளிப்போர். அவர்களது கலைத் தேர்ச்சியை இரு கவிகளும் வருணிக்கிறார்கள்.

"ஆடலும் பாடலும் அழகும் என்று இக் கூறிய மூன்றின் ஒன்று குறைபடாத"வள் மாதவி. 86 (3 : 8-9). ஏழாண்டு கற்று, பண்ணிரண்டாம் வயதில் அரசனுக்குக் காட்ட வேண்டி அரங்கேறுகிறாள். 87 (3: 10,11) 'தலைக் கோலி' பட்டம் பெறுகிறாள். 88 (3:161) நாடகம் ஏத்தும் நாடகக் கணிகையாக விளங்குகிறாள்.89 (பதியம் 15)'எண்ணெண் கலையும் இசைந்தவள்', 'பண்ணும் திறனும் புறங்கூறு நாவினள்', 90 (8:64, 65). 'நிலத்தெய்வம் வியப் பெய்த நீள் நிலத்தோர் மனம் மகிழ யாழ் மீட்டுவாள்'. 91 (7, கட்டுரை)

6.2 வசந்தசேனையின் அழகை, 'தா ம ரை நீங்கிய திரு', 92 (ப:220. பா) உச்சயினி நகருக்கு 'அணி', 'இளையள்' 93 (ப. 300;பா,245) 'நலமிகு சீர் இரதி', 'ஆகமொளிர் அணிகளுக்கு அணி', 'எழிற் பண்ட நிலையம், ஆய மதனன் அங்காடி, 94 (ப: 314: பா: 260) 'திரு நகரத்து என்றும் திகழ் திரு', 'உறுமெழில் இரதி, 95 (ப:354) என்றெல்லாம் கவி வருணிக்கின்றார்.

வசந்தசேனை 'எல்லாக் கலைகளையும் உணர்ந்தவள்', 96 (ப: 230) 'நாடக அரங்கத்தில் நண்ணுபவள்', 'பாடுறு கலைகளின் பயிற்சி' பெற்றவள். 97 (ப:90: பா:40)

7.1 இனி, இவ்விருவரும் தம் **காதலருடன் உறவு கொள்ளுதலைக்** காணலாம்.

மாதவி, 'தலைக்கோலரிவை' சிறப்புப் பெறு கிறாள். அதோடு, 'விதிமுதறக் கொள்கைப்படி ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் ஒரு முறை' யாக அரசனிடம் பெறுகிறாள்.இலைப்பூங்கோதை ஒன்றும் பெறுகிறாள். 98 (3: 161-163). அதன் விலை 1008 கழஞ்சு என்றும், அம்மாலை வாங்கு பவர், மாதவிக்கு ஏற்றவர் என', நகர நம்பியர் திரிதரு மறுகில் 99 விற்பவள்போல கூனி நிற்கி றாள்.கோவலன் அந்தத்தொகையைக்கொடுத்து, மணமனை புகுந்தான். மாதவியோடு வைகினான். அவளிடம் 'விடுதலறியா விருப்பினன்' ஆயி னன். 100 (3:164-175)

மாதவி, சமூக மரபுப்படி கோவலனுக்குக் கட்டுப்படுகிறாள். அதனோடு அவன் மீது காதல் வயப்படுகிறாள். அவன் அவளை விடுத்துச் செல் லும்பொழுது, மீண்டும் அவனைத் திரும்பப்பெற முடங்கல் விடுகிறாள். அவனது கொலைச்செய்தி கேட்டு, தனது பரத்தைமை வாழ்க்கையை விடுத்துத் துறவு பூண்டு விடுகிறாள். எனவே அவளுடைய காதல் தியாகத்திற்குத் தூண்டும் வலுவுள்ளதாக உள்ளது.

7.2 "பிறப்பினாலேயே பிறர்க் குரியவளாகிய வசந்தசேனை, காமதேவாயதனம் என்னும் பூஞ் சோலையில் கண்டது முதல் வறியவனாகிய சாருதத்தன்பால் காதல் உடையவளாய், என்னை விரும்புகிறாள் இல்லை" எனச் சகாரன் கூறுவதி லிருந்து அவளது உண்மைக் காதல் புலனா கிறது 101 (ப: 89) இக்கருத்தை, 'வசந்தசேனை, இளமையின் செருக்கினால் இயைந்து நற் குலத்து உளனொரு மகனை தனை உளங்கொள் மங்கை' 102 (ப. 95: பா: 38)என்னும் சகாரனது பணியாளின் கூற்று வலியுறுத்துகிறது.அவளது உண்மை, 'அக்குலத்தினுக்கு ஒவ்வா நன்னர் வான் குணங்கள் பெற்றவள்; குற்றமற்ற அன்பை உடையவள்; 103 (ப: 300:245)என்னும் கூற்றும் உணர்த்தும். நாகரிக நீர் நிறைந்த நதி; வாமை மிகு குண நிதி; 'தீமை ஒருவினவள்' என்றெல்லாம் அவள் தன் குலவொழுக்கத் திற்கு எதிர்நீச்சல் 104 போடுவதை நூல் காட்டு கிறது.

வசந்தசேனை, 'யான் மாட்சி மிக்க சாரு தத்தருடைய குணங்களுக்கு தோற்று, ஈடுபட்ட பணிப்பெண் ஆவேன்' எனத் தன் காதல் உள்ளத்தைத் தானே வெளிப்படுத்துகிறாள். 105 (ப: 246)

காமநோயால் பற்றப்பட்டுத் தலைவன் இருக்குமிடத்தை நாடிச்செல்லும் அவிசாரிகை யாகவே 106 (ப: 219) வசந்தசேனை சித்தரிக்கப் பட்டிருக்கிறுள்.

7.3 சதக்கபூதம், கணிகையரையும், அவரை நாடும் ஆடவரையும் எதுவும் செய்வதில்லை. மாருக, 'அவம் மறைந்தொழுகும் அலவல் பெண்டிரையும்,' 'பிறன்மனை நயப்போரையும்' பாசக் கயிற்றிலிட்டுக் கொன்று உண்டு விடு மாம். 107 (5: 129, 130)

'கணவன் நம்பும் பொருட்டுப் பொய் யொழுக்கத்தில் மறைந்து அவமே ஒழுகிப் பிற ஆடவரை விரும்புவோர் அலவல்பெண்டிராவர். தமது மனைவியர் தனிப்ப, தனித்த பிற மனைவி யரை விரும்பும் துச்சாரி பிறன் மனை நயப்போர்' 108 ஆவர். இப்பெண்டிரும், ஆடவரும், கற் பொழுக்கத்திற்கு ஊறு செய்பவர்கள்.

சதுக்கபூதம் சமூக ஒழுக்க விதிகளை மீறு வோரைத் தண்டிக்கும் ஓர் கற்பனைச்சக்தி. இது பரத்தையரோடு கூடும் கணவர்களைத் தண்டிப் பதில்லை. பிறனில் புகுவோனையும், அலவல் பெண்டிரையுமே தண்டிக்கிறது. எனவே சமு தாய ஒழுக்கம் ஒருதார மணத்தில் கட்டுண்ட மனைவியரோடு ஆண்மக்கள் பாலுறவைத் தடை செய்கிறது. பரத்தையர் உறவு சமூக ஒழுக்க விதிகளுக்கு முரண்பட்டதன்று. பரத்தையோடு உறவுகொண்ட கணவனுயினும், பெண் பிற ஆடவர் உறவு கொள்வது பெருங்குற்றமாகும். இச்சமூக ஒழுக்க விதிகளைச் சதுக்க பூதம் பாது காக்கின்றது.

7.3.1 இது ஏன்? ஒருதார மண உறவில் பிறக் கும் ஆண் மக்களே நிலவுடைமச் சமுதாயத்தில் வாரிசு உரிமையுடையவர்கள். எனவே பிறர் மனை நயத்தலும், கற்புத்திறம்புதலும், நில வுடமையின் வாரிசுரிமையில் குழப்பம் விளைவிக் கும். எனவே அவை தடை செய்யப்பட்ட தீய ஒழுக்கங்காளாகும். பரத்தைமை அவ்வாறன்று. பரத்தைக்குப்பிறக்கும் ஆண்மக்களுர்கு பரத்தை யின் செல்வத்திலோ, அவளது காதலர்களின் செல்வத்திலோ எவ்வித உரிமையுமில்லை. எனவே ஆடவரது பரத்தைமையால் நிலவுடை மைச் சொத்துரிமைக்கு ஆபத்து எதுவும்இல்லை. எனவே பரத்தைமை அனுமதிக்கப்பட்டது.

8.1 இக்கணிகையரால் துன்புற்ற கற்புடைய மகளிர் இருவர் நிலையைக் காணலாம்.

மாதவியால் பாதிக்கப்பட்டவள் கண்ணகி. கண்ணகி கற்புக்கடம் பூண்டவள்; 109 கணவன் துயர் கருதித் தன் துயர் மறப்பவள்; 110 கண வனை அன்றிப் பிற தெய்வத்தைத் தொழ மறுப் பவள்; 111 மாதவியைக் கோபிக்காதவள்; 112 மாமன், மாமியர் முன் கவலையற்றவளாகக் காட்டிக்கொள்பவள்;113 கணவனது அழைப்பை ஏற்பது கடமையென, ஒருவரிடமும் சொல் லாமலே மதுரைக்குச் செல்ல துணிந்தவள். 114 கணவனது ஒழுக்கத்தைக் குறைகூறியதற் காகத் தாயைப் புறக்கணித்தவள். 115

இவ்வாருக, கற்புடைய மகளிர்க்கு விதிக் கப்பட்ட நெறி முறைகளினின்றும் இம்மியும் பிச காத அசல் வார்ப்படமாகவே கண்ணகி சித் திரிக்கப்பட்டிருக்கிருள்.

அதனுலேயே, 'மண்ணின் மாதர்க்கு அணி யாகிய கண்ணகி116 (17:5)', கொங்கச் செல்வி, குடமலையாட்டி, தென்தமிழ்ப்பாவை, செய்தவக் கொழுந்து, ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங் கிய திருமாமணி, 117 (12:47-53), வீரபத்தினி 118 (22:155), 'பார் தொழுது ஏத்தும்' பத்தினி, 119 (28:210) என்றெல்லாம் பாராட்டப் பெறு கிருள்.

ஆடவர் சுதந்திரம் போலவே பெண்ணும் சுதந்திரம் நாடினுல் நிலப்பிரபுத்துவச் சொத் துரிமை சிக்கலாகிவிடும். அதைத் தடுக்கவே 'கற்பு' க்கருத்து மிகைப்படுத்தப்பட்டது.

8.2 வசந்தசேனையால் பாதிக்கப்பட்டவள் தூதை. தூதை, 'தன் கணவனே தனக்குச் சிறந்த அணிகலன்' 120 என்கிருள். (ப. 247) கணவனை மையமாகக் கொண்டே தூதையாகிய சக்கரம் சுழல்கிறது.

களவுபோன வசந்தசேனையின் பொருளுக் காகத் தனது சீதனப் பொருளான இரத்தின மாலையைக் கொடுத்தவள்; 121 வசந்தசேனை அதனைத் திருப்பியனுப்பியபோது ஏற்க மறுத்த வள்;122 கணவனுக்கு முந்தி உயிர்விடத்துணிந் தவள், 123 கணவனது உயிர்மீளக் காரணமாக இருந்ததால் வசந்தசேனையை உடன்பிறந்த வளாக ஏற்றவள். 124

9.1 கற்புக்கரசியரான கண்ணகி, தூதை ஆகிய வர்களின் கணவர்கள் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளனர்? கணிகையைரோடு தொடர்புகொண்டதால் அவர் நிலைதாழ்ந்து போயினரா?

கண்ணகியின் கணவன் கோவலன். அவன் பலதலைமுறைகளாக வாணிபம் செய்துவரும் பரதர் குலத்தவன்: 125 'நற்குலத்தான்' 126 (10:46). 'ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங் குடியில்' 127 (20:57) பிறந்தவன்.

தூதையின் கணவன் மூன்று தலைமுறைகளாக வாணிபம் செய்துவரும் அந்தணர் குலத்தவன். 128 (ப. 277) உயர்குடிப் பிறப்பு வாய்ந்தவன். 129 (ப: 361: பா: 306)

கோவலன் 'மண் தேய்த்த புகழினன்' 130 (1:36) 'உரைசால் சிறப்பினன்' 131 (2:1) அவனில்லாத புகார் நகரம் 'அருந்திறல் பிரிந்த அயோத்திபோல' 132 துன்பத்தில் ஆழ்ந்தது 133 (13:65, 66) மாடலன், 'இம்மைச் செய்தன யானறி நல்வினை' என அவனைப் பாராட்டுகிறான்.

சாருதத்தனை 'மாட்சிமிக்க சாருதத்தர்' 134 என விதூடகன் (ப: 97) நீதிபதி 135 (ப;337) பாராட்டுகின்றனர். 'மிகப் பிரசித்தி பெற்ற சாருதத்தர்' என்பாள் வசந்த சேனையின் தாய் 136 (ப: 336) 'பழிபடையாச் சாருதத்தர்' 137 (ப:346) 'எதிரில் சீருடைப் பெரியோன் 138 (ப: 347) நகர்க்கு அணியென விளங்குவோன்' 139 (ப: 371:பா:320) பொன்னால் இயலாப் பூண் 140 (ப:374:பா:326) திங்களஞ் செல்வனிடத்து வெயில் தோன்றாது 141 (ப;184) செவிக்கு மாத்திரம் இன்பஞ் செய்பவரல்லர் 142 என்றெல்லாம் புகழப்படுகிறவன்.

கோவலன், மாதவி மனம்மகிழ யாழ் மீட்டுகிறான். 143 (7:1), அம்பணவரோடு சேர்ந்து செங்கோட்டி யாழில்பாடல் பாடுகிறான். 144

சாருதத்தன் இரேபிலன் பாடிய இசையைப் பாராட்டுகிறான். இசையின் ஆற்றலை விதந்தோதுகிறான். 145 (பா:79,80,81) கன்னத்துளையில் அழகைக் காண்பவன். 146 (ப:161) நீதிமன்றக் கட்டிடக்கலை நுட்பத்தை வியக்கிறான்.147 (ப:340).

9.2 கோவலன் உயர் பேர் ஒழுக்கம் உடையவன். 148 (10:46) 'பெருமகன் திருமொழி பிறழா நோன்பினன்' 149 (10:47)

சாருதத்தன் நற்செய்கைக்குக் கட்டளைக் கல் 150 (ப:101: பா:46). பிறன் மனைவியைக் காண்டல் தக்கதன்று என்பவன். 151 (ப: 107: பா: 52)

இத்தகைய குணநலன்கள் வாய்ந்த இவ்விருவரும் கணிகையரிடம் ஈடுபாடு காட்டியவர்கள். சமுதாயம் அவர்களது சமுதாய உயர் நிலையைத் தாழ்த்திவிடவில்லை.

கணிகையரால் வாழ்க்கையில் துன்பம் நேரும் பொழுதுமட்டும் கோவலனும், சாருதத்தனும் சமுதாயக் கருத்துகளுக்கியைய மனம் வருந்துகிறார்கள். ஆனால் தாங்கள் தண்டனைக் குரிய சமூகக் குற்றவாளிகள் எனக் கருதவில்லை.

முதலில் மாதவியைக் 'கூத்தி' 152யெனவும் 'மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்' 153 எனவும் கூறியவன், கோசிகமாணி கொணர்ந்த கடிதத்தைக்கண்டதும் 'தன்தீதிலள்'என்தீது154 எனக்கூறி அவளைக் குற்றமற்றவள் எனக் கூறுகிறான்.

நீதிபதி, சாருதத்தனிடம், 'விலைமகள் தங்களுக்கு நட்புரிமையுடையவளா?' என வினவுகிறார்.சாருதத்தன் நாணமுறுகிறான். 'நாணமுற் வேண்டா. இது வழக்குப்பற்றிய தென்று' நீதிமன்றச் செட்டியும் எழுத்தாளனும் கூறுகின்றனர். அப்போது நாணத்தோடு சாருதத்தன், 'விலைமகள் எனக்கு நட்புரிமையுடையாள் என்று யான் எங்ஙனம் கூறுவேன்? இந்நிகழ்ச்சியில் யௌவனப்பருவமே குற்றமுடையதாகின்றது' ஒழுக்கம் அங்ஙனமன்று' என்கிறான். 155 (ப:342 343(தூய ஒழுக்கம் உடையவனையும் இளம் பருவம் காம வயப்படுத்தும் என்பது இதன் கருத்தென மொழிபெயர்ப்பாசிரியர் குறிப்பையுங்காணலாம்.)

கணிகையருடன் உறவு கொள்வது நாணமாகப்படவில்லை. ஆனால் அதைக் கனவான்கள் முன்னிலையில் சொல்வது நாணமாகப்படுகிறது.

அதனாலேயே கோவலனை, 'இம்மையில் நானறிய நல்வினைகளே' செய்தாய் 156 என்று

மாடலனும், பொய்சாட்சி சொன்னவனை, 'நரக னுயிர்' என்றும், தன்னுயிர்தர முன்வந்த கோவலனை 'நல்லுயிர்'157 என்றும் பூதம், பேதப் படுத்திக்காட்டி உயர்த்துகிறது.

அதுபோலவே சாருதத்தனை எல்லோரும் மாட்சிமைமிக்க சாருதத்தர் என்றே கூறுகின்ற னர் போதாக்குறைக்கு, சாருதத்தன்-வசந்தசேனை சோடிப் பொருத்தத்தை 'இரத்தினம் இரத்தினத் தோடு கூடிவிளங்கும் தன்மையது' எனக் கூறு வதைக் கேட்கலாம். 158 (ப:90)

10.1 கோவலனும், சாருதத்தனும் வாழ்ந்த சமு தாயம் **ஆணாதிக்கச் சமுதாயமாகும்.** அது ஒருதார மணத்தை வற்புறுத்துவதாகும். மூவா யிரம் ஆண்டுகளாக நிலவிவரும் ஒருதார மணத் தின் விளைவுகளைப் பற்றி எங்கல்ஸ் கூறுவது சிந்திப்பதற்குரியது.

"ஒருதார மணக்குடும்பம், ஆணின் மேலா திக்கத்தை அடிப்படையாகக் கொண்டது: அதன் தெளிவான நோக்கம் விவாதத்திற்கு இடமில்லாத தந்தை முறையுள்ள குழந்தை களைப் பெறுவதுதான். காலா காலத்தில் இந் தக் குழந்தைகள் தமது தகப்பனாரின் இயற்கை வாரிசுகள் என்ற முறையில் அவரது சொத்தைச் சுவீகரிக்கலாம் என்பதற்குத்தான் இந்தத் தந்தை முறை வேண்டியிருந்தது" 159 (ப. 140)

"ஆரம்பத்திலிருந்தே ஒருதார மணம் என் பது பெண்களுக்கு மட்டுமே. ஆண்களுக்கு இல்லை என்ற ஒரு குறிப்பான தன்மையை முத் திரையிட்டுக் காட்டியது. அது இன்றைக்கும் கூட இத்தன்மை பெற்றுத்தான் இருக்கிறது." 160 (ப:142, 143)

இதற்கான சான்றுதாரங்களைச் சிலப்பதி காரமே உள்ளடக்கியுள்ளது.

10.1.2 "கங்கை தன்னைப் புணர்ந்தாலும், கன்னிதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் நீ காவேரி! அதுவே மங்கை மாதர் பெருங்கற் பென்று அறிந்தேன் வாழி காவேரி" என்னும் கோவலன் பாடல், பலமனைவியர் வாழ்க்கையை நினைவுறுத்துகிறது." (ப:108. கானல்வரி தெ. பொ. மீ.)161

10.1.3 கண்ணகி கூறும் பத்தினிப் பெண்டிர் எழுவர் வாழ்க்கையும் ஆணாதிக்கத்தை நிலை நாட்ட உதவும் கருத்துக்களேயாகும். (21: 5-34) 162

ஆணாதிக்கச் சமுதாயம் தம் நலம் பேண மகளிர்க்கு இத்தகைய கதைகளைக் கூறியதில் வியப்பில்லை. கற்பு மீறிய பெண்டிர்க்குக் கடுந் தண்டனையும், கற்புடைப் பெண்டிரை நயந்த வனுக்குக் கடுந்தண்டனையும் வழங்கிய போதி லும், பரத்தையரை நாடி அவரோடு கூடி வாழ்ந்தவருக்குச் சமூக-அரசியல் தண்டனை எதனையும் அச்சமுதாயம் வழங்கவில்லை.

10.1.4 தலைக்கோல் பற்றிய செய்தியும்; அதற் குச் செய்யப்படும் சிறப்பும், இறுதியில் நாடகக் கணிகைக்கு தலைக்கோலரிவை என்னும் பட்டம் சூட்டுவதும், மன்னன் இலைப் பூங்கோதை கொடுப்பதுடன் ஒரு முறையாக, விதிமுறை தவறாமல் 1008 களஞ்சு பொன் தருவதும் கணிகையர்க்கு அரச ஆதரவைச் சட்டப்படி உறுதிப்படுத்துவதாகும். 163

11.0 பொதுமகளிர் பற்றிய விளக்கத்தில், "யதார்த்தத்தில் குறிப்பாக ஆளும் வர்க்கத்தி னர் இதைச் சகித்துக்கொள்வதோடன்றி ஆர்வத்துடன் பின்பற்றவும் செய்கிறார்கள். என்றாலும் அதைச் சொல்லளவில் கண்டிக்கிறார் கள்" என்று இவ்வுண்மையை எங்கல்ஸ் வெளிப் படுத்தியுள்ளார். 164 (ப. 152)

தொடர்ந்து, 'யதார்த்தத்தில் இந்தக் கண்டனம் அதில் ஈடுபடும் ஆண்களைத் தாக்கு வதில்லை, பெண்களைத்தான் தாக்குகிறது; அவர் கள் சமூக பகிஷ்காரம் செய்யப்பட்டுச் சமூகத் துக்கு வெளியே தள்ளப்படுகிறார்கள். எதற்காக? பெண்பாலர் மீது ஆண்பால் செலுத்தும் பூர்ண ஆதிக்கமே இச்சமுதாயத்தின் அடிப்படை விதி என்று பிரகடனம் செய்யத்தான்' என எடுத்துக் காட்டுகிறார். 165 (ப: 152)

'ஒருதார மணமுறைக்குள்ளேயே இரண்டா வது முரண்பாடு ஒன்று தளர்கிறது. பொது மகளிர் முறையைக் கொண்டு தனது வாழ்க்கையை அணி செய்துகொண்டுள்ள கணவ

னுக்நப் பக்கத்திலேயே புறக்கணிக்கப்பட்ட மனைவியும் நிற்கிருள்,' என்னும் எங்கல்ஸ் கூற்று, கண்ணகியையும் தூதையையும் நினைவு படுத்தாமலில்லை. *166*

12.1.1 மாதவியும், வசந்தசேனையும் கணிகையர். செல்வச் சிறப்பும் அழகும் கலைச்செல்வமும் உடையவர்கள். அரசனல் மதிக்கப்படும் உயர்வு பெற்றவர்கள்.

12.1.2 இருவரும் கதைத்தலைவர்களை நேசிக்கிருர்கள். இருவரும் ஒரு செல்வனேடு காதல் வாழ்க்கை வாழ விரும்புகிருர்கள்.

ஆனல் அவர்கள் காலத்துச் சமுதாய ஒழுக்கமுறைக்கு விரோதமாக அவர்களது விருப்பம் இருக்கிறது. இதனல் அவர்கள் காதல் வாழ்க்கையில் சிக்கல்கள் தோன்றுகின்றன. மாதவிக்குக் கானல் பாணி கோவலனது மனத்தில் அவளைப்பற்றிய நல்லெண்ணத்தை மாற்றுகிறது. அவளது குல இயல்பை நினைவில் கொண்டு அவளது காதலைப் பாசாங்குதான் எனக் கருத வைக்கிறது. அவன் பிறமாதரை மனத்தில் கருதி விரகதாபம் தோன்றப்பாடலாம். அவனுக்கு ஆணுதிக்க சமுதாயத்தில் அவ்வுரிமை உண்டு. ஆனல் தனது சமுதாயத்தில் தான் விரும்பும் கணிகைக்கு, மனைவிக்குரிய கற்பைப் பொருத்திக் காணும் பொழுது, அவள் பிற ஆடவரை எண்ணி ஏக்கம் தோன்றப்பாடும் உரிமையில்லை, என அவன் நினைக்கிருன். மாதவி கற்புடை மகளிரைப்போல பிறர் நெஞ்சு புகுதல் தவறு என்ற கோட்பாட்டிற்கு இலக்கணமாக வாழவேண்டிய மனையறம் புகுந்த மனைவியல்லள். எனவே அவள் தனக்குக் கோவலனைப் போலவே சுதந்திரம் உண்டெனக் கருதுபவள்.

12.2.1 குல ஒழுக்கத்தை விட்டு ஒருவனைக் காதலிக்கும் ஒழுக்கத்தை மேற்கொண்டு, தனது சமுதாய ஒழுக்க முறையை எதிர்த்து நின்ற மாதவிக்குக் 'கற்புக்கடம்' என்ற கட்டுப்பாடு இருப்பதாகத் தோன்றவில்லை. எனவே சமூகக் கட்டுப்பாட்டு ஒழுக்க விதிகளை அவள் எதிர்த்து நின்று கோவலன் ஒருவனையே நேசித்தாள். அவன் தனது சமூக ஒழுக்க நம்பிக்கைப்படி அவளுக்குப் பிற ஆடவரை நினைத்துப் பாடும் உரிமையை மறுத்து அவளது குல ஒழுக்கப்படி அவள் நடக்க விரும்புவதாக எண்ணி அவளைத் துறந்தான்.

12.2.2 ஆயினும் அவளது காதலையும், அவள் அளித்த இன்பத்தையும் மறக்காத இரண்டுபட்ட உள்ளத்தோடு மறுபடி'மனையறம்' மேற்கொண்டான். தொலைத்த பெருஞ் செல்வத்தை மறுபடியும் ஈட்டக் கண்ணகியோடு மதுரை சென்ருன்.

12.2.3 மாதவி, கோவலனும் கண்ணகியும் இரவில் புகாரை விட்டு அகன்றது குறித்து; "குலப் பிறப்பாட்டியோடு இரவிடை கழிதற்கு, என் பிழைப்பு அறியாது கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்" என வருந்தி எழுதிய கடிதத்தை கோசிகமாணியிடம் *167* பெற்ருன் கோவலன்.

தன்னிலையில் தான் பாடிய கானல்பாணி தவறென்று அவன் ஏன் கருதினுன் என்று தோன்ருமல், தன் தவறென்னவென்று அறியாது திகைத்தாள். கோசிகமாணியை முடங்கலோடு கோவலனிடம் அனுப்பினுள். முடங்கல் கண்ட கோவலன் அவளது உள்ள உறுதியையும், தன் மீது கொண்ட நேசத்தையும் அறிந்து இரண்டுபட்ட உள்ளம் ஒன்ருகி, 'தன் தீதிலள்,என்தீது' என்று சொல்லக் கேட்கிருேம். ஆயினும் செல்வம் ஈட்டும் *168* ஆசை உந்த மதுரையை அடைந்தான்.

அங்கு கோவலன் இறந்தான். மாதவி கோவலன் சாவையும், கண்ணகி மரணத்தையும் கேட்டாள்.

கோவலனைத் திரும்பவும் காண முடியும் என்றும் நம்பிக்கை அதனல் அற்றுவிட்டது. அந்நிலையில் அவள் தன் குலஒழுக்கத்தை ஏற்கவும் விரும்பவில்லை. கோவலன்மேல் அவள் கொண்ட காதல் அவளை அவ்வாறு நினைக்கத் தூண்டுகிறது. அந்நிலையில் அவள் தன் குல ஒழுக்கத்திற்கு எதிராகக் கலகக் கொடி தூக்குவதைப்போல துறவை மேற்கொள்ளுகிருள்.

12.3.0 சித்திராபதியிடம், "நல்திறம்படர்கேன்; மணிமேகலையை வான்துயர் உறுக்கும் அக்கணிகையர் கோலம் காணு தொழிக எனப் போதித் தானம் புரிந்து அறங்கொண்டாள் மாதவி. *169* (27:105-808) என்று மாடலன் சொல்வான்.

அதே செய்தியை, அடித்தோழி அரற்ற லும் பின்னால் வற்புறுத்துகிறது.

"ஏதிலார் தாம் கூறும் ஏச்சுரையும் கேட் டேங்கி
போதியின் கீழ் மாதவர் முன் புண்ணிய தானம் புரிந்த
மாதவி தன்துறவும் கேட்டாயோ, தோழி"
170 (29:7)

12.4 இவ்வாறு, 'மாதவி கண்ணகியாயிருந்து வாழ்க்கைச் சோதனையில் அடிபட்டுக் குலத் தொழிலை விட்டுத் துறவியானாள். அறிவின் துணை கொண்டவள்''அல்லள். உணர்ச்சி உந்த உணர்வு பூர்வமாக மாறியவள்'' *171* என்பதை Dr. கைலாசபதி கூறியிருச்கிறார். (ப:142 பழந் தமிழர் வாழ்வும் வழிபாடும்)

இளங்கோவைப் பொறுத்தவரையில் அச் சமூகச் சூழலில் இதுவே பெரும் புரட்சியாகத் தோன்றுகிறது. துன்பமுறுவோர்க்குரிய புக லிடம் துறவே என்னும் அவரது சமய நோக்கே இதற்கு அடிப்படை எனலாம்.

13.11 இனி சூத்திரகன் இப்பிரச்னைக்கு எவ் வாறு விடை காண்கிறான் எனக் காண்போம்.

வசந்த சேனையும் மாதவியைப் போலவே, சிறந்த நலங்கள் யாவும் பெற்ற கணிகை. அவள் சதைத் தலைவனாகிய சாருதத்தனைக் காத லிக்கிறாள். அவனும் பிறப்பால் பிராமணன்; தொழிலால் வணிகன். வணிககுல ஒழுக்கமே அவனுக்குத் தொழிலால் உரியது. பரத்தை யோடு இன்பம் துய்த்தல் சமுதாய உயர்நிலையி லிருந்து அவனை வீழ்த்தாது. அவள் அவனை நாடிச் செல்லுகிறாள். இருவருக்கும் காதல் வாழ்க்கை அமைகிறது. அவளும் தனது குல ஒழுக்க விதிகளை மீறுகிறாள். அவர்கள் காதல் வாழ்க்கைக்கு தடை சகாரன் வசந்தசேனைமீது கொண்ட காம நோக்கு. அவ்வாறு அவளை நோக்கவும் அவளை அணுகவும் செல்வம் படைத்த எவனுக்கும் அச்சமுதாயத்தில் உரிமை யுண்டு. வசந்தசேனை அவனை மறுக்கலாம். ஆனால் ஒருவனோடு காதல் வாழ்க்கை வாழ் வதற்கு அவளுக்குச் சமுதாயம் உரிமையளிக் காது. இச்சிக்கலால் காதலர் பிரிவு ஏற்படு கிறது. சகாரன் முயற்சியாலும், வஞ்சகத் தாலும் பொறாமையாலும் சாருதத்தன் கொலைத் தண்டம் விதிக்கப் பெற்றான். அரசன் மாறியிரு விடில் அவன் தண்டம் நிறைவேறி இருக்கும். ஆனால் சாருதத்தனது உதவிபெற்ற ஆரியகன் அரசனாகி அவனை விடுதலை செய்கிறான்.

இந்நிலையில் சூத்திரகன் காட்டும் முடிவு என்ன? வெகு துணிச்சலாகக் கணிகையைக் குலவதுவாக ஆக்கிவிடுகிறான். 'குலவது' என் னும் குலமகளிர்க்குரிய கௌரவத்தையும் அளித்து, அதற்குரிய வகையில் முக்காடும் இடப்படுகிறது. இதனை அரச ஆணையால் நடைபெறுவதாகவே சித்தரிக்கிறான் சூத்திர கன். நம்பமுடியாத ஒன்றை நடத்திக்காட்டி தன் கதையளவில் *172* புரட்சிக்கொடி நாட்டி யிருக்கிறான்.

14. இவ்வாறாக இளங்கோவும், சூத்திரகனும் கணிகையரான தத்தம் கதைத் தலைவியரை, தத் தம் மனதிற்குகந்த வகையில் முறையே துறவி யாகவும், குலமகளாகவும் ஆக்கியுள்ளார்கள்.

இருநூல்களும் காட்டும் சமுதாயத் தைக் காணலாம்,

இரு நூல்களும் நால்வகை வருணப்பாகு பாட்டை வெளிப்படுத்துகின்றன. ஆனாலும் மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகா) காட்டும் சமுதாயத்தில் சாதிப்பாகுபாடு செறிவில்லாது இருப்பதைக் காண்கிறோம். (133) அந்தணன் வாணிபம் செய்வதும், மற்றொரு அந்தணனாகிய சருவிலகன் களவு செய்வதும் உள்ளன *173* (133) தீண்டாமை பற்றிய பேச்சு காணப்படவில்லை. *174* (134)

திருமணத்திற்கும் சாதிப்பாகுபாடு தடை யாகஇல்லை. அந்தணன் கணிகையை, அல்லது அவளது அடிமையை மணக்க முடியும். பிரதி லோம விவாகம் பற்றிய பேச்சு மிருச்சகடிகா வில் இல்லை. *175* (137)

14.2 அரசியல் புரட்சி சுலபமானதாக இருந் தது. அரசில் திருப்தியற்றவரும், வெறுப்புக் கொண்டவரும் தகுந்த தலைவனைக்கொண்டு அரசனைக் கொலைசெய்துவிட்டுத் தம் தலைவரை அரசனாகப் பிரகடனப்படுத்திவிடமுடிந்தது *176* (ப. 144)

சூதாட்டத்தில் துன்பமுற்ற சம்வாககன் வசந்தசேனையால் விடுவிக்கப்பட்ட பின், துறவையே நிவாரணமாகக் கருதுகிறான். குல ஒழுக்கம் நீங்கிய கீழ்மக்கள் மேற்கொள்ளும் துறவுநிலை விளக்கமுறுது [177] (ப: 221:பா:150).

15.0 இனி இவ்விருநூல் ஆசிரியர்களும் வாழ்ந்த காலத்தைக்காணலாம்.

மிருச்சகடிகா ஆசிரியர் சூத்திரகன், பாச கவிக்குப்பிற்பட்டவர்; வாமனர்க்கு முற்பட்டவர் ஆகவே இவர்காலம் கி. பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து நான்காம் நூற்றாண்டிற்குட்பட்ட இடைவெளி எல்லைக்குள் இருக்கலாம். மொழியியல் அமைப்பால் காளிதாசருக்கு முற்பட்டவராகவும் இருக்கலாம் என டாக்டர் தேவஸ்தாரி [178] (ப:8) கூறியுள்ளார்.

அதுபோலவே, 'இரட்டைக் காப்பியங்கள் வீரயுகத்தை (சங்க காலத்தை) அடுத்த காலப் பகுதியிலே தோன்றியிருக்கவேண்டும்' [179] என டாக்டர் கைலாசபதி கூறியுள்ளார். (ப: 128)

16·1 நூலாசிரியர்கள் தத்தம் வழியிலேயே கதைப்போக்கிற்கு வெவ்வேறு முடிவைக்காட்டியுள்ளனர். ஆனால் அது தனிப்பட்ட இரு பாத்திரங்களின் முடிவாகவே அமைந்தன. ஆகவே அச்சமுதாயச் சூழல் ஒன்றும் மாறிவிடமுடியாது என்பதைக் கருத்திலிருத்தவேண்டும்.

16·2 அதனால்தான் ஆணாதிக்கச் சமுதாயத்தின் விளைபொருளான கணிகையர்-குலமகளிர் சிக்கல் ஒரேடியாகத் தீர்ந்துவிடாமல் நின்று நிலவி வருகிறது. அதனடிப்படையில்தான் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் கூறுவது போல, "பொதுமகளிர் முறை, ஒரு மனிதாபிமானச் சிக்கலாகவும், அறைகூவலாகவும் மனையில் வாழும் கிழத்திக்கு இருந்தது" [180] ஆணாதிக்கச் சமுதாயம் மாறும் வரையில் இந்நிலை மாறப் போவதில்லை.

———

இக்கட்டுரை எழுத 'மிருச்சகடிகா' விற்கு பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரின் தமிழ்மொழிப் பெயர்ப்பாகிய மண்ணியல் சிறுதேரும்' V. G. Paranjpe யின் ஆங்கில மொழிப் பெயர்ப்பான The Toy cart of clay யும் பயன் படுத்தப்பட்டுள்ளது.

1 தொல்காப்பியம்
2 எங்கல்ஸ்-பக்கம் 150
3 ,, ,, 151
4 ,, ,, 152
5, 6, 7 Dr. கா. சிவத்தம்பி 1971-ஜுலை ஆராய்ச்சி
8 மண்ணியல் சிறுதேர் பக்கம் 83 பாட்டு 21
9 சிறுதேர் ப: 180 பா: 116
10 ,, ப: 181: பா 120
11 ,, ப 182 பா 121
12 ,, ப 112
13 ,, ப 198
14 மணிமேகலை 18: 19.20
15 ,, 18: 21-22
16 ,, 16: 10
17 சிறுதேர் ப 83 பா 21
18 சிலம்பு ப 14 160-165.
19 சிறுதேர் ப 83 பா 121
20 ,, பா 22
21 ,, பா 88 பா 29
22 ,, ப 89
23 ,, ப 89 பா 30
24 ,, ப 181 பா 121
25 ,, ப 231 பா 172
26 ,, ப 182 பா 122
27 ,, ப 221 பா 150
28 மேகலை 18: 103-111
29 ,, 18 11-22
30 சிலம்பு 3: 168
31 மேகலை 5: 81
32 ,, 18 97-102
33 ,, 11-22
34 ,, 18: 7-8
35 ,, 24: 19-24

36 சிறுதேர் ப 83 பா 121
37 ,, ப 95
38 ,, ப 181 பா 120
39 ,, ப 231 பா 172
40 ,, ப 295 பா 172
41 ,, ப 231 பா 172
42 சிலம்பு 11: 180-183
43 ,, 9: 69
44 ,, 7 கட்டுரை
45 மேகலை 5: 81-82
46, 47 சிலம்பு 5: 224
48 ,, 5; 50
49 ,, 8: 109
50 ,, 5: 50
51 ,, 5: 51
52 ,, 16: 125
53 ,, 14: 71
54 ,, 22: 142
55 ,, 22: 139
56 ,, 14: 167
57 ,, ப 362-380
58 மேகலை 24: 22
59 சிலம்பு 154: 154-159
60 ,, ப 120
61 ,, ப 360 அரும்பத உரை
62 ,, 14: 147 ,,
63 ,, 14: 166 ,,
64 ,, ப 14: 160, 161 ,,
65 ,, ப 14: 146-147
66 ,, ப 377
67 ,, ப 360
68 மேகலை 18: 33-41
69 The Sanskrit Drama Dr. Keith P. 133
70 மேகலை 18: 65-66
71 சிலம்பு 30: 10-22
72 ,, 14: 126-145
73 ,, 8: 17
74 ,, 13: 69
75 ,, 4: 27
76 ,, 4: 27.28
77 ,, 15: 38
78 ,, 15: 21
79 ,. 15: 40-41
80 சிறுதேர் ப 193
81 ,, ப 192
82 ,, ப 194
83 ,, ப 199
84 ,, ப 201
85 ,, ப 202
86 சிலம்பு 3: 8-9
87 ,, 3: 10-11
88 ,, 3: 161
89 ,, பதிகம் 15
90 ,, 8: 64-65
91 ,, 7 கட்டுரை
92 சிறுதேர் ப: 220
93 ,, ப: 300 பா:245
94 ,, ப: 314 பா: 260
95 ,, ப: 354.
86 ,, ப: 230.
97 ,, ப: 90 பா: 40
98 சிலம்பு 3:161-163
99 ,, 3:168.
100 ,, 3:164-175.
101 சிறுதேர் ப: 89.
102 ,, ப: 95. பா: 38.
103 ,, ப: 300: பா.245.
104 ,, ப: 314: பா: 260.
105 ,, ப: 246.
106 ,, ப: 219.
107 சிலம்பு 5:129, 130.
108 ,, ப: 108.
109 ,, 15:143.
110 ,, 15: 139-141.
111 ,, 9:64.
112 ,, 29:3.
113 ,, 16:74-80.
114 ,, 16:81-83.
115 ,, 30:98-99.
116 ,, 17:5.
117 ,, 12:47-53.
118 ,, 22:155.
119 ,, 28:210.
120 சிறுதேர் ப: 247.
121 ,, ப: 165.
122 ,, ப: 246, 247.
123 ,, ப: 415.
214 ,, ப: 419.
125 ,, நா. வானமாமலை, 'சங்கும், முத்

தும் சமுதாய மாறுதல்களும் (2)’ தாமரை-மே ’69.

126 சிலம்பு 10:46.
127 ,, 20:57.
128 சிறுதேர் ப:277.
129 ,, ப: 361 பா: 306.
130 சிலம்பு 1:36.
131 ,, 2:1.
132 ,, 13:65, 66.
133 ,, 15:91.
134 சிறுதேர் ப:97.
135 ,, ப:337.
136 ,, ப:335.
137 ,, ப:346.
138 ,, ப:347.
139 ,, ப:371, பா:320.
140 ,, ப: 374 பா:326.
141 ,, ப:184.
142 ,, ப:
143 சிலம்பு 7:1.
144 ,, 13: 104-114.
145 சிறுதேர் பா: 79, 80, 81.
146 ,, ப:161.
147 ,, ப:340.
148 சிலம்பு 10:46.
149 ,, 10:47.
150 சிறு ப;101. பா: 46.
151 ,, ப:107: பா:52.
152 சிலம்பு 8:109.
153 ,, 7, கட்டுரை.
154 ,, 13:94, 95.
155 சிறு ப: 342, 343.
156 கிலம்பு 15:91,92.
157 ,, 15:84, 85.
158 சிறு ப:90.
159 எங்கல்ஸ் ப:140.
160 ;, ப:142,143,
161 கானல்வரி-தெ. பொ. மீ. ப. 108.
162 சிலம்பு 21:5-34.
163 ,, 3:159-163.
164, 165 எங்கல்ஸ் ப:152.
166 ,,
167 சிலம்பு 13:89-91.
168 ,, 13:94-95.
169 ,, 27:105-108.
170 ,, 29:7.
171 பழந்தமிழர் வாழ்வும் வழிபாடும் Dr. கைலாசபதி ப. 142.
172 சிறு ப:419,420.
173 ப:133
174 ப:134
175 ப:137
176 ப:176
(173–176) Dr. தேவஸ்தாலி *Introduction to the study of Mrichakatika*
177 சிறு ப 221. பா: 150.
178 Dr. தேவஸ்தாலி ப. 8.
179 Dr. கைலாசபதி
180 Dr. சிவத்தம்பி ‘ஆராய்ச்சி’ ஜூலை 1971.

சொந்தச் செலவு 2 கோடி டாலர்

அரிஸ்டாடில் ஒனுஸிஸ் ஒரு கிரேக்க கோடீசுவரர். இவருடைய ரோடிகளுக்காக, காலஞ் சென்ற அமெரிக்க ஜனாதிபதியின் விதவை ஜாக்குலின், 64 வயதான இவரை இரண்டாவது கணவராக மணம்செய்துகொண்டார். இவருடைய சொந்தக் குடும்பச் செலவுக்கு 2 கோடி டாலர் ஆண்டு தோறும் ஆகிறதாம். அப்படியானுல் இவருக்குச் சொந்தமான மூலதனம் எவ்வளவோ? அமெரிக்காவில் ஹோவார்டுஹூயூஸ் என்ற கோடீஸ்வர முதலாளிக்கு 200 கோடி ரூபாய் மூலதனம் இருப்பதாக அரசாங்கக் கணக்குகளிலிருந்து தெரிகிறது. இதேசமயம் அமெரிக்க மக்களில் ஒரு கோடிப்பேருக்கு பிழைப்புக்குக் காணுத குறைந்த வருமானம் இருக்கிறதென்று அரசாங்கப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அச்சமுதாயத்தில் மிகச் சிலருக்கு எல்லையற்ற செல்வமும், மிகப்பலருக்கு தம் உழைப்புச் சக்தியைத் தவிர விற்பதற்கு எதுவுமில்லாத நிலையும் உள்ளது. (நியூடைம்ஸ்.)

கமலாம்பாள் சரித்திரம்

எஸ். தோதாத்திரி.

[கமலாம்பாள் சரித்திரம் தமிழில் எழுதப்பட்ட முதல் நாவல் என்று சிலர் கூறுகிறார்கள். பிரதாப முதலியார் சரித்திரம் காலத்தால் அதற்கு முந்தியது எனினும் அது ஒரு கற்பனை வயமான கதையே யன்றி, உருவமைப்பிலும், நடப்பியல் தன்மையிலும் நாவலாக இல்லை என்று விமர்சகர் கருதுகிறார்கள். இவையிரண்டையும் நாவலுடைய தன்மைகள் என விமர்சகர்கள் எல்லோருமே ஒப்புக்கொள்கிறார்கள். அவ்வாறாயின் தமிழக கிராம வாழ்க்கையில் நடப்பியல் படிமத்தை அளிக்கும், நாவலுருவம் கொண்ட முதல் தமிழ் நாவல் அதுதான். அதனை எழுதிய பி. ஆர். ராஜமய்யரின் சமூக நிலையும், தத்துவ நிலையும் அந்த நாவலின் படைப்பையும், பத்திரங்களையும், கருத்துகளையும் பாதித்துள்ளன. நாவல் எழுந்த சமூகச் சூழல் கதாபாத்திரங்களின் சமூக நிலைச்சார்புகள், இவற்றால் கதை மாந்தர்களின் உணர்வு, சிந்தனை ஆகியவற்றை மதிப்பீடு செய்ய தோதாத்திரி முயன்றுள்ளார்.

ராஜம் ஐயரின் நூற்றாண்டு முடிவின் நினைவாக இக்கட்டுரையை அர்ப்பணிக்கிறோம்.

-ஆசிரியர்]

1.0 ராஜம் ஐயர் எழுதிய "கமலாம்பாள் சரித்திரம்" தமிழ் நாவலை ஆராயும் எல்லோருக்கும் நன்கு பழக்கமான ஒரு நூல் ஆகும். தமிழ் நாவலின் வரலாற்றை அறிய முற்படும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நவீனங்களில் ஒன்று கமலாம்பாள் சரித்திரம். முதல் தமிழ் நாவலான "பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து" கலை முறையிலும் (Artistic Method), சமூகத்தைப் பிரதிபலிப்பதிலும், கதாபாத்திர அமைப்பிலும் முற்றிலும் வேறுபட்ட நாவல் 'கமலாம்பாள் சரித்திரம்' 'பிரதாப முதலியார் சரித்திரம்' உருவாக்கிய அற்புத நவீனச் (Romance) சூழ்நிலையிலிருந்து தமிழ் நாவலை விடுவித்த பெரும்பங்கு ராஜம் ஐயருக்கு உண்டு. தமிழ் நாவலை விமரிசனம் செய்யும் க. நா. சுப்பிரமணியம், கமலாம்பாள் சரித்திரத்தில் கலை நுட்பக் குறைபாட்டைக் கண்டாலும், அது மொத்தத்தில் வெற்றிகரமான நாவல் என்கிறார். [1] டாக்டர் கைலாசபதி சமூக மாறுபாட்டைச் சித்தரிக்கத் தொடங்கும் நாவல் 'கமலாம்பாள் சரித்திரம்' என்று குறிப்பிடுகிறார். [2] இத்தகைய பாராட்டுக்களைப் பெற்றுள்ள இந்நாவலை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

1.1 தமிழ் நாவல் சென்ற நூற்றாண்டின் பிற்பாதியில் ஏற்பட்ட சமூகப்-பொருளாதார மாறுபாடுகளின் விளைவாகத் தோன்றிய புதிய கலைவடிவம் ஆகும். கி.வா. ஜகந்நாதன் போன்ற பழமை நோக்கு விமர்சகர்கள் எவ்வளவுதான் காலத்தைப் பின்னுக்கு இழுத்து,தொல்காப்பியர் காலந்தொட்டே நாவல் இருக்கிறது என்று வாதிட்டாலும் [3] நாவல் அதற்குரிய இலக்கிய நோக்குடன், இலக்கிய வடிவம் கொண்டு மலர்ந்தது நிச்சயமாக 1850ம் ஆண்டிற்கும் பின்புதான் என்று நாம் கூறலாம். இப்படிப் பட்ட பின்னேக்குப் பண்டிதர்களுக்கு நாம் ஒன்று கூறலாம்: தமிழ் இலக்கியத்தில் பழங் காலந்தொட்டே **கதை இருந்தது; ஆனால் நாவல் இல்லை.** பரமார்த்த குரு கதை, பஞ்ச தந்திரக்கதை, மரியாதை ராமன் கதை போன்ற கதைகள் பரவலாக இருந்தன. கதைகள் எல்லாவற்றையும் நாம் நாவல் என்று கூறமுடியாது.

நாவல் என்ற வடிவத்துடன் முதன் முதலாக வெளிவந்த நூல் வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்.' இந்த நாவல் முதல் படைப்பு என்ற பெருமை பெற்றது. ஆனால் இதை நாம் முழுமையானபடைப்பு என்று கொள்ளமுடியாது. வேதநாயகம் பிள்ளை அவர் காலத்தின் அளவிற்கு இதை எழுதி வெளியிட்டதன் மூலம் மகத்தான சாதனையைச் செய்திருந்தாலும், நாவலுக்குரிய **அம்சங்கள் பல குறைந்து காணப்படுகிறது.** இதற்குக் காரணங்கள் என்ன?

வேதநாயகம் பிள்ளை மத்தியதர வர்க்கத்தினர்; ரோமன் கத்தோலிக்கக் கிருஸ்தவர்; ஆங்கில அரசில் வேலைபார்த்தவர். எனவே அவர் தமது நாவலில் ஒரு குறுகலான கண்ணோட்டத்துடனே உலகை அணுகுகிறார். அவரது காலத்திலேயே இந்தியாவில் பல புதிய வர்க்கங்கள் தோன்றிய போதிலும் கூட, அவற்றை கவனிக்கத் தவறி விடுகிறார் வேதநாயகம் பிள்ளை. வெள்ளையர் ஆட்சியின் விளைவாலும், புதிய வர்க்கங்களின் தோற்றத்தாலும் அப்பொழுது நிகழ்ந்துவந்த சமூக மாறுபாடுகளைச் சித்தரிக்கும் முயற்சி வேதநாயகம்பிள்ளையிடம் சிறிதளவுகூட இல்லை. அவரது நோக்கமெல்லாம், தமிழ் மொழியில் இருந்த உரை நடைப் பஞ்சத்தை நீக்கவேண்டும் என்பதில் தான் இருந்தது.[4] சீரழிந்துவரும் உலகைச் சீர்திருத்தம் செய்யவேண்டும், உலகிற்கு நன்னெறி புகட்டவேண்டும் என்றகொள்கையை மேற்கொண்டு அவர் தமது புத்தகத்தை எழுதினார்.[5]

1.2 இதனால் அவரது "பிரதாப முதலியார் சரித்திரம்' காவியத்தன்மை பொருந்திய அற்புத நவீனமாக விளங்குகிறது. இது முதல் தமிழ் நாவலின் முக்கியமான பண்பு.

1.3 காவியம் என்பது நிலப்பிரபுத்துவ சமூகத்தின் முக்கியமான இலக்கிய வடிவம். காவியத்தின் சிறப்பான பண்பு மனிதனை அவனது குறைபாடுகளுடன் காட்டாமல், நல்லது கெட்டதுடன் காட்டாமல் லட்சியக் குணங்களுடன் காட்டுவது ஆகும். காவியத்தின் கதாநாயகர்கள், தனிப்பெருந் தலைவர்கள்; இராமன் சர்வ வல்லமை பொருந்தியவன்; இலக்குவன் சீற்றத்தின் உறைவிடம்; இராவணன் உலகையே தூக்கி எறியும் பலம் மிகுந்தவன்; தருமன் பொய்யே பேசாதவன்; இந்தத் தலைவர்கள் யாவரும் அரசனின் மறு பதிப்புகள்.

இதன் காரணமாக காவியங்கள் நடப்பு உலகைவிட்டு, ஒரு லட்சிய உலகை மக்கள் முன்பு சித்தரித்துக் காட்டும் சக்திவாய்ந்த சாதனமாக விளங்கின. காவியத்தின் மூலம், காவிய ஆசிரியர்கள் அந்தந்தக் கால ஆள்பவர்களுக்குச் சாதகமான நன்னெறி புகட்டுவதைத் தொழிலாகக் கொண்டனர். காவியத்தைப் போன்று, மக்கள் மனதில் நிலவுடமைச் சமூகத்தின் வீரர்களைப் பற்றியும் மன்னர்களைப் பற்றியும் ஏராளமான கதைகள் நிலவி வந்தன. இக்கதைகள் மனிதனை மனிதனுகக் காணுமல், அதியற்புத வீரனுகக் கண்டன. இவற்றின் முக்கிய நோக்கம் சீமாட்டிகளின் காதலை வர்ணிப்பதும் பெருந்தலைவர்களது வெற்றிகளைப் புகழ்வதும் ஆகும். ஆங்கில இலக்கியத்தில் ஷேக்ஸ்பியர் காலத்தில் சிட்னி என்பவரால் எழுதப்பட்ட 'Arcadia' என்பதும் லைலி என்பவரது 'Epheus' என்பதும் இவ்வகையைச் சார்ந்தவை. இவற்றின் தலையாய நோக்கம் சமூகமுரண்பாடுகளைப் புறக்கணித்து. படிப்பவர்களை கனவு உலகிற்கு அழைத்துச் செல்வதாகும். இவற்றை ஷேக்ஸ்பியரது நாடகங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள், அவரது நாடகங்களில் சுடர்விடும் மனிதாபிமானம் சிறிதளவேனும் இவற்றில் இல்லாமல் இருப்பதைக் காண்பார்கள். இவற்றை அற்புத நவீனம் (Romance)என்று அழைக்கிறார்கள்; இவை நடப்பியலுக்குப் புறம்பானவை.

1.4 இவை இரண்டையும் வேதநாயகம் பிள்ளை ஒன்றுக இணைக்கிறார். வேதநாயகம் பிள்ளையின் நூலில் சமூகம் பிரதிபலிக்கப்பட்டிருக்கும் முறையே அது நாவல் இல்லை என்பதைக் காட்டுகிறது. வேதநாயகம் பிள்ளையின் கதாநாயகன் பிரதாப முதலியார் சகல நற்குணமும் பொருந்திய பெருங்குடிப் பிறந்த வீரன். அவனது பிறப்பிலிருந்து கதை தொடங்குகிறது. கதாநாயகி ஞானம்பாள் பெண்மை நலங்கள் யாவும் ஒருங்கு சேரத் திகழும் காவிய நாயகி. இவர்கள் இருவரையும் மையமாகக் கொண்டு அக்காலத்தில் நிலவிவந்த பல சிறுகதைகளையும் நிகழ்ச்சிகளையும் இணைத்துத் தொடுக்கப்பட்ட, அழகற்ற மாலைதான், இந்த முதல் தமிழ் நாவல். இந்த உயர் குடும்பச் சூழ்நிலையில் இருந்துஆசிரியர் இவ்வற்புத நவீனத்தை விடுதலை செய்யவில்லை. இக்குடும்பங்கள்,முடியாட்சியை ஆதரிக்கும் குடும்பங்களாகவே அவர் சித்தரிக்கிறார். பிரதாப முதலியாரும், ஞானம்பாளும் தங்கள் நிலையில் இருந்து உயர்மட்ட நிலையில் உள்ள குடும்பங்களைத்தான் ஆதரிக்கிறார்கள். அக்கால நிலைக்கு ஏற்ப வேதநாயகம் பிள்ளை முடியாட்சி சிறந்தது என்று கூறுகிறார். இவ்வாறு ஒரு குறுகிய சமூக உலகையே அவர் எடுத்துக்காட்டு

கிறார். இதைக் காவிய இலக்கணங்களுடனும், பொழுது போக்குக் கதைகளுடனும் அவர் கலக்கிறார். இது விக்ரமாதித்தன் கதைகளை கம்ப ராமாயணத்துடன் இணைத்தது போன்று உள்ளது. இதன் விளைவாக முதல் தமிழ் நாவல், நாவலாக இல்லாமல் அற்புதங்கள் நிறைந்த உரைநடைக் காவியமாகத் திகழ்கிறது. மனித உறவுகளைப் புறக்கணித்து ஒரு லட்சியக் கனவு வகை (Idyllic) உருவாகியுள்ளது. இந்த சூழ்நிலையைத்தான் அவரது சுகுணசுந்தரியும் பிரதிபலிக்கிறது.

2.6 ஆனால் பிரதாப முதலியார் சரித்திரம் வெளியிடப்பட்டு பதினெட்டு ஆண்டுகள்கழித்து எழுதப்பட்ட "கமலாம்பாள் சரித்திரம்" தமிழ் நாவலின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இதன் ஆசிரியரான ராஜம் ஐயர், தமக்கென்று ஒரு பாணியை வகுத்துக் கொண்டு எழுதினார். அவரது பாணியின் சாயலை மாதவய்யாவின் நாவல்களிலும், சங்கரராம், கு. வெங்கடரமணி, கல்கி, (கல்கியின் சமூக நாவல்கள்) சிதம்பரசுப்பிரமணியன் ஆகியோரது நாவல்களிலும், காணலாம். இந்த நாவலிற்கு முன்னுரையில் குறிப்பிட்டுள்ளது போல [6] கமலாம்பாள் சரித்திரத்தின் வழியேதான் தமிழ் நாவல் சுவடு விட்டுக்கொண்டு போகிறது என்று நாமும் கூறலாம்.

2.1 ராஜம் ஐயரின் **உலகக் கண்ணோட்டம், அவரது தனி மனோநிலையாலும், வர்க்கக் கண்ணோட்டத்தாலும், அவர் கால மதக்கொள்கையாலும் பாதிக்கப்படுகிறது.** இது எவ்வாறு என்று காண்போம்.

2.2 ராஜம் ஐயர் வத்தலக்குண்டில் பிறந்தவர். மத்தியதர வர்க்கத்தைச்சேர்ந்தவர். அவரது குடும்பத்தினர், நடுத்தரமான நிலச்சுவான்தார்கள்: ராஜம் ஐயர் காலத்தில் இதுபோன்ற மத்தியதர வர்க்கத்தினர் ஆங்கிலம் பயின்று அரசாங்கத்தில் உயர் பதவி பெற மிகவும் விரும்பினர். அது அவர்களுக்கு சமூகத்தில் ஒரு அந்தஸ்தையும்,செல்வாக்கையும் தேடித்தந்தது. இந்த நோக்கத்தில் ஆங்கிலக் கல்வி பயின்ற ராஜம் ஐயர், சட்டப்பரீட்சையில் தவறி விட்டார். இது அவருக்கு மனச்சோர்வை அளித்தது, 7 இதன் பிறகு அவர் எழுத்துத் துறையில் நுழைந்தார். எழுத்துத் துறையில் நுழையும்போது சென்னையில் அந்தக் காலத்தில் செயல்பட்டு வந்த இந்துமத ஸ்தாபனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். [8] விவேகானந்தரது ஆசி பெற்ற "பிரபுத்த பாரத" என்ற ஆங்கில இதழின் ஆசிரியராக இருந்தார். பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்றார்; தனித்தே இருந்து சிந்தனை செய்து உண்மையை - கடவுள் ரகசியத்தை - அறிந்து கொள்ளும் ஞான மார்க்கத்தைப் பின்பற்றினார்; இவரது வாழ்வில் ஒரு சந்நியாசினியும், சந்தானந்த சுவாமிகள் என்ற துறவியும் குறுக்கிட்டனர்; பிறப்பால் ஸ்மார்த்த பிராமண குலத்தைச் சேர்ந்திருந்ததால் அத்வைத சித்தாந்தத்தைக் கற்றிருந்த ராஜம் ஐயர், மேலே விவரித்த வாழ்க்கைச் சூழ்நிலையினால், பழுத்த அத்துவைதியானார். உலகம் மாயை என்று கூறுவதிலும், உலகில் காணும் பொருள்கள் அநித்தியமானவை, அவற்றிற்கு எல்லாம் மேலாக கடவுள் இருக்கிறார் என்று நம்புவதிலுமே தன் வாழ்நாள் முழுவதையும் கழித்தார். இவ்வாறு எல்லாவற்றிலும் பரந்து, பேருண்மையாக விளங்கும் கடவுளை அடைவதற்கு அமைதியான நிலையில் தியானம் செய்தலே தகுந்த மார்க்கம் என்று கருதினார்.

2.3 இந்தக் கருத்துக்களின் சாயல் 'கமலாம்பாள் சரித்திரம்' முழுவதிலும் காணப்படுகிறது. நாவலின் பின்கூற்று ராஜம்ஐயரது வேதாந்தக் கருத்துக்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டு. [9]

"இப்பொய்க் கதையை இதுகாறும் பொறுத்தருளிய நேயர்காள்" என்று கூறுகிறார். தான்சிருஷ்டித்த உலகே மாயை என்பதுஅவரது கருத்து; தனது வாழ்வின் மனச் சாந்திக்காக வேதாந்தத்தில் ஈடுபட்டதை, இங்கு ஆசிரியர் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார். இக்கதை பலவித மனோசஞ்சலத்தின் மத்தியில் எழுதப்பட்டதால் இதில் குறைகள் உள்ளன என்று கூறுகிறார் ராஜம் ஐயர். [10] தமது அத்வைதக் கருத்து முழுவதையும் பின்வரும் பகுதியில் வெளிப்படுத்துகிறார். [11]

"இது நிற்க இச்சரித்திரமெழுதுவதில் எனக்குக் கதையே முக்கியக் கருத்தன்று .... (பகவானது) மாயா விபூதியாம் பெருங்கடலுள் ஓர் அலையுள், ஓர் நுரையுள், ஓர் துளியில், ஓர் அணுவை யானெடுத்து, அதனுள் என் புல்லறி விற் கெட்டிய மட்டும் புகுந்து பார்த்து:

சாணினுமுளனோர் தன்மையணு வினைச்சத
கூறிட்ட
கோணினுமுளன் மாமேருக்குன்றிலு முன்னிந்
நின்ற
தூணினுமுளன் முன்சொன்ன சொல்லினு
முளனித்
தண்மை காணுதி விரைவில்

என்று காட்ட தூண் பிளந்து தோன்றிய அங்கும் இருக்கக்கண்டு திசை திறந்தண்டங் கீறிச் சிரித்த செங்கட் சீயத்தைக் கண்டு கைகூப்பி, ஆடிப் பாடி யரற்றி உலகெலாந் துள்ளித் துகைத்த இளஞ்சே யொப்ப யாமும் ஆடிப்பாடி தேட வேண்டுமென்பதே யன்றி வேறன்று."

2.4 இத்தகைய தத்துவ-உலக நோக்குடன்தான் ராஜம் ஐயர் அவரது கால யதார்த்தத்தைக் காண்கிறார். ராஜம் ஐயரது தத்துவம் அகவயமானது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சமூகத்தில் ஏற்படுகிற பலவிதச் சிக்கல்களுக்கு சமூகத் தீர்வு காண்பதை விட்டுவிட்டு, அவற்றிற்குச் சிந்தனையளவிலேயே தீர்வு கண்டு சமூகமே மாயை,அதற்குப்பின்னால், பிரகலாதன் முன்பு தோன்றிய நரசிம்மமூர்த்தியைப் போன்று கடவுள் கரந்துறைகிறான், எனவே புறவாழ்வு முக்கியமில்லை, கடவுளைத் தேடும் அகவாழ்வுதான் பரமானந்த நிலை என்ற தத்துவம்தான் ராஜம் ஐயரின் தத்துவம். இந்தக் கண்ணோட்டமுள்ள ராஜம் ஐயர் தமது நாவலில் அவர்கால நடப்பியல்பை அணுகுகிறார். அது அவரது அத்வைதக் கொள்கைக்கு அடங்காமல் அக்கொள்கையிலிருந்து முரண்படுகிறது. இது எவ்வாறு என்று காண்போம்.

3.0 'Being determines consciousness' என்று காரல் மார்க்ஸ் கூறுகிறார். ராஜம் ஐயரது நாவலுக்குத் தேவையான மூலப்பொருள்களை வழங்கியது அவர்கால சமூக அமைப்பாகும். ராஜம் ஐயர் காலம், இந்தியாவின் பொருளாதார-சமூக அரங்கில் பல மாறுதல்கள் நிகழ்ந்துவந்த காலம். இரு பெரும் சமூக அமைப்புகளை நேரில் கண்டவர் ராஜம் ஐயர் ஆண்டாண்டு காலமாக இருந்த நிலப்பிரபுத்துவ சமூகம் தேய்வடைந்து கொண்டிருந்த நேரம் அவரது காலம்; வெள்ளையர் வரவால் ஆலை முறையும், போக்குவரத்து வசதிகளும், செய்தித் துறையும் தலையெடுக்கத் தொடங்கிய காலம். பிரிட்டிஷ் அரசின்கீழ், இந்திய நிலவுடைமையாளர்கள் தங்களது அதிகாரத்தைச் செலுத்தி வந்த காலம். இவர்களது அதிகாரம் இந்திய கிராமப் புறங்களில் கொடிகட்டிப்பறந்த அக்காலத்திலேயே வெள்ளை முதலாளிகளும், அவர்களைச் சார்ந்த இந்திய முதலாளிகளும், குட்டி முதலாளிகளும் நகரங்களில் தங்கள் வாணிபத்தைப் பெருக்கி வந்தனர். இவர்களது வளர்ச்சியைக் கண்ணுற்ற விவேகானந்தர் கூட 12 'பாரதம் இதுவரை வர்ணசிரமத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது; இப்பொழுது வைசியர்களின் (வியாபாரிகள், பூர்ஷ்வாக்கள்) ஆட்சி நடைபெறுகிறது; வருங்காலத்தில் சூத்திரர்கள் ஆட்சி இடம்பெறும் (சோஷலிசம்)" என்று குறிப்பிட்டார்.

இந்தத் தலைமை வர்க்கங்களுடன் முரண்பட்ட தாழ்த்தப்பட்டவர்களும், விவசாயிகளும் வாழ்ந்துவந்த காலம் அது. இவ்வர்க்க அமைப்பில் புதிதாகத் தோன்றிய முக்கிய வர்க்கங்கள் இரண்டு (1) வெள்ளை முதலாளிகள் (2) இந்திய முதலாளிகள்; தொழிலாளிகள். ஜமீன்தார்களும், பண்ணையடிமைகளும், வெள்ளையர்கள் வருவதற்கு முன்பிருந்தே இந்தியாவில் இருந்தவர்கள். வெள்ளையர்கள் வரவால், அவர்களுக்குச் சட்டரீதியான அங்கீகாரம் கிடைத்தது. அதனால் சமூகத்தில் அவர்களது பங்கு தீவிரப்பட்டது.

3.1 இந்த சமூக அமைப்பில் இருந்து ராஜம் ஐயர், விவேகானந்தர் குறிப்பிட்ட வர்ணசிரம தர்ம ஆட்சியாளர்களில் ஒரு பிரிவினர்களான அந்தணர்களது வாழ்க்கையைச் சித்தரிக்க முற்படுகிறார். பிறப்பால் அந்தணரான ராஜம் ஐயருக்கு அவரது ஜாதி முதலில் தென்பட்டதில் வியப்பில்லை.

அந்தணர்கள் இந்தியாவில் பரம்பரை பரம்பரையாக அறிவாளிகளாக விளங்கினர்; ஆளும் வர்க்கத்தைச் சார்ந்திருந்தனர். வெள்ளை யர்கள் ஆட்சிக் காலத்தில் அவர்கள் தங்கள் வாழ்க்கைமுறையைச் சற்று மாற்றவேண்டி வந்தது. உள்நாட்டு ஜமீன்தார்கள் தயவை விட்டு வெள்ளையர்களது தொண்டர்களாகிவிட் டால் சமூக அந்தஸ்து உயரும்: தமிழ்நாடு முழு வதையுமே ஆட்டிப்படைக்கலாம் என்று கண்டு கொண்டனர். இதன் காரணமாக, இயல்பாக படிப்பாளிகளாக இருந்ததால், ஆங்கிலம் பயின்று பல அரசு அலுவல்களில் அமர்ந்தனர். அவ்வாறு அரசாங்கப் பணிகளில் நுழைந்தகாலை புதிய வர்க்கங்களைச் சந்திக்கும் வாய்ப்பு அவர் களுக்குத் தமிழ்நாட்டில் கிடைத்தது. அந்தப் புதிய வர்க்கங்களைப் பற்றி தங்கள் போக்கில் ஒரு முடிவிற்கு வந்தனர்.

3.2 "கமலாம்பாள் சரித்திர"த்தின் கதா நாயகர் முத்துசுவாமி ஐயர் இந்த நடப்பியல் பைப் பிரதிபலிக்கிறார். அவர் சிறுகுளம் கிரா மத்தில் உள்ள ஒரு மிராசுதார், அவர் தம்பி, சுப்பிரமணிய ஐயரும் ஒரு மிராசுதாரே; முத்து சுவாமி ஐயர், நாவலில் சிதைந்துகொண்டுவரும் கூட்டுக் குடும்ப அமைப்பின் தலைவனாகக்காட்சி தருகிறார்.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இது போன்ற இந்து கூட்டுக் குடும்பங்கள் பல அக, புறக் காரணங்களால் சிதைவடைந்து கொண்டி ருந்தன. நாவலாசிரியர் இங்கு வெளி உலகத் தொடர்பு இல்லாத கூட்டுக் குடும்பம் ஒன்று உட் பொருமையினால் எவ்விதம் சிதைகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். முத்துசுவாமி ஐயர் பண ஆசை காரணமாக பம்பாய் வியாபா ரத்தில் ஈடுபடுகிறார். அந்த வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படுவது, முத்துசுவாமி ஐயர் குடும் பம் அழிவதற்கு பல காரணங்களில் ஒன்று என்றாலும், மூலகாரணம் அதுவல்ல. முக்கிய காரணம் சிறுகுளம் கிராமத்தில் உள்ள பிராமண சமூகத்தினரிடையே நிலவிய பொறாமையாகும். ராஜம் ஐயர் தமக்கே உரித்தான ஹாஸ்ய ரசத் துடன் அறிமுகப்படுத்தும் 'வம்பர் மகாசபையும்' 'கல்யாணத் தடபுடலும்' பிராமணர்களிடையே, பணக்காரனை, ஏழை பிராம்மணன் எவ்வாறு காண்கிறான் என்பதன் வெளிப்பாடு ஆகும்.

3.3 முத்துசுவாமி ஐயர் குடும்பத்தின் தலைவன்; பிரபல திருடன், பேயாண்டித்தேவன் கூட அவரிடம் மதிப்பும் மரியாதையும் வைத்தி ருக்கிறான். முத்துசுவாமி ஐயருக்கு உட்பட்டவர் சுப்பிரமணிய ஐயர். தன் தமையனுக்குச் சம மான செல்வம் இருந்தாலும் அவர் குடும்பத்தலை வரான முத்துசுவாமி ஐயருக்கு உட்பட்டவர். பின்னவரது வேண்டுகோளுக்கு இணங்க தாசில் தார் வைத்தியநாத ஐயர் உடனடியாக பேயாண்டித் தேவனைப் பிடிக்க ஆட்கள் சகிதம் வருகிறார். முத்துசுவாமி ஐயர் அரசாங்கத்திலும் செல்வாக்கு உள்ளவர். அவரது மகள் லக்ஷ்மி திருமணத்திற்கு பெரும்பாலான அரசாங்க அதி காரிகள் வருகின்றனர். இது மதிப்பிற்குரிய விஷயம். இது, எவ்வாறு நிலவுடைமை சமூகத் தின் தலைமைப் பகுதியினர், ஆங்கில அரசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்று காட்டுகிறது. 13

"ராமசாமி சாஸ்திரிகளுடைய குமாரர் சிரஸ்தார் நாராயணய்யருடைய பெட்டி வண்டி ஒன்று,... தாசில் குப்புசுவாமி அய்யருடைய பெட்டி வண்டி ஒன்று, டிப்டி கலெக்டர் ராம ராயர் குதிரை வண்டி ஒன்று இவ்விதமாகக் கூடிய முப்பது வண்டிகளும் விடிந்து பயணம் புறப்பட ஆரம்பித்தது" இவ்வாறு ஆசிரியர் அரசு அலுவலர்கள் முத்துசுவாமி அய்யர் வீடு தேடி வருவதை வருணிக்கிறார்.

அதே சமயத்தில் முத்துசுவாமி அய்யரு டைய சுற்றத்தார்களில் ஏழைகள் இல்லாமல் இல்லை. அவர்கள் முத்துசுவாமி அய்யரை அண்டிப் பிழைத்தனர். இதை ஆசிரியரே வரு ணிக்கிறார். 14 "சிறுகுளத்தருகில் கடுகனூர், குள்ளப்புறம், விருத்தக்கப்பட்டி, சோரனூர் முதலிய சில பிரபலமான கிராமங்கள் உண்டு. அவற்றின் மகாஜனங்களுடைய உத்தியோகம் அபிசிரவணம் சொல்லல், பரிசாரகம் செய்தல், சவண்டி தின்னல், பொய்ச்சாட்சி சொல்லல் முதலியனவாம்......முத்துசுவாமி அய்யருடைய பெண்ணின் கலியாணத்தைச் சிறப்பிக்க எண்ணி இந்த பிராமணோத்தமர்கள்... விபூதி டப்பி,

ஸ்தாலிச் செம்பு...ஆகிய இவ்வித உத்தியோகச் சின்னங்களுடன் சர்வாபரண பூஷிதர்களாய் சிறுகுளத்தை நோக்கிக் கலியாணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னமேயே தங்களுடையஇஷ்ட மித்திர சகல பரிவார பந்துக்களுடன்... புறப் பட்டு வந்துவிட்டார்கள்''

3.4 முத்துசுவாமி ஐயருக்கு இவ்வளவு செல்வாக்கு இருந்தாலும், அவரைவிட சமூகத் தில் பணத்தில் குறைந்தவர்களுக்கு உள்ளூரப் பொருமை இருந்தது. அவரை எப்படி அழிக்க லாம் என்பது அவர்களது சிந்தனையாகவே இருந்தது. முத்துசுவாமி ஐயரது சொத்தைப் பற்றி பொருமை மேலீட்டால் நாகு என்ற பெண் கூறுகிறுள் 15 ''பணமாம் பணம். இந்த ஊருக்குத்தான் அதிசயம். ஆலயில்லாவூரில் இலுப்பப்பூ சர்க்கரை.'' பொன்னம்மாளுக்கு தன் மகனை கமலாம்பாள் வளர்ப்பதே பிடிக்கவில்லை. முத்துசுவாமி ஐயரை ''புருஷக் கைம்பெண்''16 என்று கூறும் அளவிற்கு அவளது உள்ளத்தில் பொருமை வளர்ந்திருக்கிறது.

3.5 இந்தப் பொருமை முத்துசுவாமி ஐயர் குடும்பத்தையே அழிக்கிறது. இத்துடன் நில வுடைமையாளர்களிடையே இருந்த போட்டியும் சேர்ந்து அச்சமூகத்தையே சிதைக்கிறது. இது எவ்வாறு? சுப்பிரமணிய ஐயர் பண்ணையார் களுக்குரிய ஆடம்பரப் பிரியர். தன் செல்வ பலத்தைக் காட்ட வேண்டும் என்ற எண்ண மூள்ளவர். அவர் புதிய ஜல்லிக்கட்டுக்காளைகளை வாங்குகிறுர். கோமளநாயக்கனூர் ஜமீன்தார் காளையும் ஆண்டுதோறும் ஜல்லிக்கட்டுக்கு அவ் வூருக்கு வருவது வழக்கம்; ஆண்டுதோறும் அதைப்பிடிக்க ஆள் இல்லாமல் அது வெற்றி மாலை சூடும். சுப்பிரமணிய ஐயர் தன் காளை வெற்றிபெறவேண்டும் என்பதற்காக,ஆட்களைத் தயார் செய்து, ஜமீன்தாரின் காளையை அடக்கு கிறுர்; ஐயரது காளை ஜெயிக்கிறது. இதனுல் கோபம்கொண்டு ஜமீன்தார் பேயாண்டித்தேவன் என்ற கொள்ளைக்காரனை ஏவிவிடுகிறுர். அவன் ஐயரது காளைகளைத் திருடுகிறுன். முத்துசாமி ஐயர் தம்பியின் உதவிக்கு வருகிறுர். பேயாண் டித்தேவன் கைதாகிறுன். ஆனுல் பொருமை பிடித்த மனைவியின் சொற்படி ஆடும் சுப்பிர மணிய ஐயர், பேயாண்டித்தேவனுக்கு எதிராகச் சாட்சி சொல்லுகிறுர். பேயாண்டித் தேவன் விடுதலையாகி வந்தவுடன் முத்துசாமி ஐயர் குழந்தை நடராஜனை ஆள் வைத்து தூக்கிச் சென்றுவிடுகிறுன். இது முத்துசாமி ஐயர் குடும்பம் சிதைய முதற் காரணம். இதில் பொருமை அதிகமாகப் பங்கு பெறுவதைக் காண்கிருேம்.

3.6 முத்துசுவாமி ஐயர் அவரது தம்பி யைப் போன்றவர் அல்லர். சற்றே பரந்த கண்ணுேட்டம் உள்ளவர். **ஆசிரியரைப் போன்று ஒரு வேதாந்தி; ஆனுல் உலகின் மாறுதல்களையும் கவனிப்பவர்**; தம்பி முத்து சுவாமி ஐயர். மிராசுதார்களுக்குரிய குணங்கள் நிரம்பியவர்; அவர் வெளி உலகைக் காண்பவர் அல்லர்; புதுமையை வரவேற்காதவர்; **முத்து சுவாமி ஐயர், அவர் காலத்தின் புது வர்க்க மான வியாபாரிகளுடன் தொடர்புகொள்ளு கிறுர்.** பம்பாயில் ஒரு வியாபாரத்தை சில கூட்டாளிகளுடன் ஆரம்பிக்கிறுர். அது லாபம் தருகிறது. அதனுல் லாப நோக்குடன் தன் சொத்து முழுவதையும் விற்று முதலீடு செய்கி றுர்.

பணத்தாசை கொண்டு மோசக்காரர்களு டன் சேர்ந்து வியாபாரம் நடத்துகிறுர் முத்து சுவாமி ஐயர். அவர் பணம் மறைந்துவிடுகிறது. அதைத்தேடி பம்பாய் சென்று பலன் இன்றிச் சிதம்பரம் வருகிறுர்.அங்கு துறவியாகவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எழுகிறது. அப் பொழுது பொன்னம்மாள் ஏவிவிட்ட ஆட்கள் கமலாம்பாள் நடத்தை கெட்டவள் என்று முத்துசுவாமி ஐயரிடம் கூறுகின்றனர். உடனே உலகை வெறுத்து அவர் தற்கொலை செய்து கொள்ள முயலுகிறுர். அவரை ஒரு சந்நியாசி தடுத்தாட்கொள்ளுகிறுர். இதன் பின்பு அவர் அத்துவைதம் பேசுகிறுர்; துறவியாகிறுர். இதனுல் உலகைக் காண மறுத்துவாழ்க்கையை வெறுக்கும் குருட்டு மனுேபாவத்தில் ஈடுபடு கிறுர். இதனுல் முத்துசுவாமி ஐயர் குடும்பம் முற்றிலும் சிதைந்துவிடுகிறது. இச்சிதைவை ஆசிரியரே பேயாண்டித் தேவன் மூலம் வரு ணிக்கிறுர். 17

4.0 இவ்வாறு முத்துசுவாமி ஐயர் மூல மாக வாசகர்களிடம் பேசுவது ராஜம்ஐயர் தான்.

ராஜம் ஐயர் அவரது காலத்தின் சமூக அமைப்பில் தாம் பிறந்த சாதியிலும், அதைச் சார்ந்துள்ள அல்லது விரோதமான சாதிகளிலும் பல் வேறு மனிதர்களைக் காண்கிறார். புதியதாகத் தோன்றிய வியாபாரிகள் எவ்வாறு பணம் சம்பாதிக்கிறார்கள் என்பதையும் காண்கிறார். இப்புதுமை தரும் இலாபத்தினால் கவரப்பட்டு, மிராசுதார்களும், பண்ணையார்களும், தத்தம் சொத்துக்களை வாணிபத்தில் ஈடுபடுத்துவதையும் ராஜம் ஐயர் கவனிக்கிறார். இதனால் தமிழ் நாட்டுக் கிராமங்களில் பெருங்குடும்பங்கள் அழியத் தொடங்குவதையும் அவர் காண்கிறார்.

4.1 இந்திய சமுதாயத்தில் இப்புதிய வர்க்கங்களின் தோற்றம் காரணமாக எழுந்த தனி மனிதக் கொள்கையையும்[18] ராஜம் ஐயர் வரவேற்கிறார். நாவலின் பிற்கூற்றில் "அவனது மாயா விபூதியாம் பெருங்கடலுள், ஓர் அலையுள், ஓர் நுரையுள், ஓர் துளியில் ஒரு அணுவை யானெடுத்து" என்று அவர் கூறுகையில் சமூகத்தின் ஓர் அணுவாக விளங்கும் தனி மனித மனத்திற்குள் அவர் புகுந்து பார்க்கப்போகிறார் என்பது தெளிவாகிறது. ராஜம் ஐயர் காலத்தில் எழுந்த புதிய சக்திகளின் விளைவாக, ஒரு மனிதனுக்கும், இன்னொரு மனிதனுக்கும் உள்ள வேறுபாடுகளை, குண விசேஷங்களை நன்கு உணர்கிறார்.

பொன்னம்மாளது சூழ்வினையினும், 'சங்கரியது கொலைத் தொழிலும், சுப்புவின் கலகத் திறத்தினும், நடராஜனது விவரமறியா இளமையும், ராமசேஷய்யரது வாஞ்சா ரூபமான முதுமையும், லட்சுமி ஸ்ரீனிவாசனது மனோதர்ம விசேஷத்திலும், கமலாம்பாளது பக்தி வைபவத்திலும், முத்துசுவாமி ஐயரது ஆத்மானந்தத்திலும்"[19] என்று ராஜம் ஐயர் விவரித்துக் கொண்டே செல்கிறார். இக்கூற்று ஆசிரியர், தனி மனித குண தோஷங்களைச் சித்தரிக்கத் தொடங்குகிறார் என்பதைத் தெளிவாக்குகிறது. இது ஆசிரியர் காட்டும் நடப்பியல்பு.

4.2 ஆனால் அவர் காட்டும் இந்த நடப்பியல்பு, அவர் ஜாதிக் கண்ணோட்டதினால் பாதிக்கப்படுகிறது. அவரது காலத்தில் தோன்றிய புதியவர்க்கங்களை வரவேற்று அவற்றின் ஆக்க பூர்வமான சமூகப் பங்கைக் காணத் தவறிவிடுகிறார். அவ்வர்க்கங்களினால் ஏற்படும் நஷ்டத்தை மட்டும் மனதில் கொள்கிறார். இது சமூக அமைப்பு சிதைவதற்குக் காரணமாக இருந்ததால் எல்லாமே அழியக்கூடியவை என்ற சித்தாதப் போர்வையை போர்த்திக் கொள்கிறார். அவரது அத்வைதம் அதற்குப் பொருத்தமாக இருப்பதால், அதன் வழி நின்று உலகைப் பார்க்கிறார். அத்வைதம் அவரது நாவலில் க. நா. சுப்பிரமணியம், கூறுவது "துருத்திக் கொண்டு நிற்கிறது" அவரால் அத்வைதத்தை, அவர் காலத்தின் நடப்பியல் புடன் இணைக்க முடியவில்லை. இருப்பினும் நடப்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும் தமது மதக் கருத்துக்களுக்குப் புறம்பாக உலகு இயங்குவதைக் கண்டு ஒரு விரக்திநிலையான முடிவிற்கு வருகிறார்[20] "இவ்விதம் முடிந்தது சுப்பிரமணிய அய்யருடைய சரித்திரம். அவர் ஏன் இவ்விதம் இறந்திருக்க வேண்டும் என்று சிலர் கேட்கலாம். சரித்திரத்தை நாம் நடந்தபடி எழுதவேண்டுமேயல்லாது மாற்றுவதற்கு நமக்கு என்ன அதிகாரமிருக்கிறது; நம்முடைய திருப்திக்காக இவ்வுலகம் சிருஷ்டிக்கப் பட்டிருப்பது போல் காணவில்லை" இது ஏன்?

4.3 ராஜம் ஐயரின் சித்தாந்த-உலகக் கண்ணோட்டம் அத்வைதத்தால் பாதிக்கப்படுகிறது. அவரையும் மீறி ஆசிரியர் மேலே நாம் விவரித்த யதார்த்தத்தை நமது நாவலில் சித்தரிக்கிறார். அவர் சித்தரிக்கும் யதார்த்தம், அத்வைதக் கொள்கையிலிருந்து வேறுபடுகிறது இதனால் நாவலில் ஆசிரியரது கருத்துலகக் கண்ணோட்டத்திற்கும், கதை நடப்பிற்கும் பெரிய தொரு முரண்பாடு உள்ளதைக் காண்கிறோம். ஆசிரியர் நாவலில் பல இடங்களில் உலகம் மாயை என்று கூறினாலும் அவரது கதை மாந்தர்கள், சூழ்நிலையின் தாக்கத்திற்குப்பட்ட, ஆசாபாசங்கள் உள்ள மனிதர்களாகவே காட்சி தருகின்றனர். முத்துசுவாமி ஐயர் தாமரையிலைத் தண்ணீர் போன்று இருக்கின்றார் என்று கூறப்பட்டாலும், நாவலின் ஆரம்பத்தில் கமலாம்பாளிடம் அவர் கொஞ்சுவதும், தன்தம்பி மகனுடன் விளையாடுவதும், கமலாம்பாள் லட்சிய மனைவியாக இருக்கவேண்டும் என்று விரும்புவதும், பேயாண்டித் தேவனை ஒழிக்க

முயற்சி செய்வதும், வியாபாரத்தில் பணம் போனவுடன் அழுவதும், சிரிப்பதுமாக இருப்பதும், நடராஜனைக் காணவில்லை என்றவுடன் அலறுவதும், தன் மனைவி நடத்தை கெட்டவள் என்று கேள்விப்பட்டவுடன் அத்வைதத்திற்குள் ஓடி ஒழிந்து கொள்வதும், கதை முடிவில் பணம், மனைவி, மக்கள் எல்லோரும் என்று சேரும் பொழுது "எல்லாம் அவன் செயல்" என்று அவற்றை ஒப்புக்கொள்வதும்; அதன் பின்பும், தனக்கு ஒரு சமூக அந்தஸ்து வேண்டும் என்பதற்காக ஒரு துறவி வாழ்க்கை (ராஜரிஷி வாழ்க்கை) வாழ்வதும், ஆசிரியரது கொள்கைக்கும், யதார்த்தத்திற்கும் உள்ள முரண்பாட்டை தெளிவாகக் காட்டுகிறது. இம் முரண்பாட்டை ஆசிரியரால் சமாளிச்க முடியவில்லை. அத்வைதக் கொள்கையை ஆங்காங்கே ஆசிரியர் விவரித்தாலும்,அக்கொள்கை ராஜம் ஐயர் காணும் உலகை நடப்பியல்பை விளக்கப் போதுமானதாகஇல்லை.

5,0 இம் முரண்பாட்டின் அடிப்படையில் அவர் கதாபாத்திரங்களை அமைத்துள்ளார். ராஜம் ஐயரின் கதாபாத்திரங்கள் அனைவரும் அவர்கால சமூக அமைப்பில் பங்குபெற்ற பல்வேறு வர்க்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் உதாரண மாந்தர்கள் (type)பண்ணையார்களும், ஜமீன்தார்களும், சந்நியாசிகளும், கொள்ளைக்காரர்களும், அறிவாளிகளும் அவரது நாவலில் உலவுகின்றனர். இவர்கள் யாவரையும் ஒரு முக்கிய கதாபாத்திரத்துடன் இணைத்துள்ளார் ராஜம் ஐயர். இவர்களுக்குத் தேவையான பின்னணியையும் உருவாக்கியுள்ளார்.

5.1 இவர்களைப் படைத்த ராஜம் ஐயர். இம்மாந்தர்களின் மனவியல்பை உட்புகுத்து பார்த்து வர்ணிக்கிருர். முத்துசுவாமி ஐயரும் கமலாம்பாளும் குழந்தை நடராஜனைப் பறிகொடுத்த பின்பு அழுவதும் சிரிப்பதுமாக இருப்பது, சிறந்த மனோதத்துவ ஆய்வாகும். பல கொடுமைகளை இழைத்த பொன்னம்மாள் அவள் கணவன் இறந்தவுடன் புத்திசுவாதீனமற்றுப் போவது மற்ருெரு உதாரணம். சில சமயங்களில் ஆசிரியரே நேரடியாக கதை மாந்தர்களின் மனவியல்பை வர்ணிக்கத் தொடங்கி விடுகிருர். பேயாண்டித் தேவனின் திடசித்தத்தை அவன் இருக்கும் இடத்தை வர்ணிப்பதன் மூலம் ஆசிரியர் நயமாக வெளிக்கொணர்கிருர்.

"அவ்விருட்டில் அவைகள் எல்லாவற்றிற்கும் மத்தியில் நின்றது தோணிமலை அது வஞ்சகர்களுடைய நெஞ்சம்போல் அளவிறந்த குகைகள் நிரம்பிய குன்று. அவற்றுள் ஒரு பெரிய குகை பேயாண்டித் தேவனுடைய இரவு மாளிகை. அது அவன் தொழில்போல் இருண்டிருந்தது.

ராஜம் ஐயர் சில சமயங்களில் கதை மாந்தர்களின் இயல்பை நேரடியாகவே கூறிவிடுகிருர்.

'சில நாளைக்குப் பிறகு சுப்பிரமணிய ஐயருடைய கிரகத்திற்கு ஒரு பையன் வந்தான். அவனுடைய நறுக்கு மீசையும், குடுமியும், சாந்துப் பொட்டும், கிறுக்குச் சடாவும், அவனுடைய ஷோக் நடையும் அவன் போக்கிரியென்று கட்டியம் கூறின" இவவாறு பொன்னம்மாளின் தம்பி வைத்யநாதன் குணத்தை ஆசிரியரே முன்கூட்டிக் கூறி விடுகிருர்.

5.2 இவைதவிர ஆசிரியரின் முக்கியப் பண்புகளில் ஒன்று அவர்கால மக்களை மனித அபிமானத்துடன் அணுகுவதாகும்.அம்மையப்ப பிள்ளை என்ற தமிழ் பண்டிதர் இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள கதாபாத்திரம். வெளிப்பார்வைக்கு நகைப்பிற்கு இடமாக இருந்தாலும், அம்மையப்ப பிள்ளை பரிதாபத்திற்கு உரியவர் என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிருர். பரம்பரைத் தமிழ் பண்டிதராக இருந்த அம்மையப்ப பிள்ளை, அவரது காலத்தில் பரவி வந்த ஆங்கிலக் கல்வி மோகத்திற்கு முன்பு நிற்க முடியவில்லை. அதன் தன்மைக்கு ஏற்றபடி தம்மை மாற்றிக்கொள்ளத்தயாராக இல்லை. இதன் காரணமாக வகுப்பில் அவர் கேலிக்குள்ளாகிருர். சமூகத்தில் அவர் பரிதாபத்திற்குரிய மனிதராகக் காட்சி தருகிருர். 'கள்ளப் பண்டாரம்' என்ற அதிகாரத்தில், பண்டாரம் ஒருவன் தமிழைக்காட்டி அவரை ஏமாற்றுவது பிள்ளையின் அப்பாவித் தனத்தையும், போலிப் பண்டிதத்தன்மையையும் காட்டுகிறது.இந்த கதாபாத்திரத்தை,ஆசிரியர் முத்துசுவாமிஐயரின் தந்தை ரங்கசாமி ஐயருக்கு மருமகனுக்கிக் காட்டுகிருர். ரங்கசாமி ஐயருக்கும், தெய்வயானை என்ற தாசிக்கும் பிறந்த ஜானகி என்ற பெண் அம்மையப்ப பிள்ளையின் மனைவி. இதன் மூலம்

அம்மையப்ப பிள்ளை மீதுள்ள அனுதாபத்தை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். இது உண்மையிலேயே தமிழ் நாவலில் மிகப்பெரிய சாதனை யாகும்.

இதுவரை கமலாம்பாள் சரித்திரம் பற்றி நாம் கண்டவற்றிலிருந்து ஒரு சில முடிவிற்கு வரலாம்.

6.1 'கமலாம்பாள்சரித்திரம்' இரண்டாவது தமிழ் நாவல் என்றாலும், உண்மையிலேயே இதைத்தான் முதல் தமிழ் நாவல் என்று கூறுதல்தகும். வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் நாவலிற்குரிய சூழலை உருவாக்கவில்லை. ஒரு அற்புத நவீன வகையை சார்ந்தது அது. ஆனால் ராஜம் ஐயர் நடப்பியல் பிற்கு ஏற்பக் கதையை அமைக்கிறார். அவரது சமூக மக்களை குறைகளுடனும், நல்லவை, கெட்டவையுடனும் காண்கிறார். அந்தக் காலத் தமிழ்நாட்டுக்கிராமங்களில் நிலவுடைமையாளர் களின் ஒரு அணுவான அந்தணர்களது குடும்பம் எவ்வாறு சிதைகிறது என்று வர்ணிக்கிறார். இச் சிதைவிற்கு விளக்கம் காண அவரது சிந்தனையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் அத்துவைதக் கொள்கையைப் பயன்படுத்துகிறார். அச் சித்தாந்தம் ஆசிரியரைக்கைவிட்டு விடுகிறது. இதனால், நாவலாசிரியர் தமது நாவலில் படைத்துக் காட்டும் புற உலகு, அவரது கருத்து உலகக் கண்ணோட்டத்திலிருந்து முரண்பட்டு விளங்குவதை வாசகர்கள் காண்கிறார்கள். இப்புற உலகிற்கு ஏற்றபடி, சூழ்நிலை விளைவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து கதை மாந்தர்களை ராஜம் அய்யர் உருவாக்கியுள்ளதையும் நாம் தெளிவாகக் காண முடிகிறது.

References :

1 விமரிசனக் கலை-க. நா. சுப்பிரமணியம்-பக், 77.

2 தமிழ் நாவல் இலக்கியம். க. கைலாசபதி. பக் 121

3 தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் கி. வா. ஜகந்நாதன் chap I

4 பிரதாப முதலியார் சரித்திரம். பக் 8

5 ,, ,, ,, பக் 9

6 கமலாம்பாள் சரித்திரம்-பதிப்புரை பக் 5

7 மஞ்சரி ஜனவரி '72. சீதாராமய்யரின் கட்டுரை

8 Indian Review ஜனவரி '72 "Rajam Iyyer"

9 கமலாம்பாள் சரித்திரம் பக் 205

10 ,, ,, ,, ,,

11 ,, ,, ,, ,,

12 A. Dictionary of Philosophy P. 475

13 கமலாம்பாள் சரித்திரம் பக் 57

14 ,, ,, பக் 56

15 ,, ,, பக் 21

16 ,, ,, பக் 22

17 ,, ,, பக் 191

18 தனி மனிதக் கொள்கை எவ்வாறு தமிழ் நாவலில் பிரதிபலிக்கப் பட்டுள்ளது என்பது பற்றி Dr. கைலாசபதி தமது "தமிழ் நாவல் இலக்கியத்தில்' விவாதித்துள்ளார். (அதிகாரம் 3)

19 கமலாம்பாள் சரித்திரம்-பிற்கூற்று பக் 205

20 ,, ,, பக் 136

இந்திரா பார்த்தசாரதியின் படைப்புக்கள்

தி. சு. நடராசன்

[பேராசிரியர் கே. சுவாமிநாதன் இந்திரா பார்த்தசாரதியை "அறிமுகப்படுத்தும் வகையில் முதலில் கூறவேண்டியது அவர் ஆடவர் என்பதை" என்று எழுதுகிறார். ஒரு எழுத்தாளரை அறிமுகப்படுத்த அவர் ஆடவர் என்பது ஓர் முக்கியமான இயல்பு போலும்.

இங்கே இந்திரா பார்த்தசாரதியின் படைப்புகளை, அதன் விளைநிலன்களோடும், படைப்பாளியின் சமூகப்பார்வை, அவர் மனத்தின் மேல்பரப்பில் மிதக்கும் நவீன தத்துவங்கள், எல்லாம் சேர்த்து ஆய்வாளர் தி.சு. நடராஜன் அறிமுகப்படுத்துகிறார். இவருடைய சிறுகதைகள், நாடகங்கள், குறுநாவல்கள்; நாவல்களனைத்திலும் கதைக்கருத்தேர்வு, நிகழ்ச்சிகளின் பால் படைப்பாளியின் கண்ணோட்டம், சமுதாயத்தில் நடைபெறும் சிதைவு—மாற்றங்கள் இவற்றை ஓர் சமுதாய நோக்கோடு காண்கிறார். வாழ்க்கையில் தோன்றுகிற சமுதாய மதிப்புகளை இவர் தம் நோக்கில் மதிப்பிடுகிறார். பழைய முதலாளி புதிய முதலாளியின் திட்டங்களிலுள்ள வேறுபாடுகள், வாழ்க்கைக் கசப்பினால், மெலிந்தவர், மெலிந்தவர் மீது சீறுவது, சமுதாயப் பிரச்சினையோடு தனி மனிதப் பிரச்சினையையும் இணைத்துக்கொள்வதே உயர்ந்த மதிப்பு, லாபத்தைப் பாதுகாக்க மனித மதிப்பைக் கொல்லுகிற நாசகாரக்கும்பலை தைரியமாக எதிர்த்து நிற்கும் மனிதர்கள், இதையெல்லாம் நமது புறவயச் சமுதாய வாழ்க்கையில் முளைத்தெழுந்து ஆசிரியரின் கற்பனையால் கலையுருவம் பெற்றவை. நிகழ்ச்சிகளை இவர் படைக்கிறார் அல்லது அவற்றை ரசவாதம் செய்த படிமங்களாக்குகிறார் எனச் சிலர் சொல்லுகிறார்கள். இவர் கதை நிகழ்ச்சிகளையும் கதை மாந்தர்களையும் தம் உள்ளத்தில் படைக்கவில்லை. தமிழ்நாட்டின் அறிவாளிப் பகுதியினரின் வாழ்க்கைப்பிரச்சினைகளை உணர்ந்து,வாழ்க்கையின் சில அம்சங்களை ஆழ்ந்து அறிந்து, அவற்றைத் தமது கற்பனைத் திறனால் கலையுருவம் தந்து கதையாகவும், நாவலாகவும் மாற்றுகிறார்.

வேறெந்த ஆசிரியரையும்விட இவர் மோதுகிற மதிப்புக்களையும் அவற்றின் காரணங்களையும் ஆராய்கிறார். அவற்றை உள்ளத்திலும், உணர்ச்சிகளிலும் காம்ப்ளெக்ஸ்களிலும், ஆழ்உணர்விலும் காணுமல் புறச் சமூக வாழ்க்கையில் இச்சமூகத்தில் தனிமனிதர்களது உறவுகளில், காணமுயன்று அவற்றிற்குரிய காரணங்களையும் பகுத்தாராய முயலுகிறார். அவருடைய பாத்திரங்கள் காலத்திற்குரிய பேச்சுக்களைப் பேசுகிறார்கள். கால வெள்ளத்தில், விடுதலை இயக்கத்தின் பல்வேறு அலைகளால் பாதிக்கப்பட்டவர்கள், பழைய சமுதாயத்தின் சீரழிந்த பண்புகளுக்குப் பிரதிநிதியாயுள்ளவர்கள், புதிய தீவிர, காந்தீய இயக்கங்களால் கவரப் பெற்றவர்கள், கலையால் கவரப் பெற்றவர்கள், தனது தந்தையின் இரும்புக் கட்டுப்பாட்டைவிட்டு ஓடி சாதி மொழி வரம்பை மீறிக் கலியாணம் செய்து கொண்டு வாழ்கிறவன், இவர்களெல்லோரும் தமிழகத்தின் தற்காலச் சமுதாய நிலத்தில் வளர்ந்த மலர்ச் செடிகளும், முட் செடிகளுமே. இரண்டையுமே அவர்காட்டுகிறார்.வாழ்க்கையை பிராய்டிஸம், நியோ பிராய்டிஸம், எக்ஃஸிஸ்டென்ஷியலிஸம், ஸர்-ரியலிஸம், நீட்ஷேயிஸம் என்னும் நவீன தத்துவ வாதங்களுக்குள் சிக்க வைத்து வார்ப்புகளாக்கி விடவில்லை. அவருடைய பாத்திரங்களனைத்தும் உண்மையான சமுதாயக்களத்தில், தங்களுடைய மனச் சிந்தனைகளுக்கு ஏற்ப உணர்வோடு செயல் புரிந்து, உணர்வு மாற்றமடைகிறார்கள். புறவயக் காரணங்களே சிந்தனைகளை மாற்றுகின்றன என்றே இவருடைய கதா பாத்திரங்களில் பலருடைய உணர்வு மாற்றங்களுக்குக் காரணம் காணலாம்.

டெல்லியில் வாழ்கிறவன் தமிழ்நாட்டுச் சிந்தனை உடையவனாயினும், தற்காலமே, பழங்காலத்தைவிட அவனுடைய சிந்தனையையும் செயல்களையும் இயக்குவதாக ஆசிரியர் காண்கிறார், தன்னைச் சமுதாயத்தினின்று தனிமை

யாக்கி 'நான்' என்ற ஈகோவோடு டெல்லி செல்லுகிறவனுடைய ஈகோவை எது அழிக்கிறது என்பதைக் காட்டும்பொழுது, இந்நாட்டின் சமுதாய அமைப்பின் உச்சியிலுள்ள பிரிவினரின் பண ஆதிக்கத்தையும், அதனுல் ஏற்படும் அரசியல் ஆதிக்கத்தையும்; அவர்களுடைய பிரணவ மந்திரமான 'லாபம்' என்ற நோக்கையும் நிகழ்ச்சிப்போக்கில் வெளிப்படுத்துகிருர். ஈகோ அழிந்தவன் உலகிலேயே வந்துவிழுகிருன். மறுபடி மனிதபாசத்தை நாடுகிருன்.

இவ்வாறு தமிழக அறிவாளிப் பிரிவினரின் சமுதாய வாழ்க்கையின் நெருக்கடி நிலைமைகளைச் சித்தரிக்கிற பார்த்தசாரதியை என்ன வெல்லாமோ லேபில் ஒட்டி, தமிழக வக்கிர விமர்சகர்கள் அளந்து பார்க்கிருர்கள். அவருடைய கதாபாத்திரங்கள் படித்த நடுத்தரப் பிரிவினராதலால், அவர்கள் காப்கா பற்றியும், பிராய்டு பற்றியும் ஸார்த்ரே பற்றியும் மார்க்ஸ் பற்றியும் விருப்போடோ, வெறுப்போடோ பேசத்தான் செய்வார்கள். டெல்லியில் ஈகோவை போற்றி வாழ்கிறவர்களான எல்லோரும், எல்லாவற்றையும் வக்கிரக்கேலிதான் செய்வார்கள். உண்மையான சமுதாய சக்திகள் அவனுடைய ஈகோவை மதித்து நசுக்கும் பொழுது தானே நசுங்குவதாக எண்ணி அலறுகிருன்.

இவற்றையெல்லாம் ஏதாவது ஒரு நவீனத் தத்துவப் போக்கால் விளக்க நம்முடைய விமர்சனமன்னர்கள் முயலுகிருர்கள்.

இவருடைய படைப்புகளின் இலக்கிய நோக்கையும், சமுதாய நோக்கையும், அவைகளின் வளர்நிலையில் ஆராய்கிருர் நடராஜன் —

ஆசிரியர்.]

0.1 இந்திராபார்த்தசாரதியை 'அறிமுகப்படுத்தும் வகையில் முதலில் கூறவேண்டியது, அவர் ஆடவர் என்பதை' என்று பேராசிரியர் கே. சுவாமிநாதன் என்பவர் (மனித தெய்வங்கள் என்ற தொகுதியின் முன்னுரையில்) கூறியதுபோல, இங்கு நாம் அவரை அறிமுகப்படுத்தவேண்டியதில்லை. 1967-இல் நிலைமை அப்படியிருந்திருக்கலாம்; ஆனுல், இன்று அவர் தமிழின் இன்றைய எழுத்தாளர்களுள் மிகப் பிரபலமான ஒருவராக விளங்குகிருர். தில்லிப் பல்கலைக்கழகத்திலே தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றும் அவர், தமிழாசிரியப் பணியிலிருந்து கொண்டே பிரபலமான இலக்கிய ஆசிரியராகவும் விளங்குகிருர். இவருடைய பெயரால் வெளிவந்திருக்கின்ற முழுநூல்கள், மொத்தம் ஐந்து. இவற்றுள், முதலில் வெளிவந்த (1967) **'மனித தெய்வங்கள்'** என்பது ஒன்பது சிறுகதைகள் கொண்ட ஒரு தொகுதியாகும். இதனையடுத்து (1968) வெளிவந்தது **காலவெள்ளம்** என்பது. இது இவருடைய முதல் நாவல். இதனையடுத்து உச்சிவெயில் என்ற இவருடைய குறுநாவல், 'வாசகர் வட்டம்' வெளியிட்ட (1968) **'அறுசுவை'** என்ற குறுநாவல் தொகுதியில் காணப்படுகிறது. இந்த உச்சிவெயிலு'ம் **'ஹெலிகாப்டர்கள் கீழே இறங்குகின்றன'**என்றகுறுநாவலும் ஏற்கனவே பத்திரிகையில் வெளிவந்த இவருடையஇன்னொரு கதையும் சேர்ந்து மிகஅண்மையில்(1972) உச்சிவெயில் என்ற தலைப்பில் ஒரு முழுநூலாக உருவெடுத்துள்ளன. 'தீபம்' பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்து முற்றுப் பெற்றவுடன் தனிநூலாகத், 'தந்திரபூமி' (1969) வெளியிடப்பட்டது. இ. பா. வுக்குப் புகழ் தேடித்தந்தது இந்த நூலே எனலாம். இதனையடுத்துச், சில பத்திரிகைகளில் இவருடைய குறுநாவல்கள் வெளிவந்தன. அவை, 'வேஷங்கள்' என்ற தொகுதியாக (1970) முழு நூல் வடிவில் வெளிவந்துள்ளன. இந்த நூல்களிலடங்காமல் அண்மையில் சில பத்திரிகையில் வெளிவந்துள்ளன; வெளிவந்து கொண்டிருக்கின்றன. (அண்மையில் 'தினமணிகதிர்' என்ற வார இதழில் வெளிவந்த இவருடைய தொடர்கதையொன்று பத்திரிகையாசிரியரால் அரைகுறையாக நிறுத்தப்பட்டுவிட்டது.) இவற்றைத் தவிர 'கசடதபற' எனும் இலக்கிய மாத இதழில் (அக். '71) வெளிவந்துள்ள 'மழை' என்ற இவருடைய நாடகம் குறிப்பிடத் தக்க ஒரு படைப்பாகும்.

0.2 இ. பா. வின் படைப்புக்கள் சிறுகதை, நாவல், குறுநாவல், நாடகம் எனும் விரிவான தொடர்பு பட்ட வகைகளைக் கொண்டுள்ளன. இவை, இந்த இன வகைகளின் நியதிகளுக்கு எந்த அளவில் உட்பட்டிருக்கின்றன என்று ஆராய்வது இங்கு நம் நோக்கமல்ல. சொல்லுகின்ற கதையிலும், கதைப்பண்பிலும் காணப்படுகின்றஅவருடைய போக்குகளையும், வளர்ச்சிகளையும் கண்டறிவதேநமது நோக்கமாகும். அவருடையபடைப்புக்களில் ஒரே விதமான போக்குத்தான் இருக்கிறதென்று வரையறுத்துச் சொல்வதற்கில்லை. தொடக்க காலத்திலிருந்து இன்று வரையுள்ள அவருடைய வளர்ச்சியில் பல நிலைகள் காணப்படுகின்றன. ஆனால் இன்றையத் தமிழ் இலக்கிய உலகில் அவருடைய படைப்புகள் சில முக்கியமான போககுகளைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்பதில் சந்தேகமில்லை. நவீனப் போக்குகளின் ஒரு சக்தி வாய்ந்த பிரதிநிதியாகவும் திறம் பெற்றபடைப்பாளியாகவும் விளங்குவதால் கவனத்திற்குரிய ஒருவராகத் திகழ்கிறார்.

1.1.1 இ. பாவின் தொடக்க காலச் சிறுகதைத் தொகுதி 'மனித தெய்வங்கள்' என்பது. இதில் மரபு வழிப்பட்ட இலட்சிய வாதப்போக்கினையும், நவீன காலத்தையொட்டிய சில போக்குகளையும் கொண்ட கதைகளைக் காணலாம். 'மனித தெய்வங்கள்' என்ற கதையும், 'கலிபோர்னியா கண்ட குத்து விளக்கு' என்ற கதையும் மரபு இலட்சியப் போக்கிற்கு உரியனவாகும். 'மனித தெய்வங்கள்' என்ற கதை காதல் முக்கோணத்தையும், தியாகத்தையும் மையமாகக் கொண்டுள்ளது. 'கலிபோர்னியா கண்ட குத்துவிளக்கு' ஒரு தமிழ்க்கிராமத்துப் பெண் அமெரிக்காக்காரன் ஒருவனுக்கு இந்தியப் பண்பாட்டை உணர்த்திக் காட்டும் ஒரு குத்து விளக்காக எவ்வாறு விளங்குகிறாள் என்பதைக் கதையாகச் சொல்லுகிறது. 'அழிவும் ஆக்கமும்' என்ற கதை அகவய உளைச்சலை மையமாகக் கொண்டு சுழல்கிறது. 'அசலும் நகலும்', புறக்காரணங்களின் பின்னணியில் ஏற்படுகின்ற அகவிளைவுகள் பற்றியும், கலையின் புனித நாட்டம்பற்றியும் கதையாகக் கூறிச்செல்கிறது. 'மனித இயந்திரம்' அலுவலகம் சென்றுகொண்டிருக்கும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத் தலைவரின் இயந்திர வாழ்க்கையை வருணிக்கிறது. 'நான் கண்டேனு' என்ற கதை நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களின் போலி கௌரவங்களையும், வக்கரிப்புக்களையும் சொல்லுகிறது. 'புலி வேட்டை'யில் வக்கிரக்கேலி (cynicism) மிக உக்கிரமாக காட்டப்படுகிறது. ஏதோ ஓர் ஆப்பிரிக்க நாட்டின் பகுதியில் இந்தியத் தூதுவர், புலியொன்றினை வேட்டையாடிக் கொன்றுவிட்டார், எனும் கதை நிகழ்ச்சியினை மையமாகக்கொண்டு சுழல்கிறது இது. இந்த சுழற்சியில், இந்திய அரசாங்கம், இந்தியாவின் கூட்டுச் சேராக் கொள்கை, இரஷ்யா, அமெரிக்கா, கத்தோலிக்க சமயம் முதலிய பலவும் ஒட்டாகக் கிண்டல் செய்யப் படுகின்றன.

1.1.2 மனித தெய்வங்கள் எனும் சிறுகதைத் தொகுதியில் குறிப்பிடத்தக்கவை 'பிரச்னை ஒன்று நிகழ்ச்சி இரண்டு' என்ற கதையும் 'முதலும் முடிவும்' என்ற கதையும் ஆம். பிரச்னை ஒன்று நிகழ்ச்சியிரண்டு' என்ற கதையில் இரண்டு ஏழைகள் காட்டப்படுகிறார்கள். ஒருவன் வீட்டு வேலைக்காரன். அவனுக்கு ஒரே ஆதரவாக இருந்த கிழிந்த கம்பளிப்படுக்கையின் மேல் குச்சிநாய் ஒன்று அமர்ந்து நாசமாக்கி விடுகிறது. அதன் மேல் கோபத்தையெல்லாம் காட்டித்தாக்க ஓடுகிறான் அவன். இக்கதையில் வரும் இரண்டாவது ஏழை, ஒரு நடைபாதை சிறு வியாபாரி. தன்னுடைய நடைபாதை வியாபாரத்திற்கு நோயாளித் தந்தை தனது நோயினால் குந்தகம் விளைவிப்பதாக எண்ணி அவன் அவர்மேல் கோபப்படுகிறான். இவ்வாறு இரண்டுபேருடைய கோபங்களுமே தங்களுடைய ஏழ்மை வாழ்க்கையில் கூட இடையூறுகள் ஏற்படுகின்றனவே என்ற ஆத்திரத்தில் எழுகின்றன. ஆனால் அந்த ஆத்திரம் தங்களுக்கு மேலே இருப்பவர்களைப் பார்த்துப் படுகின்ற ஆத்திரமாக வளரவில்லை. தங்களை விடவும் மிகவும் பரிதாபமாக இருக்கின்ற உயிர்களின்மேல் தங்களது இயலாமையின் காரணமாக எழும் ஆத்திரமாக விளங்குகிறது. இந்தக் கதையில் குறிப்பிடத் தக்க அம்சம், கதை சொல்லப்படுவதில் கையாளப் படுகின்ற உத்தியாகும். இரண்டு கதைகள் மாறிமாறி இணையாகக் கூறப்பட்டு இறுதியில் பிரச்சினை ஒன்று என்ற அளவில் ஒருமித்து

முடிகின்றன. இந்த உத்தியே இந்தக் கதைக்குச் சிறப்புத் தருகிறது என்று சொல்ல லாம்.

1.1.3 முதலும் முடிவும் என்ற கதை முதலாளிகள் வட்டாரத்தில் ஏற்படுகின்ற முரண் பாடுகளைக் காட்ட முயலுகிறது. தொழிற்சாலை ஒன்றின் டைரக்டர்களின் தலைவரான குரு மூர்த்தி வயதானவர்; தொழிற்சாலையைப் பழைய பாணியிலேயே நடத்திச் செல்கிறார். புதிய நவீன உற்பத்தி சாதனம் வழியாகப் பெருகி வரும் உற்பத்திகளும் அதிக இலாபங் களும் முதலாளித்துவ சமுதாயத்தின் இலட்சியங் கள். பழைய பாணியில் வளர்ந்த குருமூர்த்தி யால் இதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அதே முதலாளிகள் மத்தியில் முதலாளியாகப் பிறந்து டைரக்டராகவரும் இளைஞன் சந்திரசேகரன், புதுமையென்ற பெயரால் உற்பத்தி வேகம் வேண்டும் என்கிறான். அந்தப் புதுமை, அலு வலகங்களில் சீர்திருத்தம் வேண்டுமென்பதற் காக மனிதர்களை அனுப்பிவிட்டு இயந்திரங்களை வேலைக்கு அமர்த்துவதாகும். முதலாளித்துவத் தின் வேகமான வளர்ச்சிக்கு எதிராகப் பழைய பாணியில் வளர்ந்த சாதாரணக் குடும்பத்தில் பிறந்து பின்னர் பணக்காரராக வளர்ந்த குரு மூர்த்தியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. 'ஒண்ணு, இரண்டு, மூணு...... இப்படி எண் ணிண்டேபோனா கடைசி எண் எது' என்று தேடும் முதலாளித்துவ வாழ்க்கையில் அவர்க்கு அடி கிடைக்கிறது. இந்த நேரத்தில், யாரை யும் கலக்காமல் தானாகவே முடிவுபண்ணித் திடீர்த் திருமணம் செய்துகொண்ட தன்னுடைய மகனைத் தனக்குப்பதில் அமர்த்திவிட்டு ஓய்வு பெற விரும்புகிறார், அவர். வாழ்க்கையில் செல்வம் ஈட்ட வேண்டுமென்று தாம் மேற் கொண்ட சபதமெல்லாம் தம்முடைய சுயகௌர வத்தை, அகங்காரத்தைத் திருப்தி செய்யத் தான் என்று எண்ணுகிறார். இதயம் செத்து விட்ட நிலையில் பணம் குவிக்கும் இயந்திரமாகத் 'தான் வாழ்ந்தது ஒரு வாழ்வா' என்று மறுகுகி றார். இந்த நிலையில் முதலே முடிவாக அவருக் குத் தோன்றுவதுபோல ஆசிரியர் கூறிச் செல் கிறார். 'உலகம் உருண்டையென்றால் முதலும் முடிவும் ஒன்றுக்கொன்று அருகில்தானே இருக்க வேண்டும், அல்லது......முதல்தான் முடிவோ' இவ்வாறு விரக்தி நிலையானது அத்வைதத்துக் குள் கொண்டுமுடிகிறது. முதலையும் முடிவை யும் இடையேயுள்ள வழிமுறையையும் புரிந்து கொள்ள முடியாத ஒரு 'சூன்யம்' காட்டப்படுகி றது. இது, முதலாளித்துவ சமுதாயத்தின் தன்முரணால் (internal contradiction) ஏற்படு கின்ற ஒரு இயல்பான முடிவு. இதனை, ஒரு சிறுகதை என்ற எல்லைக்குள் நின்றுகொண்டு அழகாகப் புனைந்துள்ளார், ஆசிரியர், இ. பா.

1.1.4 இவ்வாறு அவருடைய தொடக்க காலக் கதைகள் பலவிதக் கதைப்பொருட்களையும் போக்குகளையும் கொண்டுள்ளன. அவருடைய பிற்காலத்துப் படைப்புக்களில் இவற்றில் பல இன்னம் அழுத்தம் வாய்ந்ததாகவும், சக்தி பெற்றனவாகவும் வளர்ந்துள்ளன. மேலும் இத் தொகுதியில் குறிப்பிடத்தக்கவொன்று கதைப் பொருள்களின் எல்லையும், நிகழ்ச்சியிடங்களின் எல்லையும் விரிவாகப் பரந்து கிடப்பதாகும். இந்திய அரசாங்க இயந்திரம், டில்லி வாழ்க்கை முதலியவற்றின் உள்ளே இந்த எல்லை மிகச் சுதந்திரமாக வியாபிக்கத் தொடங்கியிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. இ. பா.வின் பின்னைய படைப்புக்களில் இது வலுவான மைய மாக விளங்குகிறது.

1.2.0 'கால வெள்ளம்'எனும் அவருடைய முதல் நாவலிலும் கதைப்பொருளின் எல்லைப் பரப்பு விரிந்து கிடப்பதைக் காணலாம். சுதந் திர காலத்திற்கு முற்பட்ட திருவரங்கத்தில் உள்ள ஒரு வைதீகக் குடும்பம் காலவெள்ளத் தினால் சிதைந்து போவதற்குக் காரணம், ஒரு வகையில் இந்த வகையான எல்லையின் பரப்புத் தான் என்று சொல்லலாம். ஏனென்றால் சுதந் திர காலத்திற்கு முந்திய நிலைமையிலிருந்து இந்திய ஊர்கள் பொருளாதார, சமுதாய கோணங்களில் மாறுபாடடையத் தொடங்கி யுள்ளன. இதனால், தீவுபோல் தமக்குள் முடங் கிக் கிடந்த ஊர்களும், குடும்பங்களும் புதிய எல்லைப்பரப்புகளினால் மாற்றத்திற்குள்ளாயின. 'கால வெள்ளம்' என்ற நாவலில் இத்தகைய மாற்றத்தை நாம் காணுகிறோம்.

1.2.1 இந்திய விடுதலைக்குச் சற்று முன் னுள்ள காலத்தைக் களனாகக் கொண்டு திரு

வரங்கத்து ஒரு வைதீகப்பிராமணக்குடும்பத்தின் தலைவர் பச்சைக்கல் பத்மனுபாச்சாரியார். இவர் திருவரங்கத்திலே பெரும் பணக்காரர் (நிலச் சுவான் தார்); பெரும் வைதீகர்; குடும்பத்துச் சொத்துக்களை ஆள்பவர், குடும்பத்தின் தலைவர்- என்ற முறையில் தனக்குக் குடும்பத்திலுள்ள அனைவரும் பயந்து ஒடுங்கி வாழவேண்டும் என்று நினைப்பவர். இவர் தனக்குப் பெண் குழந்தை வேண்டும் என்பதற்காக ஏற்கனவே ஒரு மனைவி இருக்க 45-வது வயதில் 17 வயது ஏழை செல்லத்தை மணந்துகொள்கிறார். மூத் தாள்போல் அடங்கிக்கிடக்காமல் பச்சைக் கல் லின் முன்கோபங்கட்கெதிரே எதிர்த்து நிற்கிறாள் செல்லம். இது அவருக்கு, அக்குடும்பத்திற்குப் புதியது. பின்னர், தனது அடிமை வாழ்வைத் தொடர விரும்பாது விடுதலை வேண்டி அவரை யும், தனக்கும், தன் மூத்தாளுக்கும் பிறந்த குழந்தைகளையும் விட்டு விட்டுத்தன் தாய்வீட் டிற்கு ஓடிவிடுகிறாள். அங்கிருந்து சென்னை நகரில் தஞ்சமடைகிறாள், இது அந்த வைதீகக் குடும் பத்திற்குக் கிடைத்த பெரிய அடி. அந்தக் கோட்டை ஆட்டம் காணுகிறது. சில ஆண்டு கட்குப் பின்னர் கோட்டைக்குள் மீண்டும் குழப் பம் ஏற்படுகிறது: பச்சைக்கல்லின் மகன் சாரங்கன் அவருடைய அடக்குமுறைக்குப் பயந்து ஊரைவிட்டே ஓடி விடுகிறான். மூத்த மகன் உப்பிலியின் நடத்தையோ பொறுப்பற்ற முறையில் உள்ளது. மகள் வேதவல்லியோ திருமணமான பின்னர் கணவர் வீட்டிற்குப் போகமுடியாமல் பெண் வீட்டாருக்கும், மாப் பிள்ளை வீட்டாருக்கும் ஏற்பட்ட சச்சரவினால் பச்சைக்கல் வீட்டிலேயே இருக்கிறாள். ஊர் புறம்பேசுகிறது. இந்த நிலைமைகள் அந்த வைதீகக் குடும்பத்தின் தலைவரை நிலைதடுமாற வைக்கின்றன.

1.2.2 அந்தக் காலத்தையொட்டிய புதிய மதிப்பைப் பிரதிபலிக்கிறவனாக அந்தக் குடும்பத் தில் வருபவன் அவருடைய இளைய மகன் கோபால். அவன் ஓடிப்போன செல்லத்தின் ஒரே மகன். அவன் கிட்டத்தட்ட அந்தக் காலத்தின் பின்னணியில் ஒரு இலட்சிய இளைஞனாகவே படைக்கப்படுகிறான். சென்னையில் கல்லூரியில் படிக்கின்ற அவன் சுதந்திரப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொள் கிறான். அதுவும், அஹிம்சையை மறுத்து தீவிரவாதப் போராட்டத்தில் இறங்கிய ஒரு வனாகக் காட்சி தருகிறான். அதே நேரத்தில் சிதைந்த அந்தக் குடும்பத்தை ஒட்டவைக்கும் ஒரு பாத்திரமாகவும் அவன் விளங்குகிறான். வேதவல்லியை அழைத்துச் சென்று அவன் கணவன் வீட்டோடு வாழ வைக்கிறான். மராட் டியப் பெண்ணோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற சாரங்கனை அழைத்து வருகிறான். தனது வைதீ கப் பாரம்பரியம் சரிந்துவிழ விரக்தியடைந்து சென்னைக்குக் கோபாலுடன் வந்த பச்சைக்கல், இறுதியில் பிரிந்து போனவர்கள் அனைவரும் தன்னைச் சூழ்ந்து நிற்கக் காலமாகிறார்.

1.2.3 இவ்வாறு இந்த நாவலில், கால வெள்ளம் அடித்துச் செல்ல புதிய மதிப்புக் களின் மோதுதலால் ஒரு வைதிகக் கோட்டை தன்னையறியாமலே உடைந்து வீழ்ச்சியடை கிறது. இந்த நாவலில் இதைத்தவிர ஒன்று, கோபாலின் கதையை விரிவான தளத்தில் வைத்துக் கூறுவதாகும். அவன் அரசியல் தீவிரவாதிகள் பலரைச் சந்திக்கிறான். அவர் களுடைய நடைமுறைகளுடன் ஒன்றுகிறான். அவனுக்கு 'லீடர்' போலிருக்கின்ற ஒரு நண்பன் உண்டு. ராஜாராமன் எனும் அந்த நண்பன், இடையே மார்க்சீயவாதியாகக் கூறப்படுகிறான். (ஆனால், அப்படிக் காட்டப்படவில்லை.) இதைத் தவிர துரைராஜ் என்ற பழுத்த காந்தியவாதியும் வருகிறார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்தீயம், நேதாஜியின் வழி, மார்க்சீயவாதி களின் நடைமுறைகள் எனும் மூன்றுமே பெரும் போக்குகளாக இருந்தன—அதனையே நாவலின் பின்பகுதியில் கோபாலின் கதையில் ஆசிரியர் தான் அறிந்த வகையில் கதைநிகழ்ச்சிகளாகக் கூறுகிறார்.

1.3.1 'காலவெள்ளம்' இ. பா. வின் முதல் நாவல் என்றால், 'தந்திரபூமி' அவ ருடைய இரண்டாவது நாவல். இந்த நாவல் டில்லி வாழ்க்கையை இடமாகக்கொண்டு நவீன காலத்தின் சிலபோக்குகளைச் சித்தரிக்கிறது. இந் நாவலின் கதாநாயகன் கஸ்தூரி. இவன் ஒரு அறிவு ஜீவி. அறிவு ஜீவுகளின் ஜாதியான பிராமணர் மத்தியிலிருந்து வந்த ஓர் அறிவு ஜீவி. கும்பகோணத்திலிருந்து இனிய கனவு

களுடன் புது டில்லிக்கு ஒரு தனியார் வியாபார நிறுவனத்தின் 'லேயைசன்' ஆபீசராக வருகிறான். மகேஷ் என்பவன் அவனுடைய முதலாளி. அவனுக்காக அரசாங்கத்தில் காரியங்களைச் சாதித்துக் கொடுக்க வேண்டியது கஸ்தூரியின் பணி. அந்தப் பணியினை ஒரு சவாலாக ஏற்றுச் செய்கிறான்; தன்னுடைய அறிவினால் எதையும் சாதிக்க முடியும் — முதலாளி மகேஷே தன்னை நம்பித்தான் இருக்கிறான் என்றெல்லாம் அவன் எண்ணுகிறான். இடையே அவன் தன்னுடைய அலுவலகத்தில் முதல் நாளிலேயே மீனு என்ற 'ஸ்டெனோ'வைச் சந்திக்கிறான். சந்தித்து அன்றே அவளுடன் உடலுறவும் கொள்கிறான். அவளைப் பற்றிய உணர்வும், ஆசையும் அவனிடத்தில் அவனையறியாமல் மிகவலுவாக வேரூன்றியுள்ளன. மகேஷுக்காகத் தன்னுடைய அறிவைப் பணயம் வைத்துப் பணியாற்றும் அவனுக்குச் சோதனை ஏற்படுகிறது. கொலை வழக்கு ஒன்றினை விசாரிக்கப் போய் அக்கொலையோடு சம்பந்தப்பட்ட ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டு தவறான முடிவை மேற்கொண்டதற்காக வேலை நீக்கம் பெற்ற மிஸ்ரா எனும் போலீஸ் அதிகாரிக்காக உதவி செய்ய வேண்டும் என்று முதலாளி அவனை ஏவுகிறான். தனது வேலையோடு தொடர்பில்லாத இந்த வேலையினை ஏற்றுக் கொள்ள, ஏற்கனவே ஓரளவு சலிப்படைந்திருந்த கஸ்தூரி உடன்படவில்லை. முதலாளி மகேஷை விட்டு அவன் வெளியேறுகிறான். பெட்டி படுக்கையோடு வழியில் வந்த அவனை, ஏற்கனவே அவனை அறிந்துள்ள ஆஷா என்ற பெண் சந்தித்து அழைத்துச் செல்கிறாள். அவளுடைய கணவன் சுரஜித்சிங், மகேஷைவிடக் கூடுதலான ஒரு முதலாளி. அவள், கஸ்தூரியின் இளமை வெறியைத் தன்னுடைய உடல் சுகத்திற்கும், அவனுடைய அறிவு நுட்பத்தைத் தன்னுடைய கணவரின் வியாபாரத்திற்கும் பயன் படுத்துகிறாள். சுரஜித் அவனை அரசாங்க வெளிநாட்டு வணிகத் துறையில் அதிகாரியாக வேலைக்கமர்த்துகிறான். அங்கிருந்து கொண்டு கஸ்தூரி சுரஜித்தின் நலன்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பது ஏற்பாடு. இந்த வேலையையும் ஒரு சவாலாக ஏற்றுக் கொண்ட அவன், அந்த வேலையிலும் சலிப்படைகிறான். தன்னுடைய அறிவு தந்திரமாக முதலாளியால் சுரண்டப்படுவதை உணர்கிறான். விரக்தியடைந்த நிலையில் ஹிப்பிகளைச் சந்திக்கிறான். முதலில் அவர்களோடு மயங்கிக் கிடந்தவன் அதிலும் நம்பிக்கையற்று இறுதியில் மீனுவைச் தஞ்சமடைகிறான்.

1.3.2 'தந்திரபூமி'யில் கஸ்தூரியின் அனுபவங்களாகக் கூறப்படும் கதை இதுதான். இந்த நாவலில் கவனித்தற்குரிய விஷயங்கள் பல உண்டு. முதலாளித்துவ சமுதாயக் கட்டமைப்பு, அதில் முதலாளி வர்க்கம் அதிகார வர்க்கத்தைத் தனக்கென ஆட்படுத்திக் கொள்வது, இந்த நிலைமையில் மத்தியதரவர்க்கத்தைச் சேர்ந்த அறிவு ஜீவியின் அனுபவங்கள் முதலியன இந்த நாவலில் வெளிப்படுத்திக் காட்டப்படுகின்றன. இந்த நாவல் மிகவும் குறிப்பிடத்தக்கவொன்றாதலால் இந்த நாவலில் உணர்த்தப் படுகின்றவை பற்றி விரிவாகக் கொஞ்சம் பின்னர் பார்த்துக் கொள்ளலாம். இந்த நாவலினையடுத்து வெளிவந்த 'வேஷங்கள்' என்ற குறுநாவல் தொகுதியினைப் பற்றி இப்போது காணலாம்.

1.4.1 'வேஷங்கள்' என்ற தொகுதியில் நான்கு குறுநாவல்கள் உண்டு. இதில் முதற்கண் உள்ள வேஷங்கள் என்ற குறுநாவல் கூனிக் குறுகிய உருவத்தையுடைய ஒரு பையனையும், அவனுடைய அம்மாவையும், அவனுடன் நட்புக்கொண்ட ஒரு வாலிபனையும் பற்றிய கதையைச் சொல்லுகிறது. கோபு என்னும் கூனல் பையன் தன்னுடைய தாயுடன் தந்தை அன்பாக இல்லையே என்று ஆத்திரப்படுபவன். அவனுடன் கால் ஊனமான சங்கரன் எனும் வாலிபன் நட்புக் கொள்கிறான். கோபுவின் வீட்டுப்பகுதியில் வந்து குடியேறுகிறான், அந்த சங்கரன். கோபுவின் அம்மாவைப்பற்றியும் அவள்மேல் கோபு வைத்திருக்கும் பாசத்தைப் பற்றியெல்லாம் அலசுகிறான். அவளுடைய மதிப்பையும் பெறுகிறான். கடைசியில் அவளையே பெண்டாள முயன்று, கோபுவின் ஆத்திரத்திற்காளாகி வெளியேறுகிறான். இவ்வாறு அடுத்தவனுடைய தாய் பாசத்தை 'ஒடிப்பஸ் மன உணர்வு என்று அலசும் ஒருவன் நல்லவன் என்று வேஷம் போட்டுக்கொண்டிருந்தவன் தன்னுடைய வேஷம் களையப்பெறுகிறான்.

1.4.2 'மனக்குகை' என்ற குறுநாவல் தந்தை மகன் என்ற உறவு நிலையில் ஒரு அதீதப் போக்கு இருப்பதாகக் கருதி அதனை ரகு என்பவன் அலசுவதுபோல் கதை செல்லுகிறது. இந்த விதத்தில் அது 'மழை' என்ற அவருடைய நாடகத்தோடு ஓரளவு ஒப்புநோக்குதற்குரியது. இந்த இரண்டு குறுநாவல்களுமே பொதுவாக அகவய உளைச்சல்களை மையமாகக் கொண்டு சுழல்கின்றன. 'ஊனம்' என்ற குறுநாவலில் ஓடிப்போனவர் ஒருவரும் இளவயதில் கைப்பெண்ணான ஒருத்தியும், ஊனமடைந்த பையனொருவனும் வருகின்றார்கள். முப்பதாண்டுகட்கு முன்பு வீட்டைவிட்டு ஓடிய சங்கரன் தன் வீட்டிற்கு மீண்டும் திரும்பி வருகிறார். அங்கே தன் தம்பி வீட்டில் இருக்கின்ற குடும்ப நிலைகளைக் கண்டு வருந்துகிறார். இளம் வயதிலேயே கணவனை இழந்த தன்னுடைய தம்பி மகள் உமாவின் வாழ்வு புத்துயிர் பெற அவர் முயற்சி மேற்கொள்கிறார். அவளை டில்லிக்கு அழைத்துச் சென்று அங்கு அவளுக்கு மறுமணம் செய்து வைப்பது அவருடைய எண்ணம். இதில் உமா முதற்கொண்டு அனைருக்கும் உடன்பாடு உண்டு. ஆனால் இறுதி நேரத்தில், அவளுடன் பிரியமாக இருக்கும் கூனல் பையன் தன்னை விட்டு அவள் பிரிவதை எண்ணி ஏங்குவதால் பயணம் தடைப்படுகிறது. எதுவும் செய்வதாக இருந்தால் அங்கேயே செய்யச் சொல்லுகிறாள் அவள்.

1.4.3 இனி அடுத்துள்ள'கானல் நீர்'என்ற குறுநாவல் ஒரு பணக்காரக் குடும்பத்தின் உறுப்பினர்களைப் பற்றிப் பேசுகிறது. அந்தக் குடும்பத்தின் தலைவி பத்மாவதி வெளியே பகட்டுப் பணிகள் பலவற்றில் ஈடுபட்டவள். உள்ளே குடும்பத்தில் அவளுடைய அதிகாரத்திற்கெதிராக மகள் உஷா அவளை எதிர்த்துப்பேசி ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்கிறாள். மகன் ராஜா தன்னிச்சையாகத் திரிந்து கொண்டிருக்கிறான். அவன் ரேவதி என்ற ஒரு ஏழை வக்கீல் மகளோடு சுற்றுகிறான். ஆனால், திருமணம் என்பது காதலின் தர்க்க ரீதியான முடிவில்லை என்ற 'சுதந்திரக் கொள்கை'யுடன் அவளைத் திருமணம் செய்ய மறுக்கிறான். அந்த வீட்டில் வளரும் ரவி அந்தச் செய்தியை ரேவதியிடம் சொல்லப்போய் அவள்மேல் அனுதாபமும், கவர்ச்சியும்கொண்டு அவளை மணப்பதாகத் தீர்மானிக்கிறான். ஆனால் அவன்மேல் காதல் கொண்டு, அதே நேரத்தில் அதனை வெளியே சொல்லாமல் உள்ளேயே பொருமிக்கொண்டிருக்கும் உஷா அச்செய்தியைக் கேள்விப்பட்டு விரக்தியடைந்து மாண்டு போகிறாள். இந்தக் குறுநாவலில் குறிப்பிடத்தக்கது இதுதான். பணம் பெருகிக் கிடக்கும் குடும்பத்தில் ஒருவரோடொருவர் அன்னியமாகிக் கிடக்கின்றனர். இதனால் வெளிப்படை வாழ்வினில் ஒட்டாமல் அகவயப்பொருமலுக்கு ஆளாகிச் சிதைந்து போகின்றனர். அதே நேரத்தில் இவர்கள் வாழ்க்கையினிடையே வரும் மற்ற சாதாரணர்கள் இந்த முரண்பாடில்லாமல் இயல்பாக வாழ்கிறார்கள். ராஜாவினால் ஏமாற்றமடையும் ரேவதிகூட தோல்வி தரும் விரக்திக்குள் சிக்கிவிடாமல் இயல்பான நடைமுறை வாழ்வுக்கு உடனே தயாராகி விடுகிறாள். உள்ளுக்குள்ளேயே உணர்வுகளை வைத்துப் பொருமிக் கொண்டிருக்கும் உஷா போன்றவர்களுக்கே வாழ்க்கை 'கானல் நீராக'ஆகிவிடுகிறது.

2.1.0 'வேஷங்கள்' தொகுதியில் உள்ள குறுநாவல்கள் நான்குமே தத்தம் அளவில் குறிப்பிடத்தக்கவை. உள்ளடக்கத்தில் 'தந்திர பூமி'யிலிருந்து மாறுபட்டிருக்கிற இவை, இ.பா. வின் வேறுசில கோணங்கட்குச் சான்றுகளாக அமைகின்றன. உதாரணமாக, வேஷங்கள், மனக்குகை ஆகிய குறுநாவல்கள் ஓடிப்பஸ் மன உணர்வுக்கு உரியனவாக அமைந்துள்ளன. இந்த வரிசையில் 'மழை' என்ற நாடகத்தினையும் சேர்த்துக்கொள்ளலாம். தவிரவும், இ. பா. வுக்கு ஊமை பற்றிப் பேசுவதில் ஆர்வம் இருப்பதுபோல் தோன்றுகிறது. மற்றும், ஓடிப்போனவர்களைப் பற்றி எழுதுவதிலும் ஆசிரியரிடம் ஒரு வகையான விருப்பம் காணப்படுகிறது என்று சொல்லலாம்.

2.1.1 வேஷங்கள், ஊனம் ஆகிய இரண்டுமே ஊனமடைந்தவர்களின் மனநிலைகளைக் கூறுகின்றன. வேஷங்களில் ஒரு கூனல் பையன் தன் தாயின்மேல் பாசமும். அத்தாயின் மேல் அன்பில்லாத தன் தந்தைமேல் கோபமும் உடையவன். தன் அகப் பொருமல்களை ஆத்திரமாகக் கொட்டித் தீர்க்கும் அவனுடைய மன

உணர்வு ஊனமடைந்த இன்னொருவனுல் (நொண்டி) ஒடிப்பஸ் மன உணர்வு என்று வருணிக்கப்படுகிறது. ஊனமடைந்த இவர்களின் மன உணர்வே வேஷங்கள் கதையைத் தீர்மானிக்கிறது. இதேபோல்தான் ஊனம் என்ற குறுநாவலில்கூட தனக்கு மறுவாழ்வு வேண்டுமென்பதற்காகத் தன் சிற்றப்பாவுடன் டில்லிக்குப் புறப்படத் தயாராக இருக்கும்போது உமா என்ற அந்தப் பெண்ணின் பயணத்தைத் தடுத்து நிறுத்துவதற்குக் காரணமாக ஊனமடைந்து அந்த வீட்டில் முடங்கிக் கிடக்கும் ஒரு சிறுவனின் மன உணர்வே அமைகிறது.

2.1.2 இனி, ஓடிப்போனவர்களைப் பற்றி காலவெள்ளம், ஊனம், உச்சி வெயில், மழை ஆகிய படைப்புக்களில் இ. பா. பேசுகிருர். 'கால வெள்ளம்' என்னும் நாவலில் சாரங்கனும், அவனுடைய சித்தி செல்வமும் குடும்பத் தலைவர் பச்சைக் கல்லின் ஆதிக்கத்தையும், கோபத்தையும் தாங்க முடியாது ஊரைவிட்டே ஓடிவிடுகின்றனர். ஊனம் குறுநாவலில் சங்கரன் என்பவர் தன் தந்தையின் கண்டிப்பிற்கும், கோபத்திற்கும் ஆட்பட முடியாமல் ஊரைவிட்டு ஓடிவிடுகிருன். அதேபோல் உச்சி வெயில் என்ற குறுநாவலில்கூடத் தன்னுடைய கலப்பு மணத்திற்கு உடன்படாத தன் தந்தையிடமிருந்து அவ்வூருக்கு வராமலேயே ஒதுங்கி வாழ்கிருன் அதன் கதாநாயகன். மழை என்ற நாடகத்திலும் ஓடிப்போனதாக ரகு என்பவன் காட்டப்படுகிருன். இவனும் தன் தந்தையின் போக்குப் பிடிக்காமல்தான் ஊரைவிட்டு ஓடிவிடுகிருன். இந்த ஓடிப்போகிற விஷயத்தில் ஒன்றினைக் கவனிக்கலாம். ஓடிப்போகின்றவர்கள் எல்லோருமே தம்முடைய தந்தையர்களை எதிர்த்துக் கோபித்துக் கொண்டு சென்றவர்கள்தான்; கால வெள்ளத்தின் செல்லம் முதிய தன் கணவரிடமிருந்து கோபித்துக் கொண்டு சென்றவள். அதாவது பழைய தலைமுறையினரின் போக்குகளுக்கு(நிலப்பிரபுத்துவப் பண்புகளுக்கு) எதிராக அவற்ருேடு ஒன்றுசேர முடியாமல் முரண்பட்டு ஏதோ ஒரு வகையில் எதிர்த்து நிற்கும் இளைய தலை முறையினரின் போக்கே இது எனலாம். இனி, இதில் கவனிக்கத் தக்க மற்ருென்று, ஓடிப் போனவர்கள் அனைவரும் திருமபி வந்து சேருகிருர்கள். ஆனுல் அவ்வாறு திரும்பி வரும்போது, ஒன்று ஏற்கனவே பழைய தலைமுறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் இறந்து விட்டிருக்கிருர்கள் (ஊனம், மழை); அல்லது திரும்பி வந்தவுடன் அவர்கள் வரவுக்காகக் காத்திருப்பது போல் அவர்கள் மாண்டு போகிருர்கள் (கால வெள்ளம், உச்சி வெயில்).

2.1.3 இவ்வாறு தந்தைமார்களை வெறுத்து ஓடுவதற்குக் காரணம், பழைய தலைமுறையினரின் சில போக்குகளுக்கு உடன்படாத இளைய தலைமுறையின் எதிர்நிலைப் போக்கேயாகும். இது இன்றைய உலகத்தின் சமுதாய பொருளாதார வளர்ச்சிகளில் காணப்படுகின்ற ஒரு நிலையேயாகும். இது ஒரு தூலமான காரணம்.இதனடிப்படையிலேயே இ. பா. நாம் மேலே காட்டிய படைப்புக்களில் நிகழ்ச்சிகளைக் கூறிச் செல்கிருர். ஆனுல், இந்த நிலைமைக்கு மாருக வேஷங்கள் என்ற குறுநாவலில் வெளிப்படையான புறக்காரணங்களுக்குப்பதிலாகஅதிகமான உணர்வு கொண்டு வந்து நிறுத்தப்படுகிறது. இக் குறுநாவலில் கோபு என்ற கூனல் சிறுவன் தன்தாயின் மேல் அன்பு காட்டாத தந்தையை வெறுக்கிருன். அந்த வெறுப்பிற்கு அந்தக் கதையில் சுந்தரம் என்பவன் ஒரு காரணம் கூறுகிருன். 'எல்லாப் பிள்ளைகளும் அப்பாவை ஏதாவதொரு காலகட்டத்தில் வெறுக்காமலிருக்க மாட்டாங்கறது சைகாலஜி' அதுவும் ஒடிப்பஸ் காம்ப்ளக்ஸ் இருந்ததுன்னு அந்தப் பிள்ளைகள்...... என்று அவன் பேசுகிருன். அசல் ஒடிப்பஸ் தன் தந்தை, தாய்மேல் கொண்டிருக்கின்ற தீராத அன்பைக் கண்டு பொருமை கொண்டு வெகுள்கிருன். இங்கு தன் தந்தை, தாயிடம் அன்பாக இல்லையே என்பது கண்டு கோபு தந்தையை வெறுக்கிருன். அதாவது, எதிரும் புதிருமான இரண்டுமே ஒடிப்பஸ் காம்ளக்ஸ் என்ருகி விடுகிறது. தவிரவும் சுந்தரம் மூலமாக இ. பா. சொல்வதைக் கொண்டு பார்த்தால் மகன்கள் தந்தைகளை வெறுப்பது என்பது மிக இயல்பான நிரந்தரமான அழுந்திக் கிடக்கும் ஓர் உணர்வு என்று பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. இது ஃபிராய்டு (Freud), நீட்ஷே (Nitezche) போன்ருேரின் கோட்பாட்டினை ஒட்டியதன்றி வேறில்லை. ஆனுல், இன்றைய சமூகபொருளாதார அறிஞர்கள் கருத்துப்படி இன்றைய

சமுதாய வளர்ச்சிக் கட்டத்தில் பொருளாதார அமைப்பு முறையால் ஏற்படுகின்ற தற்காலிக உணர்வேயன்றி, நிரந்தரமாக உள்ளத்துள் இயல்பாக அழுந்திக் கிடக்கும் உணர்வு என்று கூறுவதற்கில்லை.

2.1.4 'வேஷங்கள்' குறுநாவலில் கூறப்படுகின்ற உணர்வு, மகன், தாய் உறவு நிலையை ஒட்டியது. 'மனக்குகை' யிலும், 'மழை'யிலும் கூறப்படுகின்ற உணர்வு, மகன், தந்தை என்ற உறவிற்கு உட்பட்டது. மனக்குகை'யில் கேசவனுக்கும், அவருடைய மகள் நிர்மலாவுக்கும் இடையே இருக்கின்ற உறவு ஒடிப்பஸ் மனஉணர்வின் ஒரு நிலைதானே என்று அந்தக் கதையில் எண்ணக்கிடக்கிறது. அவர்கள் உறவை மூன்றும் மனிதனுக இருந்து கொண்டு அலசும் ரகுவின் மூலம் இத்தகைய கருத்தே உணர்த்தப்படுகிறது. நிர்மலாவின் தாய் நிர்மலாவை எப்படியாயினும் கேசவனிடமிருந்து விடுவிக்க வேண்டுமென்று துடிக்கிருள். அதற்காக அவளை விரும்புகின்ற குமார் என்பவனேடு அவளை அனுப்பிவிடுவதற்கும் தயாராகிருள். கேசவன் அதற்கு உடன்படாதது மட்டுமல்ல, வெகுளவும் செய்கிருர். நிர்மலாகூட வெளிப்படையாகத் தன்உணர்வைப்புலப்படுத்தவில்லையெனினும் தந்தையின் கருத்திற்கு மாறுபட்டுச் செல்லவில்லை. வேருெரு சூழ்நிலையில் கேசவன் குமாரினுல் தாக்கப்படுகிருன். தாக்கப்பட்டுக் கீழேவிழுந்த அவர் அப்பொழுதுதான் தன் முதுமையை உணர்கிருராம். இதையெல்லாம் வைத்துக் கொண்டு அலசும் ரகு 'நிர்மலா என்மகள், என் மகள்' என்று கேசவனுடைய மனைவி (நிர்மலாவின் தாய்) கூறியதிலிருந்து தன் கேள்விக்கு விடைகிடைத்துவிட்டது போலக் கூறிக் கொள்கிருன். ஆனுல் விடை வாசகர்களுக்குச் சொல்லப் படவில்லை. ஒருவேளை நிர்மலா கேசவனுக்குப் பிறந்த மகளாக இல்லாமலிருக்கலாம். அது கேசவனுடைய மனைவிக்கு மட்டுமே தெரிந்த இரகசியமாகக் கூட இருக்கலாம். இரகசியம் எப்படிப்பட்டதாயினும் கேசவன், நிர்மலா உறவில் அந்தக் குடும்பத்தின் தந்தை, மகள் என்ற நிலையில் பாலுணர்வைப் பற்றிய ஓர் அதீதக் கற்பனையே இழையோடுகிறது என்பதில் ஐயமில்லை,

2.2.0 மனக்குகையின் வளர்ச்சிதான் மழையென்று சொல்ல வேண்டும். நாடகமாதலால், மழையில் முரண்பட்ட எதிர்நிலைப்பாத்திரம் வருகிறது; மற்றபடி தந்தை-மகள் உறவு நிலையின் அதீதக் கற்பனையைப் பொறுத்த அளவில் மனக்குகையின் ஒருவித வளர்ச்சி நிலையே மழையில் காணப்படுகிறது. இங்கும் மகள் நிலையில் ஒரு நிர்மலாவே வருகிருள். மனக்குகை நிர்மலா, தன்னுடைய உள்ளப் போராட்டத்தை ஊசலை வெளிப்படையாகப் புலப்படுத்தவில்லை. குறுநாவலின் கட்டமைப்புக்கு அங்கே கதை உட்படுவதாலும் தனியொரு பாத்திரத்திற்கு அங்கே தனிமுக்கியத்துவம் எதுவும் தரப்படாததாலும், மனக்குகையில் நிலைமை அவ்வாறிருக்கிறது. நாடகக் கட்டுக்கோப்புப் பெற்றுத், தனியொரு பாத்திரத்தின் தனியொரு பண்புநிலை முக்கியமாக்கப் படுவதால். மழையில் நிர்மலாவின் அகவய ஊசல் வெளிப்பட்டுப்போராட்டமாகப் பகைப் புலனேடு காட்டப்படுகிறது.

2.2.1 மழையின் கதை, இதுதான்: ஓய்வு பெற்ற பேராசிரியர் சந்திரசேகர் இருதயநோய்க்காரர்; கிராமமொன்றில் மகள் நிர்மலாவுடன் வசித்துவருகிருர். அவர் தன் மகள்மேல் கொண்ட பாசத்தில் ஒருவித அதீத நிலையிருப்பதாக அவருடைய மகன் ரகு எண்ணுகிருன். அதனுல் ஏற்கனவே கோபித்துக்கொண்டு அவன் அவரைவிட்டு ஓடிவிடுகிருன். மகள் நிர்மலாவிற்கும் இந்த வகையான கோபம் உண்டு. சந்திரசேகருடைய கூற்றிற்கிணங்கப் பார்த்தால், 'நிர்மலாவை இன்னெருத்தன் சொந்தங் கொண்டாடக்கூடாதுங்கற பொருமையுணர்ச்சியினுல் அவ கல்யாணத்துக்கு நான் தடையாயிருக்கேங்கறது அவளோட அபிப்பிராயம்''. இதனேடுதான் முதற்காட்சி தொடங்குகிறது. சந்திரசேகர் இருதய நோயினுல் படுத்த படுக்கையில் கிடக்கிருர். அவ்வூர்ச் சமுதாய நலத்தொண்டில் ஈடுபட்டுள்ள டாக்டர் ஜேம்ஸ் அவருக்கு சிகிச்சையளிக்கிருர். அந்த டாக்டர் முன்னிலையில் சந்திரசேகருக்கும் நிர்மலாவுக்கும் தங்கள் உறவுநிலைபற்றி (இன்டேர்ம்ஸ் ஆஃப் சைக்லாஜி)விவாதம் நடக்கிறது. நிர்மலா அவரைத் திட்டித்தீர்க்கிருள். இடையே, அவரிடமிருந்து விடுபட்டு வாழ்வதற்கு டாக்டர்ஜேம்ஸ் தன்னைத் திருமணம் செய்துகொண்டு கூட்டிச் செல்ல

வேண்டும் என்று வேண்டுகிருள். உரையாடலின்போது மின்னல் மழை காரணமாக விளக்குகள் அணைகின்றன. பின்னர் பார்த்தால் சந்திரசேகர் இறந்துகிடக்கிருர். அடுத்த காட்சியில் ஏற்கனவே கோபித்துக்கொண்டு போய்விட்ட ரகு திரும்பிவந்து சேர்கிருன். மழைபெய்து கொண்டேயிருக்கிறது. நிர்மலாதான் தன் தந்தையைக் கொன்றுவிட்டதாக (சைக்கலாஜிகலாக) கூறி அழுகிருள். தந்தை பிரிய மனமில்லாமல் மழையாகப் பெய்துகொண்டிருக்கிருர் என்று பொருமுகிருள், ரகு. அதற்கு ஒரு வகையில் தூபம் போடுகிருன். பின்னர் அவள், டாக்டர் ஜேம்ஸுடன் எங்கேயாவது போய்விட்டால்தான் தனக்கு விமோசனம் பிறக்கும் என்கிருள், ரகு, ஜேம்ஸின் சம்மதம் கேட்கச் செல்கிருன். அடுத்த காட்சியின் தொடக்கத்தில் ஜேம்ஸ் உடன்படுவதாக வந்து தெரிவிக்கிருன் ரகு. நிர்மலாவுக்கு அன்றே கிளம்பிவிட வேண்டும் என்ற துடிப்பு. இந்த நேரத்தில் ஜேம்ஸ் வருகிருர். அந்த ஊரில் காலரா கண்டிருக்கிறது; மக்களை அதனின்றும் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு நிர்மலாவுடன்செல்ல மறுத்துவிட்டுச் சென்றுவிடுகிருர். நிர்மலா அரற்றிக்கொண்டிருக்கிருள்; மழை பெய்து கொண்டேயிருக்கிறது.

2.2.2 மழையில் குறிப்பிடத்தக்க அம்சம் (அதன் கட்டமைப்பினைத் தவிர) நிர்மலா, ஜேம்ஸ் பாத்திரப் படைப்புக்களும் அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்துவனவுமாகும். நிர்மலா, உண்மையில் ஒரு நோயாளி — மன நோயாளி. தனக்கும் தன் தந்தைக்குமுள்ள பாசத்தை அலசி அலசியே தனது நேரத்தைக் கழிக்கிருள். ஜேம்ஸிடம் வக்கிரக் கேலிகள் (cynism) செய்து தன்னுடைய அலட்சியத்தையும் வறட்சியையும் விரக்தியையும் புலப்படுத்திய வண்ணமிருக்கிருள். நோயாளியாகப் படுத்துக்கொண்டிருக்கும் தன் தந்தையை ஏதேதோ பேசித் தான்-தான் கொன்று விட்டதாக எண்ணியெண்ணி அவள் மறுகுகிருள். விடாமல் பெய்து கொண்டிருக்கும் மழையைப் பார்த்து, இறந்து போன தந்தை போக மனமில்லாமல் மழையாக முணுமுணுத்துக் கொண்டிருக்கிருர் என்று பிரமைகொண்டிருக்கிருள். ஜேம்ஸ், நிர்மலாவிடமிருந்து வேறுபட்ட பாத்திரம். வாழ்க்கையை உடன்பாட்டு அளவில் (affirmative) பார்க்கின்ற பாத்திரம் இது. மனிதாபிமான உணர்வுடன் காந்திய வழியில் கிராமத் தொண்டு செய்து வருபவர், டாக்டர் ஜேம்ஸ். ஃபிராய்டைப் படித்துவிட்டு விரக்திவளர பிரமை கொண்டிருப்பவள், நிர்மலா. அவளுக்கு அந்த கிராமம் பிடிக்கவில்லை; ஹரிஜனங்களைக் கண்டு அருவருப்படைகிருள்; நல்லவற்றையெல்லாம் அலட்சியப்படுத்துகிருள், எள்ளுகிருள். மொத்தத்தில் அகவய ஊசலுக்கு ஆளாகி வாழ்க்கையை எதிர்நிலையாகப் பார்ப்பவள் அவள். வாழ்க்கை மதிப்புக் கண்ணோட்டத்தில் அவளிடமிருந்து மாறுபட்டு நிற்கும் ஜேம்ஸ், நிர்மலாவைப் பார்த்துச் சொல்லுகின்ற கூற்று இருவரது பண்புகளையுமே காட்டும். "என்னைக்காவது நீங்க இரண்டு நாய்க்குட்டி விளையாடுகிறதையோ ஒரு குழந்தை சிரிக்கறதையோ பார்த்து ரசிச்சிருக்கிறீங்களா." என்று ஜேம்ஸ் கேட்கிருர். அந்த அளவிற்கு நிர்மலாவிடம் 'வாழ்க்கையிலே நல்ல அம்சம் இருக்குன்னு நம்ப மறுக்கிற பிடிவாதம்' இருக்கிறது; ஜேம்ஸிடம் அதற்கெதிரிடையான வாழ்க்கை மதிப்பு இருக்கிறது.

2.2.3 மழையின் முன்னுரையில் வெ. சுவாமிநாதன், நாடகம் என்பதால் இதில் சிக்கலும் மோதலுமே இருப்பது போலவும் தீர்வு இல்லை என்பது போலவும் குறிப்பிடுகிருர். கடைசியில் நீதிபுகட்டுவதற்கு சில சொன்னல்தான் தீர்வு, என்ருல் இதில் தீர்வு இல்லைதான். ஆனல், வாழ்க்கையின் குறிப்பிட்ட மதிப்புக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பாத்திரங்களின் ஆசிரியர் எந்தப் பக்கம் நின்று அனுதாபம் காட்டுகிருர் என்பதில் சூசகமான தீர்வு இருக்கிறதென்ருல் (இலக்கியப்படைப்புக்களில் இதுதான் சாத்தியம் என்பதே இலக்கிய அறிஞர்களின் கருத்து), மழையில் கட்டாயம் தீர்வு உண்டு. இ. பா. டாக்டர் ஜேம்ஸிடம்தான் அனுதாபம் காட்டுகிருர். அதாவது ஜேம்ஸ் சார்ந்திருக்கும் 'உடன்பாட்டு வாழ்க்கை' மதிப்பிலேதான் அனுதாபம் காட்டுகிருர். இறுதியிலே, யாரும் எதிர்பாராத நிலையிலே வந்து புகும் காலரா சம்பவம் நாடக பாணிக்காக மட்டும்புகுத்தப் படவில்லை; ஜேம்ஸின் போக்கிலே அனுதாபம் கொண்டு தீர்வினைச் சூசகமாகக் காட்டுவதற்குரிய ஒரு கருவியாகவே அது நுழைக்கப்படுகிறதெனலாம்.

தொடக்கத்தில் ஜேம்ஸ், நிர்மலாவை மணந்து கொள்ள, மனிதாபிமான இரக்க உணர்வின் காரணமாக, உடன்படுகிறுர். நிர்மலாவை ஜேம்ஸ் அழைத்துக் கொள்வார் என்ற நிலை உருவாகத் தொடங்கும் நேரம். ஆனால், அப்படியொரு நிலைமை உருவடைந்து விட்டதென் ருல்? நிர்மலாவும் ஜேம்ஸும் எதிரும் புதிருமான வாழ்க்கை மதிப்புக் கொண்டவர்கள். நிர்மலாவை ஒரு மனநோயாளியாகவே இ. பா. படைத்துக் காட்டுகிறுர். ஜேம்ஸ் கடைசியில், அவளிடம் கூறுவதுபோல அவள் ஒரு 'சிக்பெர்சன்.' ஒரு நோயாளியை டாக்டர், டாக்டர் என்ற முறையில்தான் அணுக முடியுமே தவிர மனைவியாக்கிக் கொள்ள முடியுமா? ஆக்கிக்கொள்ள முடியாது; கூடாது-என்பதுபோலத்தான்காலரா சம்பவம் நுழைகிறது. ஜேம்ஸின் ஆளுமையில் இ. பா.வுக்கு அனுதாபம் இருப்பதால்தான் ஒரு மன நோயாளியுடன் வாழவேண்டிய நிலைமையை ஜேம்ஸுக்கு அவர் ஏற்படுத்தவில்லை. நிர்மலாவிடம் ஐயோ பாவம் என்று இரக்கப்படுவோர், மனிதாபிமானமுடைய ஜேம்ஸ் அவளை மணந்திருக்கவேண்டும் என்று விவாதிக்கலாம். ஆனால், மனிதாபிமானம் என்பது தனிமனித எல்லைக்குள் அடங்கி விடுவதாக எண்ணுவது விஞ்ஞான பூர்வமற்ற எண்ணம். சமுதாய அளவில் விஞ்ஞான பூர்வமாகப் பரவிக்கிடப்பதே மனிதாபிமானம். அதனுற்ருன் காலராசம்பவம் புகுந்து,ஜேம்ஸின் மனிதாபிமானத்தை நிர்மலா எனும் தனி மனித நிலைக்குள் முடங்கிப்போய் விடாமல், பரந்த நிலையில் கிராமப் பணி-ஹரிஜனப்பணி என்ற காந்திய வழிப் பணியிலேயே தொடர்ந்து கவனம் செலுத்துமாறு செய்கிறது. அப்படியானல் நிர்மலாவின் கதி என்ன; அது தீர்க்கப்படவில்லையேஎன்றுசிலர்குறைப்படலாம் ஆனால் உண்மையில், அவளை அப்படியே விட்டு விட்டுச் செல்வதில்தான், மழையின் சிறப்பான தீர்வு அமைந்து கிடக்கிறது. வாழ்க்கையை எதிர்நிலையாகப் பார்க்கும் அவளுக்கு, வக்கிரக் கேலியும் அலட்சியமும், எதிலும் மதிப்பின்மையும் கொண்ட அவளுக்கு குடும்பத்துச் சூழ்நிலையால் அன்னியமாகிக்கிடக்கும் அவளுக்கு, அறிவினை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளத் தெரியாமல், ஃபிராய்டு பாணித் தத்துவங்களில் ஈடுபட்டு அகவய ஊசலில் அழுந்திக் கிடக்கும் அவளுக்கு—பாவம் என்று நாம் இரக்கப் பட்டாலும்—நடைமுறை உலகில் அதுதான் தர்க்க ரீதியான கதி என்பதுதான் இ. பா.வின் மழை, சுட்டிக்காட்டும் தீர்வு. இதனையே பொதுமைப்படுத்தி, இத்தகைய பண்புகளுக்கே இதுதான் கதி-இதுதான் தீர்வு-என்று சொன்னால் கூடப் பொருந்தவே செய்யும்.

3.0 இந்த வகையான கதி, இன்றைய போட்டிப் பொருளாதார சமுதாயத்தில் காணப்படுகின்ற ஒன்று. முதலாளித்துவ சமுதாயக் கட்டுக்கோப்பினுல் மத்தியதரக் குடும்பங்கள் அதிலும் குறிப்பாக மத்தியதர அறிவு ஜீவிகள் நெருக்கப்படுகிறுர்கள். இந்த நெருக்குதலில் ஈர்ப்புத்தானம் தவறிப்போகும் அறிவு ஜீவிகள், இறுதியில் வக்கிரத்திற்கும், விரக்திக்கும், பிரமைக்கும் ஆளாகிறுர்கள். இதனைத் தான் மழையில் நிர்மலாவின்கதி ஒரு வகையில் நின்று பிரதிபலிக்கின்றது. இதனையே இன்னொரு கோணத்தில் நின்று, தந்திரபூமியில் வரும் கஸ்தூரியின் கதி பிரதிபலித்துக் காட்டுகிறது என்று சொல்லலாம். அவன், தனது அறிவின் பலத்தால் தந்திரபூமியில் சுதந்திர பூமியைக் காண முயல்வதால் தோல்வியுற்று அந்தரத்தில் நிற்கிறுன். கஸ்தூரியின் வீழ்ச்சியினை, தனது அறிவினை முதல் ஆளிக்கு ஆளக் கொடுத்து விட்டு ஒரு அறிவு ஆளி அடைகின்ற ஒரு வீழ்ச்சியாக இ. பா. வின் தந்திரபூமி காட்டுகிறது.

3.1 சுதந்திர காலத்திற்குப்பின், புதிய பொருளாதார அமைப்பின் வளர்ச்சி காரணமாக கிராமப்புறங்கள் மற்றும் சிறு நகரங்களிலிருந்து உருவான அறிவு ஜீவிகள் சென்னை, பம்பாய், கல்கத்தா- டில்லி போன்ற பெருநகரங்களில் குடியேறத் தொடங்கினுர்கள். இவர்களுக்கு அறிவே மூலதனம். அரசாங்க இயந்திரத்திலும் தனியார் நிறுவனங்களிலும், பல்வேறு நிலைகளில் அமரத் தொடங்கிய இவர்களுக்குத் தங்களுடைய அறிவில் நம்பிக்கை அதிகம். தங்களுடைய அறிவினுல்தான் காரியங்கள் யாவுமே நடப்பதாக பிரமை கொண்ட இவர்களிடம், இதனுல், பரபரப்பும், வேகமும், அலட்சியமும் காணப்படுவது மிக இயல்பாக அமைகிறது. தந்திர பூமியில் கஸ்தூரியை நாம் இப்படித்தான் சந்திக்கிறேம். கும்பகோணத்திலிருந்து இனிய கனவுகளுடன் டில்லி வந்து அமரும், அவனை,

தன்னுடைய அறிவில் நம்பிக்கை மிகக் கொண்டவனுகவும், மற்ற சாதாரண அறிவு ஜீவிகளே அலட்சியமாகக் கருதும் போக்குடையவனுகவும் அவசரமும் பரபரப்பும் உடையவனுகவும் தொடக்கத்திலிருந்தே காட்டிச் செல்கிருர், ஆசிரியர். அவனுடைய வீழ்ச்சியின் கொடுரத்தைக் காட்டவே அவனுடைய பயணத்தின் வேகத்தைத் துரிதப்படுத்திக் காட்டுகிருர், ஆசிரியர் என்று சொல்லலாம்.

3.2.1 முதல் நாளிலேயே முதலாளி மகேஷ் தந்த பணிதைத் தொடங்கும் கஸ்தூரி அன்றே அரசாங்க அலுவலகத்தில் தன் முதலாளிக்காகக் காரியத்தைச் சாதித்து விடுகிருனும். அந்த முதல் நாளிலேயே, தன்னுடன் பணியாற்றும் (ஸ்டெனே) மீஞ பர்ஞண்டோவுடன், அவள் இவனைப்பற்றியோ, இவன் அவளைப் பற்றியோ, அறியாத நிலேயில் — அவனுல் அவளுக்கோ, அவளால் அவனுக்கோ பெரிய ஆதாயம் ஏதும் இருப்பதற்கில்லே என்ற நிலேயில்-வேறு எந்த சூழலும் நிர்ப்பந்திக்காத நிலேயில்-அவளோடு அவன் உடலுறவு கொள்கிருனும். ஆரம்பத்திலேயே இயற்கையிறந்த ஒரு வேகம். ஆனுனப்பட்ட முதலாளியே மறுநாளிலேயே, அவனைப் பார்த்துச் சொல்கிருன், 'உங்கள் துணிவு என்னேயே பயமுறுத்துகிறது' என்று. ஆனுல் உண்மையில் அது அவனைப் பயமுறுத்தவில்லே. கஸ்தூரியின் அத்துணிவையும் நம்பிக்கையையும் தன்னுடைய லாப வேட்டைக்கு மற்றுமோர் கருவியாக ஆக்கிக் கொள்கிருன், மகேஷ். அதனுல்தான், மறுநாளிலேயே தன்னுடைய அறையைக் காலிபண்ணிவிட்டு (வீட்டுக்காரரால் துரத்தப்பட்டு) வந்த அவனுக்கு மகேஷ், தானே மிக வசதியானதொரு தனி வீட்டை ஏற்பாடு பண்ணுகிருன். அவனுடன் அவன் மாதிரியே ஆனுல் நீண்ட நாட்களாக, அங்கே லேயைசன் ஆபீசராகப் பணியாற்றும் கபூர், இதனைப் பார்த்து, 'கோயிங் வெரி வெரி ஃபாஸ்ட் மை பாய்' என்று பொருமையுடன் பாராட்டுகிருன். அந்த இரண்டாம் நாளிலேயே அவன் ஐ.ஏ.எஸ். அதிகாரி குருமூர்த்தியை மிகச் சாதுரியமாகச் சரிக்கட்டிவிடுகிருன். மீஞ, அவனுடைய சாதனைகளைப் பார்த்து, 'நீங்கள் இவ்வளவு வேகமாகப் போவதைப் பார்த்தால் பயமாக இருக்கிறது' என்கிருள். அந்த இரண்டாம் நாளில் எல்லாவற்றையும் முடித்துவிட்டு சோபாவில் சாய்ந்துகொண்டு சாட்சாத் கஸ்தூரியே ஆச்சரியப்படுகிருன், "இரண்டு நாட்களில் இரண்டு வருஷங்களில் ஏற்படக்கூடிய அனுபவம்," என்று.

3.2.2 இவ்வாறு தன் அறிவு உழைப்புப் பயணத்தை மிகவேகமாகத் தொடங்கும் கஸ்தூரி தன்னுடைய அறிவிலும் ஆப்டிமிஸத்திலும் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிருன். தவிரவும், தனக்கு மகேஷாலும், சுரஜித்தாலும் இடப்படுகின்ற பணிகளேச் சவாலாக ஏற்றுக் கொண்டு செய்கிருன். அந்தப் பணிகளில் அவன் சாகசமாக வீரதீரமாகச் செயல்படுகிருன். அந்தச் செயல்கள் அவனே ஒரு அறிவு சாகசியாக (intellectual adventurer) ஆக்குகின்றன. இந்த அறிவு சாகசி மற்ற அறிவு ஜீவிகளே மிக அலட்சியமாகப் பார்க்கிருன். தன்னே மற்றவர்களிடமிருந்து தனிமைப் படுத்திக் கொண்டு, மிக உயர்வாக நினேத்துக் கொள்கிருன். ஆனுல், அவன் அவர்களே வக்கிரமாக எள்ளி நகையாடுகிருன். தன்னுடைய அறிவு சாகசங்களேயும், வெற்றிகளேயும் பார்த்துத் தனக்குத் தானே 'சபாஷ்!' போட்டுக் கொள்கிருன். 'ஈகோ', 'ஈகோ' என்று அவன் கூறித்திரிகிருன். அதற்காக அவன் கவலேப் படவும் செய்கிருன்.

3.2.3 கஸ்தூரியிடம் காணப்படுகின்ற 'தான்' என்ற நினேப்பும், தனிமனிதப்போக்கும் மத்தியதர அறிவு ஜீவிகளிடத்தில் காணப்படுகின்ற ஒரு வகையான பண்பாகும். தங்களுடைய அறிவிக்குப் பூரண சுதந்திரம் இருக்கிறதென்றும், தங்களுடைய அறிவினுல் தங்களால் எதையும் சாதித்துவிட முடியும் என்றும், தங்களுடைய அறிவினே நம்பித்தான் தங்களேச் சார்ந்திருப்பவர்கள் இருக்கிருர்கள் என்றும், இவர்கள் எண்ணிக் கொள்வதால் இந்த 'தான்' மிக உக்கிரமாக அவர்களிடம் வேலே செய்கிறது. இவர்களிடம் காணப்படுகின்ற அறிவு சாகசம், துணிவு, நம்பிக்கை, 'தான்' என்ற போக்கு முதலிய யாவற்றையும் இந்த அறிவு ஜீவிகளுக்குத் தெரியாமலே, முதலாளிகள் தங்களுடைய லாபப் பெருக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிருர்கள். அவர்களுடைய உழைப்புத்

திறன்களை முதலாளிகள் மிகச் சுலுவாக விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள், வசதிகள் யாவுமே, இந்த நோக்கத்தில் தரப்படுகின்றனவேயாம். வந்த இரண்டு நாளிலேயே ஐ. ஏ. எஸ். அதிகாரியைச் சரிக்கட்டுவது முதற்கொண்டு, அரசாங்கத்தில் பல காரியங்களைச் சாதிப்பதில் வேகங் காட்டும் கஸ்தூரிக்கு மகேஷ் வசதி நிறைந்த தனிவீட்டினையும் காரினையும் வேலையாட்களையும் தருகிறான். அவனுக்குத் தரும் இந்த வசதிகளே மகேஷைப் பொறுத்த அளவில் ஒரு இன்வெஸ்ட்மெண்ட்தான். இந்த வசதிகளைப் பார்த்துக் கஸ்தூரியே மலைத்துப் போகிறான். கடைசியில் மகேஷுக்காக மிஸ்ரா சம்பந்தப்பட்ட விவகாரத்தைத் தான் கவனிக்கப் போவதில்லை என்று அவன் சொன்னவுடன் அவனுக்குத் தான் கொடுத்திருக்கின்ற சலுகைகளையும், வசதிகளையும் மகேஷ் சுட்டிக்காட்டுகிறான். அறிவு ஜீவிகள் இவ்வாறுதான் விலை கொடுத்து வாங்கப்படுகிறார்கள்.

3.2.4 ஆனால் தங்கள் பயணத்தில் வேகமாகப் போய்க் கொண்டிருக்கும், அறிவு சாகசிகளுக்கு இதைப் பற்றி நினைக்கப் பொதுவாக நேரம் கிடைப்பதில்லை. தங்களுடைய ஈகோவுக்கு இரை போட்டுக் கொள்வதிலேயே இவர்களுக்கு அக்கறை அதிகம். இதனால் தான் பெண்களைக்கூட இவர்கள் சாதாரண இச்சைப் பொருட்களாகக் கருதுகிறார்கள். முதல் நாளிலேயே தன்னுடன் உடலுறவு கொண்டு விட்ட மீனுவைத் தொடக்கத்தில் இவ்வாறுதான் கஸ்தூரி கருதுகிறான் என்று சொல்ல வேண்டும். அவனைப் பற்றி மீனு ஏதாவது அக்கறையுடன் கேட்டால், அவளை அவன் எடுத்தெறிந்து பேசுகிறான். ஆனாலும் மீனுவைப்பற்றிய சிந்தனை அவனிடத்தில் ஆழமாகப் பதியவில்லை என்று சொல்லமுடியாது. அவளைப்பற்றிய விருப்பம் மிக ஆழமாக அவனிடத்தில் பதிந்து கிடக்கிறது. ஆனால், அறிவு சாகசியாகிய அவனை 'தான்' என்ற முனைப்பு அந்த வகையான விருப்பத்தை வெளிப்படையாக உணர முடியாமல் தடுக்கிறது. மகேஷுக்கும், சுரஜித்துக்கும் எதிராகஅவனுடைய'தான்'ஆட்டம் காணுகின்ற சந்தர்ப்பங்களில்தான், அந்தத் தான் எனும் முனைப்பு ஓரளவு தணிய, மீனுவின் மேல் தனக்கிருக்கின்ற ஆசையை அவன் உணர்கிறான். தன்னைக்கூட அவள் ஒதுக்கிவிட்டுச் செல்ல முடியும் என்று அவள் சில சமயங்களில் உணர்த்தும் போதும், அவனுக்கு அவள் மேல் இருக்கும் விருப்பம் வெளிப்பட்டு அலைக்கிறது.

3.2.5 கஸ்தூரி தன்னுடைய அறிவின் மேல் நம்பிக்கைக் கொண்டு பிறரினும் தன்னை மேம்பட்டவனாக நினைத்துக் கொண்டு தன்னை மக்கள் கூட்டத்திலிருந்து தனிமைப் படுத்திக் கொள்ளுதலும், தான் என்ற முனைப்பினைப் பெற்றிருத்தலும், தன்னுடைய அறிவுக்குச் சுதந்திரம் கேட்டலைதலும் முதலிய குணங்கள் இருத்தலியத்துள் (Existentialism) அடங்கும். இவ்விருத்தலியம் இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் முதலாளித்துவ சமுதாய அமைப்பின் நெருங்குதலால் தோன்றிய ஒரு கொள்கையாகும். குறிப்பாக அறிவு ஜீவிகள் முதலாளித்துவ சமுதாயத்தில் நம்பிக்கையிழந்து போனநிலையில் தங்களுடைய அறிவுக்குச் சுதந்திரம் கேட்டு அலைந்தனர். தங்களுடைய தனித்துவமே அதாவது 'தானே' சகலமும் என்ற கொள்கையினடிப்படையில் தோன்றிய இச்சித்தாந்தமானது, எல்லாச் செயல்களும், நினைப்புகளுமே இந்தத் தனித்துவத்தால், தனித்துவ மேன்மைக்காக அமைவன தான் என்று Subjective idealism பேசுகிறது. தன் போக்குகளையும், செயல்களையும் மனிதன் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறான், (choice) என்று இது சொல்லுகிறது. Subjective idealism பேசும் இச்சித்தாந்தம் பௌதீகத்தை மறுப்பதற்கும் முற்படுகிறது. முதலாளித்துவ சமுதாயத்தின் கொடூரத்திற்கு உட்படாது முரண்பட்டுத் தோன்றியதுதான் இச்சித்தாந்தம் எனினும் ஒருவகையான தனிமனித அறிவு சுதந்திர வேட்கையில் ஏற்படும் குழப்பங்களையே இது பெரும்பாலும் பிரதிபலிக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தைக் கண்டித்துக் கூக்குரலெழுப்பினால்கூட தனிமனித நிலையில் நின்றே இது பேசுகிறது. தன்நிலையை மனிதன் தானே தீர்மானித்துக் கொள்கிறான் என்று இச்சித்தாந்தம் பேசுமானால் சுரண்டுவோர், சுரண்டப்படுவோர், ஆண்டார், அடிமை என்ற நிலைமைகள்கூட மனிதன் தானே தேர்ந்தெடுத்துக்கொள்வதால் அமைவது என்று ஆகிவிடும். அப்படியானால், சமுதாயப் படிநிலைகளைப் பற்றிய பிரச்னைகளும் சரி. முதலாளித்துவ சமு

தாய அமைப்பு முறையினுல் ஏற்படுகின்ற துன் பங்கட்கும், துயரங்கட்கும் சரி, பதில் சொல்ல முடியாத ஒன்ருகவே இது அமைகிறது.

3.2.6 தன் அறிவுசாகசப் பயணத்தில் மிக வேகமாகச் சென்று கொண்டிருக்கும் கஸ்தூரி சவாலாகத் தனது பணிகளை ஏற்றுக்கொள்ளும் கஸ்தூரி-தனது பயணத்திலும், பணியிலும் திடீரென சலிப்படையவும் செய்கிருன். ஒரு அமெரிக்க நண்பரிடமிருந்து கார் வாங்குவதில் உள்ள சிக்கலைத் தீர்ப்பதற்காக முதலாளி மகேஷால் அவன் பம்பாய்க்கு விரட்டப்படும் போது கஸ்தூரி, 'சே...என்ன பிழைப்பு' என்று அலுத்துக்கொள்கிருன். இதனை இ. பா. கஸ்தூரி இதுவரை சொல்லாமல் முதன்முதலாகச் சொன்ன வார்த்தைகள் இவை என்று குறிப்பிட்டுக் கூறுகிருர். இதேபோல் சுரஜித்சிங்கிடம் அவன் பணியாற்றும் போதும் அம்முதலாளிக்காக ஓர் ஆப்பிரிக்க அரசரைப் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்படும்போதும் அவனுடைய உள்ளம் சலிப்படைகிறது. சுதந்திரம், சுதந்திரம் என்று பேசும் ஓர் அறிவு ஜீவிக்கு முதலாளித்துவ சமுதாயத்தில் கிடைப்பது இந்தச் சலிப்புதான். தன்னுடைய வாழ்க்கையைத் தானே தீர்மானித்துக்கொள்ள முடியும்-தன்னுடைய தானுக்கு ஒரு தனித்துவம் இருக்கிறது என்று எண்ணிப் பயணம் செல்லும் ஓர் அறிவு ஜீவியை, அவன் வாழ்கின்ற முதலாளித்துவ சமுதாயம் இரத்தம் சுண்டச் சுரண்டி விரக்தியடையச் செய்கிறது. கஸ்தூரி எந்த அளவிற்குத் தன் அறிவின் பலம்கொண்டு வேகமாக ஓடினுனே அந்த அளவிற்கு மூச்சிரைக்க வியர்த்து விறுவிறுத்துச் சோர்ந்து கால்கள் தள்ளாட, கண்கள் செருகி மங்க, மயங்கிப் போய்ப் பிரமை பிடித்தவனுகக் காட்சியளிக்கிருன். கஸ்தூரியின் இந்த வளர்ச்சிப்போக்கு தர்க்கரீதியானது. 'சுஜாதா' தந்திர பூமியின் முன்னுரையில் கூறுவதுபோல, கஸ்தூரியோடு தொடர்புபட்ட சம்பவங்கள் யாவும் தர்க்கரீதியான விளக்கத்திற்கு உட்பட்டவையல்ல என்று கூறமுடியாது. நிகழ்ச்சிகள் அந்தரத்தில் நிற்பவையல்ல. அவை ஒவ்வொன்றிற்கும் வரலாற்றுப் பூர்வமான அடிப்படைகளும்,தொடர்புகளும் உண்டு. இந்நிகழ்ச்சிகள் தூலமானவை. கஸ்தூரியின் வளர்ச்சியில் நாவலாசிரியர் இ. பா. வெறும் கருத்துக்களையோ, நினைவுகளையோ அடுக்கிக்கொண்டு செல்லவில்லை. நிகழ்ச்சிகளாகவே, நிகழ்ச்சியடுக்குகளாகவே கூறிச் செல்லுகிருர்.

3.3.1 கஸ்தூரி, தனது பயணத்தின் வளர்ச்சியில் அடைகின்ற விரக்தியை இ. பா. மிக அழகாகக் கூறிச் செல்கிருர். முதலில் அவன் தன்னுடைய பணியில் சலிப்படைந்து தனது சக்தி விரயமாவது போல உணர்ந்து தனது முதலாளிகளை விட்டு வெளியே வரும் போது அந்த வெளியேற்றத்தினுல் அந்த முதலாளிகள் எந்தவித நஷ்டமும் அடையவில்லை. அவர்களை அது பாதிக்கவில்லை; ஏனென்ருல் 'சந்தை'யில் இத்தகைய அறிவு ஜீவுகளை அவர்களால் பொறுக்கி எடுத்துக்கொள்ள முடியும். எனவே அறிவு ஜீவியாகிய கஸ்தூரிதான், விரக்திக்கு ஆளாகிருன். தன்னைப் போன்றே லையைசன் ஆபீசராக வாழ்ந்து எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் அதனுல் எந்தவித சலிப்பும் பெருமல் மாண்டுபோன கபூர் போலல்லாமல் கஸ்தூரி மாறுபட வாழ்கிருன். ஆனுலும், அவனுடைய எதிர்ப்பும், வேகமும் எந்தவிதப் பயனும் இன்றிப் போகின்றன. இரண்டாவது, தன்னைத் தவிர்க்க முடியாதவன் என்றும், தன்னுடைய அறிவினை நம்பிப் பலர் காத்திருக்கிருர்கள் என்றும் எண்ணிய எண்ணத்திற்கு அடி கிடைக்கிறது. மகேஷையும், சுரஜித்தையும் தவிர, மீனுவும் அவன் தவிர்க்க முடியாதவனல்லன் என்பதை உணர்த்துகிருள். அதனுல் தான் நம்பீசனுடன் அவளைக் காணும்போது அவனுக்கு எரிச்சல் ஏற்படுகிறது. பின்னர் அவனுடைய வழக்கமானஒரு கூற்றினை வழக்கத்திற்கு மாருக தோள்களைக் குலுக்கிக் கொண்டு 'ஜஸ்ட் ஐடோன்ட் கேர்...'' என்று அவள் சொல்லும் போது அவனுக்கு வெறியே ஏற்படுகிறது. அடுத்து, அவனுடைய மரபு, குடும்பச் சூழல் காரணமாக அவனையறியாமலேயே அவனிடம் சில அடிப்படைப் பண்புகள், நியாய உணர்வுகள் அமிழ்ந்து கிடக்கின்றன. அவை சில சமயங்களில் எட்டிப்பார்க்கின்றன. கும்பகோணத்து நினைவு சில சமயங்களில் ஏற்படுவது மட்டுமல்லாமல் அவன் சுரஜித்சிங் எனும் முதலாளியின் மனைவியாகிய ஆஷாவுடன் பேசுவதும் அவனுடைய உணர்வுகளைக் காட்டுகின்றது. 'வாழ்க்

கையின் அடிப்படையான மதிப்புகளில் நம்பிக்கை இருப்பதின் காரணமாகத்தான் சமூகத்திலுள்ள ஒருசிலர் மட்டும் சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுவதைக் காணும் போது கோபம் ஏற்படுகிறது. அந்தக் கோபத்தின் காரணமாகத்தான் சமூகத்தையே முட்டாளாக்க நான் தயங்கவில்லை', என்கிருன் அவன். கோபம் தவருன திசையில் திரும்புவதுதான் பரிதாப நிலைமை. நிற்க, அவனிடம் அமிழ்ந்து கிடக்கும் அடிப்படைப் பண்புகளை அவனிடம் வேலை பார்க்கும் சாதாரண அறிவு ஜீவியாகிய விஜயன் பாராட்டுகிருன். பாராட்டுதற்குரிய அவனுடைய அடிப்படைப் பண்புகள்தான் ஆப்பிரிக்க அரசரைப் பார்க்கப்போன இடத்தில் நீச்சல் குளத்தில் நிர்வாணமாகக் கிடக்கும் அழகிகளைப் பார்த்து அருவருப்படையச் செய்கிறது. இந்த வகையான அடிப்படைப் பண்புதான் ஒரு ஹிப்பிப் பெண் பணத்திற்காகத் தன் உடலை அவனிடம் சிறிது நேரம் ஒப்படைக்க வரும் போது மறுத்து ஒதுக்கச் செய்கிறது. இத்தகைய அடிப்படைப் பண்புகள் சுதந்திரமான தன்னிச்சையெனும் மாயையுடன் செல்கின்ற அவனுடைய பயணத்தோடு முரணி நிற்கின்றன. அவன் விரக்தியடைவதற்கு இத்தகைய சூழ்நிலைகள் யாவும் காரணமாகின்றன.

3.3.2 விரக்தியின் காரணமாக கஸ்தூரி மிதமிஞ்சிக் குடிக்கவும் தொடங்குகிருன். அப்போது அவனுக்கு பௌதிகத்தை ஒதுக்கும் சங்கரரின் மாயைத் தத்துவம் ஞாபகம் வருகிறது. விரக்தியின் இறுதியில் அவன் ஹிப்பிகளைச் சந்திக்கிருன்' இந்த ஹிப்பிக்கள் அமெரிக்க முதலாளித்துவ சமுதாயக் கட்டுக்கோப்பினுல் சிதைவுண்டு சுதந்திரம் என்ற பெயரில் சமூகத்தின் சகல கட்டுக் கோப்புக்களையும் மறுத்து பௌதீகத்தையும் மறுத்து உலகப் பெரும்போக்கு (mainstream) களிலிருந்து தங்களை ஒதுக்கிக் கொண்டவர்கள். இவர்களோடு கஸ்தூரி தன்னை முதலில் ஈடுபடுத்திக் கொள்கிருன். அவர்களோடு சரஸ் குடிக்கிருன்: குடித்தவுடன் உலகத்தின் மூன்று பரிமாணமும் அவனுக்குக் காட்சியளவில் தெரியத் தொடங்கியது. அதாவது சங்கரரின் மாயைத்தத்துவத்தை (subjective idealism) சரஸ் மூலம் அனுபவிக்கிருன் என்று சொல்ல வேண்டும்...அர்த்தத்தின் அர்த்தம் நான் என்ற பாரம்பரியமான ஒரு நீண்ட நினைவு. இந்நினைவைக்காட்சியாக மாற்றும் பௌதீகம் ஒழிக என்று கஸ்தூரி கத்துகிருன். இந்த வகையான போதையில் அவன் சிரிக்கத் தொடங்குகிருன். அப்போது இதுவே அவனது மன எரிச்சலின் விடுதலையாகத் தோன்றுகிறது. அதாவது சிரிப்பு என்பது மனஎரிச்சலின் விடுதலை என்று ஃபிராய்டு கூறுவதற்கொப்ப அவனுடைய உணர்வும் அமைவதுபோலக் காட்டப்படுகிறது. அப்படியானுல் இது, சரஸ் போன்ற போதைகளினுல் தான் ஏற்படுவது என்ருகிறது.

3.3.3 இ.பா. ஹிப்பிக்களின் சிந்தனைகளைப் பற்றி மிக அழகாக விவரித்துச் சொல்கிருர். இந்த ஹிப்பிக்களுடன் சரஸ் குடித்து கஸ்தூரி ஒன்ருகிருன் என்பது உண்மைதான். ஆனுல் அது மிகவும் தற்காலிகமானதாகவே ஆகிவிடுகிறது. தூங்கியெழுந்து சரஸ் போதை தெளிந்தவுடன் அவனுக்கு நினைவும் தெளியத் தொடங்குகிறது. தவிரவும் முன்னர் ஏற்கனவே குறிப்பிட்டதுபோலப் பணத்திற்காக அவனேடு உடலுறவு கொள்ளவரும் ஹிப்பிப் பெண்ணினுலும் தன்னுடைய அடிப்படைப் பண்பின் காரணமாக அவன் தெளிவு பெறுகிருன். அதனுல்தான் அவன் ஹிப்பிக்களிடமோ. மாயைத் தத்துவத்திடமோ நிரந்தரமாகத் தஞ்சமடைந்துவிடாமல் தன்னுடைய அந்தரங்கத்தை ஓரளவு புரிந்திருக்கின்ற—தன்னை விரும்புகின்ற—மீனுவிடம் தஞ்சமடைகிருன்.

3.3.4 கஸ்தூரியின் முடிவு, இ. பா.வின் அனுதாபம் எந்தப்பக்கம் எப்படியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. சங்கரரின் மாயவாதத்திலோ. ஹிப்பிக்களின் போதை வாதத்திலோ, ஃபிராய்டின் தத்துவத்திலோ, சாத்ரே போன்ருேரின் இருத்தலிய சித்தாந்தத்திலோ நிரந்தரமாக அல்லது முழுக்க கஸ்தூரியை அவர் நிறுத்திவிடவில்லை, 'தன்னைச் சரித்திரத்தோடு தொடர்பு படுத்தும்' மீனுவோடுதான் அவன் இறுதியில் சேருகிருன். தான் விரும்புவதும், தன்னை விரும்புவதுமாகிய ஒரு நிலையில் தான் இன்பமும்,பாதுகாப்பும் ஒருவனுல் அடைய முடியும், என்பதைப் போலத்தான் அவன் மேற்கொள்ளும் முடிவு சூசகமாக அமைந்துள்ளது. மீனுவின் வீட்டிலே தூங்குகின்ற குழந்தையின்

சிரிப்பிலே அவன் ஒரு வகையான நிம்மதியைக் காணுகிருன். நாவலின் கடைசி வாக்கியம் இப்படி முடிகிறது: 'அப்பொழுது மீனு ஸ்டவ் வைப் பற்ற வைக்கும் சத்தம் அவனுக்குக் கேட்டது.' சமையல் கருவியாகப் பயன்படும் ஸ்டவ் அந்த வகையில் குடும்ப வாழ்விற்கு ஒரு குறியீடாகக் (symbol) கருதப்படமுடியும் என்று சொல்வதில் பொருத்தமுண்டு. இது சூசகமாகக் கஸ்தூரியின் புதிய வாழ்க்கையின் தொடக்கத்தைச் சுட்டிக் காட்டுகிறது, என்று கருதுவதற்கு இங்கு இடமில்லை என்று சொல்ல முடியாது. ஒன்றுமட்டும் உறுதியாகச் சொல்லலாம்; அவன் இப்போது முதலாளிகள் அறிவு ஜீவிகளின் உழைப்பினைச் சுரண்டுகிருர்கள் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிருன் — அறிவின் காரணமாக அவனுக்கிருந்த 'தான்' என்ற அகங்காரம் மிகவும் தணிந்திருக்கிறது. 'நான் இன்னும் சாப்பிடவில்லை. எனக்காகச் சமைக்க முடியுமா?' என்று மீனுவிடம் நாகரீகமாகத் தன்னுடைய உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளவும் அவனுக்குத் தெரிகிறது. இவ்வாறு இறுதியில் உருவாகத் தொடங்கியிருக்கும் அவனை 'சுஜாதா' தனது முன்னுரையில், "கொஞ்சம் உன்னிப்பாகக் கவனித்தால் கஸ்தூரியை நீங்கள் கற்காலத்து உடையில் மீனுவின் தலைமயிரைப் பற்றித்தரையில் இழுத்துக் கொண்டு செல்வதைப் பார்க்கலாம்... புன்னகையோடு" — என்று கூறுவது சற்றும் பொருந்தாது. இக்கூற்று, மனிதனிடம் தொன்மைக்காலத்து உணர்வுகளே நிரந்தரமாக (anthropological identity) அமைந்து கிடக்கின்றன — சூழல் மாற்றங்களினிடையேயும் அவன் வளர்வதில்லை ("Progress means improvement. But man always remains the same in the face of changing circumstances" — Jean Paul Sartre.) — எனும் இத்தாலிய சித்தாந்தத்தை இங்கே நுழைக்கப் பார்க்கிறது என்பதைத் தவிர, இதில் உண்மையில்லை. கஸ்தூரியின் அனுபவங்க்ளில் ஒருவகையான அர்த்தமுண்டு. அவனுடைய பயணத்தில் காணலாகும் ஒவ்வொரு சம்பவங்களுக்கும் தொடர்பு உண்டு, வரலாறு உண்டு. அச்சம்பவங்கள் தரும் வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட முனையை யடைந்திருக்கிருன், கஸ்தூரி. இவற்றைக் கண்டு கொள்ளாமல், சம்பவங்கள் நகரவில்லை, கஸ்தூரியும் வளரவில்லை என்று சொல்வது தர்க்கரீதிக்குட்பட்ட விவாதமல்ல.

3.4.1 இனி, இ. பா. வின் தந்திரபூமியில் இவற்றைத் தவிர, குறிப்பிடத்தக்க வேருெரு முக்கியமான அம்சமும் உண்டு. அது முதலாளித்துவ சமுதாயம் பாரபட்சமின்றி (வேறு தமிழ் நாவல்களில் இல்லாதஅளவு என்றுகூடச் சொல்லலாம்) தோலுரித்துக் காட்டப்படுகிறது என்பதாகும். மகேஷும் பின்னர் சுரஜித்சிங்கும் எவ்வாறு அறிவு சாகசியாகிய கஸ்தூரியின் உழைப்பினை, மிகக் கெட்டிக்காரத் தனமாக ரத்தம் சுண்டச் சுரண்டுகிருர்கள் என்பதை மிக அழகாகச் சொல்லுகிருர், ஆசிரியர். லாப வேட்டைக்காக இவர்கள் எதையும் செய்யக் கூடியவர்கள், சலுகைகளையும் வசதிகளையும் வாரியிறைக்கக் கூடியவர்கள் —பலியாடுகளுக்குக் கொழுக்க இரை போடுவதைப்போல! சுரஜித்சிங், தன் இளமனைவி ஆஷாவைக்கூடக் கஸ்தூரியிடம் தன் லாபத்திற்காக அனுப்புவதற்குத் தயங்கவில்லை. இவ்வாறு தாங்கள்விலை கொடுத்து வாங்கும் அறிவு ஜீவிகளை இவர்கள், உற்சாகப்படுத்துகிருர்கள்; உசுப்பிவிடுகிருர்கள்; நாசூக்காக அவசரப்படுத்திப் பரபரப்பை உண்டுபண்ணுகிருர்கள். 'என்னிடம் வேலை செய்கின்றவர்களுக்கு இரவு பகல் தெரியாமல் இருப்பது ஆச்சரியமில்லை' என்று மகேஷ் சொல்லுவதைப் போல், இவர்களிடம் பணியாற்றுபவர்களிடம் காலம் என்ற பரிமாணம் இல்லையாக எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு வசதியாக குடும்பம் என்ற பாரம் இல்லாமலிருந்தால் நல்லது — அதனுல்தான், கபூர் இறந்தவுடன் மகேஷ், கஸ்தூரியைப் பார்த்து ஆச்சரியத்துடன் 'உங்களுக்குப் பெற்றோர்கள் இருக்கிருர்களா' என்று கேட்கிருன். இந்த மாதிரியான முதலாளிகள், தங்களுடைய சொந்த நோக்கத்திற்காக மாநிலம், மொழி போன்ற உணர்ச்சிகளைக் கிளப்பிவிடவும் செய்கிருர்கள். நம்பீசன் என்னும் தமிழ்நாட்டு முதலாளி, கஸ்தூரியைப் பார்த்து 'நம்ம பையன்' என்றும் 'இவ்வளவு அறிவும் ஒரு பஞ்சாபிக் காரனுக்கல்லவாபோகிறது' என்றும் கூறுகிருர். இத்தகையபண்புகள் பலவும் கொண்ட இம்முதலாளிகள், தங்களுக்குக்கீழ் பணியாற்றுபவர்களின் உழைப்பினைச் சுரண்டி முடித்தபின் அவர்களது உழைப்பு

தேவையில்லை என்றால், அல்லது அவர்கள் ஒத்துவரவில்லை என்றால் ஈவு இரக்கமில்லாமல் தூக்கியெறிந்துவிடுவார்கள்என்பதனையும்இ.பா. காட்டுகிறார். கஸ்தூரி, தனக்குச் சரிப்பட்டுவர வில்லைஎன்றவுடன்,தான் அவனுக்குக் கொடுத்த கார்,பங்களா போன்றசலுகைகளையெல்லாம் சுட்டிக்காட்டிப் பிடுங்கிவிடுதாக அச்சுறுத்துகிறான், மகேஷ். சுரஜித்சிங்கோ, கள்ளக் கடத்தலில் தனக்குத் துணை செய்த ஆனந்தை, போலீசாருக்குப் பலி கொடுத்துவிட்டுத், தான் சொகுசாகத் தப்பித்துக் கொள்கிறான். இவ்வாறு பல பண்புகளை இ. பா. சித்திரித்துக் காட்டுகிறார்.

3.4.2 பண பலத்தைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டுள்ள, இம் மூலதன ஆளிகள், அதிகார வர்க்கத்தாரையும் மிகச் சுளுவாகக் கைக்குள் போட்டுக்கொள்கிறார்கள். அவர்களுடைய குறையையும் நிறையையும் தெரிந்து வைத்துக்கொண்டுத் தங்களுக்காக அவற்றைச் சுளுவாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதற்காக இப்பெருமுதலாளிகள் ஏற்படுத்துவனதான், லையைசன் ஆபீசர் போன்ற பதவிகள். இந்த ஆபீசர்கள் மூலம், அரசாங்கத்தில்—அவர்கள் ஆசாரமானவர்களாக இருந்தாலும்சரி, யாராயிருந்தாலும் சரி—அவர்களிடம் காரியத்தை இவர்கள் சாதித்துவிடுகிறார்கள். இதனையும் இ. பா. மிகவும் அழகாகச் சித்தரித்துச் செல்கிறார். சுரஜித்சிங் போன்ற பெருங்கொண்ட முதலாளிகள், அரசாங்க இயந்திரத்தில் தங்களுடைய ஆட்களை, வேறு எவ்வித பெரிய அரசாங்க வேலையுமில்லாமல்-தங்களுடைய காரியங்களைச் சாதித்துக் கொள்வதற்காகவே-பெரிய வேலைகளில் அமர்த்துகிறார்கள். அந்த அளவிற்கு 'மேல் மட்டத்தில்' அவர்களுக்குச் செல்வாக்கு உண்டு. இவைபோன்ற பல அந்தரங்கங்களை வெளிப்படுத்துகிறார். தயவு தாட்சணியமில்லாமல்.

3.4.3 தந்திர பூமியைச் சித்தரித்துக் காட்டும்போது இ. பா. கஸ்தூரி எனும் மத்தியதர வர்க்கத்து அறிவு ஜீவியின் பக்கம் நின்று கொண்டு அவன்மேல் அனுதாபமும் கொண்டு தான் பேசுகிறார். முதலாளித்துவ சமுதாயத்தை அவர் எள்ளி நகையாடி, ஒரு வகையான ஆவேசத்துடன் தோலுரித்துக் காட்டுகிறார். இ. பா. வின் குரலில் இந்தத் தொனி மிக வெளிப்படையாகவே ஒலிக்கிறது. ஆனால் கஸ்தூரி என்ற படைப்பு, முதலாளித்துவ சமுதாயத்தின் கோரப் பிடியில் சிக்குண்டு சிதறி வீழ்ச்சியுற்று விரக்தியடையும் ஒரு படைப்பேயன்றி, முதலாளித்துவத்திற்கு எதிரான புதிய சக்தியினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் படைப்பு அல்ல, என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கஸ்தூரியின் படைப்பில், அதனளவில், இதன் மூலம் நாம் குறைபாடு கொள்வதற்கு இல்லையென்றாலும், நசிவும் அதனால் விரக்தியும் அடையும் கஸ்தூரிக்கு மாற்று (foil) எதுவும் இந்நாவலில் கூறப்படவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டும். நிராசையின் ஓலமாக அமையாது நம்பிக்கையின்கீதமாக அமைவதற்கு, அத்தகைய மாற்று சக்தியினை-புதிய சக்தியினைப்படைத்து காட்டுவதென்பது துணைபுரியும். நசிவடையச் செய்யும் சக்திகளுக்கெதிரான ஆரோக்கியமான புதிய சக்திகள் இல்லாமலுமில்லை: அத்தகைய சக்திகளை இ. பா. வால் சித்தரிக்க முடியாது என்பதுமில்லை.

4.0.1 'மழை'யில் டாக்டர் ஜேம்ஸ், நிர்மலாவுச்கு எதிரிடையான ஒரு மாற்று சக்தியாகக் காட்டப்படுகிறார். 'கானல்நீரில்' ராஜாவுக்கும் உஷாவுக்கும் மாற்றாக, நசிவடையாத மனித நேயமுடைய பாத்திரமாக ரவி காட்டப்படுகிறான். 'காலவெள்ளம்' நாவலில் 'கோபாலின்' பாத்திரம் இந்த வகையில் உன்னதமான பாத்திரமாக விளங்குகிறது. தன்னுடைய அண்ணன் சாரங்கனைப்போல், தந்தையின் கோபமும் அதனால் குடும்பத்துச் சூழலும் பிடிக்காமல் அவன் ஓடிவிடவுமில்லை. அல்லது உப்பிலிபோல் பொறுப்பற்ற நிலையிலுமில்லை. அதே சமயத்தில் தன் தந்தையோடு—பழைய சக்தியோடு—ஐக்கியமாகிவிடவுமில்லை. பரந்த புறவுலகத்தில் தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டு போராடுகின்ற ஒரு சக்தியாக அவன் விளங்குகிறான். யாரும் நினைத்துக்கூடப் பார்க்காதபோது, தன் தந்தைக்கும் தெரியாது, தன் சகோதரி வேதவல்லியை அவன் மாமனார் வீட்டிற்கு அழைத்துச் சென்று வாழவைக்கிறான். புற உலகில் சிதையாமல், அதன் பெரும் போக்கான நடைமுறையோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்வதாலேயே, குடும்பத்திலும் அவன் ஒன்று திரட்

டும் ஒரு சக்தியாக விளங்குகிறான். வெறுமனே கருத்தளவில் நின்றுவிடாமல் செயலிலும் போராட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் பாத்திரம், கோபால். எனவே இ. பா. விற்குப் புதிய சக்திகளைப் படைத்துக் காட்டுவதில் உடன்பாடு உண்டு என்பதனையறியலாம். ஏனெனில் நடப்பியலை — யதார்த்தத்தைச் — சித்திரிப்பதிலேயே அவர் அக்கறை காட்டுகிறார் என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த நிலைமையை அவருடைய பின்னைய சில படைப்புக்களிலும் நாம் காணலாம். குறிப்பாகக் கூற வேண்டுமானால் 'புனிதங்கள்'(தீபம், ஆகஸ்ட் 71) 'நாசகாரக் கும்பல்' (தீபம், அக். 71.) எனும் சிறுகதைகளைக் குறிப்பிடலாம். நடப்பியலையும் ஆசிரியரது ஆரோக்கியமான கண்ணோட்டத்தையும் இக்கதைகள் பிரதிபலித்துக் காட்டுகின்றன.

4.1.1 'புனிதங்கள்' என்ற கதை ஒரு ஏழை பிராமணச் சிறுவனின் ஏக்கங்களை யதார்த்தமாகச் சித்தரிக்கிறது. வறுமைக்கு முன்னால்-ஏக்கங்கட்கு முன்னால்-வெறும் தாய்ப்பாசம் துச்சமெனக் கருதுவது அழகாகக் காட்டப்படுகிறது. 'வளைசல்' எனும் அந்த ஏழைச் சிறுவன் நீண்ட நாட்களாகவே நல்ல சோறு சாப்பிடவும், புத்தாடை அணியவும் ஏங்கிக் கொண்டிருக்கிறான், அதற்கு இப்போது ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. அந்த ஊரின் வசதியான ஒரு பணக்காரர் வீட்டில் நடக்கும் அனுமார் பூஜைக்குப் பிரம்மசாரி என்ற முறையில் அவனையழைத்து நல்ல சாப்பாடும், புத்தாடையும் தருகிறார்கள். சாப்பிட ஆரம்பிக்கும் நேரத்திற்குக் கொஞ்சம் முன்னால் அவனுடைய தாய் இறந்துவிட்டதாக ஒருவர் கூறிச் செல்கிறார். நீண்ட நாட்களாகவே நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தவள் அவள். அந்த குடும்பத்தின் சிறு வருமானத்தையும் மருந்து மூலமும், கவனிப்புமூலமும் சாப்பிட்டுக் கொண்டிருந்தவள் அவள். அவளை நன்றாகக் கவனித்த அண்ணியைத் திட்டிக்கொண்டும், முணுமுணுத்துக் கொண்டும் இருந்தவள் அவள். இதையெல்லாம் பார்த்துப் பார்த்து வளைசல் ஏங்கிக்கொண்டிருக்கிறான். இப்போது அவனுடைய பலநாள் ஆசை நிறைவேறும் தருணம். இரத்த பாசம் என்ற ஒன்றைவிட வயிற்றுப்பசி வலுவானது-அதுவும் ஒன்றுக்கும் உதவாத ஒருஉயிர்மேல் தியாகபூர்வமான பாசத்தை வைத்துப் புனிதம் என்று சொல்வதைவிட, பசியின் உண்மையை, ஏக்கத்தின் உண்மையை ஓர் ஏழை புரிந்துகொண்டு நடப்பது நடப்பியலுக்குப் பொருத்தமான நியாயம் என்பதனை மிக அழகாகச் சித்தரித்துள்ளார் இ. பா. அநுமார் பூஜை செய்யும் வீட்டாருக்கு, வேகம் வேகமாகச் சாப்பிட்டுப் புத்தாடை வாங்கிவிட்டு அந்தச்சிறுவன் சென்றவுடன்தான் உண்மை தெரிகிறது. இ. பா. வாசகர்கள் அந்தப் பையன்மேல் அநுதாபம் கொள்ளும்படியாக அவனுடைய செயலை நியாயப்படுத்திக் கதையை அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

4.1.2 அடுத்து 'நாசகாரக் கும்பல்' என்ற கதை ஒரு விபத்து சம்பவத்தை மையமாகக் கொண்டு சுழல்கிறது. தன் நோக்கத்திலும், தான் வெளிப்படுத்துகின்ற விஷயத்திலும் இக்கதை மிகச் சிறந்த ஒன்றாகப் பிரகாசிக்கிறது. வீட்டு வாசலிலே கற்பனையில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஏழைச் சிறுவன் அம்பியின் கால்களை டூரிஸ்ட் பஸ் ஒன்று பதம் பார்த்து விடுகிறது. இரத்தம் பெருக்கெடுத்தோடுகிறது. அந்தக் குடும்பத்தின் எதிர்காலத்தையே அவனுடைய எதிர்காலத்திலே காணும் அவனுடைய தாய் அலறுகிறாள். ஊர் கூடுகிறது. அந்தப்பையனைக் காப்பாற்ற வேண்டுமே என்று துடிக்கிறான் டிரைவர். பக்கத்து வீட்டு வக்கீல் குமாஸ்தா பையனுடைய விபத்தை வைத்துக்கொண்டு ஏதாவது பணம் சம்பாதிக்கலாமா என்று பார்க்கிறார். 'ஏதாவது பொய் ஸ்டேட்மெண்ட் கொடுத்து கையெழுத்து வாங்கிக்கலாம்னு பார்க்கறையா...கனகா மாமி, போகாதீங்க' என்று கத்துகிறார். 'போலீஸ் வந்தப்புறம் போகலாம் என்று சட்டம் பேசுகிறார்' கண்டக்டர் ராஜு கூட டிரைவரோடு ஒத்துழைக்காமல் முதலாளிக்குப் பதில் சொல்லணுமே என்று அங்கலாய்க்கிறான். எல்லாவற்றையும் மீறி மனிதாபிமானத்தையே மதித்து டிரைவர் பையனை ஆஸ்பத்திரிக்கு இட்டுச் செல்கிறான். அங்கே நர்ஸ்,'போலீஸ் கேஸ்'என்று சட்டம் பேசுகிறாள். அவளை மீறி டாக்டர் அறைக்குள் நுழைகிறான், டிரைவர். குறுந்தாடி வைத்த இளைஞன் அந்த டாக்டர். பையனை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டுபோகச் சொல்கிறான். அங்கும் நர்ஸ்

சட்டம் பேசுகிருள். அதனை டாக்டர் லட்சியப் படுத்தவில்லை. தகவல் கிடைத்து பஸ் முதலாளியும், இன்ஸ்பெக்டரும் வருகிருர்கள். முதலாளிக்குத் திருட்டுத்தனமாக பஸ்விட்டது தெரிந்துவிடக்கூடாதே என்ற துடிப்பு. இன்ஸ்பெக்டருக்கோ அந்த முதலாளியின் அரசியல் செல்வாக்கு வேண்டிக்கிடக்கிறது. பணமும், அதிகாரமும் கைகோர்த்துக் கொள்கின்றன. கேசை முதலாளிக்கு ஆதரவாக மாற்ற இன்ஸ்பெக்டர் முயலுகிருர். டாக்டர் ஒளிவு மறைவில்லாமல் தான் பரிசோதனையில் கண்டதை அப்படியே ரிப்போர்ட்டாகத் தருகிருன். தனக்குச் சாதகமாக இல்லையே என முதலாளி சீறுகிருர், பயமுறுத்துகிருர். அதற்கு அஞ்சாமல் நிற்கிருன் அந்த டாக்டர். அவனேடு டிரைவரும் சேர்ந்து கொள்கிருன், இதுதான் கதை.

4.2.1 'நாசகாரக் கும்பலின்' இந்தக் கதை பலவகைகளில் சிறப்புடையதாக விளங்குகிறது. மக்கள் மன நிலைகளை, எதிரும் புதிருமான சக்திகளை மிக யதார்த்தமாக இக்கதை சித்தரித்துக் காட்டுகிறது. தந்திர பூமியில் காணப்படுவது போலவே இங்கும் முதலாளித்துவத்தின் சில நிலைகள் புலப்படுத்திக் காட்டப்படுகின்றன. அதிகார வர்க்கத்தை அது தன்பக்கம் ஆட்படுத்திக் கொள்வதையும் இது காட்டுகிறது. தவிரவும், மனிதாபிமானம் அற்று எப்படியாவது பொருளீட்ட வேண்டும் என்று நினைக்கும் சந்தர்ப்ப வாதிகளையும், ஈவிரக்கமற்று வெறுமனே சட்டங்களைப் பேசுவோரையும், தங்களுடைய காரியம் ஆனுல் போதும் என்றிருப்போரையும் எனப்பல திறத்தாரையும் இதை நிகழ்ச்சியின் வாயிலாகச் சுட்டிக் காட்டுகிருர். இப்படிப் பட்டோரைத் தான் நாசகாரக் கும்பல் என்று இ. பா. சாடுகிருர். தந்திரபூமிக்கும் இச்சிறு கதைக்குமுள்ள முக்கியமான வேறுபாடு, தந்திர பூமியில் இந்தவகையான நாசகாரக் கும்பல் தோலுரிக்கப் பட்டாலும், அதற்குள் அகப்பட்டு ஓலமிடும் ஒரு விரக்திக் குரலைத் தான் நாம் அங்கு கேட்கிருேம். நாசங்களுக்கெதிரான சக்தியை அங்கு நாம் காணவில்லை. ஆனுல் இந்தக் கதையில் நாசகாரக் கும்பலுக்கு எதிரான சக்தியையும் புதிய மதிப்புக்களையும் நாம் சந்திக்கிருேம். சிறப்பாக, டாக்டர் பாத்திரம் இந்த வகையில் மிகச்சிறந்த பாத்திரமாக அமைந்துள்ளது. புதிய தலைமுறையைச் சேர்ந்த அந்த டாக்டர் — அறிவு ஜீவுகளில் ஒருவனுன அந்த டாக்டர்—புதிய சக்தியினையும், புதிய மதிப்பினையும் பிரதிபலிக்கின்றவனுகவும் வருகிருன். பணபலத்தின் பயமுறுத்தலுக்கோ, அதிகார மிரட்டலுக்கோ அவன் அஞ்சவில்லை. மாருக, எதிர்த்துச் சீறுகிருன். பஸ் முதலாளி தனக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதாகவும், அவனைத் தண்ணீர் வசதியில்லாத ஊருக்கு மாற்றும்படிச்செய்து விடுவதாகவும் பயமுறுத்துகிருன். அந்த இளைஞன் அதற்கு இப்படிப் பதில் கூறுகிருன். "கேவலம், இந்த வேலைக்காக நீ விட்டெறியப்போற காசுக்கு இந்தக் கும்பல் மாதிரி காக்கா கணக்கா காத்திண்டிருக்கப் போறேன்னு நீ நினைச்சியா...? யூ கேன் ஜாலி வெல் கோ டு த சீஃப் மினிஸ்டர்... நான் என் ரிப்போர்ட்டைப் மாத்தப் போறதில்லே...... எவ்வளவு தைரியமிருந்தால் ஆஸ்பத்திரி வாசலிலேயே நீ இப்படிப் பேசுவே? உனக்காக இந்த இன்ஸ்பெக்டர் பேரம் பேச வரான். கோர்ட்லே கேஸ் வந்து ஜெயிச்சா பத்தாயிரக் கணக்கிலே அழணுமேன்னு சாமர்த்தியமா சமாளிக்கப் பார்க்கறிங்களா?" சுரண்டலுக்கு ஆட்படாது, பயமுறுத்தலுக்கு அடிபணியாது மனிதாபிமானத்துடன் சமுதாயக் கடமையை ஆற்றும் புதிய மதிப்புகளைக் கொண்ட ஓர் இளைஞனின்—ஓர் அறிவு ஜீவியின், சீறலில் தந்திரபூமியில் வரும் கஸ்தூரிக்கு ஒரு மாற்றுப் போல (foil) இங்கு இந்த டாக்டர் படைக்கப்படுகிருர் என்று சொல்லலாம். இந்த டாக்டரோடு, தொழிலாளிகளின் பிரதிநிதிபோல் கருதப்படக் கூடிய பஸ்டிரைவரும் நாசகாரக் கும்பலுக்கெதிராக ஒன்றிணைகிருன். புதிய உலகத்திற்குத் துணை போகும் ஒரு முற்போக்கான, ஆரோக்யமான கண்ணேட்டம் இது. இதனை ஆசிரியர் இ. பா. யதார்த்தமாகவும், உண்மையாகவும், (Sincerity) நேய உணர்வோடும் சித்தரிக்க முடியும் என நிரூபிக்கிருர்.

5.1 இ. பா.வின் வெற்றிக்குக் காரணம் பல உண்டு. அவற்றுள் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்ருல், ஏற்கனவே இதுகாறும் குறிப்பிட்டாற் போன்று அவர் தன்னுடைய படைப்புக்களை நடப்பியல் சித்திரங்களாகப் படைத்திருக்கிருர். தம்முடைய எழுத்துக்களில்

அவரிடம் விசுவாசமும், உண்மையும் காணப்படுகின்றன. நவீன காலப் போக்குகளையொட்டி அவை வக்கிரமாக இருந்தாலும்சரி; பழையதில் நம்பிக்கையின்மை என்ற தன்மை இருந்தாலும்சரி, வேறு எத்தன்மைகள் இருந்தாலும் சரி, அவற்றை அவர் சம்பவக் கோர்வைகளுடன் அழுத்தமாகப் பாரபட்சமின்றி அவ்வப் பாத்திரங்கட்கு ஏற்ப காட்டிச் செல்கிருர். அவருடைய படைப்புக்களில் காணப்படுகின்ற இப் பொதுப் பண்புகள் தவிர, விஷயங்களைச் சொல்லுகின்ற விதத்தில் கையாளப்படுகின்ற உத்திகளும், நடையும் அவருடைய படைப்புக்களை வலுவானவைகளாக ஆக்குகின்றன. குறிப்பாக பின்னைய படைப்புக்களான தந்திரபூமி வேஷங்கள் முதலிய குறுநாவல்கள், மழை முதலியனவற்றில் இச்சிறப்பினைக் காணலாம். தந்திரபூமியில் கஸ்தூரி என்ற பிரதான பாத்திரத்தை நோக்கியே சம்பவங்கள் யாவும் ஒருமுனைப்படுத்தப் படுகின்றன. ஒட்டாமல் பிசிறுதட்டுகின்ற நிகழ்ச்சிகள் தந்திர பூமியில் இல்லை. அதே போல் வருணனைப் பகுதியும் இந்நாவலில் இடத்தையடைத்துக் கொள்ளவில்லை. உரையாடல்களும் சுருக்கமான, செறிவானமன எதிர்வு அலைகளும் மிகுதி.இந்நாவலில் கூறப்படுகின்ற விஷயத்திற்கு இந்தப் போக்கு பேரளவு துணை புரிகிறது. தவிரவும் எள்ளி நகையாடுகின்ற போக்கும் நாவலின் சுவைக்கு ஒரு பொருளாக அமைகிறது. அவருடைய முதல் நாவலாகிய காலவெள்ளத்தில் இந்த வகையான தன்மைகளைப் பார்க்கமுடியாது. அங்கே, சம்பவங்கள் பலமுனைகளில் பரவிக்கிடக்கின்றன. வருணனைகள் (இயற்கை வருணனையை இங்கு நாம் குறிப்பிடவில்லை. நிகழ்ச்சிகளைப்பற்றிய வருணனையும் ஒருவகையில் வருணனைதான்.) கூட காலவெள்ளத்தில் உண்டு. ஆனுல் காலவெள்ளத்தில் கூறப்படுகின்ற விஷயங்களும், அவற்றின் போக்குகளும் தந்திர பூமியிலிருந்து வேறுபட்டவை என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. எவ்வாருயினும் தந்திர பூமியின்கட்டமைப்பு அறிவு பூர்வமாக (Intellectually composed) அமைக்கப்பட்டு சிறந்ததொரு படைப்பாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. வேஷங்கள் என்ற தொகுதியிலுள்ள குறுநாவல்களும் நல்ல உத்தியையும், நடையையும் பெற்றுள்ளன. மழை என்ற இவருடைய நாடகம் குறிப்பிடத்தக்க சிறப்பான அமைப்பினைப் பெற்றுள்ளது. இ. பா. வின் டில்லி நண்பர் வெ. சுவாமிநாதன், இந் நாடகத்தைத் தமிழில் முதன் முதலில் அரங்கேறிய நாடகம் என்று சொல்லுகிருர். இதன் வன்மை, மென்மைகள் பற்றி இங்கு நாம் ஆராயவேண்டுவதில்லை. அது தனி ஆய்வுக்குரியது. ஆனுல் குறைந்த அளவிலான நாடக பாத்திரங்கள் (4), நிகழ்ச்சிகள் அதிகமின்றி விவாதங்களை இடத்தையடைத்துக் கொள்ளுதல், அவ்விவாதங்களும் மிகவும் அறிவு பூர்வமானதாக அமைதல், பூடகமான அகவய உளைச்சல் பற்றிய விஷயங்கள் நிறைந்திருத்தல் முதலிய தன்மைகள் இம் மழையை வரையறுக்கப் பட்ட வாசகர்களுக்குள் முடக்கி விடுகின்றன என்பதில் ஐயமில்லை.

5.2 இன்றைய தமிழ் இலக்கியவுலகில் தனக்கென ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள இ. பா., இதுகாறும் காட்டியவாறு நவீன காலத்திற்குரிய பல கண்ணேட்டங்களைப் படம் பிடித்துக்காட்டுகிருர். இத்தகைய கண்ணேட்டங்களில் பொதுவாக மனித நேயம் இழையோடுவது குறிப்பிடத் தக்கது. தவிரவும், ஆசிரியரின் விரிவான பரந்த அறிவு அவரது படைப்புக்களில் பளிச்சிடுகிறது. இதன் காரணமாகவும், அவருடைய படைப்புக்களில் எள்ளி நகையாடலும், அங்கலாய்ப்பும் காணப்படுகின்றன என்று சொல்லலாம். உலகத்தில் காணப்படும் சில போலித் தனங்களுக்கு அறிவு உழைப்பாளியாக அவரால் அத்தகைய குரலேயே எழுப்பமுடிகிறது. ஆயினும் மூதலாளித்துவ சமுதாயத்தின் நிலைகளை, குணங்களை அவர் விரிவாகப் புரிந்து கொண்டிருக்கிருர். அக்குணத்தை அவர் வெளிப்படுத்திக் காட்டும்போது, அவருடைய குரலில் எரிச்சலும், அதே நேரத்தில் கோபாவேசமும் தொனிக்கின்றன. நசுக்கப்படுவோரின் பக்கமே அவருடைய அனுதாபம் பொதுவாகக் காணப்படுகிறது. நசுக்கப்படுவோரின் குரல் எழுச்சிக் குரலாக அல்லாது பொதுவாக அவலக்குரலாகவே ஒலித்தாலும்கூட, அவர் காட்டுகின் றஅனுதாபம் ஆரோக்யமான சிந்தனைக் குட்பட்டதே என்று சொல்ல வேண்டும். அனுதாபம் விஞ்ஞான பூர்வமான ஆக்க நிலைகள் பக்கம் திரும்பும்போது, தமிழ் உலகம், இ. பா. விடம் (அவர் போன்ருேரிடம்) ஒரு மகத்தான படைப்பாளியைக் கண்டு கொள்ளும்.

———

நீல. பத்மனுபனின் நாவல்கள்

பி. எஸ். கே. பக்த வத்சலன்

[நீல. பத்மனுபன் 'தலைமுறைகள்' 'பள்ளிகொண்டபுரம்' என்ற இரு நாவல்களைக் கடந்த ஐந்தாண்டுகளுக்குள் எழுதியுள்ளார். மேனுட்டு இலக்கியக் கொள்கைகளில் வல்ல வர்களான தமிழ்நாட்டு இலக்கிய நீதிபதிகள் இவற்றில் நனவோடையையும்,எக்ஸிஸ்டென்ஷியலிஸத்தையும் படிம உத்திச் சிறப்புக்களையும் கண்டுள்ளனர். ஆனுல் இந்நாவலில் அடங்கியுள்ள வாழ்க்கையும் உள்ளக் கருத்துக்களும் சமுதாயச் சூழல் மாற்றங்களால் மாறுவதைக் காட்டும் கற்பனைப் படிமத்தைக் காண மறுத்திருக்கிறுர்கள். மனித அழகை ஆடை அணிகலன்களில் காண்பவனைப்போல கதைக்கருவான சமுதாய மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் காணுமல் கண்களை மூடிக்கொண்டுள்ளனர். ''பழமொழி நன்ருக இருக்கிறது' ''பாத்திரங்கள் பேசுவது தமிழா? மலையாளமா? ''வட்டார வழக்கை இவ்வளவு புகுத்தியிருக்க வேண்டாம்'' "தெரவியின் மன ஓடையும் அனந்தன் நாயரின் உணர்ச்சியோட்டமும் சிறந்த உத்திகளால் சித்தரிக்கப்பட்டுள்ளன.''

இவ்வாறு வடையை உண்ணுமல் துளையை எண்ணிக் கொண்டுள்ளார்கள். தெரவி இளமையின் அறியாமையிலிருந்து தனது பெரியோர்களின் நடப்புலகைக்கண்டு தானும் அந்நடப்புலகிற்கு வரும்போது தன்னுணர்வு சமூக உணர்வாக மாறுகிற பிரசவ அவஸ்தையை ஆசிரியர் அவருடைய சிந்தனை வருணனைதள் சொற்கள் மூலமாக வெளியிடுகிருர். இதற்கு மாருக சிந்தனைகளையும் கருத்துக்களையும் பழங்கால வார்ப்புகளுக்குள் அடைத்துவிட்ட அனந்தன் நாயர் தமது காலத்தைச் சகித்துக்கொண்டு வருங்கால உலகின் கதாபாத்திரங்களான தமது மக்களின் உள்ளங்களை அறிய முடியாமல் திண்டாடுகிருர். இறந்தகாலம் வருங்காலத்தையறியத் தடையாயிருக்கிறது. இது அனந்தன் நாயரின் வேதனை. தெரவி முளை வளர்ந்து செடியாகும் இளமையான இறந்த காலத்திலிருந்து இளமையின் உந்துதலால் வருங்காலத்தை எட்டிப்பார்க்க முடிகிறது.

அழிந்துவரும் இரணியல் செட்டியார்களின் வாழ்க்கை மதிப்புக்களின் வளர்ந்துவரும் இளைய செடிகளான வழித் தோன்றல்களால் எப்படி மதிப்பிடப்படுகிறது, புதிய மதிப்புக்களோடு பழைய சமுதாயத்தையணுகும்போது எவ்விதப் பிரச்னைகள் தோன்றுகின்றன என்பதை இரு தலைமுறைகளின் சந்திப்புப் பிரச்னையாக 'தலைமுறைகளில்' ஆசிரியர் படைத்திருக்கிருர். இதே பிரச்னையை பழைய சமுதாயப் பிரதிநிதியொருவர் அணுகும் முறையையும் இளைஞர்கள் அணுகும் முறைகளையும், இறந்தகால, வருங்காலங்ளின் சந்திப்பாக பள்ளிகொண்டபுரத்தில் ஆசிரியர் படைத்துக்காட்டுகிருர். இவ்விரண்டு நாவல்களின் கருக்களையும் அவை எழுந்த சமுதாய அடிப்படைகளோடு தொடர்புபடுத்தி ஆராய்கிருர், பக்தவத்சலன்.

ஆசிரியர்]

குறுகிய காலத்தில் மிகப் பலருக்கு அறிமுகமாகிச் சிறப்பான இடம் பெற்றுவிட்ட நாவலாசிரியர்களுள் நீல. பத்மநாபன் குறிப்பிடத் தக்கவர். முற்றிலும் அறிமுகம் இல்லாத ஒரு உலகுக்குக் கற்பனை என்னும் மண் குதிரையை மட்டும் நம்பிக்கொண்டு குதித்து வையத்தில் ஓரிடத்திலும் காணக்கிடைக்காத கொஞ்சம் உருவங்களை மொழுமொழுவென்று படைத்து விட்டு ஓய்ந்துபோகும் எழுத்துச் சக்கரவர்த்திகளில் இருந்து வேறுபட்டு முற்றிலும் பழக்கப் பட்ட ஒரு களத்தைப் பூசி மெழுகாமல் அதன் நிறை குறைகளோடு ஒரு மனித இயலாளனின் குறுகுறுப்போடு அப்படியே தெரிந்தெடுத்துக் காட்டும் ஒரு சிறந்த படைப்பாளி அவர்.

அவர் எழுதிய நாவல்களில் அச்சேறிவெளி வந்தவை தலைமுறைகளும் பள்ளிகொண்டபுரமும் ஆகும். இவற்றில் தலைமுறைகள் குமரி மாவட்ட மேல்பகுதி ஊரான இரணியலில் வாழும் செட்டிமார் சமூகத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது பள்ளிகொண்டபுரமோ கேரளத் தலைநகர் திருவனந்தபுரத்தில் வாழும் நாயர் சமூகத்தை மையமாகக் கொண்டு எழுதப்

பட்டது. இந்த நாவல்களின் பொதுத் தன்மைகளையும் தனித் தன்மைகளையும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

நாவல்களுக்குள் செல்லுமுன் நாவலாசிரியர் தலைமுறைகளுக்கு எழுதிய முன்னுரையில் சில வரிகளை நினைவு கூர்ந்தால் பயன் உள்ளதாக இருக்கும். அவர் கூற்றுப்படி,

சென்ற தலைமுறையும் வருங்காலத் தலைமுறையும் வந்து சங்கமிக்கும் இன்றைய தலைமுறையில் கொஞ்சம் அழுத்தமாகவே கால் ஊன்றி நின்றுகொண்டு கலைத் தன்மைக்குப் பங்கம் வராமல் சுற்று வட்டாரத்தைச் சூக்குமமாய்ப் பார்த்து ஆத்மார்த்தமாய் முயன்று எழுதுவதுதான் அவர் நோக்கம். அதாவது,

சென்ற தலைமுறையின் அழிவும் வருங்காலத் தலைமுறையின் பிறப்புமாக அமைந்துள்ள இந்தத் தலைமுறையை ஒரு மனித இயலாளனின் குறுகுறுப்புடன் அணுகிக் கலை நுணுக்கத்துடன் வெளியிடுவதுதான் ஆசிரியரின் நோக்கம் என்று தெரிகிறது.

தலைமுறைகளுக்காக இது எழுதப்பட்ட போதிலும் இதை இரண்டு நாவல்களுக்கும் பொதுவானதாகக் கொள்ளுவது பொருத்தமானதே. ஆகவே ஆசிரியர் சென்ற தலைமுறை அழிவதற்கும் புதிய தலைமுறை முளைவிடுவதற்கும் நிலைக்களனாக அமையும் இந்தத் தலைமுறையை இருப்பதுபோல, அவர் பார்த்ததுபோல, அவர் உணர்ந்ததுபோல அப்படியே படைத்துக்காட்டுகிறார் என்று கொள்ளலாம்.

உள்ளதை உள்ளபடி படைத்துக் காட்டுவதற்கு ஒரு சமுதாயத்தில் கணக்கில் அடங்காத விஷயங்கள் உள்ளன. ஆனால் சமுதாயம்என்ற சொல்லுக்குப் பொருத்தமான உண்மைகளை எழுதுவதென்றால் ஒரு சமுதாயத்துக்குப்பொதுப் படையான பிரச்சனைகளையும் அவற்றின் காரணங்களையும் நிகழ்ச்சிகளையும் விளைவுகளையும் எழுதுவதே பொருத்தம். எனவே ஒரு கலைஞன் தான் படைத்துக்காட்ட இருக்கும் சமுதாயத்திலிருந்து பொறுக்கி எடுக்கும் சம்பவங்களும் பாத்திரங்களும் அந்தச் சமுதாயத்துக்குப் பொதுவானதாக இருக்கவேண்டியது சமுதாய இலக்கியங்கள் படைக்கப்படும்போதுகவனிக்கப் படல் வேண்டும்.

கலைஞன் வெறும் படைப்பாளி அல்ல. அவன் படைப்பின் வெற்றி அந்தரங்கத்தில் அவன் கொண்டுள்ள ஆழ்ந்த நோக்கங்களே. எனவே ஒரு ஆசிரியர் பொறுக்கி எடுக்கும் பாத்திரங்களையும் சம்பவங்களையும் வைத்து அவருடைய அந்தரங்க நோக்கங்களைக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

இரண்டு நாவல்களிலும் கதை அம்சம் அதிவிசேடமானதோ புதுமையானதோ இல்லை. இரண்டிலும் மையக்கரு, பெண்ணின் பாலுணர்ச்சித் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாமல் தோற்றுப்போன ஆண்மையில் விளைந்த சிக்கல்களும் பிரச்சனைகளுமே, ஆனால் இரண்டு நாவலிலும் இந்தப் பிரச்சனை இரு வேறு கோணங்களில் இரு வேறு பாத்திரங்களின் உள்ளப் பிரதிபலிப்புக்களாகக் காட்டப்படுகின்றன.

பள்ளி கொண்ட புறத்தில் மனைவியைத் திருப்திப் படுத்த முடியாமல் அவளை இன்னொருவனுக்குத் தோற்றுவிட்டு — அந்தத் தோல்வியின் அடிப்படைக் காரணங்களை ஆராய அறிவும் துணிச்சலும் இல்லாமல் உண்மையிலிருந்து விலகித்தன் போக்கிலேயே சிந்தித்துப் பழியைத் தன் மனைவிமேல் போட்டு அவளைப் பழிவாங்கத் தன் மக்கள் மூலம் முயன்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டு அழியும் ஐம்பது வயது அனந்தன் நாயரும்; தலைமுறையில் தன் ஆண்மையின்மையை மறைப்பதற்காக மனைவிமேல் பழியைப் போட்டு அவளைத் தள்ளி வைக்கும் தன் அத்தானின் பலவீனத்தை அம்பலப்படுத்தவும் அவனால் தள்ளி வைக்கப்பட்ட தன் அக்காளுக்கு மறுவாழ்வு அளிக்கவும் முயன்று தோற்றுப்போன தெரவி என்ற இளைஞனும் முக்கிய பாத்திரங்கள்.

தலைமுறைகளின் சங்கம காலத்தில் உடன் வாழும் மனிதர்களே அனந்தன் நாயரும் தெரவியும். ஆனால் அனந்தன் நாயரின் கண்ணோட்டம் வேறு, தெரவியின் கண்ணோட்டம் வேறு. அனந்தன் நாயர் அழிந்துபோகும் பழைய தலைமுறையின் கடைசி அங்கத்தினராக வருகிறார்.

தெரவியோ, முளைவிடும் புதிய சமுதாயத்தின் முதல் இலையாக வருகிறான். இருவரும் இந்தச் சமுதாயத்தாலேயே நசுக்கப்படுகிறார்கள். இருவருமே இதை நன்கு உணருகிறார்கள். ஆனால் அனந்தன் நாயர் கடைசிவரை அதை எதிர்க்கத் துணியவில்லை. தன்னை உதறித் தள்ளும் அந்தச் சமுதாய அமைப்பின் வாலைப் பற்றிக் கொண்டு தொங்கவே அவர் ஆசைப் படுகிறார். மாறாகத் தெரவியோ அந்த அமைப்பை உடைத்தெறிய ஆசைப்படுகிறான்.

அனந்தன் நாயர் தனக்கு வெளியே உள்ள ஒரு உலகத்தை உணர முடியாதவராகத் தனக் குள்ளேயே மூழ்கிப் போனவர். அவருடைய வாழ்வு, தனக்குத் தன் மனைவி கார்த்திகாயினியிடம் ஏற்பட்ட தோல்வி அதனால் ஏற்பட்ட வேதனைகள் அவ்வளவே. இந்த வேதனையைத் தீர்க்க அவர் எந்த ஆக்கப்பூர்வமான முயற்சியும் செய்ததில்லை. உணர்ச்சி வசப்பட்டு அழிகிறார். அவ்வளவே. தெரவியோ தன் அக்காளுக்குப் புது வாழ்வுதர தன் சுய உணர்ச்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு அறிவு பூர்வமாகச் செயல்படுகிறான்.

எனவே நீலபத்மநாபன், உணர்ச்சிவசப் படுவதாகவும் ஆக்க பூர்வமாகச் செயல்படாமல் வீண் பிரமைகளில் மூழ்கிக் கிடப்பதாகவும், பலவீனத்தை வளர்த்துக் கொண்டு அறிவில் நம்பிக்கையற்று அழிந்து போவதாகவும் உள்ளதைப் பழமை, அல்லது பழைய தலைமுறை என்றும் தன்னை உணர்ந்ததாகவும் தன் சுற்றுப் புறத்தை அறிவு பூர்வமாகப் பார்த்து அதன் வளர்ச்சிக்கு உணர்ச்சி வசப்படாமல் ஆக்க பூர்வமாக செயல்படுவதாகவும், தன்னம்பிக்கை உடையதாகவும் புதிய அல்லது வருகின்ற தலைமுறையைக் காட்டுகிறார் என்பதும் தெளிவு.

இந்த முன் விளக்கத்தை வைத்துக்கொண்டு நாவல்களைத் தனித்தனியாக இனிப்பார்ப்பது வசதியாக இருக்கும்.

தலைமுறைகள்:—

இரணியல் செட்டிமார் சமூகத்தின் நாடித் துடிப்புகள் பூர்வீக வரலாறுகள் ஆசார அனுஷ்டானங்கள் போன்றவற்றைக் கூடிய மட்டும் சிந்தாமல் சிதறாமல் கலாபூர்வமாய் வெளிப் பிரகடனம் செய்வதே இந்த நாவலின் நோக்கம். அதற்குப் பக்கபலமாகக் கதைவித்து பயன்படுத்தப்படுகின்றது.

கதை:—

மூக்கன் என்ற சிவானந்தப் பெருமாள் பிள்ளை ஒரு ஆண்மையற்ற செல்வந்தன். அவனுக்கு வாழ்க்கைப் படுகிறாள் நாகம்மை என்ற குடும்பப் பெண். இந்தத் திருமணம் நடைபெறக் காரணமாயிருப்பது சிவானந்தப் பெருமாள் பிள்ளையின் செல்வத்தின் பேரில் நாகம்மையின் பெற்றோர்கட்கும் குடும்பத்தினருக்கும் இருந்த மயக்கத்தைத் தவிர எதுவும் இல்லை,என்பது நினைவில் கொள்ளவேண்டியது.

நாகம்மையின் ஒழுக்கமே அவள் வாழ்வுக்குக் குறுக்கே நிற்கிறது. தன் உடல் தேவைக்கு அவள் தன் கணவனையே நாடுகிறாள். இன்னொருத்திபோல அவள் எப்படியாவது தன்பசியைத் தீர்த்துக்கொள்ளத் தெரியாதவளாக இருப்பதே அவள் குறை. சிவானந்தப்பெருமாளோ அவளைப் பிள்ளைப்பேற்றுக்கு லாயக்கற்றவள், பெண்மையற்றவள் என்று பொய்க் குற்றம் சாட்டி, தன் பணச்செல்வாக்கால் சமுதாயத்தைத் தன் பக்கம் திரட்டி அவளை விரட்டிவிடுகின்றான். இந்த நாகம்மைக்கு வாழ்வுதர அவள் தம்பி தெரவி அறிவு பூர்வமாய் முயலுகிறான். சமுதாய நியதிகளுக்குக் கண்மூடித் தனமாகக் கட்டுப்படும் தன் பெற்றோரையும் அக்காள் நாகம்மையையும் அவன் சம்மதிக்க வைத்து விடுகிறான். ஆனால் தன் ஆண்மையின்மை வெளிப்பட்டுப்போகும் என்ற அவமான வெறியில் சிவானந்தப் பெருமாள் பிள்ளை, நாகம்மைக்குக் கணவனாக வர இருந்த குற்றாலம் என்பவனைச் சதிசெய்து கொன்றுவிடுகிறான். திரவி தன் குடும்பத்துடன் ஊரைவிட்டு வெளியேறுகிறான். இதுதான் கதை.

நாவலில் வரும் பாத்திரங்கள் அனைவரும் இரணியல் தெருக்களில் நாம் சாதாரணமாகச் சந்திப்பவர்களே. அவர்கள், ஆசைகளும், வெறுப்புகளும், வாழ்க்கைமுறைகளும் நம்பிக்

கைகளும் கொண்ட சாதாரண மனிதர்களே. இவர்கள் இரணியலில் மட்டும் வாழ்பவர்கள் அல்ல. கெட்டழிந்துவரும் நம் பழைய சமூகத்தில் எங்கும் காணக் கிடைப்பவர்களே.

இந்தப் பாத்திரங்களை இணைத்துக்கோக்கும் சரடாக வரும் முக்கியப் பாத்திரம் திரவியே. கதை தொடங்கும்போது அவனைத் தன் சமூகத்தின் பூர்வீகக் கதையை உண்ணுமலை ஆச்சியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் சிறுவனுகச் சந்திக்கிறோம். கதை வளர வளர அவனும் வளருகிருன். சிறிது சிறிதாக வலுப்பெற்று முக்கியத்துவம் பெற்று நாவலின் முக்கிய பங்கை வகிப்பவனுக வளருகிருன். அப்பா அம்மாவாலும் சமுதாயப் பெரியவர்களாலும் தீர்த்து வைக்க முடியாதபடி விடப்பட்ட தன் அக்கா நாகம்மையின் வாழ்க்கைப் பிரச்சனையைச் சரியானமுறையில் தீர்த்து வைக்கத் துணிவுடன் பாடுபடும் செயல் வீரனுக வளருகிருன்.

தொடக்கத்திலிருந்தே திரவி பொறுப்புள்ளவனுக குடும்பப் பாரத்தைச் சுமக்கும் தகுதி உள்ளவனுகத் தான் வளருகிருன். அக்காள் நாகுவை அத்தான் சிவானந்தப் பெருமாள் பிள்ளை தள்ளிவைப்பதை அறிந்தபோதும் அவளுடைய பெண்மையில் குறைகூறியது அவன் தன்னுடைய ஆண்மையின் பலவீனத்தை மறைக்கத்தான் என்பதை உணர்ந்தபோதும் அவன் மிகவும் நொந்து போகிருன். ஆனுல் அதற்காக அவன் உணர்ச்சி வசப்பட்டு எதையும் செய்யவில்லை. தன் அறிவிலும் வருங்காலத்திலும் நம்பிக்கை உடையவனுக நிதானமாகச் செயல்படுகிருன். என்ருலும் அவன் வாழ்வின் இலட்சியம் இந்தக் குறைகளுக்கும் துயரங்களுக்கும் அடிப்படையான பொதுக் காரணங்களைக் கண்டு அவற்றைப் போக்க முயற்சிக்காமல், தன் அக்காள் மேல் சுமத்தப்பட்ட பழியைமட்டும் துடைக்கும் முயற்சியாகச் சிறுத்து விடுகின்றது. இதன் காரணம் அவன் வாழும் சமுதாயத்தின் கிணற்றுத் தவளைப் போக்கும் அவனுடைய அனுபவம் இன்மையுமே என்பது புலனுகிறது. நல்ல சூழ்நிலை கிடைத்திருந்தால் அவன் இன்னும் தன் போராட்டத்தைப் பொதுத் தன்மை உடையதாக ஆக்கியிருக்கக் கூடும்.

அதனைச் சூழ்ந்த நண்பர்களின் தொடர்பின் அளவுக்குத் தான் அவனுடைய கருத்துக்கள் முற்போக்குள்ளவைகளாக இருக்கின்றன. பப்பனுபுரம் பாட்டா நாகுவுக்கு மறுமணம் செய்து வைக்கும் எண்ணத்தை அவள் மனதில் தூவுகிருர். மோசஸ் சார் தன் டாக்டர் மனைவியைக் கொண்டு நாகுவைச் சோதனை செய்து நாகு குடும்ப வாழ்வுக்குத் தகுதியான பெண் என்பதை நிருபித்து அவளுக்கு மறுமணம் செய்யும் எண்ணத்தை வலுப்படுத்துகிருர். குற்ருலம், தான் நாகுவைக் கலியாணம் பண்ணி அவள் மேல் சம்பந்தப்பட்ட பழியைத் துடைக்க முன் வந்தபோது அவன் துணிந்து செயலில் இறங்குகின்ருன். இதற்குமேல் அவனை வழிநடத்த நண்பர்களோ சூழ்நிலையோ அமையவில்லை.

ஆயினும் திரவி தன் பழைய தலைமுறையிலிருந்து வேறுபட்டே நிற்கிருன். முந்தைய தலைமுறையினரோ, ஒரு பெரிய சமூகமாகச் சேர்ந்து வாழ்ந்தும், உள்ளத்தால் தனிமைப்பட்டுத்தம் பிரச்சனைகளைத் தம் உள்ளத்திலேயே குவித்து மக்கவிட்டு நாசமாகியவர்கள். திரவியின் உலகம் அந்த எல்லையைத் தாண்டிவிரிய விரிய அவன் பார்வையும் விரிகிறது. விஷயங்களை அறிவு பூர்வமாகச் சிந்திக்கும் ஆற்றல் வளருகிறது. சமுதாய மாற்றத்தின் முதல் நிலை இது. இது புதிய தலைமுறையின் விடிவுக்கு உண்டான ஜீவரேகையாகக் கதையில் பளிச்சிடுகிறது.

ஆனுலும் திரவி தன்னைப் பழமையிலிருந்து முழுவதும் வேறுபடுத்திக் கொண்டவன் அல்ல. பழமைக்கும் புதுமைக்கும் இடையில் அவன் ஊசலாடுகிருன். இதனுல்தான் அவன் தன் அத்தான் சிவானந்தப்பெருமாள் ஆண்மை இல்லாதவன் என்று அறிந்தும் கடைசி முறையாகப்போய் தன் அக்காளைச் சேர்த்துக்கொள்ளும்படி கெஞ்சுகிருன். இந்தக் கெஞ்சல் பயித்தியக்காரத்தனமாக இருந்தபோதிலும் அவனுல் வேறுவிதமாக நடப்பதென்பது சிரமமான காரியமே. அவன் உள்ளம் மாறுபட்ட வாழ்க்கைத் தத்துவங்கள் சங்கமிக்கும் ஒரு போராட்டக் களமாகவே இருக்கிறது. குழந்தைகள் விளையாடுவதைப் பார்க்கும்போது இந்தக் குழந்தைத்தனமான இனிய வாழ்வு தன்னை விட்டுப் போய்

விட்டதற்காக அவன் ஏங்குகிறுன். அவனை இவ்வாறு எண்ண வைத்தது அவன் தோளில் சுமத்தப்பட்ட பிரச்சனைகளே.

இந்த சமுதாயத்தில் உள்ளவர்களிடம் நியாய அநியாயங்களைப்பற்றியும் தர்ம அதர் மங்களைப் பற்றியும் உள்ள தார்மீக உணர்வு நிறைந்து இருந்தும் சாதிக்காரர்களின் இடையில் நடக்கும் அட்டூழியங்களை இவர்களால் ஏன் தடுக்கமுடியவில்லை என்று அவன் யோசிக்கிருன். ஆனுல் அதன் விடையை அறியும் அளவுக்கு அவன் சமுதாயப் பார்வையோ அறிவோ பெற்றுவிடவில்லை. இதை ஆழ்ந்து யோசிக்க அவன் வாழ்வில் அதிக இடம் ஒதுக்கப்படவில்லை. எனவே அவன் உண்மையை அறிவு பூர்வமாக அறியத் துடிக்கும் ஒரு புது உலகக் குழந்தையாகவே இருக்கிருன். கெட்டழியும் சமூகத்தில் வேரூன்றி வளரும் ஆரம்ப முளைகள் இப்படித்தான் இருக்கும். இப்படிப்பட்ட முளைகள் பல தோன்றி ஒன்றுபடும்போது அவர்கள் வலிமை பெறுகின்ருர்கள். தற்போது சமூகச் சூழ்நிலைகளும் பாரம்பரிய உணர்வுகளும் அவர்களைத் திகைக்க வைத்தாலும் காலம் இவர்களை வளர்த்துப் புதிய சமுதாயத்துக்குத் தகுதி உள்ளவர்களாக ஆக்கும் என்பது திண்ணம்.

நாவலில் வரும் மற்ற பாத்திரங்களைக் கவனிக்கும்போது பொதுவாக அவர்களிடம் ஒரு விசேடத்தன்மை தெரிகிறது. ஒரே சூழ்நிலையில் நேர் எதிரான இரண்டு வழிகளில் செயல் படுபவர்களைக் காணமுடிகிறது.

குஷ்டரோகிக் கணவனை, வீட்டை விட்டுத் துரத்துகிருள் கட்டிய பெண்டாட்டி — அதே குஷ்டரோகியைச் சேர்த்துக் கொண்டு வாழ்ந்து அவனுக்காகத் தன் செல்வம் சுகம் அனைத்தையும் இழக்கத் தயாராகிருள் இன்னெருத்தி.

வறுமைப் பட்டுவிட்ட கணவனை விட்டுத் தாய் வீட்டுக்கு ஓடிவிடுகிருள் ஒருத்தி — ஊருக்குத் தெரியாமல் ஓடிப்போன ஒருத்தி அந்தத் தாழ்ந்த சாதிக் கணவன் கால் ஒடிந்து கிடந்த போது தாய் அழைத்தும் விலகிப் போகாமல் உடன் இருந்து காப்பாற்றுகிருள்.

ஒழுங்காகப் படிக்கப்போட்டு ஆளாக்கப் பட்ட பிள்ளைகள் சொத்தையும் பிடுங்கிக் கொண்டு தகப்பனைத் தவிக்க விட்டு விட்டு ஓடி விடுகின்றனர். சுய முயற்சியால் சம்பாதித்துப் பக்கவாதத் தந்தைக்குப் பணிவிடை செய்து அவரை வாழவைக்கிருன் இன்னெரு மகன்.

கற்பரசிகளான குலதெய்வங்களை வணங்க ஓடு பறைக்குச் செல்வது ஒருபுறம் — கள்ளக் காதலனோடு திருட்டுத்தனமாக ஓடும் விதவைகள் மறுபுறம்.

இப்படி எதிரும் புதிருமான பாத்திரங்கள் கதை நெடுக வருகின்றனர். இவர்களைக் கூர்ந்து கவனிக்கும் போது ஒன்று புலப்படுகின்றது.

சமுதாயக் கட்டுக்காகவும், பொருளாதார லாபத்துக்காகவும் ஒன்றுபட்டு வாழும் எந்த உறவிலும் ஜீவன் இல்லை. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அங்கே வஞ்சகமும் ஏமாற்றும் நடக்கிறது.

ஆனுல் அன்பின் அடிப்படையில் சமுதாயக் கட்டுப்பாடுகளும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் கூட உறவுகள் மிகவும் வலிமைபெற்று தியாகத்தால் பிரகாசிக்கின்றன.

இந்தச் சமுதாய அமைப்பு முழுவதுமே தவருனது. பணத்தின் அடிப்படையும் மூடக் கட்டுப்பாடுகளையும் தகர்த்து அறிவு பூர்வமாக அன்பின் அடிப்படையில் சுதந்திரமாக அமைக்கப்படும் சமுதாய உறவுகளே நிரந்தரமானவை என யூகிப்பதற்கு இவை இடம் தருகின்றன.

திரண்டிருக்கும் பெண், ஆண்பிள்ளை கண்ணில் விழிக்கக் கூடாது என்பதில்தான் கவனம் இருக்கிறதே தவிர கலியாணம் செய்தவர்கள் கணவன் மனைவியாக இருத்தல் வேண்டும் என்பதில் அல்ல. கணவன் எப்படிப்பட்டவனுக இருந்தால் என்ன, அடைந்து கிடக்கும் இருட்டறையிலிருந்து விமோசனம் கிடைக்காதா என்ற ஏக்கம் நிறைந்த இருண்ட வாழ்வுதான் பெண்களுக்கு அமைந்துள்ளது. இதன் பயன்களும் இருண்டவைகளாகத்தான் இருக்கும். அந்தச் சமூக அமைப்பின் அடித்தளமே போலியானது. எனவே அதன் மேல் எதுவும் உறுதி

யாக நிற்காது என்பது தெளிவு. இதனை ஆசிரியர் தெளிவாகக் காட்டுகிருர்.

பள்ளி கொண்ட புரம்:—

பழவங்காடிப் பிள்ளையார் கோவிலின் முன் ராஜ வீதியிலிருந்து தொடங்குகிறது கதை. கதையின் முக்கியப் பாத்திரம் சுமார் ஐம்பது வயதுடைய பென்ஷன்தார் அனந்தன் நாயர், சம்பவங்கள் முழுவதும் அவரைச் சுற்றியே பின்னப் பட்டிருக்கின்றன.

அழிந்துவரும் பழமைக் குப்பையிலிருந்து விடுபடமுடியாத கோழைத்தனமும், முளைத்துத் தளிர்விடும் புதுமையை உணரமுடியாத அப்பாவித்தனமும் உடைய ஒரு பரிதாபமான முதியவராக அவர் காட்சி தருகிருர். அவருக்கும் அவர் மனைவிக்கும் உள்ள தாம்பத்ய உறவின்தோல்விதான் கதையின் அடிப்படைக்கரு. இவர் மனைவி கார்த்திகாயினி இவருக்கு இரண்டு பிள்ளைகள் பெற்றுக் கொடுத்தவள். என்ருலும் அவர்களுடைய தாம்பத்திய வாழ்வில் அன்புப் பிடிப்பு இல்லை. அவளை ஒரு சாதாரண மனைவியாக ஏற்று வாழ அவர் மனம் முதலிலேயே தயங்குகின்றது. அதன் காரணம் அவருக்குத் தன் ஆண்மையின் மீதுள்ள அடிப்படையான நம்பிக்கைக்குறைவே. திருமணத்தின்போது தீக்கங்கு போல மிகமிக மெல்லிதாகத் தோன்றும் அக்குறை வரவரப் பெரிதாகி விசுவரூபம் எடுத்துக் கடைசியில் அவரைச் சுட்டெரித்தே விடுகிறது. மனைவியை எப்படியாவது திருப்திப்படுத்தவேண்டும் என்ற வெறியில் அவர் தன்னைத்தானே அழித்துக்கொண்டு சயரோக நோயாளியாகிருர். தன்ருல் மனைவியைத் திருப்திப்படுத்த இயலவில்லை என்ற தோல்வி உணர்வு அவள் சோரம் போய் விடுவாளோ என்ற சந்தேகமாக முளைக்கிறது. இதனுல் இவர்களுக்குள் சச்சரவு மூள்கிறது. இந்தச் சச்சரவுக்குத் தூபம் போட்டு வளர்த்துத்தன் பணப்பகட்டைக்காட்டி மயக்கிக் கடைசியில் கார்த்திகாயினியைக் கவர்ந்துகொள்கிருர் தாசில்தார் விக்ரமன்தம்பி. (இவ்வாறு ஒருவர் மனைவி இன்னெருவருடன் சேர்ந்துவாழ அச்சமூக அமைப்பு இடம் தருகிறது. காரணம் அங்கு வழக்கத்தில் உள்ள மருமக்கள்தாய அமைப்பு. அதாவது சொத்துக்குப் பெண்ணே உரிமைப்பட்டவள்).

மனைவியைத் தோற்றுவிட்ட அனந்தன் நாயர் தன் இரண்டு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கித் தன்பக்கம் ஆக்கிக்கொள்ளுவதன் மூலம் மனைவியைப் பழிவாங்கிவிடலாம் என்ற நப்பாசையில் வாழுகிருர். கடைசியில் அவருடைய மகனே தாயின்பக்கம் சேர்ந்துகொண்டு பழி முழுவதையும் அவர் மேலேயே போட்டு விடும்போது பாவம் அவர் மனம் உடைந்து போகிருர். இதுதான் கதை.

தலைமுறைகளில் போல இதிலும் அனந்தன் நாயர் மூலமாக நாம் பலவிதமான வாழ்க்கை நிலையிலுள்ள பல கதாபாத்திரங்களைச் சந்திக்கிருேம்.

நாற்பத்தைந்து வயதுவரை பிரம்மசாரியாகவே வாழ்ந்துபின் கோயில் நெல்குத்தும் ஜெகதம்மா நாயரிடம் மனதைப் பறிகொடுத்து அவளையே மனைவியாகவும் ஆக்கிக்கொண்டு கடைசிவரை வாழ்ந்த—அனந்தன் நாயருககுப் பெண்கொடுத்த- மாமனுர் ஆதிசேஷையர்.

இளமையிலேயே கணவனையிழந்தும் ஒழுங்கு தவருமல், பெற்ருேரும் மற்ருேரும் எவ்வளவோ வற்புறுத்தியும் மறுமணத்துக்கு உடன்படாமலும் கணவனின் அன்பு நினைவிலும் ஆண்டவன் நினைவிலும் காலத்தைக் கழிக்கும் அவர் அக்காள் கல்யாணி அம்மாள்.

பெண் மோகத்தால் கெட்டலைந்து திரிந்தும் சினிமாவில் பணம் சேர்த்து விட்டதால் பெரிய மனிதனுகிவிட்ட அவர் அண்ணன் நாராயண பிள்ளை.

தன்னிடம் ஆழ்ந்த அன்பு கொண்டவனுக இருந்தும், நல்ல அழகனுக இருந்தும் தன் உடல் இச்சைகளைச் சரியாகத் திருப்திப் படுத்த இயலாதவன் என்ற காரணத்தால் கணவனை உதறித் தள்ளிவிட்டுத் துணிந்து ஊரறியக் கொச்சுக் கிருஷ்ணக் கர்த்தாவைக் கட்டிக்கொண்ட அவர் அம்மா குஞ்ஞா லட்சுமி.

கள்ளக் கணக்கு எழுதியும் அதிகாரிகளை வசப்படுத்தியும் சமுதாயத்தைக் கொள்ளையடித்துச் செல்வம் குவித்தும் வாழ்க்கை நடத்தும் முதலாளி வைரவன் பிள்ளை.

கடைசி மகளையும் ஒரு தாழ்ந்த சாதிக்கார னுக்குப் பறிகொடுத்துவிட்டு ஒன்றும் செய்ய இயலாமல் மனம் புழுங்கித் திரியும் முன்னுள் பேஷ்கார் மாதேவய்யர்.

தீவிர அரசியல் வாதியாய் இருப்பதோடு மட்டுமன்றி ஊரிலுள்ள எல்லா முற்போக்குச் சமுதாய நடவடிக்கைகளுக்கும் தோள் கொடுக் கும் எம். எல். ஏ. மதுசூதனன்.

தங்களைத் தவிக்க விட்டு விட்டுத் தாசில்தா ருடன் ஓடிவிட்ட தாய் கார்த்திகாயினிடம் கிடைத்த கிடைக்கப் போகின்ற வசதிகளுக்காக வும், லாபங்களுக்காகவும் தன்னை இது காறும் வளர்த்து ஆளாக்கிய தந்தையைத் துறந்து ஓடும் மகன் பிரபாகரன் நாயர்.

அதே தாயை அதே காரணங்களுக்காக வெறுத்து ஒதுக்கும், உறுதியும் காதலித்த கீழ்ச்சாதிக்காரன் ஒருவனைத் திருமணம் செய்ய முடிவு செய்யும் துணிச்சலும், அதே நேரத்தில் இதைத் தந்தையின், சம்மதத்தோடுதான் செய்ய வேண்டும் என்ற நிதானமும் கொண்ட மாதவிக் குட்டி......

இப்படி இப்படி எத்தனையோ உயிருள்ள தனித் தன்மை பெற்ற கதாபாத்திரங்கள் வரு கின்றனர்.

இங்கும் தலைமுறைகளில் போல வாழையடி வாழையாக வந்த வரம்புகளையும் ஒழுங்குகளை யும் மீறி அமைக்கப்பட்ட ஒருசில உறவுகளே உயிருள்ளவைகளாக நிற்க மற்றவை அன்பு நீரற்றுச் சாம்பிக்கருகி அழிகின்றன. அதாவது சமுதாய உறவுகள் வலுவாகவும் அழகாகவும் இருக்க வேண்டுமானுல் இப்போதுள்ள இந்த அமைப்பின் அடிப்படை அடியோடு அழிக்கப் பட்டு அறிவு பூர்வமான அன்புத் தொடர்புகள் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்ற தத்துவத்தில் சாட்சிகளாகவே கதாபாத்திரங்கள் நிற்கின்றன.

இந்த எதார்த்த உண்மைக்கு நேர்மாருக இந்தஅழுகல் சமுதாயத்தின் போலிநியதிகளைக் காப்பாற்றுவதன் மூலம் சாதியமைப்பைக் காப் பாற்ற விரும்பி அதற்காக மனிதத் தன்மையை யும், இன்பத்தையும் அழகையும், அரக்கத்தன மாக அழிக்கத் துடித்து எழும் மூடத்தனத்தைத் தான் நாம் நெடுகிலும் பார்க்கிறோம்.

நோயாளிக் கணவனையும் பச்சைக்குழந்தை களையும் போட்டுவிட்டுப் பசையுள்ள தாசில்தா ருடன் ஓடி, அந்தத் தாசில்தாருடனும் ஒழுங் காக வாழாமல் கண்டவர்களுடன் எல்லாம் தொடர்புவைத்துக் கெட்டலையும் கார்த்திகாயினி கூட தன் மகள் தாழ்ந்த சாதிக்காரன் ஒருவனை மணந்து சாதி அமைப்பை உடைக்க முயற்சிப் பதைத் தடுக்கத் தீவிரமாகப் பாடுபடுகிருள். இத்தனைக்கும் இவளும் சாதிக்கலப்பில் பிறந்த வள் தான். ஆனுல் அந்தச் சாதிக்கலப்பு நாயர் பெண்ணுக்கு பிராம்மணருடன் ஏற்பட்டதால் அது அங்கீகரிக்கப்பட்டு ஊக்கமளிக்கவும் படுகிறது. மாருக ஒரு ஈழவனைக் கட்டுவதோ சாதிக்குக் கீழே இறங்குவது. ஆகவே அது வெறுக்கப்படுகிறது.

சராசரி மனிதன் கற்பனை பண்ணிப்பார்க்கக் கூட கூசும் அருவருப்பான விஷயங்களைச் சாதி சிறு முணு முணுப்புக்கூட இல்லாது ஏற்றுக் கொள்ளுகிறது. அதே நேரத்தில் சாதி அமைப் பின் தளர்ச்சிக்கோ அழிவுக்கோ காரணமான எந்தச் சிறிய விஷயத்தையும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. சாதி என்பது கீழ்த்தரமான அரசியல் நோக்கங்கொண்ட மேல்தட்டு வாழ்க்கை உடைய சமூகக் கும்பல், மற்றவர் களைத் தங்களுக்கு அடிமைப்படுத்தி வைத்து லாபம் தேடப் பாதுகாத்து வைக்கிற ஒரு சாபக் கேடு என்பது நன்கு புலனுகிறது.

இந்த நாவலின் கதாநாயகனுன அனந்தன் நாயர் பரிதாபத்திற்குரிய மனிதர். அடிப்படை உடல் பலவீனம் ஒருபுறம். தன் மனைவி தன்னுல் அடையப்பட முடியாத அழகி என்ற உள்ளப் பலவீனம் மறுபுறம். நாவல் முழு வதிலும் அவர் பலவீனத்தின் மொத்த உரு வமாகவே தோன்றுகிருர்.

அவருக்கு மனைவிபால் ஏற்பட்ட அடங்காத காம இச்சை வெறும் காம இச்சை அல்ல. தன் பலவீனத்தை மறைத்துவிட வேண்டும் அவளை உடலால் வெற்றி கொள்ள வேண்டும் என்ற வெறியே. இந்த வெறியே அவரை நோயாளி ஆக்குகிறது,

தங்கள் மனைவியரைப் பிற ஆடவர் இச்சையுடன் பார்ப்பதைப் பார்க்கும் வாய்ப்புடைய ஆடவர்கள் எத்தனையோ பேர் உலகில் உண்டு. மனைவிபேரிலும் தன்பேரிலும் நம்பிக்கை உள்ளவன் இதனால் பாதிக்கப்படுவதில்லை. இன்றும் சிலர் பலவீனர்களாக இருப்பதும் புத்திசாலிகளாக இருப்பதால் தனக்கு எதுவேண்டும் என்பதை அறிவுபூர்வமாகத் தேர்ந்தெடுத்து அதைப் புத்திசாலித்தனமாகக் காத்துக் கொள்ளுகின்றனர். இவரோ இரண்டிலும் சேராத ஒரு இனம். இது தான் இவர்தோல்விகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

இதற்கு இன்னொரு காரணமும் இருக்கலாம். சமுதாய அமைப்பாலும், ஆண் தலைமையும் பெண் அடிமையும் கொள்ளுவது நியதி என்ற சமுதாயத்தில் வாழும் மனிதன், தன் மனைவியை அடிமைப்படுத்த காமத்தை ஆயுதமாகக் கைக் கொள்ளும்போது — பெரும்பாலும் தோல்வியாக அது முடிகிறது. போட்டி எனப்படும் இடத்தில் தோற்க வேண்டிய பெண் வெற்றி பெற்றுவிடும் போது இந்தத் தோல்வியைத் தாங்க இயலாத ஆண்கள் பயித்தியக்காரத் தனமாக நடந்து கொள்ளுகிறார்கள். ஆணும் பெண்ணும் சமம், பாலுணர்ச்சி இரண்டு பேருக்கும் பொதுவானது, இதில் வெற்றி தோல்விகளைப் பற்றிய பிரச்சனையே இல்லை. இருவரும் திருப்தியடைவதே முக்கியம் என்ற நாகரிகத்தையும் புரிந்து கொள்ளும் சமுதாயத்திலும் குடும்பத்திலும் இந்தப் பிரச்சனைக்கே இடமில்லை. அனந்தன் நாயர் இந்த சமத்துவக் கொள்கையைச் சிறிதும் உணர முடியாத தலைமுறையின் பிரதிநிதி.

மேலும் பதவி மயக்கமும் பணமயக்கமும் அவரை நிலைகுலையச் செய்து விடுகின்றன. அவர் வீழ்ச்சியடைகிறார். மனைவியைக் கொஞ்சம் கொஞ்சமாக இழக்கிறார். ஆனால் தன் இழப்பின் காரணத்தைச் சரிவர ஆராயத்துணிவு இல்லாததாலும், அந்த உண்மைகளை நேருக்கு நேர் நோக்கும் திராணி இல்லாததாலும் தன் இழப்பின் காரணங்களை மனைவிமேல் ஏற்றி அவளைப் பழிக்கிறார் அவர். தான் பலவீனன் என்ற உணர்வின் அடிப்படையில் தன்னையும் பிள்ளைகளையும் குடும்பக் கவுரவத்தையும் கற்பு நெறியையும் காப்பாற்றி வைப்பது மனைவியின் பொறுப்பு; அதில் தனக்குப் பங்கில்லை என்ற ரீதியில் அவர் சிந்தனை ஓடுவதன் காரணமாகவே அவர் மனைவியிடம் முரட்டுத் தனமாக நடந்து அவள் பிய்த்துக் கொண்டு ஓடும் சூழ்நிலையை ஏற்படுத்தி வைக்கிறார். இந்த அடிப்படைப் பலவீனம்தான் அவரை ஆண்டவன் சன்னதி வரைக்கும் இழுத்துச் செல்லுகிறது.

அனந்தன் நாயர் இச் சமுதாயத்தின் குறைகளைக் காணுகிறார். அவற்றின் காரணங்களைச் சிந்திக்க முயலுகிறார். ஆனால் அவருடைய மனதில், உள்ள அடிப்படை அளவுகளே பழமையின் பாதிப்பாகவும், தற் சிந்தனைகளாகவும் பிரச்சனை தீர்க்கமுடியாத குழப்பப்பின்னல்களாகவுமுள்ளன. இந்தப் பெரிய சமூகத்தின் அங்கத்தினன் என்ற உணர்வோ, உலகப் பிரச்சனைகள் பற்றிய பிரக்ஞையோ அவரிடம் சிறிதும் இல்லை. தான் தான், தான் — அவர் உலகமே தான் தான்.

இதனால் தான் வெறுப்பும் சலிப்பும் அவநம்பிக்கையும் கொண்ட வாழ்க்கையை வெறுத்து வெளியேறிய தன் மனைவியிடம் தன் மகன் அன்பு கொள்வதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

இதனால்தான் வயிரவன் பிள்ளையின் கடையில்பொய்க் கணக்குகளையும் புரட்டுக் கணக்குகளையும் எந்தவித மனச்சுளிப்பும் இல்லாமல் அவரால் நிதானமாக எழுத முடிகின்றது.

இதனால்தான் தலைவெட்டிப்பள்ளி மெம்பர் ராமபத்திரன் லஞ்ச ஊழல் வழக்கிலிருந்து தண்டனையின்றித் தப்பித்துக்கொண்ட காரணம் அவருக்குப் புரிய முடியாததாக இருக்கின்றது.

இதனால்தான் மாதவ ஐயர் மகள் கீதாவுக்கும் கிறிஸ்தவன் அலோஷியசுக்கும் நடந்த கலப்புத் திருமணத்தை தன் தம்பி மதுசூதனனே நடத்தி வைத்தான் என்பதைக் கேட்டபோது அவருக்கு நடுக்கம் வந்தது.

அதனால்தான், சமுதாய வேலிகளைக்கடக்க எத்திச் சாடுவதுதான் தற்போதைய வழி என்பதை அறிந்தும் அந்த வேலிகளை நிரந்தரமாக அழித்தால்தான் மனித வாழ்வில் சுதந்திரமும்

இன்பமும் சேரும் என்பதை உணர்த்தும்,வெறும் பெருமூச்சோடு அந்த எண்ணத்தை உதறிவிட்டு மீண்டும் கார்த்திகாயினியின் எண்ணத்தினுள் தலையைப் புதைத்துக்கொள்ள அவரால் முடிகிறது.

இதனால்தான் திவான் பதவிக்கு மதிப்புக் கொடுத்து அவருக்கு வரிகுறைத்து எழுதிய கண்டெழுத்து உத்தியோகஸ்தரின் கைகளை வெட்டி எறிந்த வேலுத்தம்பித் தளவாயின் பிரம்மாண்டமான சிலையைப்பார்த்து மயிர்க்கூச்செறிய அவரால் முடிந்தது.

இதனால்தான் சமுதாயக் கடமைகளையெல்லாம் துறந்து, "கூட்டு விதிகட்கு உட்படாமல் ஒவ்வொருவரும் தனக்குத்தானே தன்னந்தனியாக உணர்ந்தறிய வேண்டிய ஏகாந்த விவகாரங்களைச் சூசகமாக உணர்ந்தறியத்தான் முடியுமே தவிர அதைச் சந்திக்கு இழுத்து வம்பு பண்ணி வாக்குவாதம் செய்து வலுக்கட்டாயமாகத் திணித்து உணர்த்திவிட முடியாது" என்று வேதாந்தம் பேசும் பாசியின், உலகியலுக்கு அப்பால் ஆன்மீகம் என்னும் தப்பியோடும் சிந்தனையை, மதித்து பக்தி பூர்வமாக வணங்க அவரால் முடிந்தது.

இதனால்தான் வாழ்க்கையில் ஞானப்பசியும் காமப்பசியுமே எதார்த்தம் என்று அவரால் குருட்டுத்தனமாக எண்ணமுடிந்தது.

இதனால்தான் இவர் "அங்காடியில் தோற்றதற்கு அம்மாவை அறஞ்சவனாக" கார்த்திகாயினியின் விஷயத்தில் நடக்க முடிந்தது.

இதனால்தான்"மனைவியை விட்டு ஓடி ஸ்ரீகண்டேஸ்வரக் கோயிலில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துத் திர்ப்புக்காகச் சிரம் தாழ்த்தி உடல் முழுதும் புல்லரிப்புற்று அவர் நிற்க வேண்டியதாயிற்று. மனித சக்திகள் முழுக்க முழுக்கத் தோற்றுப் போய் இனி வேறு விமுக்தி மார்க்கமே — விமோசனமே கிடையாது என்று தெரிந்து கொண்ட ஒரு மனநிலையின் எல்லைக் கோட்டில் வந்துவிட்ட பிறகு கைகள் இரண்டையும் உயர்த்தி என் அப்பனே இனி நீயே துணை! அபயம் தா என்று சரணடைவதைத் தவிர அவருக்கு வேறு வழி இல்லாமல் போயிற்று.

மொத்தத்தில் அனந்தன் நாயர் சராசரி மனிதனின் உடல் பலமும் உள்ளப் பலமும் அறிவுப்பலமும் இல்லாத ஒரு குழப்பமான.மனிதர்—பழமையின் சரியான உருவம்.

நாயர்களின் மையப் பிரச்சனை ஒன்றாயினும் இரண்டு நாவல்களிலும் இருவேறு கோணங்களில் அதை அலசும் இருவேறு தலைமுறைகளின் பிரதிநிதிகளாக அனந்தன் நாயரும், திரவியும் நிற்கின்றனர். இந்த முறையில் பள்ளிகொண்டபுரத்தை முன்னதாகவும் தலைமுறைகளைப் பின்னதாகவும் முறைப்படுத்தலாம். இரண்டு பாத்திரங்களும் முழுமையாக அழகாகப் படைக்கப்பட்டுள்ளன.

நாவலின் மற்ற அம்சங்கள்

ஆசிரியர் கதை சொல்லும் உத்தி, சம்பவங்களைக் கோக்கும் திறன் இவை மிகச் சிறப்பாக அமைந்துள்ளன.வட்டார மொழி கதைக்கு ஜீவத்துடிப்பைத் தருகிறது. பாத்திரங்கள் மொழியின் இயற்கையால் நம் கண்களின்முன் நிஜமாக உலவுகின்றன. ஆனால் மொழியைக் கையாளுவதில் தலைமுறைகளில் கிடைத்த வெற்றி ஆசிரியருக்குப் பள்ளிகொண்டபுரத்தில் கிடைக்கவில்லை என்று தோன்றுகிறது. பல இடங்களில் மொழி செயற்கையாக அமைந்துள்ளது.

இதைத் தவிர
இரண்டு நாவல்களிலும்
அந்த வட்டார மண்ணின் அழகு
வட்டார மக்களின் நம்பிக்கைகள்
பழக்க வழக்கங்கள்,
சடங்குகள், முதலியவற்றை
அழகுறப் படைத்திருப்பது பாராட்டுதற்குரியது.

மொத்தத்தில் இரண்டு நாவல்களுமேதமிழ் நாவல் உலகுக்குக் கிடைத்த இரண்டு சிறந்த அணிகலன்கள் என்பதில் ஐயம் இல்லை.

———

கிருத்திகாவின் இரண்டு நாவல்கள்

வெ. கிருஷ்ணமூர்த்தி

[கிருத்திகா ஆறு நாவல்கள் எழுதியுள்ளார். தமிழ் நாட்டின், விமர்சகர்களால் பெரிதும் உயர்வாக மதிக்கப்படுபவர். அவருடைய நாவல்களில் இரண்டை எடுத்துக் கொண்டு அவருடைய சமூக மதிப்புகள், தத்துவச்சார்பு, இலக்கிய நோக்கு, இலக்கிய உள்ளடக்கம் இவற்றை வெ. கி. ஆராய்கிருர். அவை வாசவேச்சுரமும், புதிய கோணங்கியும் ஆகும்.

வாசுவேச்சுரம் நாஞ்சில் நாட்டில் ஒரு கிராமத்தில் வாழ்கிற பிராம்மண சாதியாரின் வாழ்க்கைப் பிரச்சினைகள், சிந்தனைகள், ஆசைகள், இன்பதுன்பங்கள் இவற்றின் சித்திரமாகும். அவர் படைத்துக் காட்டுகிற சித்திரங்களில் நிலவுடமையாளர்கள் மீதும், அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கத்தம்மை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு பாத்திரத்தின் மீதும் ஆசிரியை அனுதாபங் கொண்டுள்ளார். பழைய மதிப்புக்களை எதிர்க்கிற ஒரு பாத்திரத்தை வக்கிரச் சித்திரமாகக் கம்யூனிஸ்டு என்று வருணிக்கிருர். நீதியை எதிர்க்க அப்பாவிகளைத் தூண்டிவிடுபவனுகவும், கிராமத்து உழைக்கும் மக்கள் யாராலும் ஏமாற்றப்படக் கூடிய ஏமாளிகளாகவும் ஆசிரியைக்குத் தோன்றுகின்றனர். கிராமத்தினுள் உடைமையாளர், உடைமையற்ருேர் என்ற பிரிவினரிடையே உள்ள சமுதாய உறவுகளே கிராம சமுதாயத்தின் முழுமையான சித்திரமாகும். இங்கே உழைக்கும் உழவர்கள் ஓர் மந்தை. பிச்சாண்டியின் நயவஞ்சகப் பேச்சுகளுக்கு இரையாகி விடுபவர்கள். பிராம்மண நிலவுடைமையாளர்கள் தாம் மனிதர்கள். உணர்ச்சியுடையவர்கள். அவர்களிடையே ஏற்படும் உணர்ச்சி முரண்பாடுகள், நிகழ்ச்சிகள் தாம் இலக்கியப் பொருளாகும் தகுதியுடையனவென்று ஆசிரியை கருதுகிருர்.— இவ்வாறு கிராமத்தின் மேல்தட்டு மக்களிடம் அனுதாபமுடையவராயினும் நடப்பியல் தன்மையோடு நிகழ்ச்சிகளையும், கதை மாந்தர்களையும் உருவாக்கியுள்ளார். அவருடைய புதிய கோணங்கியில் காணப்படும் பழைய, புதிய ஃப்ராய்டிஸக் கொள்கையின் ஆதிக்கம் இந்நாவலில் இல்லை. ஆனுல் இது ஒன்றிரண்டு முக்கியப் பாத்திரங்களின் படைப்பில்தலை காட்டுகிறது.

புதிய கோணங்கியில் ப்ராய்டிஸம், நீட்ஷேயின்தத்துவம் இரண்டின் பாதிப்பில், கொள்கைகளுக்கு ஏற்ற வார்ப்பு மனிதர்களைப் படைத்து நடப்பியல் உலகை தம்நோக்கில் குறைபாடுகள் உடையதாகவும், ஓர் கற்பனை உலகில் கட்டுப்பாடற்ற வாழ்க்கை வாழ்கிறவர்கள் பூரணத்துவமடைந்து குறைபாடான உலகை இயக்குவதாகவும் காட்டுகிருர். இந்நாவலில்,மனிதன் சுய உணர்வோடு செயல்கள் புரிவதை விட, ஆழ் உணர்வால் இயக்கப்பட்டுச் செயல்கள் புரிவதாகக் காட்டப் படுகிறது. அவரது பூரண உலகில் நீட்ஷேயின் கற்பனையிலுதித்த அதிமனிதன் (Superman) அவ்வுலகையும், அதற்குக் கீழுள்ள நடப்புலகையும் ஆள்கிருன். அந்த மனிதனது ஆதிக்கத்தையே சமூகநிர்ப்பந்தங்களிலிருந்தும், உணர்வுச் சித்திரங்களிலிருந்தும் விடுதலையாக ஆசிரியர் காட்டுகிருர். எல்லாவித மனிதநேச, ஜனநாயக, மக்கள் விடுதலைக் கொள்கைகளுக்கும் விரோதமான, பாஸிஸமும், சக்தி உபாசனையும் கலந்த ஒரு கலவை இவருடைய இலட்சிய உலகம்.

இங்கு நடப்பியல் பிரச்சினைகளுக்குப்பதில், ப்ராய்டின் கொள்கைக்கேற்ப கற்பனைப் பிரச்சினைகள் கீழ்உலகில் உருவாக்கப்பட்டுத் தீர்க்கப்படாமல், மேல்உலகில் முன்னர் குறிப்பிட்டவாறு தீர்க்கப்பட்டுள்ளன.

முதல் நாவலில் நடப்பியல் வாழ்க்கையையும், ஒரு சமுதாயத்தில் வேர் கொண்டுள்ள கதை மாந்தர்களையும் யதார்த்தமாக வருணிக்க முற்படுவதால் அங்கே பிராய்டிஸத்தையும், நீட்ஷேயிஸத்தையும் புகுத்த முடியவில்லை. நடப்பியலை முழுவதும் ஒதுக்கிவிட்டு கதை மாந்தர்களையே பிராய்டின் உணர்வுச் சிக்கல்களின் பிரதிநிதிகளாகவும், ஆட்லரின் மன நோயாளி

டைப்புகளாகவும் (neurotic type) படைத்திருப்ப தால் நடப்பியல் வாழ்க்கைக்கு நாவலில் இட மில்லே. செருப்புக்குத் தகுந்தபடி காலே வெட்டி விட்டார். அவருடைய வாழ்வியலில் அடித்தள மில்லாத முற்றிலும் அ⁻வயமான, அகநோய்த் தத்துவங்களேயும், மக்கள் புழுக்கள், மந்தைகள் அவர்களே அடக்கியாள நெப்போலியன்போன்ற அதிமனிதன் வேண்டுமென்ற அரசியல் தத்து வத்தையும் மனித உருவங்களாக வெளிப்படுத் தவே அவர் பாத்திரங்களேப் படைத்துள்ளார். இரண்டாவது நாவலேத்தான் தமிழக அதிமனி தர்களான இலக்கிய விமர்சகர்கள் போற்றி மதிக் கிருர்கள்.

இவ்விரண்டு நாவல்களிலும் காணப்படும் தத்துவம்—கலேநோக்கு இவற்றின் தொடர்பு களேயும் கலேப்படைப்பான நாவல்களில் இருந்து வெளிப்படும் சமுதாய நோக்கு, அரசியல் நோக்கு, இவற்றையும், இவை நாவலின் பாத்தி ரப்படைப்பையும், கதைக்கருவையும் எவ்வாறு பாதித்துள்ளன வென்பதையும் வெ. கிருஷ்ண மூர்த்தி ஆராய்கிருர்.

ஆசிரியர்.]

0.1 கிருத்திகாவின் பெயர் இலக்கிய உல கில்மிகச்சமீப காலமாக பிரபலம் பெற்றுள்ளது. பத்துப் பதினைந்து ஆண்டுகளாகவே இவர் எழுத்துத் துறையில் ஈடுபட்டிருந்தாலும் குறிப் பிடத்தக்க பிரபலம் அடைந்தது 1966ல் வெளி வந்த இவருடைய வாஸவேச்வரம் ஏற்படுத்திய பரபரப்புக்குப் பின்னரேயாகும்.

கடைசியாக வெளிவந்துள்ள புதிய கோணங்கி வரை மொத்தத்தில் ஆறு நாவல் களும், ஒரு நாடகமும், ஆங்கிலத்தில் சில நூல் களும், ஜெர்மன் மொழியில் ஒரு நூலும் எழுதி யுள்ளார் என அறிகிருேம்.

0.2 இவருடைய தமிழ் நாவல்களே மேலெ ழுந்தவாரியாகப் படித்துப் பார்க்கும்பொழுது கூட இவருக்கேயுரிய தனித்தன்மை தெரிகிறது. சுதந்திரத்துக்குப் பின்னுல் தோன்றிய நாவலா சிரியர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர் என்ப தும் புலனுகிறது. அதே சமயம் அவற்றில் குறிப்பிட்டதொரு தத்துவச் சார்பும் அதனுல் விளேந்த வாழ்க்கை நோக்கும் இருப்பதும் புலனு கிறது. இத்தகைய பண்புகளே இவருடைய நாவல்களே ஆராயும் ஆர்வத்தை ஊட்டுகின் றன.

0.3 அவருடைய நாவல்கள் காலவரிசைப் படி வருமாறு: 1) புகைநடுவில் 2) சத்திய மேவ 3) பொன்கூண்டு 4) வாஸவேச் வரம் 5) தர்மக்ஷேத்ரே 6) புதிய கோணங்கி

என்னுடைய ஆய்வுக்கு வாஸவேச்வரம், புதிய கோணங்கி ஆகிய இரண்டு நாவல்களே மட்டுமே எடுத்துக் கொள்கிறேன். அவைகளில் காணப்படும் வாழ்க்கை நோக்கையும், தத்துவச் சார்பையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

1.1 ‘வாஸவேச்வரம்’ நாவல் நாஞ்சில் நாட்டுக் கிராமம் ஒன்றைக் களனுகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. இந்நாவல் அக்கிராம மக்க ளின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டவே முயற்சித்தாலும் நாவலின் கதைமாந்தர்கள் முழுக்க முழுக்க அவ்வூரின் பிராமணச் சமூகத் தைச் சேர்ந்தவர்கள்.

அவ்வூர் கோவில் மண்டபத்தில் சுப்புக் குட்டி சாஸ்திரிகள் செய்யும் கதாகாலட்சேபத் தோடு கதை தொடங்குகிறது.

இந்நாவலின் நாயகியாகத் தோன்றுபவள் ரோகிணி. இவள் நகரத்தில் பிறந்து வளர்ந்த வள். சந்தர்ப்ப வசத்தினுல் கிராமத்தில் சந்திரசேகரய்யர் என்ற பண்ணையா ருக்கு வாழ்க்கைப்பட்டவள். தண்ணீரில் கலக் காத எண்ணெய்போல அவள் இக்கிராம வாழ்க் கையிலே மனம் ஒட்டாமல் விலகி இருக்கிருள். சம்பிரதாயத்தைப் பிரதானமாகக் கொண்டு வயலோடும், அதில் விளேயும் பொருள்களோடும் தன்னே இணைத்துக் கொண்டுவிட்ட கணவனி டம் அன்பை வேண்டிக் கரைகிருள்.

சந்திரசேகரய்யர் பண்ணையார். அறிவாளி, குணவான் என்று ஊராரால் பாராட்டப் பட்ட வர். தன் மனைவியின் அழகில் வசப்பட்டு எங்கே அடிமையாகி விடுவோமோ என்று பயப் பட்டு அந்தப் பயத்தாலேயே அந்தரங்கத்தில் அவளிடம் முரட்டுத்தனமாக இயங்குபவர்.

ரோகிணியின் அழகில் மனதைப் பறி கொடுத்தவன் பிச்சாண்டி. நகரத்திற்குச் சென்று கல்லூரிப் படிப்புப் படித்து விட்டு கிரா மத்திற்குத் திரும்பிய பிச்சாண்டி தன்னை ஒரு கம்யூனிஸ்ட் என்று கூறிக் கொள்பவன். எவ் வாறேனும் வாஸவேச்வரத்தைச் சீர்திருத்தித் தன்னுடைய பொதுவுடைமைக் கருத்துக்களை இங்கே புகுத்தி சம்பிரதாயங்களை அடித்து நொறுக்கி விடுவதாகச் சவால் விட்டுள்ளவன் பிச்சாண்டி. இவனைச் சுற்றி இவனதுசகாக் களாகப்படித்து விட்டு வேலையில்லாமல் இருந்த மாணவர்களும் இளைஞர்களும் இருந்தனர்.

அவ்வூர் டாக்டர் சுந்தா சம்பிரதாயங் களுக்குத் தானே தூண் என்று வாதிப்பவன். டாக்டராக இருந்தும் புதுமையை ஏற்காதவன். மனைவியோடு சதா முரணுபவன். அதேசமயம் எதிர் வீட்டு விச்சுவோடு கள்ள நட்புடையவன்.

விச்சு சுப்பையாவின் மனைவி. தன் கண வன் சந்திரசேகரய்யரைப் போலத் திறமை படைத்தவனாக இல்லையே என்று அவனைக் குத்திக் காட்டிக் கொண்டே இருப்பவள். டாக் டரோடு கள்ளத் தொடர்புடையவள்.

சுப்பையா சந்திரசேகரய்யரோடு இளமை முதல் ஒன்றாகப் படித்தவன். இளமை முதலே அவரோடு ஒப்பு நோக்கப்பட்டு எல்லோராலும் தாழ்த்திக் கூறப்பட்டவன். தாயின் அரவணைப் பிலேயே வளர்ந்தவன். தாயின் மரணத்திற்குப் பின்பு தாழ்வு சிக்கல் (inferiority complex) ஏற்பட்டு மனம் உடைந்து போனவன்.

பெரிய பாட்டா, இக்கிராமத்திற்கே பீஷ்மப் பிதாமகர் போன்றவர். எல்லோராலுமே போற் றப்படுவர். இவர்கள் போக, அம்பி மாமா, கோமு, மீனக்கா போன்ற சிறிய கதாபாத்திரங் களும் நாவலில் இடம் பெறுகின்றனர்.

சம்பிரதாய முறைப்படி வாழும் வாஸவேச் வரத்தை மாற்றிச் சீர்திருத்தப் போகிறேன் என்று பிச்சாண்டி கிளம்புகிறான். அவனுக்கு உறுதுணையாக நண்பர்கள் நிற்கிறார்கள். டாக்டர் சுந்தர் ஒரு பாலர் விடுதியைத் திறந்து வைத்துப் பேசும் பொழுது, பிச்சாண்டியும் நண் பர்களும் பேச்சில் குறிக்கிடுகின்றனர்.

டாக்டராக இருந்தும் அவன் கருத்தடையை எதிர்த்து.பிரசாரம் செய்கிறான். பிச்சாண்டியின் நண்பர்களின் குறுக்கீட்டால் அவன் தடுமாறு கிறான். வரப்போகும் பஞ்சாயத்துத் தேர்தலில் தான் நின்று ஜெயித்து அவ்வூரைச் சீர்திருத்தம் செய்யப் போவதாகப் பிச்சாண்டி சவால் விடுகி றான். இச்சவாலை ஏற்றுக் கொண்ட சுந்தா பெரிய பாட்டாவின் ஆசியோடு சந்திரசேகரய் யரைப் பஞ்சாயத்துத் தேர்தலில் நிற்க வைத்து விடுகிறான். பிச்சாண்டிக்கும் சந்திரசேகரய்ய ருக்கும் நேரடிப் போட்டி ஏற்படுகிறது.

இதற்கிடையே டாக்டரின் கவனக் குறை வால் முன்னையன் என்ற விவசாயியின் மனைவி இறந்து போகிறாள். அதைச் சாக்காக வைத்துக் கொண்டு பிச்சாண்டி விவசாயிகளைத் திரட்டுகி றான். ஊரில் வருடா வருடம் மிகப்பெரியதாகக் கொண்டாடப்படும் திருவிழாவில் வடம்பிடிக்கும் வேலையைச்செய்யவிடாதபடி அவர்களை அவன் தடுத்துவிடுகிறான். சுந்தா சும்மா இருக்கவில்லை. வெளியூர் ஆட்களை அவ்வேலைக்குக் கொண்டு வருகிறான். இரு கோஷ்டியாரிடையே மோதல் ஏற்படும் சமயம். பெரிய பாட்டா தலையிட்டுப் பேசிப் பிச்சாண்டியை அடிக்க முனைகிறார்கள்.

'இவர்களைச் சீர்திருத்தலாம்'என்றெண்ணிய பிச்சாண்டி தனது பிரமை உடையவே அவ் வூரை விட்டே ஓடிவிட எண்ணுகிறான். ஏற்க னவே ரோகிணியிடம் மனத்தைத் திறந்து காட் டியிருந்த பிச்சாண்டி, அவளுக்காகத் தன்னு டைய கொள்கைகளையெல்லாம் விட்டு விடுவதாக சொல்லிய பிச்சாண்டி இப்பொழுது அவளை நினைத்துக் கொள்கிறான். 'இந்த மக்களுக்கு உழைப்பது வீண்' என்ற அவளுடைய கூற்று உண்மையென அவன் காண்கிறான். ஊரை விட்டுச் செல்லுமுன் ஒரு முறையேனும் அவளைப் பார்த்து விட்டுச் சென்றுவிட வேண்டுமென்று அவருடைய வீட்டுக்கு வருகிறான். ஊரெல் லாம் திருவிழாப் பார்க்கச் சென்றிருக்கும் பொழுது நிச்சயம் அவள் இருப்பாள் என்று

எண்ணிய பிச்சாண்டி அடிபட்ட காயத்தோடு அங்கு வருகிறுன். திடீரென்று அங்கு தோன்றிய போலீசாரைக் கண்டு மிரண்டு ஓடுகிறுன். போலீசார் அவனேத் துரத்த அவன் ரோகிணியின் வீட்டுக்குள்ளே நுழைகிருன். ஆனுல் அங்கே ரோகிணி இல்லே. அதற்குப் பதிலாக சந்திரசேகரய்யர் அங்கே கொலேயுண்டு கிடக்கிருர். யாரோ அவரை உலக்கையால் தலேயிலடித்துக் கொன்றிருந்தார்கள்.

போலீசாரிடம் பிச்சாண்டி மாட்டிக்கொள்ளுகிருன். கொலேக் குற்றம் அவன்மேல் சுமத்தப்படுகிறது. பிச்சாண்டி அக்கொலேயைச் செய்திருக்கமாட்டான் என்று ரோகிணி நினைக்கிருள். பெரிய பாட்டாவிடம் அவ்வாறே கூறுகிருள். பெரிய பாட்டாவும் இக்கொலேயைப்பற்றிச் சிந்திக்கிருர். கொலேயுண்ட இடத்திலே இருந்த சுப்பையாவின் கைத்தடி அவர் கண்களில் படுகிறது. அதை வைத்து அவனே விசாரிக்கிருர். மன உளேச்சல் மேலிட்ட சுப்பையா தானே அக்குற்றத்தைச்செய்தவன் என்று தன்னே விட்டுவிட்டுப் போய்விட்ட மனேவிக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தூக்க மாத்திரைகளே உட்கொண்டு இறந்து விடுகிருன். இதை அறிந்த பெரிய பாட்டா போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் சென்று உண்மையைக் கூறுகிருர். தனது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனே தன் வழிவந்த இன்ஞெருவனே கொன்ருன் என்ற அவச்சொல்லேயும் ஏற்கத் தயங்காத அவருடைய பெருந்தன்மையை இன்ஸ்பெக்டர் வியக்கிருர். இன்ஸ்பெக்டரால் விடுவிக்கப்படும் பிச்சாண்டியோ பழி தன் பேரிலேயே இருக்கட்டும் என்று சொல்லி உண்மை ஊராருக்குத் தெரிய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு ஊரை விட்டே சென்றுவிடுகிருன். ஆனுல் உண்மை ரோகிணிக்கு மட்டும் தெரிய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிருன்.

ஒரு புயல் அடித்து ஓய்ந்த பின்னர் வாஸவேச்வரம் பழைய வாஸவேச்வரம் ஆகிறது. வழக்கம்போல் கதா காலட்சேபம் நடக்கிறது. சுப்புக்குட்டி சாஸ்திரிகள் கற்பின் பெருமை பற்றி விளக்கி வியாக்கியானம் செய்கிருர்.

2.1 வாஸவேச்வரத்தின் கதை கிராம வாழ்க்கையை நிலேக்களனுகக் கொண்டிருக்க, புதிய கோணங்கி அமைப்பிலும் நிலேக்களனிலும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது.

ஆதித்ய நாட்டின் தலேநகர் சத்யோத்யா. அந்நாடு மதர்லாந்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலே பெற்ற நாடு. நெடுங்காலமாக மதர்லாந்தில் உழைக்கும் பத்திரிகையாளனுக இருந்த சாம்பு தாய்நாட்டுக்குத் திரும்பி வருகிருன். மிகக் குறுகிய காலத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்தை எவ்வாறு ஆதித்ய நாடு பெற்றது என்பதைக் கண்டறிந்து எழுதுமாறு அவனது பத்திராதிபர்கள் பணிக்க, அப்பணியை மேற்கொண்டு சாம்பு ஆதித்ய நாட்டிற்கு வருகிருன்.

தான் இருந்த காலத்தில் நாகரீகமற்ற நிலேயில் இருந்த ஆதித்ய நாடு — அதிலும் குறிப்பாக அதன் தலேநகரான சத்யோத்யா — விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பெற்றிருந்த அதிசயிக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டு அவன் திகைக்கிருன். ஆனுல் இம்முன்னேற்றமெல்லாம் வெறும் மேற்பூச்சாகவே உள்ளதை அவன் உணருகிருன். ஆதித்ய நாட்டாருக்கே உரித்தான சோம்பல், சுயநலம், போன்ற எல்லாம் இன்னுமிருப்பதை அவன் காண்கிருன். ஆனுல் எங்கு நோக்கினும் சக்தி வழிபாடு நிறைந்திருக்கக் காண்கிருன்.

இத்தகைய முன்னேற்றத்தின் ஊற்றுக்கண்ணுக 'சக்தி நிவாஸ்' விளங்குகிறது என்பதை அவன் ஏற்கனவே அறிந்திருந்தான். சக்தி நிவாஸுக்குச் செல்லும் பெர்மிட்டை வேண்டி அவன் மனுச் செய்திருந்தான்.

பெர்மிட் கிடைப்பதற்குள் சத்யோத்யாவிலுள்ள பல்வேறு நபர்களே அவன் சந்திக்கிருன். அவனே முதலில் வரவேற்கும் ஸிம்ஹன், வீரேந்திரநாத், ராம்மோஹன் என்னும் அதிகாரி, கதையில் நடுநாயகமாக வரும் வாஸு, வாஸுவின் பெண் சாந்தி, அவளேக் காதலிக்கும் சுந்தர் இன்னும் அவன் சந்திக்கிற நபர்கள் எல்லாமே ஏதோ ஒரு பீதியால் பீடிக்கப் பட்டவர்களாக இருப்பதை அவன் உணருகிருன்.

சக்தியின் பேரால் நடத்தப்படும் ஆராதனே மண்டபங்கள் பல இருப்பதை அவன்பார்க்கிருன். அம்மண்டபங்களின் உட்பகுதிகளில் வரைமுறையற்ற இன்ப நுகர்ச்சியில் இளேஞர்கள் ஈடுபடுவதையும் பார்க்கிருன். பழமைக்கும் புதுமைக்கும்

பொருந்தாத மணம் நிகழ்ந்துள்ளதையும் அவன் காண்கிறுன்.

இத்தகைய மக்களைக் கொண்ட நாட்டில் ஜனநாயகம் பெயரளவுக்கே இயங்குகிறது. ஜன சபையும், மந்திரி சபையும் வெறும் மேல்பூச்சாக இயங்குவதை அவன் பார்க்கிறுன். மந்தைகளைப் போல வலம்வரும் இம்மக்களை மேய்ப்பவன் இந் நாட்டின் தலைவனுன ஆதித்தன் அல்ல. அவ னுக்கு மேற்பட்ட நிலையிலிருந்துகொண்டு, சக்தி நிவாஸிலிருந்து ஆதித்தனையும் அவனது நாட்டையும் இயக்குபவன் சந்திராஜித்காமேஷ் என்று சாம்பு அறிகிறுன். இத்தகைய சக்தி ஒரு தனிப்பட்டவனிடம் எவ்வாறு இருக்கமுடியும் என்று அவன் அதிசயிக்கிறுன்.

எத்தனையோ சிவப்புநாடாத்தடங்கல்களைக் கடந்தபின் அவனுக்கு சக்திநிவாஸ் செல்லப் பெர்மிட் அளிக்கப்படுகிறது. வெளியுலகிலிருந்து பெர்மிட் பெற்று அங்கு செல்லும் முதல் மனிதன் சாம்பு தான்.சக்தி நிவாஸ் சத்யோத்யா விலிருந்து ஆயிரம் மைல் தெற்குத் திசையிலி ருக்கிற சுவர்ணமுகி தீரத்திலிருக்கிறது. மேலும் ஒரு முன்னூறு மைல்கள் மலைப்பிரதேசங்களைக் கடந்து ஜீப்பில் சக்திநிவாஸைச் சேர்ந்த ஒரு அதிகாரியோடு சாம்பு பயணமாகிறுன். மலைப் பிரதேசம் முழுவதும் பல குகைகள், எங்கு பார்த்தாலும் யோகாசனப் பயிற்சி நிலையில் பலர் இருந்தார்கள். அந்த யோகிகள் வாட் பயிற்சியும் செய்வதை அவன் காண்கிறுன்.'விண் வெளியுகத்தில் இவை எதற்கு' என அவன் கேட் கிறுன். இவையெல்லாம் ஆரம்பப் பயிற்சி என அவ்வதிகாரி பதிலளிக்கிறுன். ஆனுல் அதே சமயம் மலைக்குமலை ரயில்கள் கம்பித் தொடரில் செல்லும் அதிசயத்தைப் பார்க்கிறுன். சாம்பு விற்கு ஒன்றுமே விளங்கவில்லை.

செல்லச் செல்ல வியப்பு அதிகமாகிறது. விஞ்ஞானக் கூடங்கள் நிறைந்த பகுதிக்கு அவர்கள் வருகிறுர்கள். விண்வெளி ஆராய்ச்சிக் கூடங்கள், எஃகுக் கோட்டைகள் பலவற்றை அவன் பார்க்கிறுன். 'இங்கே வாழ்கின்ற சக்தி வீரர்கள் பௌதிகம், ரசாயனம், வானசாஸ்திரம் ஆகிய எல்லாத் துறைகளையும் கரை கடந்து விட்டார்கள். அவர்கள் சென்று மீளாத கிரகங் களே கிடையாது. வைத்தியத் துறையில் அவர் கள் பெற்றுள்ள வெற்றி மகத்தானது' என்று ஹேமாந்த் என்னும் அந்த சக்தி வீரன் சாம்பு வுக்கு விளக்குகிறுன்.

சக்திநிவாஸிலுள்ள சக்திவீரர்கள் எல்லோ ருமேஅறிவாளிகளாகவும், வீரர்களாகவும், கட் டானஉடலுடையவர்களாகவும், இருக்கிறுர்கள். ஆண்களும், அப்படியே. பெண்களும், அப்ப டியே. இதற்குரிய காரணம் என்ன என்பதை சத்திரஹாசன் என்னும் இன்னெரு சக்திவீரன் விளக்குகிறுன். "ஆதித்ய நாட்டு மக்கள் மனச் சாட்சியை ஒரு பெரும் பூதமாக வளர்த்துக் கொண்டு அதற்கு அடிமைப்பட்டுக் கிடப்பவர் கள். ஆனுல் சக்திவீரர்களோ இந்திரிய உணர்வு களுக்குக்கட்டற்ற சுதந்திரத்தை அளித்து விட் டவர்கள். சுகானுபவங்களால் மகிழ்ச்சியடையும் மனிதன் ஆவல்அடங்கியதும்விடுதலைஅடைந்து அகத்தை வெல்லும் பாதையில் சென்று தன்னு ணர்ச்சி அடைந்து விடுகிறுன். இத்தன்னு ணர்ச்சி அடைந்த மனிதனே செயற்கரிய செய் பவனுகிறுன்."

சந்திரஹாசன் மேலும் விளக்குகிறுன்: 'ஆதித்ய நாட்டில் மனிதன் பூரணத்துவம் கொண்டு வாழ முடியாதவனுக இருக்கிறுன். அவனிடத்தில் வேட்கைக்கும் மனச்சாட்சிக்கும் மோதல் நிகழ்கிறது. ஆனுல் சக்திவீரர்களிடத் தில் இத்தகைய மோதல் இல்லை. எனவே அவர் கள் வீரர்கள் ஆகிறுர்கள்.செயற்கரியன செய்கி றுர்கள். சிறு குழந்தைக்குத் தாயின் வாயிலாக ஏற்படும் சித்திரத்துக்கும் மனைவியாக வருப வளின் சித்திரத்துக்கும் ஆதித்ய நாட்டில் முரண் பாடு ஏற்படுகிறது. அதனுல் தன்னுணர்வு அற் றவனுக அவன் ஆகிவிடுகிறுன். ஆனுல் சக்தி வீரன் அந்த அகச் சித்திரத்தைச் சக்தியோடு இணைத்துக்கொண்டுவிடுகிறுன். அங்கே முரண் பாடு அற்றுப்போகிறது.'

இதன் பின்னுல் கனவா,நனவா என்றுகூற முடியாத ஒரு சூழலில் சாம்பு காமேஷைச் சந்திக் கிறுன். அவனோடு விவாதிக்கிறுன். தடை யற்ற கலவியின் மூலமும், அதன் பின்னர் இத் தகைய ஒருமுகப் படுத்திச்செய்யும் சிந்தனையின் மூலமும் மனிதன் பூரண மனிதனுக ஆகிறுன் என்று காமேஷ் விளக்குகிறுன். சக்தி கோவிலில் இன்னெரு முறை அவன் காமேஷைக் காண்கி

ளுன். மர்மங்கள் படிப்படியாகக் காமேஷுக்கு விளங்குகின்றன.

காலயந்திரம் என்றொரு யந்திரம் முக்காலத்தையும் கண்முன் காட்ட வல்லது. அவ்வியந்திரத்தில் சென்றமர்ந்த சாம்பு தான் விரும்பிய பழைய காட்சியைக் காண்கிறான். அதில் ஆதித்தன் தனது நாட்டை முன்னேற்றக் காமேஷிடம் யோசனை கேட்ட காட்சியைக் காண்கிறான். காமேஷ் அப்பொழுதுதான் நாட்டில்கலகம் செய்துவந்த சங்காயத்துக்காரர்களைத்தனது சக்தி வீரர்களின் உதவியோடு ஒடுக்கியிருந்தான். அந்த நாளிலிருந்து காமேஷின் துணையோடு ஆதித்ய நாடு முன்னேறியது. அந்த முன்னேற்றத்தின் ஊற்றுக் கண்ணாக சக்தி நிவாஸ் இருந்து வருகிறது என்பதைச் சாம்பு காண்கிறான்.

ஒரு விமானத்தில் ஏறி மிக விரைவில் சத்தியோத்தியாவுக்குக் கொண்டுவந்து விடப்பட்ட சாம்புவுக்கு இதுவரை தான் கண்டது கனவா நனவா என்பதே விளங்கவில்லை. கண்டதை கனவெனவே வைத்துக் கொண்டு ஆதித்ய நாட்டின் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் விவரித்து அது அவர்களுடைய பாரம்பரியமான பக்தியினால் சாத்தியமாகிறது என்று எழுதுகிறான்.

3.1 இவ்விரு நாவல்களையும் சரிவரப் புரிந்து கொள்ளவும் விமர்சிக்கவும் ஃபிராய்டிஸம்,நவீன ஃபிராய்டிஸம் ஆகியவற்றைப்பற்றியும் நீட்ஷேயின் தத்துவம் பற்றியும் ஓரளவு அறிந்துகொள்வது அவசியமாகிறது. இத்தத்துவங்கள் வாஸவேச்வரத்தில் இலை மறைவு தலை மறைவாகத் தெரிந்தாலும் புதிய கோணங்கியில் மிகத்தெளிவாகவே தெரிகிறது.யதார்த்தத்தைப் படம் பிடித்துக்காட்ட முயலும் வாசவேச்வரத்தில் இத்தத்துவங்கள் பின்னணியில் நின்று இயங்குகின்றன. ஆனால் புதிய கோணங்கியோ இத்தத்துவங்களை விளக்கும் வகையிலேயே எழுதப்பட்ட நாவல். இந்நாவலில் சமூகப் பிரச்னைகளுக்குத் தீர்வு, உளநூல் வழியிலேயே கூறப்படுகிறது. எனவே இவற்றைப் பற்றிச் சற்றுக் கூறுவது அவசியமாகிறது.

3.1.1 ஃபிராய்டிஸத்தின் மூலப் பிதாவாகிய சிக்மண்ட் ஃபிராய்டு மனிதனுடைய உணர்வு பூர்வமான நடவடிக்கைகளை அவனது unconscious எனப்படும் ஆழ் உணர்வே நிர்ணயிக்கிறது என்று கூறினார்.

3.1.1 மனித மனத்தின் அடிப்படை உணர்ச்சிகளாக இன்ப நாட்டமும் (libido) இறப்பு மற்றும் அழிவு அச்சமும் (Thanatos) உள்ளன. இவ்விரண்டையும் சேர்த்து Id என்று ஃபிராய்ட் அழைத்தார். இவை தவிர Ego எனப்படும் உணர்வும் அவரால் குறிப்பிடப்பட்டது. இது புற உலகோடு மனிதனைத் தொடர்பு படுத்துவது. Id ஆழ்மனத்தைச் சேர்ந்தது. அது கொள்ளும் வேட்கை நிறைவேற சமூகக் கட்டுப்பாடுகள் தடைகளாக உள்ளன. இக்கட்டுப்பாடுகள் விலங்குகளுக்கு இல்லை. மனித சமுதாயத்தால் Taboo எனக் கருதப்படுபவை மனிதனது இன்ப நாட்டத்திற்குத்தடையாக இருக்கின்றன. அவனது வேட்கை தடுக்கப்படும்பொழுது conscious உணர்விலிருந்து unconscious நிலைக்கு அது சென்றுவிடுகிறது.

அடக்கப்பட்ட உணர்ச்சிக்கும் உணர்வு நிலைக்குமுள்ள முரண்பாட்டிற்கு Complex என்று பெயரிட்டு அவைகளில் பலவற்றை ஃபிராய்ட் வகைப்படுத்திக் கூறினார். தன்னைத்தானே காதலிக்கும் நார்ஸிஸஸ் காம்ப்ளெக்ஸ், தாய் மீது கொண்ட பரிவு மனத்தில் சித்திரமாகப் பதிந்து நிற்கும் ஒடிபஸ் காம்ப்ளெக்ஸ், பிறரை அடக்கியாள எண்ணும் ஹெர்குலிஸ் காம்ப்ளெக்ஸ் போன்றபல சிக்கல்களை அவர் வகைப்படுத்திக் கூறினார்.[1]

இக்கொள்கை தனிமனிதனின் செய்கைக்கு மட்டுமின்றி சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான செய்கைக்கும் விளக்கம் தரப் பயன்படுத்தப்பட்டது. libido என்ற இணைவிழைச்சு உணர்வு, வரலாறு, சமுதாயம், பண்பாடு,மக்கள் தொகை (இளைஞர், மனோவியாதிஸ்தர், குழந்தைகள்) ஆகிய எல்லாவற்றிற்குமே பொருந்தும் என்று ஃபிராய்ட் எழுதினார்.[2]

3.1.2 ஆனால், மாறிவரும் வர்க்க, தேசீய உணர்வுகளின் அடிப்படையில்எழுந்தசமுதாயப் போராட்டங்களையும், மானிடவியல் துறையில் கண்டுபிடிக்கப்பட்ட எத்தனையோ கண்டுபிடிப்பு

களையும் விளக்க ஃப்ராய்டின் மூலக்கொள்கை யால் முடியாத நிலை ஏற்பட்டது. அத்தோடு மட்டுமின்றி நரம்பு நோய்த் துறையில் ஏற்பட்ட விஞ்ஞானரீதியான கண்டுபிடிப்புக்களும் ஃப்ராய் டிஸத்தின் வெறுமையைக் காட்டத்தொடங்கின. இந்நிலையிலேயே நவீன ஃப்ராய்டிஸம் தோன்றியது.

3.1.2.1 ஆட்லர், ஜங் போன்ற ஃப்ராய்டின் மாணவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட நவீன ஃப்ராய்டிஸம் தனது வேஷங்களை மாற்றி மாற்றி இன்று ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்துள்ளது. அமெரிக்காவில் அது தழைத்து வளர்ந்து வருகிறது. அதன் தற்போதைய கொள்கைப்பிரசாரகர்கள், காரன் ஹார்னி, எரிக் ஃப்ராம், ஹென்ரி ஸ்டாக் ஸல்லிவன் ஆகியோராகும். இவர்கள் ஃப்ராய்டிஸத்துக்குப் புதிய உடைகளை உடுத்தி உலா அனுப்புகிறார்கள். ஆனால் ஃப்ராய்டிஸத்தின் அடிப்படைக் கொள்கையான ஆழ் உணர்வு தான் உணர்வு நடவடிக்கைகளை நிர்ணயிக்கிறது என்ற கொள்கையை இவர்கள் விட்டு விடவில்லை.

உலகெங்கிலுமுள்ள பழைய அகவய- தத்துவங்களோடு ஃப்ராய்டிஸத்தை ஒப்பிடுவதோடு மட்டுமல்லாமல், அவற்றோடு ஒட்டு வேலை செய்யவும் முயல்கிறார்கள். இதற்கு ஓர் உதாரணமாக எரிக் ஃப்ராம் எழுதியுள்ள ஸென்பௌத்தமும் ஸைக்கோ அனலிஸிஸும் என்ற நூல் விளங்குகிறது. ஃப்ராய்டிஸம் குறிக்கும் அகப்பார்வை அல்லது தன்னுணர்வை ஸென் புத்தமதத்தின் சடோரி எனப்படும் 'திடீர் விழிப்போடு' (ஞான நிலை) இவர் ஒப்பிட்டுக் காட்டுகிறார். முதலாளித்துவ உலகிற்குரிய கொடுமையின் காரணத்தை அச்சமுதாயத்திலேயே புறவயமாகத் தேடிப் பார்க்காமல் அகவயமாகவே துழாவி, அகவயமான அமைதியை அடைய இப்புத்தகத்தின் மூலம் இவர் போதிக்கிறார்.[3]

இவ்வாறாக, விஞ்ஞான பூர்வமான உளவியல் கொள்கை எனக்கூறி எழுந்த ஃப்ராய்டிஸம் வெறும் மிஸ்டிஸிஸம் என்ற நிலைக்குத் தாழ்ந்துள்ளதைக் காண்கிறோம்.

3.1.2 ஃபிராய்டிஸத்துக்கும் நீட்ஷேயின் கொள்கைகளான சக்தி நாட்டம் (Will to Power) அதிமனிதன் (Superman) ஆகிய கொள்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மனிதனுடைய நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் இணைவிழைச்சு உணர்வையும், இறப்பச்சத்தையும் அடிப்படையாகக் காட்டிய ஃபிராய்டைப் போலவே நீட்ஷேயும் பிறரை அடக்கியாளும் சக்தி நாட்டம் என்ற ஆழ்உணர்வே மனித நடவடிக்கைகளின் அடிப்படை என்று கூறினார். அத்தோடு மட்டுமின்றி புற உலக உணர்வு என்பது கவைக்குதவாதது என்றும் அவர் கருதினார், நீட்ஷே கூறுகிறார்.[4]

"நமது அறிவு பூர்வமான நடவடிக்கைகளில் பெரும்பகுதி நம்முடைய உணர்வுக்குத் தெரியாமலேயே, நம்முடைய உணர்வை மீறியே நடைபெறுகிறது...உணர்வு பூர்வமான சிந்தனை ...முற்றிலும் வலிவற்றது, உணர்வு பூர்வமான நடவடிக்கையை இரண்டாம் பட்சமானது, ஏறக்குறைய அவசியமற்றது, பொருளற்றது எனக் கொள்ளலாம். அது மறைந்துபோகும் தோற்றமுடையது. குறையேதுமற்ற தன்னுணர்வால் ஒதுக்கித் தள்ளப்படக் கூடியது எனக் கொள்ளலாம்."

3.1.3.1 நீட்ஷேயின் சக்தி நாட்டம் என்ற கொள்கையிலிருந்து கிளைத்தெழுந்தது அவருடைய அதிமனிதன் கொள்கையாகும். இக்கொள்கையின்படி மனித இனம், மந்தைமனோபாவம் கொண்டது. அதிலிருந்து அம்மந்தையை அடக்கியாள அதிமனிதன் ஒருவன் எப்பொழுதோ தோன்றுகிறான். உலகமே ஆளுபவர், ஆளப்படுபவர் என்ற பிரிவுகளுக்கிடையே அடங்கியுள்ளது. ஆளுபவர்களின் தலைவன் அதிமனிதன். ஆளுபவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் ஒரே விதமான நடைமுறைகளோ கோட்பாடுகளோ ஒத்து வராது. நீட்ஷேக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லை. அவருடைய கற்பனை உலகத்தில் ஆளுபவர்கள் அரசாங்கத்தில் பங்கு வகிக்கமாட்டார்கள். ஏனெனில் அரசாங்கத்தின் வேலை வெறும் ஏவலாள் செய்யக்கூடிய வேலை (menial task) யாகும். அவர்களை இயக்கும் தத்துவ தரிசிகள் தனித்திருந்து இயங்குவார்கள். மந்தையை அடக்கியாள்வார்கள்; போரிடுவார்கள். இவர்களுக்குத்தலைவன் அதிமனிதன். சோஷ

லிஸம், ஜனநாயகம் ஆகியவை வலிமையற்ற மனித மந்தையின் கொள்கைகள். நீட்ஷேயின் இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே நாஸிஸமும் ஃபாஸிஸமும் தோன்றின.

3.1.3.2 இக்கொள்கைகளுக்கும் ஃப்ராய்டிஸத்துக்கும் அடிப்படையான ஒப்புமை உண்டு. நீட்ஷேயின் கொள்கைகளைப் படித்த ஃப்ராய்டு "இவை நான் எவ்வளவோ சிரமப்பட்டுக் கண்டுபிடித்த ஸைக்கோ அனலிஸிஸ் முடிவுகளோடு மிகவும் வியக்கத்தக்க அளவில் ஒத்துப் போகின்றன" என்று கூறினாராம். 5 அத்தோடு மட்டுமின்றி, சென்ற உலக மகாயுத்தத்திற்கு முன் (1932ல்) போரை ஒழிக்க வேண்டும் என்று குரல் கொடுத்த ஐன்ஸ்டின் ஃப்ராய்டின் ஆதரவை வேண்டிக்கடிதம் எழுதினர். அதற்குப் பதிலெழுதிய ஃப்ராய்டு "யுத்தம் இயற்கையான ஒன்றாகவே எனக்குப்படுகிறது...ஏனெனில் ஆக்கிரமிப்பு எண்ணமும் அழிக்கும் எண்ணமும் ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலும் எப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மனித வாழ்க்கையை அழித்துப் பழைய அசேதன நிலைக்கே மாற்றிவிட அது முனைந்து நிற்கிறது......... (எனவே யுத்தம் இயல்பானது தான்)" என்று கூறினர். 6

3.1.3.3 இந்த அகவயக் கொள்கைகள் முதலாளித்வ ஆளும் வர்க்கத்தினரால் பாலூட்டி வளர்க்கப்படுகின்றன. ஏனெனில் முதலாளித்வ உலகின் முரண்பாடுகளினல் விளையும் துன்ப துயரங்களுக்குரிய மூலகாரணம் புற உலகில் உள்ளது என்று காட்டாமல் அவைமனித மனத்துள்ளே மூலகாரணத்தைத் தேடுகின்றன. இது ஆளும் வர்க்கத்தினருக்குச் சாதகமாக இருப்பதில் வியப்பில்லை அல்லவா?

4.1 இனி இவ்விரண்டு நாவல்களிலும் பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் எப்படி ஆசிரியரின் தத்துவக் கொள்கைகளின் பாதிப்புக்குள்ளாயிருக்கின்றன என்று காண்போம்.

வாஸவேச்வரம் ஒரு கிராமத்திலுள்ள பிராம்மண நிலவுடைமையாளரின் சமுதாய வாழ்க்கையைச் சித்திரிக்கிறது. கிராம சமுதாயத்தில் மேல்தட்டில் இருப்பவர்கள் அவர்கள். அவர்களுடைய சுகபோகமான, சோம்பேறித்தனமான வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தை தமது உழைப்பின் மூலம் படைத்துக் கொடுப்பவர்கள் அக்கிராமத்து விவசாயிகள். அவர்கள் அக்கிராமத்தில் இருப்பது முன்னையன் மனைவி இறந்தாள் என்ற செய்தி மூலமாகவும், தெப்பத் திருவிழாவில் ஏற்படும் சண்டையிலும், சுந்தா பேசுகிற கூட்டத்தின் குழப்பத்திலும் அவர்கள் பங்குபெறுவதில்தான் காட்டப்படுகிறது. அவர்களது வாழ்க்கை வேறெங்கும் சித்திரிக்கப்படவில்லை. கிராம வாழ்க்கையே ஆசிரியருக்கு பிராமணர் வாழ்க்கையில் ஏற்படும் சிறுசிறு சலனங்களாகத்தான் தோன்றுகிறது.

எனினும் இப்பிராமணர்களிடையே நிலவுடைமையின் சிதைவால் ஏற்படும் முரண்பாடுகளும் பூசல்களும் ஏற்படுவதை ஆசிரியர் சித்திரிக்கிருர். சந்திரசேகரய்யர் பூமியில் விளையும் சீதேவியை விரும்புகிறவர். அவர் பூமிக்கு உடையவராக இருப்பதாலேயே வாழை மரமும், மாமரமும் வாரிவாரி வழங்குவதாக அவர் நினைத்துக்கொள்கிருர். அவருடைய அக்காளும் நினைக்கிருள். இவ்விருவருடைய நினைப்பை ஆசிரியை அனுதாபத்தோடு நோக்குகிருர். பூமியும், உடைமையும்தான் செல்வத்தைப் படைக்கின்றன போலும். மனித உழைப்பிற்கும் பூமியில் விளையும் காய்கனிகளுக்கும் தொடர்பே இல்லைபோலும். அவ்வுழைப்பின் உடைமைக்காரர்கள் நாவலாசிரியரது கலைக் கண்ணுக்கும் புலனுகாமலே போகிருர்கள்.

சந்திரசேகரய்யருக்கும் அவரது மனைவி ரோகிணிக்கும், இடையே உள்ள எதிர்மறைப் பிரச்சினைகள் அவர்களது முக்கிய பிரச்சினைகள். அவை உணர்வு ஆழ்நிலைக்குச் சென்றுவிடவில்லை. சென்றிருந்தால் அவரும் அவளும் சமூக அந்தஸ்தையும், சமுதாயக் கற்பு நெறிமுறைகளையும் மீறியிருக்கவேண்டும். அவ்வாறில்லை. அவருடைய மனப்போக்கு முழுவதும் உணர்வறிந்ததாகவேயுள்ளது. அவளுடைய மனப்போக்கும் அப்படியே. நனவுலகின் சமுதாய வரைமுறைகள் அனைத்திற்கும் ரோகிணி மதிப்பு வைத்துத்தான் பேசுகிருள். இந்த முக்கிய பாத்திரங்கள் நடப்பியல் சித்திரங்களே. பிராய்டிஸ வார்ப்புகளல்ல.

நாவலில் நடப்பு முறையைப் பாதுகாக்கும் பிராம்மணர் வகுப்புத்தலைவராக பெரிய பாட்டா வும் நடப்பு முறையை எதிர்த்துச் சீர்திருத்தம் வேண்டும் என்று நினைத்து ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் ஆதிக்கத்தை எதிர்க்கும் கலகக்கார னுகப் பிச்சாண்டியும் இயல்பு வேறுபட்ட சித்தி ரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் ஆசிரியை கிழப்பாட்டாவைப் போற்றுகிருர். இவரே கதைமாந்தர்களுள் பிரதானமானவர். ஆசிரியையின் கதை முதல்வர். (hero) நிலவுடை மையாளர்களுக்குள் எழும் பூசல்களை இவர் ஒட்டுப்போட்டு ஒற்றுமையை உண்டாக்குகிருர். பிச்சாண்டி கிளப்பும் சிறுசிறு பூசல்களையும் கலகங்களையும் ''ரத்தக் கொதிப்பு, சின்ன வயசு' என்று ஒதுக்கித்தள்ளுகிருர். ஆனல் இச்சாதி யின் ஆதிக்கத்துக்கே பிச்சாண்டியால் ஆபத்து வரும் என்பதையறிந்தவுடன் அவனை எதிர்க்க எதையும் செய்யக் கூசாமல் முன்வருகிருர். அவன் கீழ்சாதிக்காரர்கள் ஆதரவோடு, பஞ்சா யத்துத் தேர்தலில் போட்டி போடப் போகிருன் என்பதையறிந்ததும், ''அப்படியா சங்கதி? அது வேறே விஷயம்'' என்று சொல்லி, தம் சாதியில் மதிப்புப்பெற்ற சந்திரசேகரய்யரைப் போட்டியிடும்படி வற்புறுத்துகிருர். அது மட்டு மன்று, பிச்சாண்டியின் பெயரையே வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கிவிட யோசனை சொல்லு கிருர். இவர் தமது சாதியாதிக்கத்திற்கு எதிர்ப்பு வருகிறபொழுது, நீதி நேர்மையையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு எது வேண்டுமானுலும் செய்யத் தயாராயுள்ளார். பிற பிராமணர் சாதிக் கதாபாத்திரங்களைப் பார்க்கிலும் இவர் சாதி யாதிக்கத்தை அதாவது நிலவுடைமை ஆதிக் கத்தை நிலைநாட்டும் உணர்வு மிக்கவர். இவரே ஆசிரியையின் இலட்சியக் கதாபாத்திரம். அவர் போலீஸ் நிலையத்திலிருந்து வெளியேறுவதைப் பார்த்த இன்ஸ்பெக்டர் என்ன நினைத்தார் என்ப தைச்சொல்லும் வார்த்தைகளில் இது புலனு கிறது.

''பெரிய பாட்டா போக எழுந்தார். அவர் செல்லுவதையும் இன்ஸ்பெக்டர் பெருமிதத்து டன் பார்த்துக் கொண்டிருந்தார். உலகம் மறு படியும் அவர் மனக்கண்முன் காட்சியளித்தது. எங்கே பார்த்தாலும், நோய், பிணி, வருத்தம். உபாதைகளைத் தகர்த்துக்கொண்டு முன்னே போகமுடியாமல் ஜனங்கள் துன்பத்தை விதி யெனப் பொறுதியுடன் ஏற்கிருர்கள். ஆனல் தொங்கும் அம்முகங்களில் எத்தனை ரோதனம்? யுகயுகமாக நம் மக்கள் அனுபவித்து வரும்இன் னல்களின் சாயை அந்த ரோதனத்தில் பிரதி பலிக்கிறது. காய்ந்த வயிறுகளுடன்...கந்தைக் குவியலென்று சொல்லும்படி இருக்கும் இம்மனி தப் புழுக்களின் கும்பலில் எப்போதாவது இப் படியொரு உருவம் தோன்றும். அதாவது பெரிய பாட்டாவைப்போல ஒரு வீரன் தோன்றுவான்... கையிலுள்ள தடி ஊன்றிக்கொள்வதற்கல்ல. இறு மாப்புடன் சுழற்றுவதற்கு. முகத்தில் பொறுதி கண்களில் உறுதி...மனிதர்க்குள் தீரன்.எதையும் எதிர்த்துப்போராடுவான். அஞ்சாமல் கோட்டை களை முற்றுகை போட்டுத் தாக்குவான். அவை களை பொடித்துக் சுக்கு நூருக்கவும் செய்வான். பாமரனுக்கு மத்தியில் அவ்வப்போது இவ்வித அர்ச்சுனன்கள் தோன்றுவதால்தான் உலகம் நடக்கிறது'' என்று எண்ணிக்கொண்டார் இன்ஸ்பெக்டர்.

இதனுல் ஆசிரியையின் வர்க்கச்சார்பும், அந்த வர்க்கத்தைக் காக்க அவதரித்த மகானுகப் பெரியபாட்டாவை அவர் கருதுவதும் வெளியா கிறது.

ஆசிரியையின் கம்யூனிஸ்ட் பற்றிய கற்பனை யான வக்கிரப்படிமம் தான் பிச்சாண்டி. பிச் சாண்டி நகரில் படித்தவன். கிராமத்தில் சொத் துடைமைதான் மனிதனை மதிப்பிடும் அளவு கோல். இந்த மதிப்பு தன்னிடம் இல்லையாயி னும் தனது கல்வித் தகுதியால் அவன் மதிப்பு டையவனுகத் தன்னை உயர்த்திக் கொள்ள எண் ணுகிருன். பழைய மதிப்புக்களை எதிர்க்கிருன். புதிய மதிப்புகள் சமுதாய அமைப்பை மாற்று வதால் ஏற்படும் என்ற எண்ணம் அவனுக்கில்லை. பழைய ஆதிக்க முறைகளை எதிர்க்கிருன். மக்களைத் தூண்டிவிடுபவனுக, அநியாயத்தின் பக்கம் ஆள்சேர்ப்பவனுக அவனை ஆசிரியை காண்கிருர். ஆனல் அவனது புரட்சிக் கொள் கையெல்லாம் மேலாழ்ந்ததாகவே உள்ளது. மக்கள் தன்னைப் பின்பற்ருதபோது அவன் ஓடு காலியாகிருன். அது மட்டுமன்று, ரோகிணி மீதுதான் கொண்ட உறவே பலமானதென்றும், தனது கொள்கை வெறும் கானல் நீரென்றும் நினைக்கிருன். இப்பாத்திரப்படைப்பில் ஃப்ராய்

டிஸம் சிறிது ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனால் இவன் ஃப்ராய்டிஸத்தின் வார்ப்பு அன்று.

இந்நாவலில் ஃபிராய்டிஸத்தோடு தொடர்பு படுத்தக்கூடிய ஒரே பாத்திரமாகிய சுப்பையா தாழ்வுச்சிக்கலின் பிரதிநிதி. ஆனால் அவன்கூட உணர்வாழ உந்துதலால் செயல் புரியவில்லை. தாயின் அரவணைப்பிலே வாழ்ந்த அவனைத் தாயின் மரணமும் மனைவியின் அலட்சியமும் சேர்ந்து பொறுமையுணர்வு கொண்டவனாகவும் வெறிகொண்டவனாகவும் மாற்றுகின்றன. இவனுடைய நடவடிக்கையும் நிலவுடைமை மதிப்புக்களால் நிர்ணயிக்கப்படுபவையே. அவன் மனைவி விச்சு சந்திரசேகரய்யரைப்போல் தன் கணவன் இல்லையே என்று ஏங்கி அவனை அவரோடு ஒப்பிட்டுக் குத்திக் காட்டுகிறாள். அவளும் நிலவுடைமை மதிப்புக்களால் உணர்வு பூர்வமாகத்தான் சிந்திக்கிறாள். அத்த மதிப்புக்களால் அவனை எடைபோட்டு, மதிக்காமல் அலட்சியம் செய்து, அம்மதிப்புகளுடைய சுந்தாவோடு கள்ளத் தொடர்பு கொள்ளுகிறாள்.

வாஸவேச்வரத்தில் சமுதாய உறவுகளை ஒரு பிரிவினரிடையே உள்ள உறவுகளாக ஆசிரியை காட்டிவிட்டு மற்றோர் பிரிவை ஒதுக்கித் தள்ளி, அப்பிரிவின் எதிர்ப்புக் குரலாக பிச்சாண்டியை வக்கிரமாகச் சித்தரித்துள்ளார். பெரும்பாலும் எல்லாப் பாத்திரங்களும் தங்கள் வர்க்க மதிப்புகளைச் சிந்தனையாகக்கொண்டு செயல் புரிகின்றன. இதனால் இக்குறுகிய திரைச்சீலையில் வரையப்பட்டுள்ள சித்திரங்களில் பிச்சாண்டியைத் தவிர மற்றவை இயல்பானவையாகவும், நடப்பியல் தன்மையோடும் விளங்குகின்றன. எனவே பழைய ஃப்ராய்டிஸத்தின் சாயல் இந்நாவலில் மிகவும் பலவீனமாகவே தென்படுகிறது. ஆயினும் ஃபிராய்டிஸமும், நவீனத்துவமும் அங்கங்கே தலைகாட்டுகின்றன.

5.1 ஆனால் புதிய சோணங்கியோ முழுக்க முழுக்க ஃப்ராய்டிஸத்தையும் நவீன ஃப்ராய்டிஸத்தையும் விளக்கவே எழுதப்பட்ட நாவல். எனவே இது யதார்த்தத்தை விட்டு காததூரம் விலகிச் சென்று ஒரு கற்பனை உலகை நிலைக்களனாகக் கொண்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

நாவலின் அமைப்பே இக்கூற்றை மெய்ப்பிக்கிறது. சத்யோத்யாவை உணர்வு உலகம் என்று வைத்துக் கொண்டால் அதை இயக்கும் சக்தி நிவாஸ் என்ற மாயாலோகம் விளங்குகிறது. இதையே நாவலின் மேலுறை அறிக்கை இவ்வாறு குறிக்கிறது எனத் தோன்றுகிறது.

''ஆழ்வுணர்வு (unconscious) பற்றிய கவிதை நயஞ்செறிந்த உருவகத்திலும், குறியீடுகள் மூலம் விளக்கப்படும் கனவுகளிலும், உணர்ச்சிகளை உறையச் செய்யும் நாடகம் ஒன்று நிகழ்வதை இந்தக் கதை உணர்த்துகிறது. தலைவர்களும் அவர்களைப் பின்பற்றும் மக்களும் ஆத்ம தரிசனம் அடைவதற்காகக் கையாளும் பல் வேறுவழிகளும் நாடகக் காட்சிகளாக உருவெடுக்கின்றன.''

இந்நாவலின் முகவுரையாக மூன்று சக்தி உபாசகர்களின் மரபுக் கதைகள் (Legends) எழுதப்பட்டுள்ளன. காளிதாசன், சிவாஜி, சங்கரர் இம்மூவருமே ஒடிபஸ் சிக்கலில் இருந்து விடுபட்டதால், மனத்தில் இருந்த தாயின் சித்திரத்தைச்சக்தியோடு இணைத்ததால் மகான்களாகமாறியவர்கள் எனக் காட்டப் பட்டுள்ளனர். பாரம்பரியமான கதைகளுக்கு ஃப்ராய்டிஸச் சாயம் பூசும்முயற்சி இது என்பதோடு கதையின் உள்ளடக்கத்தைச் சுட்டிக் காட்டவும் இக்கதைகள் கூறப்பட்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை.

அத்தோடு மட்டுமின்றி, சத்யோத்யாவில் உலவும் எல்லாக் கதை மாந்தர்களுமே ஏதாவதொருவித சிக்கலுக்கு உட்பட்டவர்களாகவும், மனோவியாதியஸ்தர்களாகவுமே இருக்கிறார்கள்.

வாஸவேச்வரத்தில் வரும் சுப்பையாவைப் போலவே வாஸுவும் தாயின் சித்திரத்தை மனத்தில் பதித்துக் கொண்டவன். அவனுடைய மனைவி அழகு அவனது மனச் சித்திரத்துக்கு நேர் முரண்பாடுடையவளாக இருக்கிறாள். எனவே அவனிடம் உளச் சிக்கல் தோன்றுகிறது. சுப்பையாவைப் போலவே, இது தாழ்வுச் சிக்கலாக மாறினாலும் sublimate ஆகி, அவன் தனது அலுவலக வேலையில் புலி என்று பெயர் வாங்குகிறான். அவன் எழுதும் குறிப்புகளைக் கண்டு

அதிகாரிகள் மட்டுமின்றி மந்திரிகள் கூட நடுங்குகின்றனர். மனைவி இறந்ததைத் தொடர்ந்து அவனும் மரணம் அடைகிறுன்.

வாஸுவின் கடைசி மகள் சாந்தி நார்ஸிஸஸ் காம்ப்ளெக்ஸில் சிக்கியவள். தன் அழகைத் தானே காதலிப்பவள். தன்னைக் காதலிக்கும் இளைஞர்களின் உள்ளத்தைச் சல்லடைக் கண்ணுகத் துளைத்து அவர்களை அலட்சியம் செய்து அதனுல் இன்பம் காண்பவள். இன்னெரு பெண் ரோகிணியோ தாயை எதிர்ப்பவள். தந்தையின் சித்திரத்தை மனத்தில் கொண்டவள். மகன் திலீபனே தந்தையைப் போலவே தாய்க்கடங்கியவன். தாயின் சித்திரத்தை மனத்தில் பதித்துக் கொண்டவன்.

இவ்வாறு பெரும்பான்மையான பாத்திரங்கள் வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பட்டவர்களாக இல்லாமல் ஃப்ராய்டின் கொள்கைக்கு இலக்கணமாகப் படைக்கப்பட்டவர்கள். வார்ப்புகள். நாம் ஏற்கனவே கூறியபடி நடப்பியலை விட்டு முற்றிலும் விலகிய களனை எடுத்துக் கொண்டதாலேயே இத்தகைய கதை மாந்தர்களை உலவ விட முடிந்திருக்கிறது எனலாம்.

இந்நாவலின் கதாநாயகனுன காமேஷ் நீட்ஷேயின் அதிமனிதன். வாஸவேச்வரத்தின் பெரிய பாட்டாவைப் பற்றிய ஆசிரியையின் கருத்தை ஏற்கனவே கண்டோம். இக்கருத்துக்கள் புதிய கோணங்கியான காமேஷுக்கு முற்றிலும் பொருந்துகின்றன. காமேஷ் இளமை முதலே பிறரை அடக்கியாளும் திறன் பெற்றிருந்தான். பிறரைச் செயலுக்கு ஊக்குவிக்கும் திறனுடையவனுக இருந்தான். ஆசிரியையின் சொற்களில் கூறுவதானுல் வருங்காலத்தைக் கணிக்கக்கூடிய சக்தி சிறுவயதிலேயே அவனுக்கிருந்தது. மனித உள்ளங்களைத் தன்னிஷ்டப்படி ஆட்டிவைக்கும் ஆற்றலுமுண்டு.

பின்னுளில் சில சக்தி வீரர்களைத் திரட்டி எங்கோ ஒரு மூலையிலிருந்து கொண்டு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கிருன். சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற ஒரு பாத்திரம் நாடக அரங்கிற்கு வருவது போன்ற தோற்றம் கொடுக்கிருன். மனே தத்துவ ரீதியான (ஃப்ராய்டிஸ நவீன ஃப்ராய்டிஸ வழியிலான) சிகிச்சை வழங்கி இவன் சமூகத்தை ஆளுகிருன்.

இந்நாவலில் நாம் ஏற்கனவே கூறியபடி பார்லிமெண்டரி ஜனநாயகம் வெறும் மேற்பூச்சாகவே காட்டப்படுகிறது. அது அரசியல்வாதிகளின்'பசிக்கு'இரைபோடும் ஒரு அமைப்பாகவே காட்டப்படுகிறது. நாட்டின் விதியை நிர்ணயிக்கும் காமேஷோ பதவியில் அமராமலேயே நாட்டையும், அரசியலையும் ஆள்கிருன். ஜனநாயகத்தின் பேரிலோ சோஷலிஸத்தின் மேலோ சிறிதும் பற்றற்ற-ஏன் இவ்வுயர்ந்த அமைப்புக்களையே வெறுக்கும் — நீட்ஷேயின் கீழ்க்கண்ட கருத்தோடு முழுக்க ஒத்ததாக இருக்கிறது. 7

"ஆளப்பிறந்தவர்கள் ஆட்சி புரிவார்கள்; ஆனுல் அரசாங்கத்தில் பங்குபெற மாட்டார்கள்; அரசாங்கத்தின் உண்மையான வேலை வெறும் ஏவலாள் செய்ய வேண்டிய வேலை. ஆனுல் ஆளப்பிறந்தவர்கள் பதவியில் அமர்ந்திருப்பதைக்காட்டிலும் தத்துவஞானி-அரசியல் ஞானி ஆகிய தன்மைகள் இணைந்தவர்களாக இருப்பார்கள். பொருளாதாரத்தையும், படையையும்இவர்கள் அடக்கியாள்வார்கள்;ஆனுல் தமக்குள்ளே முதலாளிகளைப்போன்ற போர் வீரர்களாகவே வாழ்கிருர்கள். மெருகேறிய பண்புடையவர்களாகவும், திரமும் பலமும் கொண்டவர்களாகவும் அவர்கள் இருப்பார்கள்;அறிஞர்களாகவும் தளபதிகளாகவும் அவர்கள் ஏககாலத்தில் விளங்குவார்கள்".

இக்கருத்துக்கள் ஃபாஸிஸக் கருத்துக்கள் என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமேதுமில்லை.

6.1 இந்நாவலில் அடிப்படையாகக் காணக்கிடைக்கும் இன்னெரு அம்சம் தமிழ் நாட்டுச் சித்தர்களையும், பாரதியையும் நவீன ஃபிராய்டிஸத்துக்குட்படுத்த ஆசிரியை எடுத்துக்கொண்டுள்ள முயற்சியே யாகும்.

6.1.1 எரிக்ஃப்ராம் ஸென்-புத்தமதத்தைத் தமது கொள்கையை விளக்கப் பயன்படுத்தியுள்ளதை ஏற்கனவே குறிப்பிட்டோம். ஸென் புத்த மதம் (தியான புத்தமதம் என்று பொருள்) ஜப்பானில் தோன்றியதெனினும் அதன் வேர் இந்தியாவில் நிலவிய தாந்திரீக புத்தமதமாகிய

வாஜராயண புத்த மதத்தில் கிளைத்தெழுந்ததாகும். இவ்வாஜராயண புத்த மதத்தில் பஞ்ச மகாரங்கள் அனுமதிக்கப்பட்டன. மத்யா (மது) மாம்சம், மத்ஸ்யம் (மீன்) முத்ரா (பெண்) மைதுனம் (கலவி) ஆகியவையே பஞ்ச மகாரங்கள்.[8] ஸென் புத்த மதம் இத்தகைய பழக்கங்களைத் தன்னோடு இணைத்துக்கொண்டு தியானத்தின் மூலமும் யோகப் பயிற்சிகளின் மூலமும் ஞானத்தை அடையலாம் எனப் போதித்தது. அதாவது சிற்றின்பத்தின் மூலம் பேரின்பத்தை அடையலாம் எனப்போதித்தது.

6.1.2 எரிக்ஃபிராம் இப்பிரிவு புத்தமதத்தைத் தனது கொள்கையை நிறுவப் பயன்படுத்திக்கொண்டது போலவே கிருத்திகாவும் தமது நாவலில் நவீன ஃபிராய்டிஸத்தை நிறுவ, சக்தி வழிபாட்டையும், சித்தர்களுடைய தத்துவத்தையும் பயன்படுத்தியிருக்கிறார். பண்டைய தத்துவத்தையும் புதிய மனோ தத்துவங்களையும் இணைத்து ஒரு புதிய கோணங்கியை இவர் நம்முன் காட்டியிருக்கிறார்.

6.2 இந்நாவலுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பெயரிலிருந்து தொடங்கிக் கதை நெடுகிலும் பாரதியின் கவிதைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக பாரதி காதல் பற்றியும், கலவி பற்றியும் எழுதியுள்ள கவிதைகள் ஃபிராய்டிஸத்தோடு தொடர்பு படுத்திக் காட்டப்பட்டிருக்கின்றன.

6.2.1 பாரதியின் மேல் தமிழ்நாட்டுச் சித்தர்களின் பாதிப்பு-அதன் தாக்கம் எவ்வளவு என்பது இன்றைய நிலையில் இன்னும் ஆராயப்படவேண்டியதாகவே உள்ளது. ஆனால் ஃபிராய்டிஸத்துக்கும் அவனுடைய சக்தி வழிபாடு, சித்தர் கருத்து ஆகியவற்றுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றுகூற ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை.

6.2.1.1 பாரதி வாழ்ந்த காலம் இந்தியா அடிமைப்பட்டுக்கிடந்த காலம். ஒரு பெரும் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டிய மக்கள் மனமொடிந்து கிடப்பதன் காரணத்தை அவன் ஆராய்ந்தான். இவ்வுலகமே மாயையென்பதும், விதிப்படி எல்லாம் நடக்கும் என்ற கொள்கையும், பெண்ணைப் பேயெனக் கூறும் கருத்தும், உலகம் துன்பமயமானது என்ற தத்துவமும் மக்களிடையே ஆழ்ந்து ஊடுருவி நிற்பதே இச் சோர்வுக்குக் காரணம் என அவன் உணர்ந்தான். இவ்வகையத் தத்துவங்களை எதிர்த்துப் போராடினான். பெண்ணின்பம் பொய்யென்ற கருத்தை எதிர்த்துக் காதலும், கலவியும் உண்மை இன்பங்கள் என அவன் ஆர்ப்பரித்தான். இக்கருத்தின் உச்சகட்டமாகப் பெண்ணைச் சக்தியென்று அவன் வழிபட்டான். மக்களை 'மந்தைகள் என அவன் கருதவில்லை' எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்றே அவன் முழங்கினான். கிருத்திகாவைப் போல அன்றி ஒரு சிறு கூட்டத்துக்கு மக்கட் குலம் அடிமைப் பட்டுக்கிடப்பதை அவன் எதிர்த்தான். பிரச்னைகளுக்குரிய தீர்வை அவன் புறவயமாகப் பார்த்தான், அகவயமாகப் பார்க்கவில்லை.

6.2.1.2 பெண் விடுதலை பற்றிப் பேசிய பாரதி வரம்பற்ற காதலையும் கலவியையும் அனுமதிக்கவில்லை. விடுதலைக் காதல் (Free love) கொள்கையை அவன் எதிர்த்தான். அதனால் தான் "வீரமிலா மனிதர் சொலும் வார்த்தை கண்டீர்! விடுதலையாம் காதலெனிற்பொய்மைக் காதல்!" என்று அவன் முழங்கினான். காதலை மார்க்ஸ் கூறியதுபோல 'மனித மதிப்புக்கள் எல்லாவற்றிலும் மனிதத்துவமானது' என்றே பாரதி கருதினான். ஆனால் கிருத்திகாவின் நாவல்களில் கலவி பற்றி மட்டுமே பேசப்படுகிறதேயொழிய காதல் என்ற நுண்ணுணர்வு சித்தரித்துக் காட்டப்படவில்லை. பாரதியின் கண்ணம்மா பாடல்கள் காதலை அழிவற்றது என அவன் கருதியதைக் காட்டுகின்றன. ஆனால் கிருத்திகாவின் நாவல்களோ வரம்பற்ற கலவியை அனுபவிப்பதன் மூலம் மனிதன் சிக்கல் தீர்ந்து வாழலாம் என்ற கருத்தையே முதன்மைப் படுத்திக் காட்டுவதால் அத்தகைய வரைமுறையற்ற கலவியையும், காதலையும் தற்காலிக உணர்வுகள் என்றே காட்டுகின்றன. கருதுகின்றன.

6.2.1.3 ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போராட்டத்தில் பெண்ணுக்கும் இடமுண்டு என பாரதி கருதினான். அவன் படைத்த பாஞ்சாலி இக் கருத்தின் குறியீடேயாகும். ஆனால் புதிய கோணங்கியில் வரும் பெண்கள் வெறும் இன்ப நுகர்ச்சி கருவிகள் மட்டுமேயாகும். சக்தி நிவா

ஸில் காட்டப்படும் இலட்சியப் பெண்கள் கூட அங்குள்ள குலபதிக்குக் கட்டுப்பட்டு நடப்பவர் களே.

இக்காரணங்களினால் பாரதிக்கும் கிருத்திகா வின் ஃபிராய்டிஸக் கருத்துக்களுக்கும் தினையத் தனை தொடர்பும் இல்லை என்பது புலனாகிறது. அவ்வாறு காட்டக் கிருத்திகா எடுத்துக் கொண் டுள்ள முயற்சி பொருந்தாது நிற்கிறது.

7.0 இதுகாறும் நாம் ஆராய்ந்தவற்றி லிருந்து கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வரலாம்.

கிருத்திகாவின் இவ்விரு நாவல்களில் வாஸவேச்வரம் நடப்பியலைப் பிரதிபலிக்கும் நாவல். புதிய கோணங்கியோ நடப்பியலை விட்டு விலகிய படைப்பு. இவ்விரண்டு நாவல் களிலுமே ஃபிராய்டிஸம், நவீன ஃபிராய்டிஸம், நீட்ஷேயிஸம் ஆகியவற்றைப்புகுத்த ஆசிரியை முயன்றாலும் முன்னது நடப்பியலைச் சித்தரிப்ப தால் அதில் இக்கொள்கைகள் மிகப் பலவீன மாகவே காட்சியளிக்கின்றன. இவ்வகையில் ஆசிரியையின் நோக்கம் நிறைவேறவில்லை. ஆனால் புதிய கோணங்கியோ நடப்பியலை விட்டு முற்றிலும் விலகியிருப்பதால் இந்த அகவயக் கொள்கைகள் அப்படைப்பில் ஆதிக்கம்செலுத் துகின்றன.

புதிய கோணங்கியில் சமுதாயப் பிரச்னை களுக்குத் தீர்வு காண ஆசிரியை முயல்கிறார். ஃபிராய்டிஸம், நவீன ஃபிராய்டிஸம் ஆகியவற் றோடு நீட்ஷேயின் பாஸிஸக் கருத்துக்களையும் இணைத்துத் தீர்வுகாண அவர் முயல்கிறார். இம் முயற்சிக்குத் துணையாக ஒரு கற்பனை உலகை யும் சிருஷ்டித்துக் கொள்கிறார். எரிக் ஃப்ராம் ஸென் புத்த மதத்தைத் துணைக்கழைத்தது போலவே இவர் சக்தி வழிபாட்டையும், பாரதி பாடல்களையும் பொருந்தாத முறையில் தனது கற்பனைப் படைப்புக்குள் திணிக்க முயன்றிருக் கிறார். ஒன்றுக் கொன்று பொருந்தாத விஷயங் களைப்பொருத்த எடுத்துக் கொண்ட முயற்சியால் 'புதிய கோணங்கி' நடப்பியலை விட்டு முற்றிலும் விலகி நாவல் எனும் இலக்கணத்துக்கு பொருந் தாது நிற்கிறது.

மேற்கோள்கள்

1 பேராசிரியர் நா. வானமாமலை- தாமரை ஜனவரி 70 இதழ் ஃபிராய்டிஸம் என்ற கட்டுரை.

2 Joseph Reynolds-Freudianism and Neo Freudianism-Peace freedom and socialism Nov. 71-vol 14 Page 38

3 Do Page 39

4 Will Durant-The story of philosophy-Washington Square press Inc-Newyork-Page 421

5 Frank Thilly-A History of Philosophy-Central Book Depot Allahabad-Page 501

6 Sigmund Freud-Collected Papers Vol V-London 1950 Page 285

7 Will. Durant-The Story of Philosophy-Washington Square Press Inc. Newyork-Page 437

8 Prof. P. V. Bapat-2500 Years of Buddhism- The Publication Division-Page 359

ஆரியர் - திராவிடர்.

டாக்டர், சுநீதிகுமார் சாட்டர்ஜி.
(தேசியப் பேராசிரியர், கல்கத்தா. தலைவர், சாகித்ய அகாடெமி.)

1968 ஜனவரியில் இந்தியாவில் முதன் முறையாக நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கம் இந்தியவியல் துறையில் பல அம்சங்களில், குறிப்பாக-விரிந்து பரந்து கிடக்கும் இந்தியவியலுக்கு உட்பட்ட ஆனால் இதுகாறும் ஒதுக்கப்பட்டுவந்த தமிழியல், திராவிடவியல் ஆய்வுகள் சிறப்பிடம் பெற்ற நிலையில் முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. தமிழ், திராவிட இயல்கள் இந்தியவியலில் மிக முக்கியமான சரியான தொரு இடத்தைப்பெற்றுள்ளனவாகும். ஆனால் போதிய சான்றுகள் இன்மை காரணமாகவும், அதனை நிரப்பி உண்மை கண்டறிவதில் மிகையான கற்பனைக்கு இடம் தந்ததன் காரணமாகவும், இந்திய வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி பற்றிய கண்ணோட்டங்களில் தவறான பல போக்குகள் இதுகாறும் இருந்துவந்தன. இதற்குக் காரணம், தமிழர், மற்றும் திராவிட மக்களின் பண்பாட்டு உலகத்தைப் பற்றியும் அவர்தம் பண்பாட்டுக் கொடை பற்றியும் இந்த ஆய்வாளர்கள் சரிவர அறிந்து கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல; அன்னாருக்கு திராவிடம் மற்றும் ஆரியமல்லாத இந்தியப் பண்பாடு பற்றிய சரியான கண்ணோட்டம் இன்மையும், அறியாமையும்கூட முக்கியமான காரணங்களாகும். (அவர்களுக்கு ஆரியமல்லாத பிற இந்தியப் பண்பாடுகளிடத்து ஒரு கசப்புணர்வு இல்லையென்று கூறமுடியாது.) இவையே இந்திய வாழ்க்கைத் தத்துவத்திற்கும், இந்தியரிடமுள்ள இந்தியத் தன்மைக்கும் உள்ள அடிப்படைகளில் ஒன்றாக அமைந்துள்ள, அதாவது ஆரியருக்கு முற்பட்ட இந்திய வாழ்க்கை 'மற்றும் பண்பாடுகளின் அடிப்படையைச் சரிவரக் காணமுடியாமல் போனதற்குக் காரணங்களாகும்.

இந்தோ-ஐரோப்பிய நாகரிகங்களுக்கு முற்பட்ட எகிப்து, ஆசியா மைனர், மெசபடோமியர் முதலிய அண்மைக் கிழக்கு நாகரிகங்கள் வீழ்ச்சியடைந்த பின்னரும், கிரேக்கம், ஆசியா மைனர், ஈரான், இந்தியா முதலிய நிலப் பகுதிகளில் இந்தோ, ஐரோப்பிய இன மக்கள் கி.மு. 15ஆம் நூற்றாண்டு வாக்கில் குடியெறிப் பழம்பெரும் நாகரிகங்களை உருவாக்கத் தொடங்கியதற்குப் பின்னரும் உள்ள பழம் ஐரோப்பாவின் வரலாற்றில் ஆதிக்கம் பெற்றிருந்த ஆரியர், அல்லது இந்தோ-ஐரோப்பியர் பற்றிய கொள்கையே ஆரிய வருகைக்கு முற்பட்ட இந்திய நாகரிகம் பற்றிய ஆய்வு கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஒதுக்கப்பட்டு வந்ததற்கு மூலகாரணமாகும். ஆரிய ஆதிக்கம் பெற்ற இந்திய வரலாறானது அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆசியா, ஓசியானா முதலிய பகுதிகளில் கடந்த 5 நூற்றாண்டுகளாக சிவப்பு, கருப்பு, பழுப்பு, மஞ்சள் முதலிய நிறத்து இனமக்களை வென்று அவர்களுக்கு நாகரிகம் கற்றுத் தந்ததாகக் கூறப்படும் ஐரோப்பியரின் அனைத்துலகப் பரவலுக்கும், ஆதிக்கத்திற்கும் கட்டியங் கூறி வரவேற்கும் ஒன்றாகக் கருதப்பட்டது. 3000 ஆண்டுகட்கு முன்னர் இந்தியாவிற்கு வந்துகுடியேறிய இந்த வெள்ளை நிறத்து ஆரியர்களுக்கு அதே நிறத்தை உடைய ஐரோப்பியர்கள் இரத்தத் தொடர்புடைய சகோதரர்களாகக் கருதப்பட்டனர். இந்தியாவில் ஏற்கனவே வசித்துவந்த பழுப்பு, கருப்பு, மஞ்சள் நிற மக்களாகிய

திராவிட, ஆஸ்திரிய, மங்கோலிய மக்கள் தங்களுக்கென தனி நாகரிகம்,பண்பாடு இல்லாதவர்களாகவே கருதப்பட்டனர். (இந்தக் கருத்து ஒரு வகையில் அறியாமையினுலும், வெறுப்புணர்ச்சியினுலும் ஏற்பட்டதேயாகும். இந்தியாவில் ஆரியர்க்கு முற்பட்டு வசித்து வந்த இம் மக்களை வென்று அடக்கியாள வந்த ஒரு நாகரிகமான இனமாக ஆரிய இனம் கருதப்பட்டது. எனவே, ஆரியப் பண்பாடு மேன்மையான பண்பாடெனவும், அதனைப் பிற இனமக்கள் வேறுவழியின்றி அப்படியே ஏற்றுக் கொண்டார்கள் எனவும் நம்பப்பட்டது. ஆரியர் வருகைக்கு முற்காலத்து மக்களின் பார்பரிஸ நிலைமையும், அந்நிலையில் தோன்றிய எண்ணங்களும் நடைமுறைகளும், இந்து அல்லது ஆரிய சமயம், நாகரீகம் இவற்றின் அடித்தளமாகவே ஆகி, அதுவே ஆரியப் பண்பாடாக வளர்ந்துவிட்டது. இக்காரணத்தினுல் இந்தியாவின், ஆரிய வருகைக்கு முற்பட்ட திராவிட, ஆஸ்திரிய, மங்கோலிய மக்களது பண்பாட்டு அம்சங்கள் பூரணமாக ஒதுக்கப்பட்டு விட்டன.

ஆனுல், இவையெல்லாம் இன்று மாறி விட்டன. ஆரியமல்லாத மற்றவை குறிப்பாகத் திராவிடம் இன்று தனக்குரிய மதிப்பைப் பெற்றுக் கொண்டு வருகிறது. மாறிய இப்போக்கிற்கு மூன்று காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, சென்ற நூற்ருண்டின் இறுதியில் பழந்தமிழ் இலக்கியத்தைப்பற்றியும், அதன் வழி பழந்தமிழ்ப் பண்பாட்டு மரபு பற்றியும் தீவிரமான ஒரு ஆய்வுத் தொடங்கப் பெற்றது என்பதைக் குறிப்பிட வேண்டும். இந்த ஆய்வினை மேற்கொண்டவர்கள் பலர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள், ராவ் பகதூர், சி. வை. தாமோதரம் பிள்ளை (1832—1901), வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி (1871-1903), திருமலை சண்முகம் பிள்ளை (c 1880), சமஸ்கிருதத்திற்கெதிராகத் தமிழைத் தீவிரமாக ஆதரித்த ஏ. கே. அமிர்தம் பிள்ளை (1845—1899), செல்வ கேசவராய முதலியார் (+1921), தற்காலத்திய மதுரைத்தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கிய பாண்டித்துரைத் தேவர் (+1911), யாழ்ப்பாணத்துச் சபாபதி நாவலர் (+1803), வெ. கனகசபை பிள்ளை (+1903), ஜெ. மு. நல்லுசாமிப்பிள்ளை (1860—1920) முதலியோராவார். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த வரிசையில் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர், மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் (1861—1942) ஆவார். இவர் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றை, மிகச் சிரமப்பட்டு உழைத்து ஆழ்ந்தகன்ற புலமையறிவுடன் சிறப்பாகப் பதிப்பித்து வெளியிட்டார். இப்பதிப்புக்கள், முதன் முதலில் தமிழ் அறிவாளிகள் மத்தியில் பழந்தமிழ் இலக்கியத்தைப் பற்றிய உணர்வினை ஏற்படுத்தின. அடுத்துக் குறிப்பிடப்பட வேண்டியவர் கிறித்துவ சமய போதகராகத் தமிழகத்தில் பணியாற்றிய ஜி. யு. போப் (1820—1907) ஆவார். தமிழ் மொழியைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதிய இவரது இலக்கண நூல்களும், திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களின் இவரது ஆங்கிலமொழி பெயர்ப்புகளும், தமிழ், தமிழிலக்கியம் பற்றி வெளி உலகம் நன்கு அறிந்து கொள்ளும்படியாகச் செய்தன.

இது, தமிழர்கள் தமது பழந்தமிழ் இலக்கியச் சிறப்பைக் கண்டறிவதற்குக் காரணமாயிருந்ததுடன், தமிழ், மற்றும் திராவிட வியல் ஆய்வின் உண்மையான ஒரு மறுமலர்ச்சியையும், தமிழ் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் ஒரு விருப்பத்தையும், ஆர்வத்தையும் உண்டாக்கியது. சமஸ்கிருதத்திற்கு அளவுக்கு மீறிக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவமே தமிழின் சிறப்பை ஓரளவுக்கு மறைத்தது என்ற கருத்து சிலவிடங்களில் தோன்றியது. ஆனுல் தமிழ் வேதத்திற்கும், வட அல்லது சமஸ்கிருத வேதத்துடன் அங்கீகாரம் அளிக்கப் பட்டிருப்பது போன்ற செய்திகள் இது முழு உண்மையல்ல என்பதை உணர்த்தினும் மேற்கூறிய கருத்து நிலவி வரவே செய்தது.

இனி, இரண்டாவதாக இந்திய வரலாற்றிற்கும், உலக வரலாற்றிற்கும் புதிய விளக்கங்கள் நடைமுறைக்கு வரத்தொடங்கின. அவற்றில் பழைய நாகரீகத்தை உருவாக்குவதில் இந்தோ — ஐரோப்பியர்களுக்கும், இந்தியாவிலிருந்த அவர்களது ஆரிய சந்ததியினருக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் மறுபரிசீலனைக்குட்பட்டது. வரலாற்று நிலைபெற்ற இந்துப்

பண்பாட்டிற்கும், மற்ற நாகரிகங்கட்கும் உரிய அடிப்படைகளைத் தந்தனவாக ஆரியவருகைக்கு முற்பட்ட பண்பாட்டு அடிப்படைக் கூறுகள் தமக்குரிய உண்மையான பண்புடனும், முக்கியத்துவத்துடனும் அங்கீகரிக்கப்படத் தொடங்கின. இவ்வாறு திராவிடம் தனக்குரிய முக்கியத்துவத்தைப் படிப்படியாகப் பெற்றுவந்தது. சென்ற நூற்றுண்டின் ஆங்கிலம் மற்றும் ஐரோப்பிய மொழி நூலார் வரலாற்று ஆசிரியர் ஆகியோரின் வழியே சென்று தங்களை ஆரியர் வழி வந்தோர் என்று எண்ணிய ஆங்கிலக் கல்வி பெற்ற பிராமணர், க்ஷத்திரியர் முதலிய இந்திய (தமிழகம் உட்பட) மேல் சாதி மக்கள் இந்தியாவில் ஆரியரின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டனர். ஆனுல் பொதுமக்கள், குறிப்பாக பிராமணரல்லாத மக்கள் இதனை ஒத்துக் கொள்ளவில்லை. ஆனுல் இவர்களில் பலர் கல்வியறிவில் மேம்பட்டவர்களல்லர். எனவே அத்தகைய துறையில் இவர்களுக்குச் செல்வாக்கும் இல்லை. தவிரவும், இத்தகைய கருத்துக்களின் வரலாற்றுப் பூர்வமான முக்கியத்துவமும், பாதிப்பும் இவர்களுக்கு தெரியாது. இறுதியில் அவர்கள் தமிழ் ஆய்வின் மறுமலர்ச்சி காரணமாகவும், அடுத்து ஆரியரல்லாத பிறர் இந்தியத் தொன்மைப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றியிருக்கின்ற பங்கு அங்கீகரிக்கப் பட்டதாலும், மூன்ருவதாக இந்தியாவிற்குள் தமிழ், மற்றும் திராவிடத்தின் மறுமலர்ச்சி தந்த ஊக்கத்தின் காரணமாகவும், திராவிடத்தின் (குறிப்பாகத் தமிழின்) பழஞ் சிறப்பினை நிலைநாட்டிக் கொள்ள வழிகண்டு கொண்டார்கள்.

தமிழும், திராவிடமும் ஆய்வு உலகில் தமக்குரிய இடத்தைப் பெற்று மறுமலர்ச்சியை அடைந்ததற்கு மூன்ருவது காரணமாக அல்லது தூண்டுதலாக அமைந்தது சிந்து, பஞ்சாப் நிலப்பகுதிகளில் மொகஞ்சோதோரோ, ஹரப்பாவின் மிக உயர்ந்த நாகரிக வகைகளை இந்தியப் புதைபொருள் ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்துத் தந்ததாகும். (இக்கண்டுப்பிடிப்புக்குத் துணைநின்றவர்கள் இக்கழகத்தின் மேலதிகாரியாகப் பணியாற்றிய காலஞ்சென்ற ராக்கல் தாஸ் பானர்ஜி, மற்றும் இதைப் பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்த சர். ஜான் மார்ஷல், அவருடைய துணைவர்கள் நோனி கோபால் மஜூம்தார், மாதவ சொருப் வாட்ஸ் போன்ருேராவர்) இந்தப் புதைபொருள் நாகரிகத்தில் காணப்படுகின்ற செங்கற்களால் கட்டப்பட்ட இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாடிகளை உடைய வீடுகளைக் கொண்ட நகரமைப்பும், நன்கு கட்டப்பட்ட சாக்கடை அமைப்பும் குளியலறையும், பிறவசதிகளும் இந்த நாகரிகம் அரைகுறை நாடோடிகளாகவும், பெரும்பான்மையும் ஆடு மேய்ப்பவர்களாகவும் வாழ்ந்து வந்த ஆரியர்தம் நாகரிகத்திலும் பேரளவு மாறுபட்டது என்பதை உணர்த்துகிறது. மேலும் இந்த மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் பற்றிய ஆய்வு தொடங்கப் பட்டபோதே, ஆரிய வருகைக்கு முற்பட்ட இந்த நாகரிகம் திராவிட நாகரிகமே என்று அறிஞர்கள் கருதினர். இது தமிழ் மற்றும் திராவிட மரபில் வந்தவர்களுக்கு புதியதொரு எழுச்சியைத் தந்தது. தமிழ், திராவிட ஆய்வுகள் பன்மடங்கு பலத்துடன் தொடங்கின.

இவ்வேளை அரசியல், பொருளாதார நிலைமைகளும் மாறத் தொடங்கின. ஆரியத்துக்குப் பதிலடி தரும் உணர்வையும் உட்கொண்ட திராவிட எழுச்சிக்கு இந்த மாற்றங்கள் கட்டுப்பாடான, வலுவான ஒரு குணத்தையும் தந்தன. அதுவரை கல்வியும், அதிகாரமும் தந்த பேருதவியினுல் அறிவாளிகள் ஜாதியான பிராமண ஜாதி இந்தியாவிலேயே குறிப்பாக தென்னிந்தியாவிலேயே ஆதிக்கம் பெற்ற ஜாதியாக விளங்கி வந்தது. மக்கள் விகிதாச்சார எண்ணிக்கையிலும் பல மடங்காக பிராமணர்கள் அரசாங்க, மற்றும் பிற நிறுவனங்களை முழுக்கவும் ஆதிக்கம் செய்தனர். இதுவே திராவிட மொழிகள் பேசப்படும் மாநிலங்களில் பின்னர் அரசியல் சமுதாயப் பிரச்னைகளாக உருவெடுப்பதற்குரிய பிராமணர், பிராமணரல்லாதார் என்ற போராட்டமாக வளர்வதற்கு மறைமுகமான காரணமாக அமைந்தது. ஏனென்ருல், பிராமணரல்லாத சாதாரண மக்கள் தாங்கள் அலட்சியப்படுத்தப் படுவதாகக் கருதினர். பிராமணர், பிராமணரல்லாதவர் என்று ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக பிராமணரோடு தொடர்பு பட்ட எல்லாமே-சமஸ்கிருதம் உட்பட-வெறுப்புக்கும், சந்தேகத்திற்கும் ஆளாகின. தமிழ் நாட்டில் தமிழர்களே முழுமையாகி ஆதிக்கம் செலுத்தவேண்டும் (பிற திராவிட மாநிலங்

களில் இவ்வுணர்வு ஓரளவு குறைந்த வேகத்துடன் காணப்பட்டது) என்ற உணர்வுடனேயே இந்தவகையான பிராமண, சமஸ்கிருத வெறுப் புணர்வுகள் தோன்றின.

தமிழும் திராவிடமும் பெற்றிருக்கும் இந்த முக்கியத்துவம், அதன் நியாயமான உரிமைக் குட்பட்டதேயாகும். தமிழ் பற்றிய ஆய்வுக்கு இதனுல், இயல்பாகவே புதிய சக்தி தோன்றியது; அது பரவலாகவும் தோன்றியது. இந்து சமயத்துப் புனித நூல்களான வேதங்கள், புராணங்கள் முதலியவற்றின் மொழியென்ற அளவில் சமஸ்கிருதத்திற்கு இருந்த பெரிய மதிப்புடன் இணைந்து கிடந்த ஆரிய ஆதிக்க உணர்வானது திராவிடவியல் ஆராய்ச்சியில் ஒரு தவருன கண்ணேட்டத்தையும் உண்டுபண்ணியது என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்

வட இந்தியாவில் சிந்து, கங்கை வெளிப் பிரதேசங்களில். ஆரியர் ஆரியரல்லாதவர் இனங்களிடையே ஏற்பட்ட கலப்பின் வழியாக பெருகிய மக்களிடையே கி. மு. ஐந்தாம் நூற்ருண்டில் இந்து சமயமானது (அதன் முப்பெரு வடிவங்களாகிய பிராமணீயம், சமணம், பௌத்தம் ஆகியவற்றுடன்), அதாவது, ஆரிய, திராவிட, ஆஸ்திரிய, மங்கோலிய இனங்களின் கலப்புப் பண்பாடாகவும், மதமாக விளங்கிய இந்து சமயம் உருவாகி அங்கீகரிக்கப்பட்டது. ஆரியர், திராவிடர், நிஷாதர், கிரபதர் (ஆரியரின் தலைமையில்) ஆகியோரால் உருவாக்கப்பட்ட கலப்புப் பண்பாடு. சமயம் தெற்கே ஆந்திரம். கர்நாடகம்,கேரளம், தமிழகம்ஆகிய பகுதிகளுக்குப் பரவிப் பெருகியது. காவியங்களிலும், புராணங்களிலும் காணப்படுவது போலவே, பிராமணியத்தின் தோற்றத்திலும் ஆரியர், திராவிடர் தொடர்பு இந்தியாவில் ஏற்பட்ட காலத்திலிருந்தே, ஆரிய திராவிடக் கொள்கைகளும், நம்பிக்கைகளும், சடங்குகளும் பின்னிப் பிணைந்து கிடந்தன. கி. பி. முதல் ஐந்து நூற்ருண்டுகளில் தெற்கில் இக்ஷ்வாகு, பல்லவ, கங்க, சாளுக்கிய அரசர்கள் காலத்தில் பெரும்பாலான பிராமண, பௌத்த, சமண ஆச்சாரியர்கள் வந்து குடியேறத் தொடங்கியவுடன் திராவிட ஆரிய நிலங்களின் இணைப்பு முழுஅளவில் நடைபெற்றது.இந்தியாவின் மிகப் புராதனமான, பிராமணப் பழங்கதைகளும், புராணங்களும் (ஜைன, புத்த சமய புராணங்களும், அச் சமயத் துறவிகளின் கதைகளும் உட்பட) சிறந்த கலைத் தோற்றங்களாக திராவிட நாட்டில், அமராவதி, நாகார்ஜுன கொண்டா, மகாபலிபுரம், காஞ்சிபுரம், பாதாமி, பட்டாட்கடல், முதலிய பகுதிகளிலும் ஆரிய, மகாராட்டிர வருகைக்கு முற்பட்ட கன்னட நாட்டுப் பகுதிகளாகிய கர்லா, பஜா, அஜந்தா, எல்லோரா, எலிபெண்டா, கனேரி முதலிய பகுதிகளிலும் தோன்றி வளர்ந்தன. தென்னகத்து ஞானிகளான கேரளாவில் தோன்றிய சங்கரரும் தமிழகத்து இராமானுஜரும், துளு நாட்டைச் சேர்ந்த மத்வரும், வடநாட்டில் இவர்களுடைய துணைவர்களும், ஆதரவாளர்களுமான இராமனந்தர், கபீர், சைதனியர், நானக், சங்கர தேவர், வல்லபாச்சாரியா, துளசிதாசர் முதலியோரும் இந்தியாவின் இன்றைய இந்து சமய மக்களிடையே செங்கோல் செலுத்தும் பிராமண தத்துவங்கள் கோட்பாடுகள், பிராமண சமய நிறுவனங்கள் ஆகியவற்றை உருவாக்கினர். இந்து சமய உலகைக் காக்கவும், அதற்குப் புத்துணர்ச்சியளிக்கவும் திராவிட ஆரியப் பகுதிகள் இரண்டுமே, தம் பகுதிகளிலிருந்து விஜய நகர அரசர்கள், இராஜபுத்திரர்கள், சிவாஜி, குரு கோவிந்தசிங் முதலிய பல பெருவீரர்களைத் தந்திருக்கின்றன.

சமஸ்கிருதமானது திராவிடக் கடவுள்களோடு ஒன்ருக்கப்பட்ட ஆரியக் கடவுள்களின் இந்து உலகின் பொதுவான (ஆரிய, திராவிட, ஆஸ்திரிய,மங்கோலியக் கலப்பான) ஆராதனைக்குரிய கடவுள்களினுடையவும், முனிவர்களினுடையவும் மொழி என யாவராலும் மௌனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதானது இந்துக் கோட்பாட்டில் மனிதனின் ஆதிகாலத்துத் தொன்மையான மொழி என்ற இடத்தை சமஸ்கிருதத்திற்குத்தந்தது. இந்நிலைமைக்குச் சிலவிடங்களில் குறிப்பாகத் தமிழகத்தில் இலேசாக எதிர்ப்பு இருந்தபோதிலும், மற்ற இடங்களில் அது கற்றுக் கொள்ளப்பட்டது. சமஸ்கிருதம் தொன்மையான மொழி என்ற அளவில் அதுவே பிறமொழிகளுக்கு மூலம் எனவும் இயற்கையாகவே அப்பகுதிகளில் ஒத்துக் கொள்ளப் பட்டது. தமிழ் உட்பட்ட திராவிட மொழிகள்

சமஸ்கிருதத்தின் மறுவடிவங்களாகவும், திராவிட பிரகிருதம் என்றழைக்கப்பட்டவற்றின் (சொல்லளவில் தான் உண்மை நிலையிலல்ல) திருந்திய வடிவங்களாகவும் கருதப்பட்டன. (சிந்தனையற்ற சமஸ்கிருதப் பற்றாளர்கள் போன்ற தமிழ், திராவிடப் பற்றாளர்கள் சமஸ்கிருதமே மூலம் என்ற கருத்திற்கு நேர்மாறாக திராவிடமே மூலம் என்ற கருத்தும் தோன்றியுள்ளது) சமஸ்கிருதத்தில் வழங்கும் சொற்களாகிய பிகா (குயில்,இலத்தீன் மூலச் சொல் பிகஸ்) நேம (பாதி; பழம் பாரசீக மூலம் நேம என்பது: தற்காலப் பாரசீக மூலம் நீம்), சத (வேதச் சடங்குகளில் பயன்படும் ஒரு மரப் பாத்திரம்; மூலம் தெரியவில்லை), தாமரச (தாமரை; மூலம் தமிழ்) முதலிய சொற்களை மீமாம்ச சூத்திரங்களின் பழைய உரைகாரராகிய சபா சுவாமி என்பவர் கடன் வாங்கப்பெற்ற பிறமொழிச் சொற்களாகக் கூறுகிறார். ஆனால் மீமாம்சத் தத்துவத்திற்கு உரையெழுதிய அவருடைய வழித் தோன்றலும், கி. பி. 6-ம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் தமிழகத்திலிருந்து வடக்கே வந்தவர் என்று கருதப்படுபவரும் ஆகிய குமாரில பட்டர் என்பவர் பழந்தமிழ்ச் சொற்களாகிய சோறு, அதர், பாம்பு, மால், வயிறு முதலிய சொற்களுக்கு வடமொழியிலிருந்து மூலம் கூற, (மீமாம்ச தத்துவ உரையில் இவ்வாராய்ச்சி தேவையற்ற ஒன்று எனினும்) முயலுகிறார்.

பிற்காலத்தில் தமிழே முழுமையாக பிராகிருத மொழிகளிலிருந்து தோன்றியது என்று காட்டுவதற்கும், தமிழ்ச் சொற்கள் சமஸ்கிருத மூலத்திலிருந்தே தோன்றின என்று காட்டுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அறிவியலுக்குப் புறம்பான இத்தகைய முயற்சிகள் இப்போது பழங்கதையாகி விட்டன. தற்கால மொழி ஆராய்ச்சி முறைகளாகிய விளக்கமுறை, வடிவமைப் பாராய்ச்சி முறை, ஒப்பீட்டு முறை, வரலாற்று முறை முதலிய முறைகள் இன்று தமிழ், மற்றும் திராவிட மொழிகளின் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இதனடிப்படையில் திராவிட மொழிகளின் ஒலியியல், சொல்லியல், தொடரியல், பொருளியல், முதலிய மொழிக்கூறுகள் ஆராயப்பட்டு அவற்றிற்குரிய உயர்ந்த பெருமையான இடங்களும் நிறுவப்பட்டுள்ளன. சமஸ்கிருதம் போன்ற பிற மொழிக் குடும்பங்களிலிருந்து வேறுபட்ட ஒரு தனிக்குடும்பமாகத் திராவிட மொழிக் குடும்பம் இன்று நிறுவப்பட்டுள்ளது.

இவ்வாறு இங்கே, தமிழ் திராவிட மொழியியல்களின் மேன்மையையும், விடுதலையையும் நாம் காணுகிறோம். தமிழின் சொந்த இயல்பு அல்லது பண்பினை நாம் கண்டறிகிறோம். இது வரை நம்மிடமிருந்து மறைக்கப்பட்டு வந்த தமிழ்,திராவிட மொழி நிலைகளின் வல்லமையையும், வளர்ச்சியையும் வெளிக் கொணர்கிறோம். இந்தப் பணிகளில் பல நாடுகளின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். தங்களுடைய பிறப்புரிமை போன்று இத்தகைய ஆராய்ச்சிப் பணியைக் கருதும் திராவிட மொழி பேசும் அறிஞர்கள் மட்டுமல்லாது பிற இந்திய அறிஞர்களும், திராவிடவியல் ஆராய்ச்சியில் கவனம் செலுத்துகின்றனர். தவிரவும், இப்பெரும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட பல வெளிநாட்டு அறிஞர்களும் நமக்குக் கிடைத்துள்ளனர். அவர்களுள், சென்ற தலைமுறைகளைச் சேர்ந்த இராபர்ட் தெநொபிலி, கான்ஸ்டான்டைன் பெஸ்கி, பார்த்தோலோமியோ, சீகன் பால்கு மற்றும் கால்டுவெல், கிரால், பிரௌன், கிட்டெல், குண்டாட், போப், வின்சன், ஸ்டென்கொனவ், ஹார்ன், கிரையர்சன் முதலியோர்களும், அண்மையில் வாழ்ந்து சென்ற யூல் பிளாக், பி. மெயில், ஆல்பர்ட் மாஸ்டர், கூயிப்பர் முதலியோரும் குறிப்பிடத் தக்கவர்களாவர். இவர்களைத் தவிர, இன்று நம்மிடையே வாழும், கமில்சுவல பெல், எம். எஸ். ஆன்ட்ரெனவ், யூரி கிளாஸொவ், டி. பர்ரோ, எம். பி. எமனோ முதலியோரும் திராவிடவியல் ஆராய்ச்சிக்கு நமக்குக்கிடைத்த அறிஞர்களாவர். இப்பொழுது மற்ற எந்த மொழியியல் ஆராய்ச்சியையும் போல இவ்வாராய்ச்சியும் சிறந்த எதிர்கால முடைய பயன் மிக்கத்துறையாக விளங்குகிறது. வேதாந்த சமயக் கொள்கைகளோடு சிக்கிக் கிடந்த நிலைமை பழங்கால நிகழ்ச்சியாகி விட்டது. திராவிட மொழியாராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றிகண்ட இந்திய அறிஞர்களாகிய கே. வி. சுப்பையா, எல். வி. இராமசாமி ஐயர், பி. எச். கிருஷ்ணமூர்த்தி போன்ற பலரை இங்கு

குறிப்பிட வேண்டியதில்லை என்றெண்ணு கிறேன்.

தமிழ், திராவிட மொழியியல் ஆராய்ச்சி கள், பிறமொழிச் செல்வாக்கு, மொழிஇடையீடு முதலியன தவிர பிற நிலைகளில் வேற்றுமொழிக் குடும்பங்களிலிருந்து தனியாகவும், தொடர்பு படுத்தாமலும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், தமிழ், திராவிட பண்பாடுகளைப் பற்றி ஆராயும்போது, குறிப்பாக இந்தியா முழுமைக் கும் பொதுவான தத்துவங்கள், சமயங்கள் பற்றிய உண்மைகள் காணப்படும்போது, இவை திராவிடத்தையும் திராவிடம் அல்லாததையும் பாதித்திருப்பதைக் காணும்போதும் மிகவும் எச்சரிக்கையாக அணுக வேண்டும். ஏனெனில், திராவிடப் பண்பாடு என்று தனித்துச் சிறப் பித்துக் கூறுவதிலும் வேறான தன்மைகள் பண் பாட்டாராய்ச்சியில் காணப்படும். இந்திய நாகரிகம், இந்திய வாழ்க்கை முறை, இந்திய சிந்தனைப் போக்கு, இந்திய சமயம், இந்திய சமுதாய ஒழுக்கம், உண்மை உணர்வு பற்றிய இந்தியக் கண்ணோட்டம் முதலிய அனைத்தும் ஒரு தனி ஒருமையை அளிக்கின்றது. புதிய சில அமைப்புக் கூறுகளைப் பிறநாட்டு மதங்களாகிய இஸ்லாமியமும், கிறித்தவமும் இங்கேகொண்டு வந்தாலும் கூட அவை இந்திய வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப்படையோடு ஒன்ருது மேலெழுந்தநிலையில் இருப்பதால், மேற்குறிப் பிட்ட இந்தியப் பண்பாட்டின் தனியொருமை சிதையாமலேயே காணப்படுகிறது. இது, தொன்மைத் திராவிடமும், தொன்மை ஆரியமும் சேர்ந்து புதிதாக உருவான ஒரு இராசயனக் கலவையேயன்றி, பிரிக்கப்படக் கூடிய பௌதிகக் கலவையல்ல. 2500 ஆண்டுகளாக இந்த ஒருமதம் இடவேறுபாடுகள், குறுகிய ஜாதி வேறுபாடுகள் முதலியவற்றிற்கு ஏற்ப சில மாறுதல்களுடன் பல பிரிவினதாக்கவும் காணப் பட்டாலும், இந்திய இந்துக்கள் அனைவரையும்- பிராமணரோ, பௌத்தரோ, சமணரோ யாரா யினும் — ஒருங்கிணைக்கும் அமைப்பாக விளங்கு கிறது. ஆரிய இலக்கியங்களும், திராவிட இலக்கியங்களும் சில இலக்கிய வழக்குகள் நீங்கலாக (உதாரணமாக, நிலம், பொழுது பாகு பாடுகளை மக்கள் வாழ்க்கை ஒழுக்கங்களுக்கு இணையாக செய்யுள் மரபில் பழந்தமிழ் இலக் கியம் கூறுகிறது. பழந்தமிழ் இலக்கியத்திற்கே உரிய இம்மரபு பிற திராவிட மொழி இலக்கியங் களில் காணப்படவில்லை. சமஸ்கிருதம் மற்றும் பிற இந்தோ—ஆரியமொழி இலக்கியங்களிலும் இது சிறிதும் காணப்படவில்லை.) பிற இடங் களின் புற, அகச் சூழல்களில் ஒன்று பட்டிருக் கின்றன. இராமாயணம், மகாபாரதம், சாணக்கியநீதி, காமாந்தகம் முதலிய சமஸ் கிருத இலக்கியங்களை, தத்துவங்களையும் படித்து, தமிழின் பத்துப்பாட்டு, நாலடியார், சிலப்பதிகாரம், தேவாரம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் முதலிய நூல்களையும் படித்தால் அயல்மொழி இலக்கியங்களைப் படிக்கிரோ மென்ற உணர்வு இராது. வர்ணனை, நீதி, பக்தி முதலிய வகைகளின் சிறந்த சமஸ்கிருத இலக்கியங்களைத் தழுவி தமிழிலும், கன்னடம் தெலுங்கு மொழிகளிலும் இலக்கியங்கள் பல தோன்றியிருக்கின்றன. தமிழ் இலக்கியங்கள் காட்டும் தமிழகத்து அக, புறப் பண்பாட்டு உலகத்தினை சமஸ்கிருத இலக்கியப் பின்னணியிலிருந்து பிரித்துவிட முடியாது. தொல் காப்பியத்திற்கு (எழுத்து, சூ.,) உரை யெழுதிய சிவஞானமுனிவரின் கூற்று இங்கு நினைவுகூறத் தக்கது. 'வடநூல் உணர்ந்தார்க் கன்றி தமிழ் இயல்பு விளங்காது'.

இந்த ஆரிய, திராவிடத்தின் இணைப்பில்- தென்னகத்தின் பண்பாட்டுக் கலவையின் ஒரு குறியீடாக அகத்தியர் விளங்குகிருர். இந்த அகத்தியர் ரிக்வேதத்தில் மித்ரா, வருண ஆகி யோரின் மகனாகவும், உலோபாமுத்திராவின் கணவராகவும் சொல்லப்படுகின்ற முனிவரல்லர். இங்கு நாம் குறிப்பிடும் அகத்தியர் தென்னகத் தில் ஆரியர்கள் பெருமளவில் பரவத்தொடங்கிய கி. மு. 5ம் நூற்ருண்டு வாக்கில் வாழ்ந்தவரா யிருக்கலாம். ரிக்வேதத்திற்குப் பிற்பட்ட அகத்தியராகிய இந்த ஆரிய முனிவர் வட இந்தியாவிலிருந்து விந்திய மலைகளைத் தாண்டி வந்தவர். இவர் முதலில் கன்னடம், துளு நாடுகளின் தெற்கே கூர்க் பகுதியில் குடகுப் பிரதேசத்தில் தங்கியிருந்தார். அதன் பின் என்றுமே அவர் வடக்கே திரும்பவில்லை. அந்தக் குடகுப் பகுதியில் காவேரா என்ற தலைவனின் மகள் காவேரியை மணந்து கொண் டார். அவர் தன்னுடன் வடமொழி வேதங் களைப்பற்றிய அறிவினைத் (வேதத்தை பழந் தமிழர்கள் மறை என்ருர்கள். இவ்வேதம் ஆரியர்

களின் ஞானத்திற்கு உட்பட்டது.) திராவிடம் பேசுகின்ற தெற்குப் பகுதிக்குக் கொண்டு வந்தார். தவிரவும், அவர் இலக்கண நூல்கள் எழுதித் தமிழ் மொழியை வளர்க்கவும் முற்பட்டார். அகத்தியரும், தொல்காப்பியம் எழுதிய அவருடைய மாணவராகிய தொல் காப்பியரும் இல்லாத தமிழ் அல்லது திராவிடப் பண்பாடு பற்றியோ, இலக்கியம் பற்றியோ நம்மால் சிந்தித்துப் பார்க்கவும் முடியுமா? அகத்தியரால், உணர்வூட்டப்பட்ட தொல்காப் பியமே சங்கத் தமிழுக்கு அடிப்படை நூலாக விளங்குகிறது; தவிரவும் தமிழின் ஒலியியல், சொல்லியல், இலக்கியப் பொருள் முதலியவற் றிற்குத் திறவுகோலாக தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் அதிகாரங்கள் விளங்கு கின்றன. அகத்தியர் என்ற ஆளுமையில் பழந் தமிழ் இலக்கியத்தைப் போலவே சமஸ்கிருதத் தின் உணர்வும், தமிழின் உணர்வும் ஒன்றாக ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆரியம், ஆரிய மல்லாத உணர்களின் கலவையாகிய இந்து சமயத்தையே முக்கியமாகக் கொண்ட சமஸ்கிருத உணர்வை இந்த சிந்தனையிலி ருந்தும், இலக்கியத்திலிருந்தும் நீக்குவதென்பது நெய்யப்பட்ட ஆடையிலிருந்து அதன் குறுக்கு நெடுக்கலான இழைகளைப் பிரித்தெடுப்பது போலாகும்.

இந்தியப் பண்பாடு பாதிக்குமேல்-பழைய பாணியில் சொல்லப் போனால் ஒரு ரூபாயில் எட்டணுவுக்கும் மேலாக—திராவிடத்தாலானது, என்று சொல்லாம். திராவிடப் பண்பாட்டுக் கூறு பெரும்பாலும் வெளிப்படையாகத் தெரியா மல் உட்கிடக்கை நிலையில் இருக்கிறது. மேலும் அதன் செயல் மிக அமைதியானதாகவும், அதே நேரத்தில் பூரணத்துவம் பொருந்தியதாகவும் வழங்குகிறது. சமஸ்கிருதக் கூறுகளும் அவற் றின் பின்னைய வடிவங்களும் பெருமளவு திராவிடக் (ஆரியமல்லாத பிறவும்) கூறுகளை ஏற்றுக்கொண்டு மூலமான தம்சொந்த இந்தோ-ஐரோப்பியப் பண்பிலிருந்து வெகுதூரம் விலகிச் சென்று, அதே நேரத்தில் திராவிடத்தோடு மிக அண்மையில் நெருக்கிக் கொண்டிருக்கின்றன. சமஸ்கிருதத்தில் மிக அதிகமாக வழக்கத்தி லுள்ள சொற்களில் 400-500 வரை திராவிட மூலங்களைக்கொண்டவை. இவ்வாறு இங்கே சமஸ்கிருதமானது திராவிடர், மற்றும் ஆரிய லல்லாத பிற மக்களுக்கும் அன்னியமாகக்காட்சி யளிக்கவில்லை. உண்மையில், திராவிடமும், ஆரியமும் ஒரு பொதுவான இந்தியப் பண் பாடாக ஒன்று கலந்துள்ளன. சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் மற்றும் தற்காலத்திய இந்தோ-ஆரிய மொழிகள் இத்தகைய இந்தியப் பண்பாட்டினைப் புலப்படுத்துவது போலவே, தமிழ், மற்றும் திராவிட மொழி இலக்கியங் களும் நன்கு புலப்படுத்துகின்றன. இராமாயனம், மகாபாரதம், பாகவதம், பிற புராணங்கள் முதலியனவும், சிவன், உமை, விஷ்ணு. ஸ்ரீ முதலிய கடவுள்கள் பற்றிய கொள்கைகளும், தோற்றத்திலும், ஈர்ப்பிலும் இந்தியப் பொதுப் பண்பைப்பெற்றுள்ளன. அதேபோல் வேதாந்தம் அல்லது வேத மௌலி எனும் 'மறைமுடி' தத்துவம் தன்னுடைய வேறுபட்ட சில கோட் பாடுகளுடன், பல்வேறு இனங்களையும், மொழி களையும் கொண்ட இந்தியாவில் இந்து உலகம் அல்லது இந்தியத் தன்மையால் அரசியல், பண்பாட்டு ஒருமைப் பாட்டிற்கு அடிப்படை அம்சமாக அமைகிறது. கடந்த 2500 ஆண்டு களாக உள்ள கூட்டு ஒத்துழைப்பு, ஒன்றிணைவு இவற்றின் வாயிலாக இந்தியாவின் ஆரிய, திராவிடக் கலப்புப் பண்பாட்டில், அன்பு, கருணை ஆகியவற்றின் கடவுளாக விளங்கும் விஷ்ணுவும், அறிவு, ஞானம் ஆகியவற்றின் கடவுளாக விளங்கும் சிவனும் என்ற இரு பெருந் தெய்வீகக் கூறுகளும் ஹரிஹரனாக, மால்—சிவனாகப் பிரிக்கவியலாது இரண்டறக் கலந்து பாரத்பரா அல்லது பரமசிவம் அல்லது பெரும் பரனாக, யாவற்றினும் சிறப்பான மேலானதொரு தனியொருமையாகக் காட்சியளிப்பதைப் போன்ற ஒன்றினை நாம் காணுகிறோம்.

இங்கே நாம் கி. பி. 7ம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழகத்து சைவ சமயக் குரவராகிய திருநாவுக்கரசர் கூறிய ஒரு கூற்றினை நினைவிற் கொள்ளவேண்டும்:

ஆரியன் கண்டாய்
தமிழன் கண்டாய்

எனவே, இத்தகைய ஆரிய, திராவிட ஒன்றிணை வின் வழியாக, நம்முடைய பண்பாடு, இனங் களின் தோற்றங்களைப் பற்றிய உண்மையான உணர்வுடன் ஒன்றுபட்டு வாழவேண்டும்.

சமஸ்கிருதமும் வாழ்க. தமிழும் வாழ்க.

தமிழாக்கம்: சு. நடராஜன் எம். ஏ,

வரலாறும் வக்கிரங்களும்

டாக்டர் ரொமீலா தப்பார்,

வரலாற்று ஆசிரியன் பழங்காலத்தைப் பற்றி அக்கரை கொண்டுள்ளவனுயினும், அவன் ஆராய்கிற சமூகத்தின் வருங்காலத்தில் ஒரு முக்கியப் பாத்திரமுடையவனுக இருக்கிருன் என்பது ஒரு விநோதமான முரண்பாடாக இருக்கிறது. வரலாற்று முற்காட்சியோடு ஒரு சமுதாயத்தின் தோற்றத்தையும் படிமுறை வளர்ச்சியையும் அறிய முயலுவது வரலாற்று ஆசிரியனது ஆர்வம். சமுதாயம் என்ற சொல் மக்களது வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியதாகும். தனது ஆராய்ச்சியின் விளைவாக வரலாற்று ஆசிரியன் ஒரு சமுதாயத்தின் கருத்துப்படிமத்தை உருவாக்கினுன். பழங்காலச்சான்றுகளைக் கையாளும் பொழுது தற்காலநிலைகளால் அவன் பாதிக்கப் படுகிருன். வரலாற்றின் பொருளைக் காண்பதில் இருவித மனச்செயல் முறைகள் இருக்கின்றன. தற்காலத் தேவைகளை கடந்த காலத்தில் காண முயலுவதும், பழங்காலத்தின் படிமத்தை தற்காலத்தின் மீது பதிக்க முயலுவதும் அவ்விரு செயல் முறைகளாகும். பழங்காலத்தின்படிமம் வரலாற்ருசிரியன் வருங்காலத்திற்கு அளிக்கும் நன்கொடையாகும். இப்படிமத்தைத் தற்காலத்தார் அரசியல் புனைகதைகளை உருவாக்க பயன்படுத்துகிருர்கள். இத்தகைய அரசியல் மேல் கோப்புகளுக்கு வரலாற்று ஆசிரியர்கள், சமூக ஆய்வாளர்களது கொள்கைகளிலிருந்து அறிவியல்ஆதாரங்கள்பெறப்படுகின்றன. அண்மைக் கால நிகழ்ச்சிகளிலிருந்து இப்போக்கிற்கு இரண்டு உதாரணங்களைக் காட்டலாம். 'ஆரிய இனத்தின் (race) உயர்வு' என்ற கொள்கை இட்லருக்கும், பாஸிஸ்டுகளுக்கும் உதவியாக இருந்தது. இந்துக்களும், முஸ்லிம்களும் இரு வேறு (nation) நாட்டினர்' என்ற கொள்கை பாகிஸ்தானை உருவாக்க ஆதாரமாக இருந்தது. ஆனுல் இக்கொள்கை 'பங்களாதேஷ்' நிகழ்ச்சிகளால் உடைத்தெறியப் பட்டது. ஆயினும் ஒரு பரம்பரைக்காலம் முழுவதும் திரிபுபட்ட படிமங்களால் உணர்வூட்டப்பட்டது. இத்தகைய ஆதாரங்கள் தற்காலத்தை பழைமையின் மீது பதித்த செயல்களாகும்.

ஆனுல் சில ஆண்டுகளாக வரலாற்றின் ஆய்வு முறைகள் மாறி வந்துள்ளன. துல்லியமானதும், பகுப்பு வழிப்பட்டதுமான ஆய்வுகள் வரலாற்றியலில் தோன்றி வருகின்றன. புதிய சான்றுகளும், புதிய விளக்கங்களும் பழமையை மெய்யியல்-பாங்கோடு காணவும்,புதிய மதிப்பீடு செய்யவும் உதவுகின்றன. இவை வரலாற்று ஆராய்ச்சியைப் புதிய திசையில் திருப்பியுள்ளன. வரலாற்று ஆசிரியனும் சான்றுகளின் தன்மை பற்றியும், கடந்த காலத்தில் வரலாற்று நூல்கள் அரசியல், சமுதாயத் துறைகள் உண்டாக்கும் விளைவுகள் பற்றியும் சுயஉணர்வு கொள்ளத் தொடங்கிவிட்டான். தனது படிப்பியல் நாணயத்தை இழந்துவிடாமல் எக்காலத்திலும் இல்லாதபடிக்கு இன்று வரலாற்ருசிரியன் சமுதாயத்திற்கு தனது பங்கைச் செலுத்தும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தற்கால வரலாற்று நூல்கள் கடந்த இரண்டு நூற்ருண்டுகளில்தான் தோன்றியுள்ளன. இக்காலத்தின் தேவைகள் சில கருத்தோட்டங்களையும் கொள்கைகளையும் ஆதரித்தன. இவை இப்பொழுது பொருத்தமற்றவையாகிவிட்டன. அடிமைக் காலத்தில் அவசியமாயிருந்த பட்டிமன்ற விவாதமுறை வரலாறு எழுதுவதற்குப் பொருத்தமற்றதாக ஆகிவிட்டது. நமது பண்பாட்டையும், வரலாற்றையும் விமர்சன ரீதியாக ஆராய்வதற்குரிய சுய நம்பிக்கை நமக்கு ஏற்படவேண்டும்.

தற்காலத்தை அறிந்து கொள்வதற்கு இந்திய வரலாற்றின் அடிமைக்கால வரலாறு ஒரு முன்னுரையாகும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுவர். ஏனெனில் அக்கால நிகழ்ச்சிகள் தற்காலத்தோடு நேரடியான தொடர்புடையவை. ஆனுல் மிகப் பழங்காலம்

கூடத் தற்காலத்தோடு நேரடியான தொடர்புடையது என்பதை இப்பேச்சுக்களில் நான் உணர்த்த விரும்புகிறேன். பொதுவாகப் பழமையை வரைந்து காட்டும் கருத்துக்கோலங்களை முதலில் விவாதிப்போம். இக்கோலங்கள் பல, உவப்பு வெறுப்புகளின் விளைவாக வக்கிரமானவை. பழைமை பற்றிய கோலங்களை நமது மனத்தில் மாற்றிக்கொள்வதற்குத் தேவையான புதிய சான்றுகளையும், விளக்கங்களையும் அடுத்தாற்போலச் சுட்டிக்காட்டுவேன்.

'இந்தியர்கள் வரலாற்று உணர்வில்லாதவர்கள் அவர்கள் தங்களது வரலாற்று ஆவணங்களைப் பாதுகாத்து வைக்கவில்லை' என்பது ஒரு பொதுஜன நம்பிக்கை, இந்தியர்கள் தங்களது ஆவணங்களைப் பாதுகாத்துத்தான் வைத்திருக்கிறார்கள். எவை முக்கியமானவை என பண்டைய இந்தியர்கள் கருதினார்களோ அவற்றையெல்லாம் காப்பாற்றி வைத்துள்ளார்கள். கொடிவழிப்பட்டியல்கள், கோயிலொழுகுகள், விகாரை வரலாறுகள் போன்ற சமய நிறுவனங்களின் சரித்திரங்கள் இவையெல்லாம் இன்று கிடைக்கின்றன. இவை வரலாற்று மரபின் மூலப் பகுதிகள்தாம். ஆனால் அவை சமகால நிகழ்ச்சிகளின் வருணனைகளாக இல்லாததால் வரலாற்றுச்சான்றுகள் என்ற தன்மையில் உயர்ந்த மதிப்புடையனவல்ல. ஆனால் கி. பி. 500க்குப் பிறகு சமகால வருணனைகள் தோன்றின. ஆஸ்தான வரலாறுகளும், வரலாற்றுத் தன்மையுடைய வாழ்க்கை வரலாறுகளும் துருக்கிய, முகலாய அரசர்கள் ஆதரவினால் எழுதப்பட்டன. இவை அனுபவ வருணனைகள் என்பதால் வரலாற்று மதிப்பு பெரிதும் உடையவை. இம்மரபு தற்காலம் வரை நீடித்தது. ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வந்தபொழுது இந்திய வரலாற்றைத் தேடினார்கள். கி. பி. 1000க்குப் பின்னுள்ள கால நிகழ்ச்சிகளைப்பற்றி அவர்களுக்கு அதிகமான சான்றுகள் கிடைத்தன. ஆனால் அதற்கு முற்பட்டகாலம் பற்றிய சாசனங்கள் பிராமி மொழியில் இருந்தாலும் இந்தியர்கள் அந்த வரிவடிவத்தை மறந்து போய் விட்டதாலும் ஆங்கிலேயரின் ஆதரவில்தான் இந்தியாவின் பழங்காலம் பற்றிய ஆய்வுகள் நிகழ்ந்தன. இந்தியாவின் பழங்காலத்தைக் கடந்த இருநூறு ஆண்டுகளில் தோன்றிய விளக்கங்களைக் கொண்டுதான் நாம் அறியமுடிகிறது. இதுதான் இந்தியாவின் பழமை பற்றிய ஆராய்ச்சியின் மிகப்பெரிய இடர்ப்பாடு.

பழைய வரலாற்றாசிரியர்கள் வரலாறு எழுதியதற்கும், இன்று வரலாறு எழுதப்படுவதற்கும் வேறுபாடு உள்ளது. சான்றுகளைக் கையாளுவதில் இரண்டு அம்சங்கள் தற்கால வரலாற்றாசிரியனைப் பாதிக்கின்றன. ஒன்று தற்கால விஞ்ஞானப் புரட்சி. இதன் ஆய்வு முறைகளால், ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட ஆய்வுகளால் பழங்காலத்தை வெளிப்படுத்த வேண்டும், சான்றுகளை சோதித்தறிய வேண்டும் என்ற முயற்சி தோன்றியுள்ளது. மற்றொன்று தேசீய எழுச்சியின் விளைவால் உருவான 'தேசீயக் கொள்கை' (national ideology). பொதுப் பண்பாடு, பொதுக் கொள்கை பொது வரலாறு என்ற அழுத்தங்களைக் கொண்டது, தேசீயக் கொள்கை. தேசீயக் கொள்கையை நிரூபிக்கும் வழியில் உலக முழுவதிலும் வரலாற்று ஆராய்ச்சி வழிப்படுத்தப்படுகிறது.

ஐரோப்பாவில் 18-ம் நூற்றாண்டில் தோன்றிய தேசீயம், ஐரோப்பியப் பழங்கால வரலாற்றைப் புதிய பார்வையில் காண்கிறது. ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் குடியேறிய ஐரோப்பியர்கள், இந்நாட்டு வரலாறுகளை இப்பார்வையோடு ஆராயவில்லை. வாணிப உறவுகள் கலோனியல் உறவுகளாக மாறியவுடன், அவர்கள் வரலாற்றை அறிவார்வத்தால் கற்றுக் கொள்வதைப் பார்க்கிலும், ஆட்சி நிர்வாகத்தை நடத்த உதவுவதற்காகவே கற்றுக்கொண்டார்கள். ஓர் அடிமை நாட்டினரின் மரபுகள், மதிப்புக்கள், நடத்தை வகைகள் (behaviour patterns)—ஆகியவற்றைப்பற்றி அறிய அவர்களது வரலாற்றை ஆராய்தல் வேண்டும்.

இந்தியப் பழைமையைத் தேடிப்பார்த்த பொழுது பழைமை பற்றிய பல விளக்கங்கள் தோன்றின. அவை முதன் முதலில் தோன்றியவையாதலால் திரும்பத் திரும்பக் கூறப்பட்டு அச்சு வார்ப்புகள் போலாகிவிட்டன. இன்று இவை கேள்விக்குரியனவாயினும், அவை பரவலாக நம்பிக்கை உருவத்தில் ஆய்வாளர்கள் மனத்தைப் பாதிக்கின்றன. இவற்றுள் சில

வார்ப்புகள், ஏகாதிபத்தியத்தின் தேவைகளோடு தொடர்புடையன. பொருளாதார ஏகாதிபத்தியம், பண்பாட்டு ஆதிக்கத்தை நிறுவிக்கொள்ளும். அவ்வாறின்றி அது நிலைக்க முடியாது. இந்நோக்கில் வரலாறு எழுதுபவர்கள் இந்தியாவின் பழங்காலத்தை ஏகாதிபத்திய நலன்களுக்கு உகந்த முறையில் சித்திரித்தார்கள். ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்தவர்கள் இந்திய தேசிய உணர்வு, சிந்தனைகள் என்ற நோக்கிலிருந்து, அவர்களுடைய கொள்கைக்குப் பழமையில் ஆதாரம் தேடிக் கண்டுபிடித்தார்கள். இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இந்திய தேசீயக் கொள்கை அரசியலில் மட்டுமின்றி, எல்லா அறிவுத் துறைகளிலும் இந்திய தேசீயத்தின் பாதிப்பு காணப்பட்டது. வரலாற்றாசிரியர்கள், இந்திய தேசீய நோக்கினுல் முழுமையான பாதிப்பைப் பெற்றுர்கள். இந்தியப் பழமையை கருத்துருவமாக்கும் முயற்சியில் இந்திய தேசீயம் பங்கு பெற்றது.. அவ்வாறு தான் உருவாக்க உதவிய கருத்துருவத்தால் தானும் மாற்றமடைந்தது. தேசீய உணர்வினுல் பாதிக்கப்பட்ட வரலாற்றாசிரியர்கள், இந்த மாற்றங்களைத் தம் வயப்படுத்தினர். ஏகாதிபத்தியத்தின் பண்பாட்டு ஆதிக்கத்தை, ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் தேசீயவாதிகள், தாங்களே 'பண்பாட்டு தேசீயம்' என்றதோர் கொள்கையையும் உருவாக்கி, பண்பாட்டு விடுதலைக்கும் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இக்கொள்கைத் திட்டங்களின் மூலம் உள்நாட்டுப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக்காகப் பணிபுரிய அவர்கள் முயன்றுர்கள். அடிமைத்தனம் (Colonialism) தொழிலபிவிருத்தி, பொருளாதாரப்பின்னிடைவு ஆகிய தன்மைகளை எதிர்த்து நிற்க வேண்டிய தேவை இந்தியர்களுக்கு ஏற்பட்டதால் இவற்றின் எதிர்ப்பே அவர்களது அறிவியலின் உள்ளடக்கமாயிற்று.சான்றுகள் குறைவாகக் கிடைத்ததால் அவர்கள் இவ்வெதிர்ப்பை அச்சுவார்ப்புகளாகப் படைத்தனர். புதிய சான்றுகள் இப்பொழுது கிடைத்திருப்பதால், இந்த அச்சுவார்ப்புகள் கேள்விக்குரியனவாகிவிட்டன. இவ்வச்சுவார்ப்புகளில் சில நீடித்து நிலைத்துவிட்டதால் வரலாற்று விளக்கப் போக்குகளையும், அரசியல் கொள்கைகளையும் அவை பாதித்துள்ளன.

இவ்வார்ப்புகளில் இன்னும் நீடித்திருக்கும் கருத்து ஒன்றை குறிப்பிடுவோம். "இந்திய சமுதாயம் மாறுதல் அடையாதது. அதன் அடிப்படை ஜாதி அமைப்பு இறுக்கமானது. மாறுதலை அனுமதிக்காதது." அல்லது "இணக்கமும், முரண்பாடின்மையும் இந்திய சமுதாயத்தின் அடிப்படைகள். இதுவோர் பொற்கால சமுதாயம்." இந்த நம்பிக்கைகள் இன்னும் நம்மிடையே உள்ளன. இவற்றுள் முதலாவது நம்பிக்கையின் மீதுதான் "கீழ்த்திசை எதேச்சாதிகாரம்" என்ற கொள்கை எழுப்பப்பட்டது. இக்கொள்கை ஐரோப்பாவில் பிரபலமாயிற்று. ஆசியவரலாற்றை இக்கொள்கையின் நோக்கில் ஐரோப்பிய அறிவாளிகள் கண்டனர். 19வது நூற்றுண்டில் இக்கொள்கை புத்துயிர் பெற்றது. மற்றேர் கருத்துவார்ப்பு; "கீழ்த்திசைப் பண்பாடும் மேல் திசைப் பண்பாடும் பெரிதும் வேறுபட்டவை. கீழ்த்திசைப் பண்பாடு ஆன்மீகவயமானது. பொருள் வயமானது அன்று. மேல் திசைப் பண்பாடு பொருள் மதிப்புகளை ஆதாரமாகக் கொண்டது." விவேகானந்தர் இக்கருத்தை எழுதினுர்.

"......மேலைநாட்டார் புலன்கள் வழியே அறியப்படும் உலகை உண்மையெனக்கருதுவது போலவே கீழ்த்திசை நாட்டார் ஆன்மீகஉலகை உண்மையெனக் கருதுகின்றனர். ஆன்மீகத்தில் கீழ்த்திசை நாட்டார்தாம் விரும்புவதனைத்தையும், நம்புவதனைத்தையும் காண்கிருன். வாழ்க்கையை உண்மையெனக் காண்கிற அனைத்தும் அவனுக்கு ஆன்மீகத்தில்தான் உள்ளது."

இந்திய வரலாற்றுக் கருத்துக்களைப் பெரிதும் பாதித்துள்ள வற்றுள் ஆன்மீகவய-பொருள் வயப்பாகுபாடு ஒன்று மட்டுமன்று. இதுபோன்ற முரண்பட்ட இரட்டைக் கருத்துக்கள் பல வரலாற்று நோக்கங்களைவிட, அரசியல் நோக்கங்களுக்கே உதவுகின்றன. இனவேறுபாடுஎன்று ஊகிக்கப்படும் ஒரு வேறுபாட்டில் இரட்டைக் கருத்துக்கள் உருவாகியுள்ளன. ஆரிய-திராவிடர் இந்து முஸ்லிம் என்பன போன்றவை அவை. இனம், நாடு, பண்பாடு முதலிய பண்புகளின் அடிப்படையில் வேற்றுமைகளை இயல்பானவை என்று கூறவும், பூசல்களை நியாயப்படுத்தவும் இவ்விரட்டைக் கருத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. பிரிட்டிஷ் முற்கால இந்தியாவில் இந்த வார்ப்புக்கள், வரலாற்றுச் சான்றுகளாகக் கிடைக்கவில்லை என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது.

ஆரிய இனம் என்பது இந்திய மரபிற்கு அந்நியமானது. 'ஆரியர்' என்ற சொல் சமுதாயத்தின் மேலோர் என்ற பொருளிலும்,மிலேச்சர் ஆரியரல்லாதார் என்ற பொருளிலும் பண்டைய இந்திய இலக்கியத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த வேறுபாட்டின் அம்சங்கள் மொழியும், வர்ணசிரம தருமமும் ஆகும். அதாவது ஜாதி அமைப்பு முறையும், ஒருவனது வாழ்க்கையின் நான்கு கட்டங்களும் (ஆசிரமங்கள்) ஆகும். வேறுசில வேறுபாடுகளும் பழஞ்சுவடிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை தோற்றமும், வழிபாட்டு முறையுமாகும். இதிலிருந்து ஆரியர்கள் ஒரு இனத்தாரல்லர், (ஒரே சமுதாயத்தின், ஒரே இனத்தின்) ஒரு பண்பாட்டுப் பிரிவுவகை, என்பது தெளிவாகிறது. பண்டையநூல்களில் 'ஆரிய வர்த்தம்' என்ற சொல் ஆரியர் நாடு என்ற பொருளில் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு நூலிலும் இதன் பூகோளப்பரப்பு வேறுபட்டுக் கூறப்படுகிறது. பிற்கால வேத மூலங்கள் (Vedic texts) ஆர்யவர்த்தம் என்பது கங்கை யமுனை நதிகளின் இடைநிலம் என்று கூறுகிறது. இந்தப் பகுதிக்கு வெளியேயுள்ள நாடுகளை மிலேச்ச நாடு என்று அது அழைக்கிறது. மகதம், அங்கம் (பாட்னு, கயா, மாங்கிர், மகல்பூர் பகுதிகள்) ஆகிய நாடுகளில் சங்கீரண ஜாதியார்(கலப்புச் சாதி) வாழ்வதாகவும். அவர்களோடு ஆரியர்கள் உறவு கொள்ளக் கூடாதென்றும் அந்நூல் கூறுகிறது. ஆனால் ஜைன நூல்களில் மகதமும், அங்கமும் ஆரியவர்த்த நாடு என்று கூறப்பட்டுள்ளது. பௌத்த நூல்கள் கங்கை, யமுனை நதிகளுக்கு இடைப்பட்ட நிலத்தை ஆரியவர்த்தமென்று கூறாமல், அதற்குக் கிழக்கேயுள்ள ராஜமகால் பகுதியை அப்பெயரிட்டு அழைக்கிறது. பிற்காலத்தில் மனு விந்தியமலைத் தொடருக்கு வடக்கிலுள்ள நிலப்பகுதி முழுவதையும் ஆரியவர்த்தம் என்றழைக்கிறார். இனம் (race) என்ற பண்பைக் கொண்டு இத்தேசம் வரையறுக்கப்பட வில்லை. ஏனெனில் இனம் என்ற வரையறுப்பையே தற்கால ஐரோப்பிய மானிடவியலாரும், இனவியலாரும் (ethnologists) தான் உருவாக்கினர்.

18ம் நூற்றாண்டிற்கு முன்னர் இந்தியர்கள் மற்ற நாட்டினரைவிடத் தாங்கள் ஆன்மீக மேம்பாடு உடையவர்கள் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கவில்லை. இந்திய வாழ்க்கைமுறை ஆன்மீகத்தைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டதாக இருக்கவில்லை. மனிதனது வாழ்க்கை இலட்சியங்களாகப் பண்டை நூலாசிரியர்கள் கருதியவை, 'தர்மம், அர்த்தம்,காமம், மோட்சம்' என்பனவாகும். இவற்றுள் எவையும் முனைப்பின்றிச் சமநிலையில் இருத்தல் வேண்டுமென ஒழுக்க நூல்கள் போதிக்கின்றன. ஆன்மீகத்தை மிகைப்படுத்தியோ, பொருளை மிகைப்படுத்தியோ, நீதிநூலார் எழுதவில்லை.

'இந்திய சமுதாயம் மாறாநிலைபேறுடையது'என்ற கருத்துக்கு மாறான வரலாற்றுண்மைகளைப் பண்டைய நூல்களில் காணலாம். சமுதாய மாறுதல்கள் பல அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. சில மாறுதல்களை அவர்கள் விரும்பி வரவேற்றார்கள். சிலவற்றைக் கண்டித்தார்கள். இந்து, பௌத்த, இஸ்லாமிய பிரபஞ்சவியல்கள் (cosmology) 'சமுதாயம் மாறிக்கொண்டேயிருக்கிறது' என்று அறிவுறுத்துகின்றன. முழு நிறைவான நிலையிலிருந்து சமுதாயம் தாழ்வடைந்து வருவதாக இம்மூன்று தத்துவச் சார்புடையோரும் கருதினர். ஆயினும் 'இறுதியில் மனித சமுதாயம் முழு நிறைவை நோக்கிச் சென்றுவிடும்' என்றும் அவர்கள் கருதினர். அது சத்திய யுகமாகவோ,இறுதித்தீர்ப்பு நூலாகவோ இருக்கலாம். அப்படியானால் 'மாறாத தன்மை' என்ற வார்ப்பு எப்படித்தோன்றியது? தற்காலத்தில் அவை எப்படி அறிவாளிகளைக் கவர்ந்தன? இதற்கு விடைகாண கடந்த இருநூறு ஆண்டுக் காலத்தின் அரசியல் பண்பாட்டுப் பின்னணியை நாம் ஆராய்தல் வேண்டும்.

வேறு ஆசிய நாடுகளின் கலோனியல் கால கட்டத்தில், பழமையைப் பற்றிய மதிப்பீட்டு முயற்சிகளில் இத்தகைய வார்ப்புகளைக் காணலாம். கடந்த சில பத்தாண்டுகளில் உயர்ந்த இனம், ஆன்மீக மேம்பாடு, மாறாதபொற்காலம் போன்ற கருத்துருவங்களை ஆரியப் பண்பாடுகளின் ஆராய்ச்சியில் நாம் காண்கிறோம்.

இக்கருத்துருவங்களைக் கொண்டுள்ளோர் இரு பிரிவினராவர். அவர்கள் அறிவாளிகளும், அதிகார வர்க்கத்தினரும் ஆவர். அறிவுத் துறை முயற்சிகளால் பல புதிய சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இம்முயற்சியில் கடின

மான உழைப்பும், எல்லையற்ற ஆர்வமும் காணப்பட்டது. வரலாற்று அனுமானங்களை யும், விளக்கங்களையும் உருவாக்குகிற போது வார்ப்புகள் குறுக்கிட்டன. வார்ப்புகளை ஏற்றுக் கொள்ளுவதில் ஆய்வாளருக்கும் மற்றோர் ஆய் வாளருக்கும் அளவில் வேறுபாடு இருந்தது.

அறிவாளிகளில் இக்கருத்துக்களை வலுவாக வெளியிட்டவர் மாக்ஸ்முல்லர் ஆவார். அவர் இந்தியப் பண்பாட்டில் நேசம் கொண்டிருந்த ஐரோப்பிய அறிவாளிகளில் ஒருவராவார். எதேச்சாதிகாரம், பின்னிடைவு ஆகிய இரண்டு தன்மைகளையும் பண்டைய இந்தியப் பண்பாட் டில் மிகையாகக்கண்ட அறிவாளிகளின் கூற்று களை இவர் மறுத்தார். கிரேக்க மொழிக்கும் சமஸ்கிருத பாஷைக்கும் உள்ள மொழியியல் இணக்கத்தைக்கண்டு ஓர் புதிய ஆர்வம் ஐரோப்பிய அறிவாளிகளிடையே உண்டா யிற்று. இதனால் ஒப்பீட்டு மொழியியலை அவர் கள் கற்றார்கள். அதன் விளைவாக இந்திய — ஐரோப்பியப் பண்பாடுகளினைத் தோற்றுவித்த வர்கள் ஆரியர்கள் எனக் கருதுகிற சிந்தனைப்படி மங்கள் உருவாயின. சமஸ்கிருதத்தை ஐரோப்பிய அறிவாளிகள் கற்றுக் கொண்டதன் மூலம், தாங்கள் பண்டைய ஐரோப்பியப் பண்பாட்டின் இழந்துபோனதோர் சிறகைக் கண்டுவிட்டதாக நினைத்தார்கள். சமஸ்கிருதம் பேசியவர்களைப் பற்றி மாக்ஸ்முல்லர் நினைத்ததாவது;

"......இந்திய ஆரியர்கள் நமது அறிவுலக உறவினர்கள். அதிசயமான பாஷையாகிய சமஸ்கிருதத்தை உருவாக்கியவர்கள். அடிப் படைத் தத்துவ சிந்தனைகளைப் படைத்தவர்கள். இயற்கையான இயற்கைச் சமயத்தைத்தோற்று வித்தவர்கள். பளிங்குபோலத் தூய்மையான புராணங்களை எழுதியவர்கள். மிகவும் நுண்மை யான தத்துவத்தை சிந்தனையால் நிர்மாணித்த வர்கள். விரிவான ஒழுக்க விதிகளைக்கூறும் தர்ம சாஸ்திரங்களை எழுதியவர்கள்."

ஆரியரது மேன்மையை இந்திய மதிப்புக் கள் அனைத்திற்கும் அவர்கள் விஸ்தரித்து அவர் களைப் பற்றிப் பின்வருமாறு எழுதினர். "...... அவர்கள் செயலூக்கம், போர் ஆர்வம், பொருளாசை முதலிய இயல்புடையவர்களல்லர். ஆனால் சாந்தம் தியானம், சிந்தனை முதலிய தெய்வீகப்பண்புகளுடையவர்கள்."

இந்த இலட்சியத் தன்மைச் சித்திரத்தை பிளவாட்ஸ்கியும் அன்னிபெஸன்டும், பிரம்ம ஞான சங்கத்தாரும் முழுமையாக்கினர். இதன் மிகைப்படுத்தப்பட்ட வளர்ச்சியைத் தற்கால ஹரேகிருஷ்ண இயக்கத்தில் காணலாம். இத் தகைய பூர்ணத்துவமான சமுதாயம் என்ற கற்பனைக்குக் காரணம் மாக்ஸ்முல்லர் 19-ம் நூற்றுண்டின் இந்திய கிராமத்தைக் குறைபாடு களில்லாததாகக் கருதியதுதான். இக்கிராம வாழ்க்கையையே அவர் இந்திய சமுதாயத்தின் சாந்திமயமான அணுவாகக் கண்டார். இந்தியா விற்கு மாக்ஸ்முல்லர் ஒரு முறைவந்து கிராமங் களில் சிலவற்றைப் பார்த்திருப்பாராயின் இத் தகைய அதீதக் கற்பனைக் கோட்டைகளைக் கட்டி யிருக்கமாட்டார்.

ஒப்பியல் மொழி ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆய்வுகளால் ஐரோப்பிய, இந்திய மொழிகள் பல ஒரே தாய்மொழியினின்றும் தோன்றியது என்ற அனுமானம் செய்தனர். இந்தத் தாய்மொழியினின்றே சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன், கெல்டிக், டியூட்டானிக், இரானியன், தொச்சாரின் முதலிய மொழிகள் தோன்றினவென்றும் இவற்றிடையே உள்ள ஒற்றுமையால் இவற்றைப் பேசுகிறவர் ஒரே இனத்தவர் என்றும், அவர்கள் ஆரியரென்றும் ஐரோப்பிய மொழியியலாளர் கருதினர். இக் கருத்தைப் பிரச்சாரமாக்கிவிட்டனர். இந்தியா வில் வேத இலக்கியம் ஆரியர்களது சிந்தனை, உணர்ச்சிகளின் வெளியீடு என்றும் அவர்கள் பழங்குடி மக்களை வென்று அடிமைப்படுத்தி, இத்துணைக்கண்டம் முழுவதும் பரவினர் என்று அவர்கள் நம்பினர். ஆரியர்கள் இனத்தூய்மை ஜாதி அமைப்பால் பாதுகாக்கப்பட்டதென்றும், ஆரியருக்கும் ஆரியரல்லாதாருக்குமிடையே இருந்த வேற்றுமைகள் நிலைத்திருந்தன என்றும் அவர்கள் வாதித்தனர். ஆரிய பரம்பரைத் தொடர்ச்சியைக் காப்பாற்றி வருகிறவர்கள் பிராமணர்கள் என்பது அவர்கள் கருத்து. ஆரிய ரல்லாதவர்கள் யார் யார் என்பதற்கும் பட்டியல் கள் தயாரிக்கப்பட்டது. ஐரோப்பாவில் அவர்கள்

யூதர்களும், செமிடிக் மக்களும் ஆவார்கள். இந்தியாவில் அவர்கள் திராவிடர்கள், இனக்குழுப் பழங்குடி மக்கள் கீழ்சாதியார்கள் ஆகியோராவர். இவ்வாறு ஆரிய—திராவிட இரட்டைப்பிரிவுக் கருத்து உருவாக்கப்பட்டது. மொழியியலார் செய்த பெருந்தவறு மொழியையும் இனத்தையும் சமமாக்கிவிட்டது தான். இத்தவறை மாக்ஸ்முல்லர் பிற்காலத்தில் உணர்ந்தார். ஆனால் அதை அவர் வெளியிட்டுப் பிழையைத் திருத்துமுன்னர் 'ஆரிய இனம்' என்ற கருத்து அறிவாளிகளிடையே பரவி நிலைத்து விட்டது. ஐரோப்பிய 'தேசியம்' மொழியினடிப்படையில் வளர்ச்சி பெற்றதால் மொழியையே இனத்திற்கும் ஒரு மூலப்பகுதியாக்கி விட்டனர். இனத்திற்கும் மொழிக்கும் இடையேயுள்ள வேறுபாடு மாக்ஸ்முல்லர் காலத்தில் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. இணக்கமான மொழிகளின் அடிப்படையில் இனங்களைப் பிரிப்பதை நாம் ஏற்றுக்கொண்டால் கி. பி. 4000ல் வரலாறு எழுதப்போகிறவன் இப்படி எழுதுவான்; "இருபதாம் நூற்றுண்டின் மத்தியில் உலகில் ஆங்கிலம் பேசுகிற இடங்களில் எல்லாம் ஒரே இனத்தார் தான் குடியேறி இருந்தனர்."

இந்தியப் பழமையை இலட்சிய உருவமாக சித்தரிப்பதற்கு வேறோர் காரணமும் உண்டு. ஐரோப்பாவுக்கு வெளியே ஓர் 'பொன்னுலகை' (கற்பனையான இன்ப உலகு) காணும் முயற்சிக்கு பண்டைய இந்தியாவைப்பற்றிய மொழியியலாளர், தத்துவ அறிஞர்களது கற்பனைச் சித்திரம் ஏற்றதாயிருந்தது. 19ம் நூற்றுண்டின் நடுவே ஐரோப்பாவில் திகைப்பூட்டும் சமுதாய பொருளாதார மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. தொழில் வளர்ச்சியின் செயல்பாட்டின் ஒப்புக்கொள்ளப்பட்ட மதிப்புகளைப் பற்றி ஐயங்கள் எழுந்தன. 'அந்நியமாதல்' என்ற நிலை மக்கள் உள்ளத்தில் தோன்றியது. பொருள்தேடுவது, போர் செய்வது என்றசெயல்களுக்கும், அதனடிப்படையான மதிப்புகளுக்கும் எதிர்ப்புத் தோன்றியது. இந்தியாவின் பண்டையப் பண்பாட்டை மிகவும் தாழ்ந்ததாகக் கருதியவர்கள் கிறிஸ்தவப் பாதிரிமாரும், ஆங்கில அதிகாரிகளும் ஆவர். கிறிஸ்தவமதத்தை இந்தியர்கள் தழுவினுல் அல்லாமல் அவர்களுக்கு உய்யும் வழி இல்லை என்பது கிறிஸ்தவப் பாதிரிமார்களின் கருத்து. இந்தியப் பண்பாட்டின் சில அம்சங்களை அவர்கள் புகழ்ந்தனர். எனினும் மொத்தத்தில் இந்தியப் பண்பாட்டில் தீய அம்சங்களே அதிகமென அவர்கள் எண்ணினர். 19-ம் நூற்றுண்டின் பயனியல் கொள்கையுடையவர்கள் பகுத்தறிவு வாதிகளாகத் தங்களை எண்ணிக்கொண்டார்கள். பகுத்தறிவுக்கு முரண்பட்ட தத்துவங்கள், இந்தியப் பண்பாட்டின் அம்சங்களாயிருப்பதால் தான் இந்தியா பின்னடைந்துள்ளதாக அவர்கள் கூறினர். தவிரவும் சட்டங்கள் இன்மை,தேக்க முற்ற சமுதாயம், ஏதேச்சாதிகார அரசு, இவை யாவும் இந்தியாவின் தாழ்வு நிலைக்குக்காரணங்கள் என்று அவர்களுடைய பகுத்தறிவு வாதம் அவர்களுக்குப் போதித்தது. ஜேம்ஸ்மில் இக்கொள்கையின் மூலம் இந்தியப் பண்பாட்டைத் தாக்கினுர். அவர் சட்டங்களியற்றுவதன் மூலம் இந்தியாவைச் சீர்திருத்திவிடலாம் என்று கூறினுர். இக்கொள்கை பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு ஏற்றதாக இருந்தது.ஏனெனில் பிரிட்டிஷ் அதிகாரத்தைப் பாதுகாக்கும் வகையில் அவர்கள் சட்டமியற்றிக் கொள்ளலாம். "இந்து வரிவிதிப்பு முறை சுதந்திர வாணிபத்திற்கும், மூலதனத்தின் சுதந்திர இயக்கத்திற்கும் தடையாக இருக்கிறது" என்று மில் எழுதினுர். இந்தியாவில் பிரிட்டிஷாரின் பொருளாதாரக்கொள்கையை வகுத்தவர்களுக்கு இந்த வரையறுப்பு மிகவும் சரியானதென்று தோன்றியது. கீழ்த்திசை ஏதேச்சாதிகாரம் பற்றிய அவருடைய கருத்துக்களை ஏகாதிபத்தியவாதிகள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். இதனுல் தான், இந்தியாவுக்குச் செல்லும் அதிகாரிகளைப் பயிற்றுவிக்கும் ஹெய்லிபரி கல்லூரியில் அவருடைய "பிரிட்டிஷ் இந்தியாவின் வரலாறு" என்ற நூல் பாடப்புத்தகமாக வைக்கப் பட்டுள்ளது.

ஐரோப்பியர்கள் ஆசியாவிற்கு வரத் தொடங்கிய காலத்திலிருந்தே 'கீழ்த்திசை ஏதேச்சாதிகார அரசு' என்ற கொள்கை ஆசியா முழுவதற்கும் பொருந்தும் என்று கூறினுர்கள். பாரசீகத்திலிருந்த அர்க்கிமினிட் பேரரசை கிரேக்கர்கள் இப்படித்தான் வருணித்தார்கள். பாரசீகப் பேரரசு பற்றியும், அவர்களது பெருஞ்

செல்வம் குறித்தும் எழுதிய ஐரோப்பியர்கள் பாரசீக ஆட்சிமுறையையும் அவ்வாறே வருணித்தார்கள். ரோமர்கள், பைஸாண்டியர் கள், மத்தியகால ஐரோப்பியர்கள் எல்லோருமே ஆசியாவை ஏதேச்சாதிகாரத்தோடும், ஆடம் பரத்தோடும்தொடர்புபடுத்தியே சிந்தித்தார்கள். ஐரோப்பாவில் 18-ம் நூற்றுண்டில் அரசியல் சிந்தனைகள்மாறின. நிலத்தை தனிச்சொத்தாகக் கருதுதல், தனிமனித உரிமைகள், ஜனநாயகம் முதலிய புதிய சிந்தனைகள் எழுந்தன. இதே சமயம் "இந்தியாவில் தனிச் சொத்துடைமை இல்லை" என்ற செய்தியை இந்தியாவில் தங்கிச் சென்றவர்கள் பரப்பினுர்கள். இச்சூழ்நிலையில் "கீழ்த்திசை ஏதேச்சாதிகாரம்"பற்றிய விவாதங் கள் மீண்டும் துவங்கின. ஆனுல் இக்கருத்து தெளிவாக விளக்கப்படவில்லை. அதன் வரை யறையும் தெளிவற்றதாகவே இருந்தது. கார்ல்மார்க்ஸ் இதனை ஓர் அரசியல் பொருளா தாரக் கொள்கையாக வரையறுத்துக்கூறினுர். "அரசனுக்கு முற்றிலும் அடங்கிய இயக்கமற்ற கிராம சமுதாயங்கள் கொண்டதுதான்இந்தியா" என்று அவர் எழுதினுர். இக்கிராம சமுதாயங் களுக்குச் சில அரசியல் அதிகாரங்கள் உண் டென்று கூறி அதன் தீய அம்சங்களைக் குறைத் துக்கூறினர். பழமையான இனக்குழு சமுதா யங்களைப்பற்றி கற்பனைவயமான சிந்தனை களோடு இந்திய கிராமங் களைப்பற்றி ஐரோப்பி யர்கள் சிந்தித்தனர். இந்திய கிராம சமுதாயம், பரிணும வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்திலிருந்த தாக அவர்கள் கருதினுர்கள். ஆனுல் மார்க்ஸ் 'அரசியல் அதிகார உரிமை அல்லது கிராம சுயாட்சி' கிராமங்களுக்கு இருந்ததென்னும் பிறர் கருத்திலிருந்து மாறுபட்டு பொருளாதார அதிகார (autarchy) உரிமைகள் கிராமங்களுக்கு இருந்ததாகக்கூறி அரசியலில் இருந்து பொருளாதாரத்திற்கு அழுத்தத்தை மாற்றினுர்.

மார்க்ஸ் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நலன்களை எதிர்த்தார். ஆயினும் அவர்கூட பிரிட்டிஷாரின் வருகையால் யதேச்சாதிகாரம் அழிக்கப்படும் என்று நம்பினுர். "......இங்கி லாந்து இந்தியாவில் ஓர் சமூகப் புரட்சிக்குக் காரணமாயிருக்கிறது. ஆனுல் அதன் நோக்கம் இழிவானது. அப்புரட்சியை நிறைவேற்றும் முறையும் முட்டாள் தனமானது. ஆனுல் அது முக்கியமானதன்று. ஆசியாவின் சமூகநிலையில் ஓர் அடிப்படையான புரட்சி ஏற்படாமல் மனித இனம் தனது விடுதலை இலட்சியத்தை நோக்கி முன்னேற முடியுமா? இங்கிலாந்து எந்த குற்றங் களுக்கும் பொறுப்பாக இருந்த போதிலும் வரலாற்றின் தன்னுணர்வில்லாத கருவியாகச் செயல்பட்டு ஓர் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது."

கீழ்த்திசை ஏதேச்சாதிகாரம் என்ற கொள் கையை இந்திய தேசிய வரலாற்ருசிரியர்கள் எதிர்க்கவில்லை. இது மிகைப்படுத்தப்பட்ட கருத்து ஆகையால் இது எதிர்ப்புக்குத் தகுதி யுடையதன்று என அவர்கள் கருதியிருக்கலாம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இந்திய வரலாற் ருசிரியர்கள் எதிர்த்தார்கள். நவீன பொருளா தார வளர்ச்சியின்மைக்கும், விவசாயிகளின் வறுமைக்கும் அதுவே காரணம் என்று கூறித் தாக்குதல் தொடுத்தார்கள். தாதாபாய் நௌ ரோஜீயும், ரொமேஷ் சந்திர தத்தும் பிரிட்டிஷ் ஆட்சியின் பொருளாதாரக் கொள்கை களை வன்மையாகக் கண்டித்தனர். ஆனுல் பண்பாட்டு, வரலாற்றியல் துறைகளில் இந்தி யாவின் பண்டைக்காலத்தைப் போற்றி எழுதிய ஐரோப்பியர்களுக்கு இந்திய வரலாற்ருசிரியர் கள் துதிபாடினுர்கள். பண்டைய இந்தியப் பண் பாட்டைப் புகழ்ந்தெழுதிய ஐரோப்பிய அறிஞர் களின் கருத்துக்களை, நமதுவரலாற்ருசிரியர்கள் பண்டைக்கால இந்தியாவின் சித்திரமாக தேசிய வாதிகள் உருவாக்கிய சிந்தனைக் கட்டுக்கோப் பில் இணைத்துக் கொண்டார்கள்.

தேசியவாதிகளில் சிலரது கற்பனையை ஆரிய இனம் பற்றிய எண்ணங்கள் தூண்டி விட்டன. ஜாதி இந்துக்கள் பண்டைய ஆரியர் களுடைய பரம்பரையினரென்று கருதப் பட்டனர். அவர்களுடைய பண்பாடு உயர்ந்த தென்று பிரசாரம் செய்யப்பட்டது. இதன் விளைவாக இனவழியாகவும் சமய வழியாகவும் இந்தியா ஒற்றுமை அடைய வேண்டுமென்பது ஓர் லட்சியமாயிற்று. ஒப்பியல் மொழி ஆராய்ச் சிகள் சமஸ்கிருதத்திற்கும் கிரேக்கத்திற்கும் இடையேயிருந்த நெருங்கிய ஒற்றுமைகளை வெளிப்படுத்தியது. இந்தோ ஆரியர்கள் நாகரித் தையே முதன் முதலில் துவக்கியவர்கள் என்று அனுமானம் செய்யப்பட்டது. இதனுல் இந்தி யாவிலுள்ள அனைத்தும் மிகவும் பழமையான தென்று நிருபிக்கும் தேவை ஏற்பட்டது. அது

மட்டுமல்லால் உலகத்திற்கே இந்தியாவிலிருந்துதான் பண்பாடு பரவியது என்று நிறுவ முயற்சிகள் நடந்தன. பண்பாடு மறுமலர்ச்சி சமய உணர்வோடு இணைந்து வளர்ச்சி பெற்றது. இந்துப் பண்பாட்டை மறுமலர்ச்சி பெறச் செய்வதன் மூலமே இந்தியா புதிய வளர்ச்சி, பெறமுடியுமென்று சிலர் நம்பினர். பங்கிம்சந்த்ர சட்டர்ஜியின் 'ஆனந்த மடம்' என்னும் நாவலில் ஒரு கதாபாத்திரத்தின் வாயிலாக ஆசிரியர் கூறுவதாவது: "பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவுக்கு வந்தது விதிவசத்தால்தான். இந்து மதத்தின் பரிசுத்தமான சக்தி மீண்டும் உயிர் பெறத்தான் இந்த ஆட்சி இப்பொழுது நடைபெறுகிறது." அரவிந்தர் 'தேசியம்' என்ற கருத்தை பின்வருமாறு வரையறுத்துக் கூறுகிறார். "......அது ஓர் அரசியல் திட்டமல்ல. கடவுளிடமிருந்து நமக்குக் கிடைத்த ஓர் தெய்வீக மதமாகும். நீங்கள் ஓர் தேசிய வாதியாக இருக்க விரும்பினுல், இத்தத் தெய்வீக மதத்தில் நீங்கள் சேரவிரும்பினுல், நீங்கள் சமய உணர்வோடு செயல்புரிதல் வேண்டும். இந்தியா பரவிப் பெரிதாகும் என்று சொன்னுல் அதன் பொருள் சனுதன தர்மம் இங்கு வளர்ந்து, உலக முழுவதும் பரவும் என்பதே."

'ஆரியர்'-கொள்கை, அதனைப் பின்பற்றியவர்களுக்கு அனுகூலமாயிருந்தது. மேல்சாதி இந்துக்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களோடு நாமும் ஒன்று என்ற எண்ணம் கொள்ள வசதி செய்தது. கேசவ்சந்திரஸென்,"ஆங்கிலேயர்கள் வருகையால் நாம் நீண்ட காலம் பிரிந்திருந்த நமது உறவினர்களை மீண்டும் சந்தித்தோம். பண்டைய ஆரியக் குடும்பத்தின் இரு பிரிவுகள் நெடுநாட்களுக்குப் பின்சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது" சாதிபற்றிய சில போலி விஞ்ஞானக் கருத்துக்களும் இக்கொள்கையிலிருந்துபிறந்தன.

ஏகாதிபத்தியம் தான் ஆளும் நாட்டில் பிரிவினை சக்திகளைத் தூண்டிவிடுவதைக் காண்கிறோம். இதன் முடிவான விளைவு, இரண்டு மூன்று பிரிவினர் தங்களது பண்பாட்டுத் தனித்தன்மையை அழுத்தமாகக் கூறிப் பிரிவினை கோரி அரசியல் அதிகாரத்திற்காகப் போட்டியிடுவதாக இருக்கும். ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளில் இவ்வாறு நிகழ்ச்சிகள் நடைபெற்றதை நாமறிவோம். **பழமையை உயிர்ப்பிக்கும் போக்குகள் பிரிவினையை வளர்க்கும்.** ஏனெனில் அதிகாரப் போட்டியில் இறங்கிய தனித்தனிக் குழுக்கள் வேறுபண்பாட்டு அம்சங்களில் தங்கள்கொள்கைகளுக்கு ஆதாரம் தேடும். தேசீயப் பண்பாடு என்ற கருத்து பலமான விவாதத்திற்குள்ளாகும். இந்தியாவில் இந்துக்களும், முஸ்லீம்களும் இரண்டு முரண்பட்ட பண்பாடுடையவர்கள் என இந்த விவாதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறுவார்கள். மில், இந்தியாவின் வரலாற்றுக் காலங்களை வகைப்படுத்திய முறை, அதாவது இந்துக் காலம், முஸ்லீம் காலம், பிரிட்டிஷ் காலம் என்ற கால வரையறைகள், இந்து முஸ்லீம் பூசலை வளர்க்க உதவியது; அககால அரசியல் சமயப்பிரிவு அரசியலாக மாறிற்று. இந்துக்களாக இருந்த தேசீயவாதிகள் வேத இலக்கியத்தையும், ஆரிய இனக்கொள்கையையும் பிடித்துக் கொண்டு தங்களது தோற்றத்தை விளக்கினுர்கள். முஸ்லீம்கள் பூர்வீக இஸ்லாம் சமயத்தால் தங்கள் தோற்றத்தை விளக்கினுர்கள். முகம்மது இக்பால் எழுதினுர்

"முஸ்லீம்களின் வரலாற்றிலிருந்து நான் ஒன்று கற்றுக் கொண்டேன். அவர்களின் வரலாற்றின் நெருக்கடியான கட்டங்களில் இஸ்லாம்தான் அவர்களைக் காப்பாற்றியிருக்கிறது. அவர்கள் இஸ்லாமைக் காப்பாற்றியதில்லை. இஸ்லாமைப் பற்றிய அக்காட்சியில் லயித்து அதிலிருந்து நீங்கள் உணர்ச்சி பெறுவீர்களானுல், அதன் கருத்துக்கள் உங்களைப் புத்துயிர்பெறச் செய்யும். சிதறிய உங்களுடைய சக்திகளை அது ஒன்று சேர்க்கும். நீங்கள் இழந்த நாணயத்தைத் திரும்பப் பெறுவீர்கள். அதன் மூலம் அழிவிலிருந்து காப்பாற்றப் படுவீர்கள்."

சீர்திருத்தம் விரும்புவோர், பழமையை உயிர்ப்பிக்க முயன்றவர்களின் அறைகூவல்களை விரும்பவில்லை. பழைமை அதன் பங்கை ஆற்றிவிட்டது; அதனை முழுவதுமாக உயிர்ப்பிக்க முடியாது என்று அவர்கள் கருதினர். "பழமை உயிர்ப்பு" முயற்சிகளைக் கண்டித்து எழுதியவர்

களுள் ரானடே சிறந்தவர். அவர் எழுதியவை இவ்வகைக் கருத்துக்களுக்கு ஓர் சிறந்த உதாரணமாகும்.

"எதற்கு நாம் புத்துயிர் அளிப்பது? .... அக்காலத்து மக்களும் தேவர்களும் உண்ணவும் குடிக்கவும் தகாதது எனத் தடுக்கப் பட்டன வற்றையெல்லாம் மிதமிஞ்சி உண்ணவும் குடிக்கவும் செய்தார்கள். புத்துயிர் வாதிகள் அவ்வாறு செய்யவேண்டும் எனத் தற்கால மக்களைக் கேட்டுக் கொள்ளுவார்களா? பழங்காலத்து பன்னிரண்டுவகை ஆண்மக்களையும் (சந்தானம்) எட்டுவகைத் திருமணங்களையும் இப்பொழுது உயிர்ப்பிப்பார்களா? அத்திருமணங்களில் சிறையெடுத்து மணம் புரிவதும், மணம் ஆன வளைக் கடத்திக்கொண்டு செல்லுவதும் பழங் காலத்தில் அனுமதிக்கப் பட்டவையாக இருந் தனவே. சகோதரர்களின் விதவைகளைப் புணர்ந்து கர்ப்பதானம் அளிக்கும் 'நியோகம்' என்னும் பண்டைய வழக்கத்தை புத்துயிர் வாதிகள் அனுமதிப்பார்களா? ரிஷிகள் ரிஷிகளான விருந்தினர்களை வரவேற்கும் பொழுது தமது மனைவியரை விருந்தினரோடு சயனிக்க அனுமதித்த வழக்கத்தைமீண்டும் உயிர்ப்பிக்க முடியுமா? ஆண்டு முழுவதும் விலங்குகளையும், மனிதர்களையும் பலியிட்டுப்புதைக்க வரிசையான கல்லறைக் குகைகள் அமைத்ததுபோல இன்று செய்யமுடியுமா?"

இதைவிடக் கடுமையான கண்டனத்தை, தற்கால மேல்தட்டினரை பண்டைக்காலம் பற்றிய கொள்கைகளின் மீது ஜோதிராவ்ஃபூலே தொடுத்தார். தற்காலத்து நடுத்தர வர்க்கத் தினரான பிராமணரும், வேறு உயர் சாதியின ரும் தங்களை 'மேலோர்' என்று கருதிக்கொள்ளு கிறார்கள். இவர்களே சமுதாயத்தின் மேன்மை யுடையவர்களாகக் காட்டிக் கொள்ளுகிறார்கள், அவர்கள் பழமையை இலட்சிய பூர்வமான கற்பனைச் சித்திரமாகக் ண்டு அதனை வரலாற் றுப் படிமமாகக் காட்டுகிறார்கள். அதனால் அவர்களுக்கு நற்பயன் உண்டு. சமுதாயத்தின் கீழ்நிலைப்பிரிவுகளில் உள்ளவர்களின் கண்ணோட் டத்தினின்றும் இது முற்றிலும் மாறுபடுகிறது. அவர் சமுதாய அமைப்பை வருணிக்கும்பொழுது சூத்திரன், ஆதிசூத்திரன் என்ற சொற்களைப் பயன்படுத்துகிறார். சமுதாய வாழ்க்கைக்கு முக்கியமான பாத்திரம் சூத்திரனுடையது, பிராமணனுடையதன்று என்று இச்சொற்களின் மூலம் அவர் குறிப்பிடுகிறார். இப்பிரிவினரின் கொள்கைகளில் பிராமணர் எதிர்ப்பே, மேலோர் எதிர்ப்புக்குச் சமமாகிவிடுகிறது. தற்கால மேலோர் எதிர்ப்பிலும் பிராமணர் எதிர்ப்பு அடங்கியுள்ளது. "ஆரியர் உயர்வு"க் கொள் கையை இவர்கள் எதிர்த்துத்தானே ஆக வேண்டும்? (ஏனெனில் 'மேலோர்' தங்களை ஆரிய பரம்பரை என்று அழைத்துக்கொள்கிறார் களல்லவா?) எனவே ஆரியரும் அவர்களது வழித்தோன்றல்களான பிராமணரும் அந் நியர்கள் எனவும், இந்நாட்டு மக்களை அடிமைப் படுத்தியவர்கள் எனவும் அவர்கள் வாதித்தனர். பழைய வார்ப்பு அழிக்கப்படவில்லை. தலைகீழாக் கப்பட்டது. அவ்வளவுதான் இக்காலத்தில் ஆன்மீக நம்பிக்கையும் வளர்ச்சியடைந்தது. பலவாண்டுகளாகத் தற்காலக் கல்வி பரவி யிருந்த போதிலும் ஆன்மீக வாதம் வலுக்குன்றா மலேயிருந்தது.பத்தொன்பதாவது நூற்றாண்டின் முடிவில் இந்திய ஆன்மீக வாதம் ஓர் புனிதப்போரின் அம்சங்களைப் பெற்றுவிட்டது விவேகானந்தர் எழுதுகிறார்:

"......இதுதான் நமது இலட்சியம். அதனை நோக்கி முன்னேறத் தயாராக வேண்டும். இந்தியா உலகை வெல்ல வேண்டும். இந்தி யாவே, எழுக. உன்னுடைய ஆன்மீக சக்தியால் உலகை வெல்வாயாக, நாம் வெளியே சென்று நமது ஆன்மீக சக்தியாலும், தத்துவத்தாலும் உலகை வெல்ல வேண்டும்"

பொருளாயதக் கொள்கைகள் (materialism) மறுக்கப்பட்டன. இதுவே இயந்திர எதிர்ப்பா கவும் வெளிப்பட்டது. தொழில் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்திலுள்ள சில சமுதாயங்களில் இத்தகைய சிந்தனைப் போக்குகள் தோன்றிய தைக் காணலாம். இந்தியாவில் இயந்திரம், மேனாட்டு ஆதிக்கத்தோடு தொடர்புடையதா யிருந்தது சமுதாயத்தையும், கிராமீயப் பண் பாட்டையும் அடையாளம் தெரியாமல் மாற்றி விடக் கூடிய சக்தி இயந்திரத்திற்கு உண்டு என்பதை நமது மேல் தட்டினர் கண்டார்கள். இயந்திரம் அக்கால பொருளாதார அமைப்பை

உடைத்து தொழில்வளர்ச்சியின் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. பழக்கமான உலகத்தை இழந்துவிட்ட தெரியாத ஓர் புதிய உலகத்தில் நுழையவிருப்பவர்களின் அச்சம் நமது மேல் தட்டினரில் ஒரு பகுதியினரைப் பற்றிக் கொண்டது. 19ம் நூற்றுண்டில் தேசீயவாதிகள் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென விரும்பினுர்கள். அதுவே எல்லா தீமைகளையும் தீர்க்கும் மருந்தெனவும் நம்பினுர்கள். ஆனுல் இருபதாம் நூற்றுண்டின் தேசீயவாதிகளில் சிலர், இயந்திர வளர்ச்சி கலப்பில்லாத தீமைதான் என்று எண்ணினுர்கள். சிலர் இருப்பதே போதும், இனி மாறுதல் வேண்டாம், என்றுர்கள். மகாத்மாகாந்தி இயந்திர வளர்ச்சி இந்தியாவில் இல்லாததைக்குறித்துப் பெருமைப் பட்டார்.

"......ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த கலப்பையை வைத்து நமது உழவன் உழுதுகொண்டுதானே வருகிறுன். நாம் பழங்காலத்திலிருந்த குடிசைகளைப்போன்ற உறைவிடங்களில்தான் வாழ்கிறேம். நமது சுதேசக்கல்வி பண்டையக் கல்வி முறையிலிருந்து மாறுபடவில்லை. இயந்திரங்களைச் செய்ய நம்முடைய முன்னேர்களால் முடியவில்லை என்றெண்ணுதீர்கள். இயந்திரங்களைப் பயன்படுத்தினுல் நாம் அவற்றின் அடிமைகளாகி விடுவோம். நமது ஒழுக்க நாளங்கள் அறுந்து போய்விடும்."

(காந்தி)

இவ்வாறு இயந்திரம் ஆன்மீக சமுதாயம் 'பொருள் விருப்புச் சமுதாயம்' என்ற இரண்டிற்கும் அடையாள பூர்வமான வேறுபாட்டுக்குக் காரணமாயிற்று. (இயந்திரம் வேண்டாம் என்னும் சமுதாயம் ஆன்மீக சமுதாயம். இயந்திரம் வேண்டும் என்னும் சமுதாயம் பொருள் விருப்புச் சமுதாயம்) (mateaialist society). இச் சமுதாயங்கள் நேர் முரணுனவையாக எண்ணப்பட்டது. தொழில் வளர்ச்சிக் காலத்துக்கு முந்திய இனக்குழு சமுதாயங்கள் ஆன்மீக சமுதாயங்களாகக் கருதப்பட்டன. இதுவே இந்தியாவின் தொழில் வளர்ச்சிக் காலத்து முன்புள்ள பழைமையை ஆன்மீக சமுதாயமாக எண்ணும் சிந்தனையை வளர்த்தது.

பழமையைப் பற்றிய இத்தகைய பொதுப் படிமம் உருவாக்கப்படுவதற்குப் பலவேறுபட்ட காரணங்கள் இருந்தன. இந்தியப் பண்பாடு பற்றி நல்ல வார்த்தைகள் சொன்னவர்கள் மீது இந்திய வரலாற்று ஆசிரியர்களுக்கு நன்றியுணர்வு இருந்தது. தற்கால இழிவுநிலைக்கு ஈடாக பழங்கால உயர்வைப் போற்றுவது அவர்களுக்கு மனநிறைவை அளித்தது. பழமைக்குப் புத்துயிரளிக்கும் சிந்தனைகள் தேசீய இயக்கச் சிந்தனைகளுக்கு சுய நம்பிக்கையையும் தீவிரச் செயலூக்கத்தையும் அளித்தது. தற்காலத்துக்கு சிறிது முந்தியகால வரலாற்று நூல்களில் இத்தகைய புத்துயிர்ப்புச் சிந்தனைகளையும், செயலூக்க உணர்ச்சிகளையும் காணலாம். 1930-40ல் சமய வாத அரசியலின் பாதிப்புக்கு உள்ளான எழுத்தாளர்கள் 'இந்துக் காலகட்டத்'தின் பெருமையைப் பறைசாற்றினுர்கள். பெருமை மிக்க காலம் என்று அவர்கள் கருதிய கடந்தகாலத்தை அவர்கள் 'இந்துக்காலம்' என்றழைத்தனர். அக்காலம் முஸ்லிம்காலத்தில் தாழ்ச்சியடைந்து விட்டதாகவும், முஸ்லிம்களின் வருகை முதல் இந்தியா அந்நியர் ஆதிக்கத்துக்குட்பட்டதாகவும் அவர்கள் கருதினுர்கள். முஸ்லிம் சமயவாதத்தால் பாதிக்கப் பட்டவர்கள் இந்திய வரலாறே கஜினிமுகம்மது இந்தியாவிற்கு வந்த பிறகுதான் தொடங்குகிறது என்று எண்ணினுர்கள். அவர்கள் முஸ்லிம் காலத்தை காப்பிரிகளை இஸ்லாம் வெற்றிகண்ட காலமாகப்போற்றினர். இக்காலத்தின் நிகழ்ச்சிகளையெல்லாம் இந்து முஸ்லிம் போராட்டங்களாக அவர்கள் விளக்கினர். இந்து—முஸ்லிம் தொடர்புகள் அனைத்திற்கும் சமய வேறுபாடுகளே அடிப்படையானவை என்று இந்து சமயப் பற்றுடையவர்களும் இஸ்லாம் சமயப்பற்றுடையவர்களும் நம்பி அவ்வாறே எழுதினர். சமயவாதங்களுக்கு வெளியே நின்ற மிகச்சில எழுத்தாளர்கள் சமயவாதக்கொள்கைகளை எதிர்க்க, மத்திய காலத்தில் இந்து முஸ்லிம் நேச உறவுகள் இருந்ததாகக் கூறித் தற்காலத்திலும் இந்து முஸ்லிம் ஒற்றுமையின் தேவையை வலியுறுத்தினர். ஆனுல் அவர்கள் வரலாற்றில் சமய ஒற்றுமைக்கும், வேற்றுமைக்கும் உரியகாரணங்களை ஆராயவில்லை. அத்தகைய ஆராய்ச்சிகள் ஓர் பொருத்தமான வரலாற்று ஆய்வியல் முறையை உருவாக்கி, வலுப்படுத்தியிருக்கும்.

இம்முறை தற்காலத்தில் உருவாகியுள்ளது. அக்காலத்து வரலாற்ருசிரியர்கள் முன்பிருந்த பிரச்சினை: அவர்கள் காலத்தில் இந்தியாவின் தேக்கநிலைக்கும் பின்னடைவுக்கும் காரணங் களான வரலாற்று அம்சங்கள் எவை? இப்பிரச் சினையை சமயவாத வரலாற்ருசிரியர்கள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

பண்டைக் காலம் பொற்காலமாயிற்று. இந்திய நாகரிகத்தின் தொன்மை, காலத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டது. வேத இலக்கியம் கி. பி. 4000க்கு முன் இயற்றப்பட்டது என்று காலவரையறை செய்தனர். கங்கைச் சமவெளி நிகழ்ச்சிகளைக் கொண்டு இந்தியத்துணைக் கண்டம் முழுவதற்கும் பொதுவான வரலாற்றுப் பொதுக் கொள்கைகள் அனுமானம் செய்யப்பட்டன. குறுகிய பிரதேச நோக்கு இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் உண்டாவதற்கு மேற்கூறிய முயற்சியே காரணம். இந்தியாவைப் பற்றி விமர்சனக் கூற்றுகள் வெளிவந்தால், அவற்றிற்குப் பதிலாக பிரிட்டனில் காணப்படும் தற்கால ஜனநாயகக்கருத்துக்கள் இந்தியாவின் பழங்காலப் பண்பாட்டிலும், அரசியலில் காணப்படுவனவே என்று இந்து வரலாற்ருசிரியர்கள் கூறினர். இந்திய மன்னராட்சி அரசியல் அமைப்புக்குட்பட்ட மன்னராட்சியே (Constitutional monarchy) என்று, அவ்வாறு கூறுவது பெரிய காலப்பிழை என்பதையும் எண்ணுமல் இந்து வரலாற்ருசிரியர்கள் கூறினர். சமூக வரலாற்று ஆர்வத்தால், சாதி அமைப்பு நியாயம் என்று வாதிக்க அவர்கள் முன்வந்தனர். பிராமணர்கள் ஆரியப் பண்பாட்டின் வாரிசுரிமை உடையவர்கள் என்றும், ஆரியர் உதிரத்தில் உதித்தவர்கள் என்றும், மேற்குறிப்பிடட்ட ஆசிரியர்கள் எழுதினுர்கள்.

ராணுவ வலிமையைப் போற்றுகிற தீவிர தேசிய வாதமும், அகிம்சையே இந்தியாவின் மரபென்று போற்றும் அகிம்சா தேசியவாதமும் எதிர்பார்க்கக் கூடிய முரண்பாடுகளைத் தோற்றுவிக்கவில்லை. வரலாற்று நூல்களில் தீவிர தேசீய வாதம் வெளியிடப்பட்டது. ஒவ்வொரு வேளை அகிம்சைக் கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மௌரிய சக்கரவர்த்தி அசோகன் அவனது அகிம்சைக் கொள்கைக்காகவும், வன்முறை வெற்றியைத் துறந்ததற்காகவும் சில வரலாற்ருசிரியர்களால் போற்றப் பட்டான். இதே காரணங்களுக்காக அவனை தனது பேரரசின் தற்காப்பை பலப்படுத்தாமல் விட்டுவிட்டான் என்பதற்காக கண்டித்தவர்களும் உள்ளனர். வெற்றிபெற்ற மன்னர்கள் வரலாற்று வீரர்களாகப் புகழப்பட்டனர். காஞ்சிபுரம் வரை படையெடுத்துச் சென்ற சமுத்திரகுப்தனை வரலாற்ருசிரியர்கள் மிகை படப் புகழ்ந்தார்கள். ஆனுல் பதினெென்ரும் நூற்ருண்டில் அவனதுபடைகள் சென்ற வழியே எதிர்த்திசையில் படையெடுத்துச் சென்று வடக்கே கங்கையாற்றின் கரைவரையில் சென்ற பதினென்ரும் நூற்ருண்டில் வாழ்ந்த ராஜேந்திரனைப் பற்றி வரலாறு எழுதியவர்கள் குறிப்பிடவே காணும். அகிம்சையைச் சிறிதும் மதிக்காத ரஜபுத்திரர்களின் வீரமரபு பெரிதும் புகழப்பட்டது. ரஜபுத்திரனுன ராணு பிரதாபனும் மராத்தியனுன சிவாஜியும் பொது மக்களின் வீரவழிபாட்டிற்குரியவர்களாகச் சித்திரிக்கப்பட்டனர். இவ்வீர வழிபாட்டில் தேசீய உணர்ச்சியும், இந்து சமய உவப்பும் கலந்திருந்தன. நமது காலத்தில் காந்தி அகிம்சையை மேன்மையானஒழுக்கமெனக் கருதினுர் என்பதும் அதன்மீது அசையாத நம்பிக்கைக் கொண்டிருந்தார் என்பதும் உண்மையே. ஆனுல் அவருடைய சீடர்களில் மிகப்பலர் அதனை பிரிட்டிஷாரை எதிர்ப்பதற்கேற்ற போர் கருவியாகவே கருதினர்.

வரலாற்று எழுத்துக்களிலிருந்து பல கால்வாய்கள் பிரிந்தோடின. சமயக்காழ்ப்பை தொடர்ந்து வளர்க்கிற போக்கில் இந்து—முஸ்லிம் விளக்கம் கூறப்பட்டது. இதற்கு அடிப்படையான வரலாற்றுக் கருதுகோள்கள் ஒன்ருகவே இருந்தன. இதுவோர் வாய்க்கால். மற்ருென்று பிரதேச வரலாறுகளை எழுதும் ஆர்வத்தால் தோன்றியது. பிரதேச வரலாற்றுச்சான்றுகளைச் சேகரித்து நடுவு நிலையான வரலாற்று நோக்கை உருவாக்குவதற்கு இம்முயற்சி அவசியமே. ஆனுல் பிரதேச வரலாற்ருசிரியர்கள், தம்முன்னிருந்த வாய்ப்புகளில் சிந்தனையை இறுகவிட்டு, புதிய வரலாற்று நோக்கு எதனையும் உருவாக்கிக் கொள்ளாமல் பிரதேச உவப்பு வெறியில் வீழ்ந்துவிட்டார்கள்.

ஏகாதிபத்திய வரலாற்ருசிரியர்களின் கூற்றுக்களை எதிர்த்து எழுந்த கருத்துக்கள் கொண்ட நூல்கள் மற்ருேர் வகையாகும். இவர்கள் இந்தியப் பழமையின் உண்மையைறிய முயன்ருர்கள். நமது பண்பாடு எந்த அம்சங்களில் நல்லது அல்லது தீமையானது என்ற பட்டிமன்ற விவாதங்களில் இறங்காமல் அவர்கள் தப்பிவிட்டார்கள்.

இந்தியாவின் பின்தங்கிய நிலைக்குக் காரணங்கள் என்ன? இந்தியாவின் வருங்காலம் எப்பாதையில் செல்லும் என்ற பிரச்சனைகளைப் பற்றிய விவாதங்கள் மேற்கூறிய கருத்து வார்ப்புகளுக்குள்ளேயேதான் நடைபெறுகின்றன. அண்மையில் வெளிவந்த ஒரு நூலில், இப்பிரச்சனை பற்றிக் கூறப்பட்டிருக்கும் கருத்தாவது: "இந்துப் பண்பாடும் இந்து அமைப்பும் இந்தியாவின் குறைந்த வளர்ச்சி விகிதத்திற்குக் காரணங்களாகும்."

இது ஓர் அபூர்வமான கருத்தன்று. இந்திய சமுதாயவியல்பற்றி துவக்கத்தில் எழுதியவர்களது கருத்தும் இதுவேதான். இக்கருத்துக்கள் 19-ம் நூற்ருண்டின் இந்தியவியல் ஆராய்ச்சிகளின் விளைவாக எழுந்த கருத்துக்கள் இவைதாம் முக்கியமான கருத்து வார்ப்புக்கள். உதாரணமாக, மாக்ஸ்வீபர் இந்திய சமயம், சமுதாயம் குறித்து எழுதியுள்ளார். இந்துக்களின் மறுவுலகச் சிந்தனை பற்றியும், சாதிச் சமுதாயத்தின் மாருத் தன்மை பற்றியும் குறிப்பிட்டு இவையிரண்டும் பொருளாதார மாறுதல்களை அனுமதிக்காது என்ற முடிவுக்கு வருகிருர். நமது காலத்திலும் தற்கால ஆசியாவின் பொருளாதார வளர்ச்சிக் குறைவு பற்றி ஆராய்கிற குன்னுர்மிர்டாலின், ஆசிய நாடகம் (Asian Drama) என்பது போன்ற நூல்களில் மேற்குறிப்பிட்ட கொள்கைகளையே, இந்திய சமுதாயத்தையும், சமூக மாறுதல்களையும் பற்றிய நவீன ஆராய்ச்சிகளைக் கருத்தில் கொள்ளாமலேயே, தமது ஆய்வு முறையில் பயன்படுத்துகிருர்கள். குறுகிய, பொருளாதாரக் கண்ணேட்டமுடைய வரலாற்ருசிரியர்கள், இந்தியாவின் வளர்ச்சியின்மைக்கு 'கீழ்த்திசை எதேச்சாதிகாரமே' காரணம் என்று எழுதுகிருர்கள். 'உலகப் பற்றற்றவர்கள் இந்தியர்கள்' என்ற வார்ப்பைப் பயன்படுத்துகிறவர்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைபட்டுப் போனதற்கு ஏகாதிபத்தியத்திற்கும் பங்கு உண்டு என்பதைக் காணவிடாமல் அதன் பங்கைக் குறைத்துக் கூறுபவர்களுக்கு உதவுகிருர்கள். இத்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குறைவிற்குரிய விளக்கங்களாக 'இந்துப் பண்பாடு' முதலிய வார்ப்புக்கள் காணப்படவில்லை. அக்காரணத்தை அறிய நாம் ஏகாதிபத்திய முற்கால இந்திய சமுதாயத்தையும், ஏகாதிபத்தியகால இந்திய சமுதாயத்தையும்பற்றி விரிவான விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் நடத்தவேண்டும்.

பழமையைப்பற்றிய மதிப்பீடு ஒரு வரலாற்று மதிப்பு மட்டுமன்று. கடந்த சில நூற்ருண்டுகளாக நிலவிவரும் சில வார்ப்புகளை விமர்சித்து அவற்றினின்று விலகி வரவேண்டும். இவற்றுள் நான்கை நான் முன்னர் குறிப்பிட்டேன். அவையாவன: 1) ஆரிய இனக் கொள்கை. 2) மாருத இந்திய சமுதாயம். 3) பொருளாதார மாறுதல்களுக்கு இடையூருக இருக்கும் இந்தியர்களது மறுமையார்வம். 4) கீழ்த்திசை எதேச்சாதிகாரம். இவற்றை விமர்சனம் செய்யாமல் புதிய வரலாற்று நோக்கை உருவாக்க இயலாது. இவற்றை விமர்சிக்கும் பொழுதுதான் புதிய உட்தொடர்புகளும், புதிய இணைப்புகளும் நமக்குப் புலனுகி புதிய வரலாற்றுக் கண்ணேட்டத்தை உருவாக்க முடியும். புதிய சான்றுகள் கிடைக்கும்பொழுது பழைமையின் கருத்துப் படிமத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். புதிய சான்றுகளுக் கேற்ப கருத்துக்களை மாற்றிக் கொள்ளத் தடையாயிருப்பவை பழைய வார்ப்புக்களே.

வார்ப்புக்கள் எவ்வளவுக்கு புறவய உண்மையின் படிமங்கள் என்றும், அண்மைக் கடந்த காலத்தின் தேவைகளின் பிரதி பலிப்புகளாக எவ்வளவுக்கு உள்ளனவென்றும் நாம் ஆராய்வதே வார்ப்புகளை விமர்சனம் செய்வதாகும். பழைய வார்ப்பைத் தலைகீழாக நிறுத்துவதோ, அல்லது பழைய வார்ப்புக்குப் பதிலாகப் புதிய வார்ப்பு ஒன்றை உருவாக்குவதோ புதிய நோக்கமாகாது. அண்மைக் காலச்சான்றுகளை தருக்க ரீதியாக பகுத்தாராய்வதும், பயன் படுத்தக் கூடிய இடங்களில் தற்கால ஆய்வுமுறையியலைப் பயன்படுத்துவதும் தேவையானவை.

என்னுடைய அடுத்த இரண்டு கட்டுரைகளில் இந்தியப் பழமையின் சில அம்சங்களை, பழங்கால வரலாறுகளை ஆராய்கிற நவீனமுறை இயலைப்படுத்தி ஆராய முயலுவேன். தற்காலத்தில் நிலவும் வரலாற்றுக் கருத்து வார்ப்புகள் எந்த அளவுக்கு வரலாற்றுண்மைகளாக உள்ளன என்பதை மதிப்பிட இவ்வித ஆய்வு உதவும். இக்கட்டுரைகளில் இந்தியப் பழைமையை வரையறுத்துக் கூறவோ, பழமையின் வடிவத்தைக் கருத்தால் நிருமாணம் செய்யவோ நான் முயலவில்லை. எவ்வித ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டுவதும், அவை நமது சமுதாயத்திற்கு எவ்வாறு பொருத்தமானது என்று சுட்டிக்கட்டுவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழாக்கம்: **நா. வானமாமலை.**

இந்திய மொழிகளிடையே 'இலக்கிய சகோதரத்துவம்' வேண்டும்

குஜராதி சாகித்ய பரிஷத்தில்

டாக்டர். கலைஞர்: மு. கருணாநிதியின், கருத்துரை.

சென்னையில் நடைபெற்ற குஜராதி சாகித்ய பரிஷத்தின் 26-வது ஆண்டுவிழாவைத் துவக்கிவைத்து டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி பேசியதன் சுருக்கம் வருமாறு:

"ஒருவனது தாய்மொழிப்பற்று தேசீய ஒற்றுமைக்கு ஆற்றல்மிகு இயக்கு சக்தியாக இருக்கிறது. எனது தமிழ் அன்புதான் பிறமொழிகளின் மீது மரியாதை செலுத்தத் தூண்டுகிறது. நான் உணர்வுள்ள தமிழனாக இருந்தால்தான் நான் ஒரு முழுமையான இந்தியனாக இருக்கமுடியும்.

இந்திய மொழிகளிலுள்ள புகழ்மிக்க இலக்கிய மரபுகளை அறிந்துகொள்ளுவது தற்காலத்தில் மிகவும் அவசியமான தேவையாகும். சாகித்ய அகாதெமி போன்ற தேசீய அமைப்புக்கள் இத்துறையில் பெரும்பணி ஆற்றியுள்ளன என்றாலும் இன்னும் அதிகமான அளவில் இலக்கியப் படைப்பு மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

குஜராதி, இந்தியாவின் சிறந்த மொழிகளுள் ஒன்று. மகாத்மாகாந்தி, காகாகலேல்கார் கே. எம். முன்ஷி போன்றவர்கள் இம்மொழியில் எழுதிய நூல்கள், இந்தியா முழுவதிலுமுள்ள இலக்கிய நேயர்களின் உள்ளத்தில் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளன.

பரஸ்பரப் பண்பாட்டுத் தொடர்புகளை வளர்க்க இடைவிடாத முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இம்முயற்சிகளால் இலக்கிய சகோதரத்துவம் இந்தியாவில் தோன்றி வளரவேண்டும்."

[இக்கருத்துக்களை ஆராய்ச்சி வரவேற்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகம், கலைஞர் வெளியிட்ட இலக்கிய சகோதரத்துவத்தை வளர்க்க ஏதாவது செய்யுமா? சாகித்ய அகாதெமியின் தமிழ்நாட்டுக்கிளை பிற இந்திய மொழி இலக்கியங்களை தமிழில் மொழிபெயர்க்கத் தூண்டி, தமிழக அரசு ஒரு திட்டம் தந்து அதற்குரிய செலவில் ஒரு பகுதியை அளிக்குமா? தமிழ்வளர்ச்சிக் கழகம், கலைஞர் கூறிய கருத்துக்களைச் செயல்படுத்த தமிழ்க்கவிஞர்கள் திருவள்ளுவர், இளங்கோ, கம்பன், பாரதி, பாரதிதாசன் முதலியவர்களின் நூல்களையும், தற்கால நாவலாசிரியர்கள், சிறுகதை எழுத்தாளர்களது நூல்களையும், குறைந்தபட்சம் இந்தி, வங்காளி, மகாராஷ்டிரம், குஜராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்க சாகித்ய அகாதெமியைத் தூண்டி, அதற்குரிய செலவில் ஒரு பகுதியை அளிக்க முன்வருமா?

கலைஞர் கூறிய இலக்கிய சகோதரத்துவத்தை வளர்க்க அரசின் உறுப்புக்களும், சாகித்ய அகாதெமியும், பல்கலைக்கழகங்களும், இலக்கியக்கழகங்களும் முழு முயற்சி செய்தல்வேண்டும்.

—ஆசிரியர்]

காவிரிப்பூம் பட்டினத்தில் புதைபொருள் ஆராய்ச்சி.

புலவர். நா. தியாகராசன்.

வரலாற்றில் புகார்

காவிரிப்பூம்பட்டினம் பழம் பெருமை வாய்ந்தது. புகார், பூம்புகார், மூதூர், பெருநகர், பட்டினம், காவிரிப்படப்பை நன்னகர், பூவிரிப்படப்பை நன்னகர், பூவிலி படப்பைப் புகார் காகந்தி, சம்பாபதி பட்டினம் என்றும் வழங்கப்பட்டு வந்துள்ளதை பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப்பாடல்கள் முதலிய பண்டைத்தமிழ் இலக்கியங்களால் நன்குணரலாம்.

கி. மு. நான்காம் நூற்றுண்டுக்கு முன்னேயே மக்களால் வழங்கி வந்ததாகக் கருதப்படும் புத்தஜாதகக் கதைகளில் குறிக்கப்பட்டுள்ள "கவேரபட்டினம்" என்பது காவிரிப் பூம்பட்டினத்தைக் குறிக்கிறது என்று அறிஞர்கள் முடிபு ஆகும். கி. பி. 81—96ல் பிளினி என்ற நிலநூல் ஆசிரியர் அளித்த குறிப்புகளைக் கொண்டு எழுதப்பெற்ற "பெரிபுளூஸ் மாரிஸ் எரித்திரியா" என்ற நூலில் கொற்கையை அடுத்த கடலைச்சார்ந்த "கடற்கரை நாடு" என ஒன்றும் "அர்கரு" என்ற உள்நாடும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளதை முறையே புகாரையும், உறையூரையும் குறிக்கும் என்பது அறிஞர் முடிவு. அதன் பின்னர் அரை நூற்றுண்டு கழித்து "தாலமி" என்ற நிலநூல் ஆசிரியர் காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் இருக்கும் காவிரிப்பூம் பட்டினத்தை "கபேரிஸ்" என்று குறித்துள்ளார். கி. பி. முதல் நூற்றுண்டில் எழுதப்பட்ட "மிலிந்தா அரசனுடைய கேள்விகள்" என்ற புத்தநூலில் அக்கால கடற்கரைப் பட்டினங்களுள் சிறந்தனவற்றுள் ஒன்ருகக் "கோளப்பட்டினம்" என்ற ஒன்றைக் குறிப்பிடுகிறது. பாலி மொழியில் எழுதப்பெற்ற புத்த இலக்கியங்களில் குறிப்பிடப்பெற்றுள்ள "கவேரபட்டினமும்" "கோளப்பட்டணமும்" காவிரிப்பூம்பட்டினத்தையே குறிப்பன வாகும் என்பதெல்லாம் அறிஞர்கள் யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட செய்தியாகும். கி. பி. 4ஆம் நூற்றுண்டில் 'புத்ததத்தன்' என்ற பௌத்த ஆசிரியர் தம் நூலில் இந்நகரின் சிறப்பு குறித்து எழுதியுள்ளார். கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் திருநாவுக்கரசரும், ஞானசம்பந்தரும், கி. பி. 9-ஆம் நூற்றுண்டில் பட்டினத்து அடிகளும், இயற்பகை நாயனரும் வாழ்ந்து இந்நகர் குறித்தும் பாடியுள்ள செய்தி எல்லாம் நாம் நன்கு அறிந்ததே. கி. பி. 10—ஆம் நூற்றுண்டு முதல் 12-ம் நூற்றுண்டு வரை அமைந்த பிற்காலசோழர் ஆட்சியிலும் இந்நகர் பேணப்பட்டு வந்துள்ளதை பண்டாரத்தார் தம் ஆய்வில் குறித்துள்ளார்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரைப்பற்றி அண்மைக்காலம் வரை எந்த ஆய்வையும் மேற்கொள்ளவில்லை. 1960-ஆம், ஆண்டு தொடங்கி மூன்று ஆண்டு காலம் ஆய்வு செய்தனர். அதில் காவிரிப்பூம் பட்டினத்தின் பழமையை உறுதி படுத்தும் வகையில் அரிய சிலசான்றுகள் கிடைத்துள்ளன. அது குறித்து இந்தியத் தொல்பொருள் ஆய்வினர் ஆண்டறிக்கை வெளியிட்டுள்ளனர். பண்டைய இலக்கியங்களின் துணை கொண்டும், புதை பொருள் ஆய்வுகளின் துணைக்கொண்டும், புகாரைப்பற்றி அறிந்து கொள்ளுவோம்.

புதைபொருள் சான்றுகள்

"கழிசூழ் படப்பை நன்னகர்" என்பதால் இந்த உப்பங்கழிகளின் வழியாக உள்நாட்டுப் பண்டங்களை ஓடங்களின் உதவியால் இடம் மாற்றித் கொண்டனர். காவிரியாறு அகலமும், ஆழமும் உடையதாக இருந்ததால் கலங்கள் தடையின்றி உள்நாடு வரை வர வாய்ப்பாக அமைத்திருந்தது.

ஓடங்களுக்கென அமைந்த இடங்களில் பொருள்களை ஏற்றவும் இறக்கவும் வசதியாகச் சிறிய (Ship yard) படகுத்துறைகளும் இருந்தது என்பது அன்மையில் புதைபொருள் ஆய்வில் கண்ட சான்று உறுதி அளிக்கிறது. கீழையூர் கிராமத்தில் மங்கைமடம் என்ற வயலில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது கடலுக்கு சுமார் 4 பர்லாங் தூரத்தில் உள்ளது குறிப்பிடத் தக்கது. இதன் அமைப்பு வியக்கத்தக்க முறையில் அமைந்துள்ளது. இத்துறை சுமார் 60 அடி நீளத்தில் 25 அடி அகலத்தில் அமைந்துள்ளது. செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இரண்டேகால் அடி நீளமும் ஒன்றரை அடி அகலமும் ஐந்து அங்குல கனமும் கொண்டதாகவும், சில ஒன்றரை அடி சதுர வடிவில் அமைந்த கற்களாகவும் உள்ளது. இதைக் கட்டுவதற்கு நல்ல ஒட்டுந்தன்மைவாய்ந்த களிமண்ணைச் சந்தனம்போல் குழைவாக அரைத்துக் கல்லைப் பொருத்தி இருக்கிறார்கள். இதன் இடையே இணையாக மரத்தால் ஆன கம்பங்கள் புதைக்கப்பட்டுள்ளது. இதைக் காணும்போது பட்டினப்பாலையில் உள்ள நான்கு அடிகள் நினைவுக்கு வருகிறது.

> வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
> நெல்லொடு வந்த வல் வாய்ப் பஃறி
> பணைநிலைப் புரவியின் அணைமுதல் பிணிக்கும்
> கழிசூழ் படப்பை ....

என்ற வரியில் உப்புவிற்ற நெல்லைக்கொண்டு வந்த படகுகளைப் பந்தியிலே நிரல்படக் குதிரைகளைப் பிணிக்குமாறு போலத் தறிகளிலே பிணித்துள்ள காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகிறார் உருத்திரங்கண்ணனார்.

வணிகர்கள் "மணிக்கிராமத்தார்" என்ற பெயரில் குழுவாக அமைந்து கடற்றுறைப்பட்டினங்களிலும் வெளிநாடுகளிலும் வாணிபம் நடத்தினர் எனக்கல்வெட்டு மூலம் அறிகிறோம். அவர்கள் (Merchants Guild) தம் குழுவிற்குரிய துறையை அமைத்துக் கொண்டதைத்தான் இன்று புதைபொருள் ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளனர். இதில் இருந்த மரத்துண்டை (Carbon date) ஆராய்ச்சி செய்ததில் அதன் காலம் கி.மு. 200ஆண்டுகள்[1] எனக் கனித்துள்ளார்கள். இதைச்சிறந்த சான்றாகக் கொள்கின்றனர் புதைபொருள் ஆய்வாளர். இந்தப் படகுத்துறை, இன்று சிற்றூராக உள்ள மணிக்கிராமத்திற்கு நேர் கிழக்கில் உள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும். கல்வெட்டில் "காவிரிப்பூம்பட்டினத்து மணிக்கிராமத்தார்"குழுவாக இருந்து வாணிபம் செய்த வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இது கொண்டு நோக்கினால் இன்று "மணிக்கிராமம்" என்ற பெயரில் தனி ஊராக இருப்பது அன்னாளில் "காவிரிப்பூம்பட்டினத்து மணிக்கிராமத்தார்" வாழ்ந்த இடம் என்பது தெளிவாகிறது.

இதுபோலவே காவிரிப்பூம் பட்டினத்தில் பெருங் கலங்கள் தங்கும் துறைமுகத்தையும் சாத்தனார் குறிப்பிடுகிறார்.

> வெளில் இளக்கும் களிறு போல
> தீம் புகார்த் திரை முன்துறை
> தூங்குநாவாய் துவன்று இருக்கை
> மிசைக் கூம்பின் நசைக் கொடியும்

அசையாத கம்பத்தினை அசைக்கும் யானைபோல நின்று கொண்டிருக்கிற கலங்களைக் காண்கிறோம். அது அசைகின்ற அசைவிலே பாய் மரத்தின் மேலே உயர்த்தப்பட்ட கொடிகளின் அசைவையும் பார்க்கிறோம். முன்னர் படகு வரிசைக்கு குதிரை வரிசையை உவமையாகக் கொண்டவர், இங்கு பெரிய மரக்கலங்கள் நிறுத்தப் பட்டுள்ளதை யானை வரிசையோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார். கப்பல்துறை இருந்த இடம் இன்று கடலால் சூழப்பட்டுள்ளது.

> கடலே கால் தந்த கலன் எண்ணுவோர்
> கானற் புன்னைச் சினை நிலைக்குந்து
> கழியே சிறுவெள் உப்பின் கொள்ளைச் சாற்றி
> பெருங்கல் நல்நாட்டு உமண் ஒலிக்குந்து
> அன்ன நல்நாட்டும் பெருநம் யாமே
>
> -புறம். 386

கடற் பக்கத்தே காற்றின் வேகத்தால் திசை தப்பி வந்த கலன்களை எண்ணுவோர், கடற் கரையில் உள்ளபுன்னைமரக் கிளைகளைப் பிடித்துத் தொங்கித் தொங்கி நிற்பதால் அம்மரக் கிளைகள் அலைப்புண்டு கிடக்கின்றன. உப்பங்கழிகள், மலை நாட்டு வணிகர்கள் ஆண்டுப்போந்து வெள்ளை உப்பை ஏலமிட்டு விலைப்படுத்துவதால் ஆரவாரம் நிறைந்துள்ளது என்று, கடலிலே கலங்களையும், கழிகளிலே ஓடங்களையும் இருவேறு கோணத்தில் படம்பிடித்துக் காட்டுகிறார். இது பட்டினப்பாலை அடிகளுக்கும் பொருந்த அமைந்துள்ளதைக் கண்டும், மேற்காணும் சான்று வலியுறுதல் காண்க.

கோயில்கள்—பள்ளிகள்

> பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
> அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
> நீலமேனி நெடியோன் கோயிலும்
> மாலவெண்குடை மன்னவன் கோயிலும்
> -சிலப்.

யாக்கையிற் பிறவாப் பெரியோன் கோயில், முருகவேள் கோயில், பலதேவன் கோயில், நெடிய மால் கோயில், வாசவன் கோயில் என பல கோயில்களை இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

> நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலாகப்
> பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீறுக
> -மணிமே.

என மணிமேகலை ஆசிரியரும் பல கோயில்கள் புகாரில் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

> அறவோர் பள்ளியும் அறன் ஓம்படையும்
> புறநிலைக் கோட்டத்துப் புண்ணிய தானமும்
> -சிலப்.

என்ற வரிகளில், அருகப்பள்ளி, புத்தர் பள்ளி, தருமம் போதிக்கும் இடம், புறம்பேயுள்ள ஸ்ரீ கோயில், முதலியவை இருந்தது என்பது புலனாகிறது.

> தவப்பள்ளி தாழ்காவின்
> அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்

என்பது பட்டினப்பாலை. இவ்வடிகளுக்கு நச்சினார்க்கினியார் "தவஞ் செய்யும் அமண் பள்ளி பௌத்த பள்ளிகளையும்" — என்று விளக்கம் தந்துள்ளார். மணிமேகலையுள்ளும்

> பளிக்கறை மண்டபம் உண்டு அதனுள்ளது
> தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
> தாமரைப் பீடிகை தான் உண்டு — மணி. 64-66
> மணியறைப் பீடிகை வலங் கொண்டு — 5-97
> ஆயிர ஆயிரத்து ஆழியங் திருந்தடி — 5-104
> ஆதி முதல்வன் அறவாழி ஆள்வோன்
> பாத பீடிகை பணிந்தனள் ஏத்தி — 6-11-12.

என்று சாத்தனார் கூறிப்போந்ததை "மாணிக்கச் சோதி பரந்த பதும பீடம்" என்றும் "பளிக்கறையில் உள்ள பாத பீடம்" என்றும் "இவள் பாதத்தில் ஸகஸ்ராரச சக்கர ரேகை உண்டென்பார்" என்றும் குறிப்புரைகாரர் உரைத்துள்ளார்.

இவற்றையெல்லாம் நோக்கினால் புகாரில் பௌத்தமும் சமணமும் சிறப்புறத் திகழ்ந்து இருந்தன என்பது நன்கு விளங்குகிறது. இதை மனதில் கொண்டு புதைபொருள் ஆய்வாளர் கண்ட புத்தவிகாரத்தை ஆராய்வோம். புத்த விகாரம் பல்லவனீச்சரம் கோயிலுக்கு வடபுறத்தில் நகரத்தார் விடுதிக்கு கீழ்பக்கத்தில் தோண்டிக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது சதுர வடிவில் அமைந்த பல அறைகளைக் கொண்டது. முன்புறம் தாழ்வாரம் காணப்படுகிறது. அங்கு 3 அங்குல உயரத்தில் **புத்தபகவானின் செப்புப்படிமம்** கிடைத்தது. இது தியானம் செய்யும் தோற்றத்தில் அமைந்துள்ளது. இங்கு மணிகளும் காசுகளும் கிடைத்தன. இந்த விகாரத்தின் தென்புறத்தில் ஒரு அறையில் வெண்ணிற சலவைக்கல் கிடைத்தது. அதில் புத்த பகவானின் பாதம் பொறிக்கப்பட்டுள்ளது.[2] தாமரை மலரும், பூரணகும்பமும், ஸ்வஸ்திக் அடையாளமும் பொறிக்கப்பட்டுள்ளது. இது நாகார்ச்சுன கொண்டாவில் கண்டெடுக்கப்பட்ட புத்த பாதத்துடன் பொருந்திய பழமையுடையது ஆகும். அங்கிருந்தே இக்கல் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் முடிவு செய்கிறார்கள். மற்றும் அங்கு அர்த்த சந்திர வடிவில் அமைந்த கருங்கல் அடிப்பீடமும் கிடைத்தது. அழகு மிகுந்த சிற்பநுட்பம் செறிந்த துவாரபாலகரின் உருவம் கிடைத்தது. இது சுண்ணாம்புக்கல்லால் செய்யப்பட்டது. தென்னகத்தில் முதல் முதலாக இங்கேதான் புத்த விகாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதில் இருவேறு காலங்களில் கட்டப்பட்ட இரண்டு விதமான பாணியைக் காணலாம் என்றும், அதன் வழிப் பழங்காலத்தில் கட்டிய ஒன்றும்[3] பின்னர் அழிவின்மேல் மீண்டும் கட்டியது ஒன்றும் ஆக இருவேறு காலங்களில் கட்டப்பட்டு அழிந்துள்ளதை புதைபொருள் ஆய்வாளர் உறுதிப் படுத்துகின்றனர்.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோக சக்கரவர்த்தியின் உறவினரான **மகிந்தன்** (மஹா இந்திரன் என்னும் பெயர் பாலியில் மகிந்தன் என வழங்கும்) என்பவர் இலங்கை செல்லுமுன் காவிரிப் பூம்பட்டினத்தில் தங்கி அங்கு ஏழு புத்த விகாரங்களைக் கட்டினார் என்றும், அதுவே இலக்கியத்தில் இந்திரன் கட்டியதாகக் கூறப்பட்டுள்ளது[4] என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இந்த விகாரைகளின் தலைவராக அறவண அடிகள் என்னும் தேரர் இருந்தார் என்றும், மணிமேகலையும் பௌத்த துறவியாக இந்த விகாரையில்தான் தங்கி இருந்தாள் என்றும் சாத்தனார் கூறுதல் உண்மையுடையதாகிறது.

கி. பி. நான்காம் நூற்றாண்டில் அச்சுதவிக்கந்தன் என்னும் களபர அரசனால் ஆதரிக்கப் பட்டவரும் தமிழ்நாட்டுப் பௌத்தப் பெரியார்களில் பெயர் பெற்றவருமான புத்ததத்த தேரர் என்னும் பௌத்த ஆசிரியர் சோழ நாட்டையும் காவிரிப்பூம் பட்டினத்தையும் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

"காவிரிப்பூம்பட்டினம் செல்வத் தொகுதியும் மக்கட் கூட்டமும் நெருங்கிய இடம் என்றும் அப்பட்டினத்தில் இவர் தங்கி இருந்த பௌத்தப்பள்ளி கணதாசர் என்பவரால் கட்டப் பட்டது என்றும், பள்ளிக்கட்டிடங்கள் பெரியன வாய் வெண்சுதை பூசப்பெற்றுக் கைலாயம் போல் வெண்ணிறமாக விளங்குகிறது என்றும் தாம் எழுதிய அபிதம்மாவதாரம் என்னும் பாலி நூலில் இவர் எழுதி இருக்கிறார்.

"நரநாரீ கணாகின்ணே அஸங்கிண்ணே குலாருவே
பீதே ஸப்பங்க ஸம்பன்னே பஸன்னே ஸரிதோதகே
நானாரதனஸம்பன்னே விவிதாபன ஸங்கதே
காவேரிபட்டணே ரம்மேநானாராமோ பஸேஸோத
கேலாஸ ஸிகரரகார பாஸாத பதிமண்டிதே
காரிதே கணதாஸேன தஸ்ஸனீய மனோரமே
விஹாரே விவிதாகார சாருபாகார கோபுரே
தத்தா பாலீன பஸ்ஸே மயா நிவஸதாஸதா
ரம்யஸல்லேக ஸாகல்ய ஸீலாதிதுண ஸோபினா
அயம்ஸுமதீனா யாசிதேன கதோகதோ."

அன்றியும் புத்தவம்சம் என்னும் நூலுக்கு இவர் எழுதிய மதுராந்த விலாசினி என்னும் உரையின் இறுதியிலும் காவேரிப்பட்டினத்தில் கணதாசர் கட்டிய பௌத்த விகாரையைக் கீழ்வருமாறு குறிக்கிறார்.

"காவீர ஜல ஸம்பாத பரிபூத மஹீதலே
காவேரி பட்டணே ரம்மே நானா நாரீநராகுலே
கரிதேகணதா ஸேன ஸணவாசேன ஸாதுனா
விஹாரே விவிதாகார சாருபாகார கோபுரே"

இதை "பௌத்தமும் தமிழும்" என்ற நூலில் மயிலை சீனி வேங்கடசாமி குறித்துள்ளார். இவற்றை எல்லாம் மனதில் கொண்டு இன்று பல்லவனீச்சரத்துக்குப் பக்கத்தே புதைபொருள் ஆய்வாளர் கண்ட புத்த விகாரத்தை நோக்கினால் பல உண்மைகள் விளக்கமாகிறது. வெண் சுதை சிற்பம் குறிப்பிடத்தக்கது ஆகும். அங்கே வண்ணம் பூசப்பட்ட உடைந்த உருவங்களின் பாகங்களும் ஆராய்ச்சிக்குரியது. இது கடலிலிருந்து மூன்றாவது மைலில் உள்ளது. இதன் தென்புறத்தே சுமார் இரண்டு பர்லாங்கில் காவிரி உள்ளது. காவிரியின் பக்கத்தே உள்ள வயலுக்கு உவவனம், பூவனம் என்றும் பெயர் வழக்கில் உள்ளது. இதை நோக்கின் மணிமேகலையில் குறித்தபடி உவவனம் என்னும் பூஞ்சோலையின் நடுவில் பளிங்கினால் அமைக்கப் பட்ட சிறு கோயில் ஒன்றில் புத்தரது பாதபீடிகை இருந்ததும் குறிப்பிடத்தக்கது. அன்றியும் இப்பட்டினத்தின் முதுகாட்டினை அடுத்து ஏனைய மதத்தோரால் கூறப்பட்ட "சுடுகாட்டுக் கோட்டம்" அல்லது பௌத்தர்களால் போற்றப் "சக்கரவாளக் கோட்டம்" என்னும் இடத்தில் சம்பாபதி என்னும் தெய்வம் கோயில் கொண்டிருந்தது. இன்று சம்பாபதி கோயில் இப்போது கண்ட விகாரைக்கு தென்மேற்கில் 5 பர்லாங்கில் உள்ளது. இதன் வடக்கே சாய்க்காடு என்னும் பழைய கோயில் உள்ளது.

மதகு

கரிகாலன் கரையெடுத்து முடித்தபின்பு காவிரியாற்றின் குறுக்கே அணை கட்டிப் பல கிளை வாய்க்கால்களையும் வெட்டி, நீர் தேக்கு மதகுகளையும் அடைத்துத் தண்ணீரை வேளாண்மைக்குப் பயன் படுத்தினான் என்றும், அதன் வழி சோழ நாடு சோறு மிக்கதாய், வளமுடைய நீர் நாடாயிற்று என்றும் அறியமுடிகிறது.

பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்
தன்புனற் படப்பை எம்மூர் ஆக்கண் ... *166*
காவிரி அணையும் தாழநீர் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன் ... *385*

என்று புறநானூற்றுள் காவிரி அணைவதால் கழனியில் நெல் கொழிக்கின்ற காட்சியைக் காணமுடிகிறது. அன்றியும்

உழவ ரோதை மதகோதை
உடைநீரோதை தன்பதங்கொள்
விழவரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி

என இளங்கோவடிகளும் நேரில் கண்டு அனுபவித்துப்பாடிய உணர்ச்சியைநாமும் அனுபவிக்க

முடிகிறது. புதுப்புனல்கண்டு உழவர் ஆர்க்கும் ஓசையும் நீர் மதகுகளிலே அணைந்து செல்லுதலால் உண்டாகும் ஓசையும் கரைகளையும் வரப்புகளையும் உடைத்துப் பாய்கின்ற ஓசையையும், புதுப்புனலில் ஆடும் மக்களின் ஓசையும் சிறக்கக் காவிரிப்பெண் நடப்பதாகக் கூறுகிறார்.

காவிரியில் மதகுகள் பல இருந்ததை இளங்கோ வாக்கால் கண்டோம். அதற்குத் தகவே இன்று இத்தியத் தொல் பொருள் ஆய்வாளர் வாணகிரியில் திருமேனிப்பள்ளம் என்ற இடத்தில் நீர்ப்பாசனத்திற்குப் பயன்பட்ட மதகு ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர்.[5]

இதன் அமைப்பு கண்டார் வியப்பெய்தும் வண்ணம் உள்ளது. இக்காலப் பொறியியலார் கண்டு வியந்தனர். தண்ணீர் வெளிச் செல்லும் வழி அழகுற வளைவாக அமைக்கப்பட்டும், வளைவிற்கு ஏற்ப கற்களை வளைவாக செய்தும் மதகினை அமைத்திருக்கின்றனர். சுண்ணும்புக் காரை கொண்டு கட்டப்பட்டுள்ளது. தண்ணீரின் வேகத்தைக் குறைக்கவும் மதகு சேதப்படாமல் இருக்கவும் படிப்படியாக அமைத்திருக்கிற கீழ் அமைப்பும் கொண்டுள்ளது. இது சோழ நாட்டின் இப்பகுதியின் விவசாய முன்னேற்றத்திற்குப் பயன்பட்டது என்பது நன்கு விளங்குகிறது.

வெள்ளையன் இருப்பு

பல்லவனீச்சரத்திற்கு வடகிழக்கிலும் தருமகுளத்திற்கு வடபுறத்திலும் உள்ளது வெள்ளையன் இருப்பு என்னும் ஊர். இங்கே கிரேக்க மன்னன் அகஸ்டஸ் தலை பொறிக்கப் பட்ட செப்புக்காசு கிடைத்தது. உடைந்த ரோமானிய ஜாடிகளும் அவர்கள் பயன்படுத்திய பாத்திர ஓடுகளும் கிடைத்துள்ளன. அவை கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றுண்டைச் சார்ந்தது.

யவனர் தந்த வினைமான் நன்கலம்-
அகம்147-9

பயன் அறவு அறியா யவனர் இருக்கையும்
சிலப்.5-10

யவனர் என்று குறிக்கப்பட்டது, கிரேக்கரை என்றும் மற்றைய இலக்கியங்களின் வழியும் காண்கிறோம். அவர்கள் பயன்படுத்திய, அவர்கள் நாட்டில் செய்யப்பட்ட, பாத்திரங்கள், சிதைந்த வடிவில் புதைபொருள் ஆய்வில்கிடைத்துள்ளன. புகாரில் அவர்கள் சேர்ந்து வாழ்ந்த இடமாக இருக்கவேண்டும் என்று ஆய்வாளர் குறித்துள்ளார்கள். நிறம் நோக்கி வெள்ளையன் என்று கூறும் வழக்கினை நோக்கின், யவனர்களை வெள்ளையன் என்றும், அவர்கள் வாழ்ந்த இடத்தை வெள்ளையன் இருப்பு என்றும் வழங்கினர் என்பது புலப்படும்.

இதன் பக்கத்தே சித்தங்காத்திருப்பு என்ற ஊரில் ஒரு கோயில் இருக்கிறது. சித்தன் என்றும் சித்தபரமேட்டி என்றும் பாமரமக்கள் வழக்கில் உள்ளது. "சித்தன் பகவன் தரும முதல்வன்" என்று சிலப்பதிகாரத்துள் நாடுகாண் காதையில் அருகன் திருப்புகழாகக் கூறப்பட்டுள்ளது. இக்கோயிலை சென்ற ஆண்டில் திருத்திக் கட்டியுள்ளார்கள். இறைவன் அருகன் கருங்கல்லில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

இலகொளிச் சிலாதலம்

காவிரிப்பூம் பட்டினத்தில் சமண சமயம் சிறப்புற வளர்ந்திருந்தது என்பது சிலப்பதிகாரத்தால் நன்கு விளங்குகிறது. கோவலனும் கண்ணகியும் மதுரைக்குப் புறப்பட்ட போது இல்லத்து நெடுவாயிலைக் கடந்து வெளிப் போந்து சாலையில் நடந்தார்கள். வழியில்"மணிவண்ணன் கோட்டத்தை வலஞ்செயாக் கழிந்தும், அந்தரசாரிகள் அறைந்தனர் சாற்றும் இந்திரன்விகாரம் ஏழுடன் போகியும், முடிவில் சாந்தி ஐந்தும் தம்முடன் கூடி தலைமயங்கிய வான் பெரு மன்றத்து உலக நோன்புகள் ஒருங்குடன் இட்ட **இலகொளிச் சிலாதலம்** தொழுது வலம் கொண்டும்" சென்றனர் என்று குறிக்கப்பட்டுள்ளது. பதிற்றுவரிகளில் இதன் சிறப்பை விளக்கியுள்ளார் இளங்கோவடிகள். இந்தஇடம் இன்று எங்குளது என்று ஆராயுங்கால், இன்றைய மேலையூரில், திருவெண்காடு செல்ல வடக்கில் ஒரு பாதையும், மற்றும் மேலையூரில் இலஞ்சியந்திடல் பக்கமாக வடகிழக்கு மூலையில் செல்லும் ஒரு பாதையும், நேடுஞ்சாலையில் கிழக்கு மேற்காக நீண்ட பெருவழியும், திருமஞ்சனவீதி என்ற பெயரில் செங்கழுநீர் ஓடை நோக்கி காவிரிக் கரை வரை செல்லும் தென்புறத்து ஒருபாதையும் ஆக ஐந்து பாதையாகக் கூடுகிற ஒரே இடம் இது ஒன்றே

யாகும். இதுபோல் தருமகுளத்தில் நான்கு சாலைகள் சேரும் இடம் ஒன்று உண்டு.

மெய்வகை உணர்ந்த விழுமியோர் குழீஇய
ஐவகை நின்ற அருக தானத்துச்
சாந்தி ஐந்தும் தம்முடன் கூடி
வந்து தலைமயங்கிய வான்பெரு மன்றத்து

என்ற சிலப்பதிகார அடிகளுக்குப் பொருந்த அமைத்துள்ளது. அன்றியும் அவ்விடத்து இரண்டு பெரும் கற்கள் நீண்ட உருவில் புதைக்கப்பட்டுள்ளது. அதில் குறிகளும், சக்கரவடிவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இது மிகப்பழமையானது. இதை காவிரிப்பூம் பட்டினத்தின் எல்லைத் தெய்வம் என்று மக்கள் கருதுகின்றனர். இதன் பெருமையை எண்ண சிலப்பதிகாரத்தில்,

பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்
நீரணி விழவினும் நெடுந்தேர் விழவினும்
சாரணர் வருஉந் தகுதியுண் டாமென
உலக நோன்பிகள் ஒருங்குடன் இட்ட
இலகொளிச் சிலாதலம் தொழுது வலங்கொண்டு.

கோவலனும் கண்ணகியும் சென்றதை இளங்கோவடிகள் வாக்கால் கேட்கின்ற போது அந்த "ஒளிகாலும் கற்பீடம்" இதுவேயாகும் என்று உறுதியாகக் கூறமுடிகிறது. மரங்கள்அடர்ந்த சோலையாகவும் உள்ளது குறிப்பிடத் தக்கது. "ஸ்ரீ கோயிலில் பஞ்சபரமேட்டிகள் நிலைபெற்ற ஐந்து சாந்தியுங்கூடிவந்து, தலைமயங்கியிருக்கின்ற மிகப்பெரிய மன்றிற் பூவையுடைய பிண்டியினது அழகுகிளரும் நிழற்கண்ணே விழஅயநுதிகளிலும் விழவுகளிலும் ஆகாயசாரிகள் வரத்தகுமென்று சாவகரெல்லாம் கூடியிடப்பட்ட விளங்காநின்ற ஒளியையுடைய சிலாவட்டத்தை இவர்கள் தொழுதுவலங்கொண்டென்க" என்று கூறுவர் அடியார்க்கு நல்லார். (சிலப். அடியார் உரை. பக். 268, உ. வெ. சா. பதிப்பு)

"இலகொளிச்சிலாதலம்" வரிக்குத் தரும் விளக்கத்தை நோக்க இவ்விரண்டு கற்கள் அதன் உண்மையை விளக்கும் வகையில் சான்று பகர்வனவாகும். இதுபோன்ற சிலாதலத்தின் வருணனை ஒன்று, பிராகிருத மொழியிலே எழுதப்பெற்ற ஜைனர்களுடைய சமய நூலான ஔபபாதிக சூத்திரத்திலும் காணப்படுகிறது. பூர்ணபத்திரன் (புண்ணபத்த) என்ற யக்ஷனுடைய (சேஇய) சைத்திய ஆலயத்தின் வருணனையாகும்." ஆலயத்தில் மேடைகள் கட்டப்பட்டிருந்தது. பக்தியுடன் சாணமெழுக்கிட்டு உலர்ந்து அழகுடன் விளங்கியது—ஐந்து விரல்களோடு கூடிய கையின் உருவம் இருந்தது. பூஜா கலசங்கள் நிறைந்திருந்தன.——அந்த ஆலயத்தைச் சுற்றிச்சிறிது தூரத்திற்கு உபவனம் இருந்தது. அசோக மரத்தின் அடியிலே மரத்தையொட்டி விசாலமான புடவி சிலாதலம் ஒன்று இருந்தது...... அதன் நீளம் அகலம் உயரம் ஆகியவை முறைப்படி அமைந்து கருமை நிறம் வாய்ந்து...கனமாகவும் வழவழப்பாகவும், முகம் பார்க்கும் கண்ணாடி போலவும் எட்டு மூலை கொண்டதாகவும், உருவங்கள் வரையப்பட்டு எழில் வாய்ந்து விளங்கியது" என்று விரிவாக விளக்கப்பட்டுள்ளது.[7] பள்ளன்கோயில் செப்பேட்டுச் சாசனத்தில்[8] ஐம்பதாவது வரியில் வரும் "பீடிலிகையும்" என்ற வரிக்கு விளக்கமாக டி. என். சுப்பிரமணியன் அவர்கள் தம் நூலில் விளக்கமாகக் குறித்துள்ளார். புடவி சிலாதலம் என்ற ஜைனர்களுடைய சமய நூலில் குறிக்கப்பட்டுள்ளதற்கும் சிலப்பதிகாரத்தில் மேலே கண்ட சிலாதலத்திற்கும் உள்ள ஒற்றுமை கண்டு உண்மை தெளியலாம்.

இதற்குக் கிழக்கே ஏழாவது பர்லாங்கில் புத்தவிகாரம் இருப்பதை புதைபொருள் ஆய்வாளர் கண்டுபிடித்தபின் இக்கொள்கை வலுவுள்ளதாகிறது. விகாரைக்கு கிழக்கே அடுத்த இரண்டு பர்லாங்கில் ராஜநாராயணப் பெருமாள் கோயில் இருக்கிறது. இதை மணிவண்ணன் கோட்டமாகக் கொண்டு நோக்கின் இளங்கோ கூற்றுப்படி அடுத்து கோவலன் கண்ணகி இல்லம் இருந்திருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. இல்லம் விட்டுப் புறப்பட்டவர்கள், மணிவண்ணன் கோட்டத்தை வலஞ்செயாக்கழிந்தும், இந்திரனுல் நிருமித்தனவாகிய ஏழு அரங்காகிய விகாரையைக் கடந்து போகி; இலகொளிச்சிலாதலம் தொழுது வலம் கொண்டு உலக இடை கழியை ஒருங்குடன் நீங்கிச் சென்றனர் என்பது தெளிவாகக் காணக்கிடக்கிறது. அடுத்து;

"பல்மலர் அடுக்கிய நல்மரப் பந்தர்
இலவந்திகையின் எயிற்புறம் போகி
தாழ்பொழில் உடுத்த தன்பதப் பெருவழிக்
காவிரிவாயில் கடைமுகங் கழிந்து"

சம்பாபதி தெய்வம்

சம்பாபதி கோயில்



புகார் காசுகள்

குடதிசைகொண்டு கொழும்புனல் காவிரியின் வடபெருங்கோட்டு மலர்ப்பொழிலினுள் நுழைந்து மேற்கே சென்றதாக இளங்கோ வடிகள் கூறியுள்ளார். இவற்றைக்கொண்டு காணின் கழாஅர்த்துறை அன்னூளைய நீராடு துறை என்றும், அதுவே காவிரிவாயில் என்றும் அதன் வடபால் அமைந்த இலையமடம் என்னும் ஊரே இலவந்திகை என்றும் தெளிவாக விளங் கும். இதுவே மணிமேகலையுள்ளும், "இலவந் திகையின் எயிற்புறம் போகின், உலக மன்னவ னுழையோ ராங்குளர்" என்று கூறுவதும் காண்க.

பேசும் பெருமாள் சாத்தனூர்கோயில்

மணிக்கிராமத்தில் பேசும் பெருமாளுக்கு ஒரு சிறு கோயில் உள்ளது. இதில் உள்ள தெய்வ வடிவம், நீண்ட கருங்கல்லில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இது பேசும் இயல்புடையது என்று மக்கள் இன்றும் கூறுகின்றனர். மரத்தடியில் இருந்த கோயிலை இப்போது கற்கோயிலாக கட்டியுள்ளனர். இது சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் மணி வண்ணன் கோயிலாக இருத்தல் கூடுமா என்று ஆராய்தல் வேண்டும்.

ஐயனூர்கோயில்—நெடுங்கல் நின்ற மன்றம்

வெள்ளையன் இருப்புக்கும் கடைக்காட்டிற் கும் இடையே உள்ள கோயிலை செருவெட்டி ஐயனூர் என்று மக்கள் வழங்கி வருகின்றனர். இங்கு எந்த உருவிலும் தெய்வம் இல்லை. இரு செங்கற்கள் நடப்பட்டுள்ளன. இது மிகவும் அச்சம் விளைவிக்கும் வகையில் செயல்படுகிறது, என்று மக்கள் நம்புகின்றனர். எனவே தீமை செய்தவர்களைத் தண்டிக்க இங்கு சீட்டு எழுதி கட்டுகிறூர்கள். பொய்யாக எழுதிக் கட்டினுல் அவர் துன்புறுவர் என்றும் மக்கள் அனுபவத் தில் கண்ட செய்தியையும் கூறுகின்றனர். இங்கு கொடிய நாகமும் மனிதர்களை ஒன்றும் செய்வதில்லையாம். இங்கு இயல்பாகவே கோழி கள் வளர்கின்றன. இரவில் பூவரசு மரப்பொந் தில் தங்குகின்றன. பகை விலங்குகளால் இவற்றிற்குத் துன்பம் ஏற்படுவதில்லை. இவற்றை மனதில் கொண்டு நோக்கின்,

வஞ்சம் உண்டு மயல்பகை உற்றோர்
நஞ்சம் உண்டு நடுங்குதுயர் உற்றோர்
அழல்வாய் நாகத்து ஆர்எயிறு அழுந்தினர்
கழல்கண் கூளிக்கடுநவைப் பட்டோர்
சுழல வந்து தொழத்துயர் நீங்கும்
நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமும்,
சிலப். 5-122-27

என்ற சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் இடமாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இலஞ்சியங்குளம்—இலஞ்சி மன்றம்

இங்குள்ள திடலுக்குப் பெயராக இலஞ் சியந்திடல் என்றும், ஒரு குளத்திற்குப் பெயராக இலஞ்சியங்குளம் என்றும் வழங்கி வருகிறது. இது சாய்க் காட்டிற்கு வடபுறத்தில் உள்ளது.

கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகு மெய்யாளரும் முழுகினர் ஆடி
பழுது இல்காட்சி நல்நிறம் பெற்று
வலஞ்செயாக் கழியும் இலஞ்சிமன்றமும்
சிலப். 5-118-21

என்று சிலப்பதிகாரத்தில் குறித்த இலஞ்சி மன்றம் இருந்த இடமாக எண்ணத் தோன்று கிறது. நோயாளர் பழுதில்லாத தோற்றத்தை யுடைய நல்ல நிறம் பெறுகையினுலே தன்னை வலஞ் செய்து தொழுது ஆடி நீங்கும் பொய் கையையுடைய மன்றம் என்பதாலும், இன்றும் இலஞ் சியங்குளம் என்று வழங்கிவருவதாலும் இலஞ்சி மன்றம் இருந்த இடம் இதுவேயாம் என்று தெளிவாகிறது காண்க.

சம்பாபதி கோயில்

மணிமேகலையில் சிறப்பாகப் பாராட்டப் பட்டுள்ள சம்பாபதி கோயில் இன்றும் இங்கு இருந்து வருவது குறிப்பிடத் தக்கது. இது சாய்க்காட்டிற்குத் தென்புறத்தில் உள்ளது. இதற்கு, இவ்வூர் மக்கள் அண்மைக் காலம் வரையில் மிகச் சிறப்பாக விழாவெடுத்து வந்தனர். புகாரின் காவல் தெய்வம் என்றும், இதை வணங்குவதால் நாடு செழிப்பும் நலமும் உடையதாகும் என்றும், மக்கள் கருதி வழிபடு கின்றனர். இதன் தென்பால் ஒருபர்லாங்கில் காவிரி ஓடுகிறது. இதனைச் சூழ அமைந்த வயல்களுக்கு பூவனம், உவவனம் என்ற பெயர் கள் வழக்கில் உள்ளது. இங்கு இடுகாடும் உள்ளது. கோயில் பக்கத்தே மிகப் பெரிய,

பழமையான ஆலமரம் உள்ளது. சுண்ணும்புக் காரையால் செய்யப்பட்ட இரு பூத வடிவங்கள் ஆண் பெண்ணுக அமைக்கப் பட்டுள்ளன. இது போல் கோயில் உள்ளேயும் இரு உருவங்கள் ஆண் பெண் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு இதைபுதைபொருள் ஆய்வாளர் அகழ்ந்து பார்த்தனர். செங்கல்லால் கட்டப் பட்ட கோயில் சிதைந்த வடிவில் உள்ளது. இக்கோயிலும் இருவேறு காலங்களில் கட்டப் பட்டுள்ளதாக காணப்படுகிறது.

சாய்க்காடு

சாய்க்காடு—சாயாவனம் என்று இன்றும் மக்களால் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

செங்நெலஞ் செறுவின் அன்னங் துஞ்சும்
பூக்கெழு படப்பைச் சாய்க்காட்டன்ன

நற்றிணை 73

நெடுங்கதிர் கழனித் தன்சாய்க் கானம்

அகம் 220

எனச்சங்கப்பாடல்களில் குறிக்கப்பெற்றுள்ளது. "செந்நெற் கதிர்களை உடைய வயல்களில் அன்னப்பறவை துஞ்சா நிற்கும் பொலிவுபெற்று விளங்கிய கொல்லைகளையுடைய திருச்சாய்க் கானம்" — என்றும் "நீண்ட கதிர்களுடைய — வயல்களையுடைய தண்ணிய சாய்க்கானம்" என்னும் பொருள்படக் குறிக்கப் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் சாய்க் காடு, புகார் நகரத்தின் ஒரு பகுதி என்பதனை,

தண்புகார்ச் சாய்க்காட்டெங் தலைவன்,
காவிரிப்பூம்பட்டினத்துச் சாய்க்காட்டெம்

பரமேட்டி

எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மற்றும்

பாரார்க்கும் பயில்புகாரிற் பல்லவனீச்சரம்
பாரார்க்கின்ற பட்டினத்துப் பல்லவனீச்சரமே

என்னும் திருப்பாடல் தொடர்களால் இவ்வூர் புகார் நகர எல்லையுள் அமைந்திருந்தது என்பதும் தெளிவாகிறது. பிற்காலச் சோழர்கள் கல்வெட்டிலும் சாய்க்காடு "புகார் நகரத்துச் சாயை",எனவும் குறிக்கப்பட்டுள்ளது. (விக்கிரம சோழனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் செய்யுள் வடிவில் பொறிக்கப்பட்டுள்ளது கி.பி.1118-1135)

காசுகளும் மணிகளும்.

புதைபொருள் ஆய்வில் பூம்புகாரைச்சுற்றி ஐந்து மைல் அளவில் கிடைத்துள்ள செப்புக் காசுகளும், பல்வகை வண்ண மணிகளும் பழங் காலத்து கறுப்பு-சிகப்பு ஓடுகளும் பழமையை உணர்த்தப் போதியனவாகும். இவை கி. மு. முதல் நூற்றுண்டு முதல், கி. பி. முதல் நூற்றுண்டுவரை உள்ள கால அளவில் கிடைத் துள்ள சான்றுகளாகும். புலியும் யானையும் பொறிக்கப்பட்ட, சதுர வடிவுடைய செப்பு நாணயங்கள் கி. மு. முதல் நூற்றுண்டு என்றும் கரிகாலன் காலத்திய நாணயம் என்றும் புதை பொருள் ஆராய்ச்சி மெய்ப்பித்துள்ளது. இத் துடன் "பஞ்ச்மார்க்" செய்யப்பெற்ற காசுகளும் கிடைத்துள்ளன. வாலைத்தூக்கியுள்ள நிலையில் புலியின் உருவமும், சில காசுகளில் புலிவடி வோடு நட்சத்திர வடிவமும் பொறிக்கப் பட்டுள்ளது.பல்வேறு அளவில் காசுகள் கிடைத் துள்ளன. பல நிற மணிகளும் கார்நீலியன் வகை மணிகளும் நிறையக் கிடைத்துள்ளன. முதுமக்கள் தாழிகள் புதைவிடங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. புத்த விகாரத்தில் ஒரு பக்கத்தில் புதைகுழியில் மண்டையோடு ஒன்றும் கிடைத்தது. அது ஆராய்ச்சியில் உள்ளது.

உறைக்கிணற்றுப் புறச்சேரி என்று பட்டினப்பாலையில் குறிக்கப்பட்டுள்ளது. இங்கு பல இடங்களில் உறைக்கிணறுகள் கிடைத்துள் ளன. இன்றும் மக்கள் அதையே கிணருகத் தோண்டி வைத்துக்கொண்டு பயன்படுத்து கின்றனர். அழகிய வேலைப்பாடு கொண்டது. கடற்கரை ஓரம் பரதவ மக்கள் பயன்படுத்து கின்றனர். மழைக்காலங்களில் கற்குவியல்கள் உள்ள இடத்திற்கு சென்ருல் காசுகளும் மணி களும் கிடைக்கும். இதனுல் புகார் வரலாற்றில் எவ்வளவோ காணவேண்டியுள்ளது.

முடிவாக ஒன்று சொல்லலாம். புகாரைக் கடல் கொண்டது எந்த அளவு மெய்மை யுடையது என்பது ஆராய்ச்சிக்குரியது. யான் கண்ட சான்று கொண்டு புகார் கடலால் அழிந்தது ஒரு சிறு பகுதிதான் என்றும், பெரும் பகுதி இன்று பூமியில் அழிந்துள்ளது என்றும் சான்றுகாட்ட முடியும். பாண்டியர் படையெடுப் பாலும்,[9] மக்கள் கவனக்குறைவாலும் அழிந்ததே

மிகுதி. பிற்காலச் சோழர்கள் 12-ம் நூற்றாண்டு வரை இங்கு தொடர்பு கொண்டிருந்தனர். கடல் கோளில் புகாரின் கடற்றுறைப்பட்டினம் மேடிட்டு துறைமுகப்பகுதி அழிந்துவிட்டதால் இதனைச் செப்பம் செய்யமுடியாத நிலையில் விடுத்தனர் என்றே கொள்ளவேண்டும்.

இதுவரை ஆராய்ந்தவரை புகாரின்பழமையும், இலக்கியங்களில் குறிக்கப்பெறும் சான்றுகள் வலுவடைந்தும், காணப்படுகிறது. புதைபொருள் ஆய்வு மிகக்குறைந்த இடத்தில்தான் நிகழ்த்தப்பெற்றுள்ளது. இன்னும் ஆராய்ந்து காணவேண்டிய இடம் நிறைய உண்டு. அங்கெல்லாம் அகழ்வு வேலை தொடங்கப்பெறின், பயன் உண்டாகும் என்பது உறுதி. வாணகிரி கிராமம் மிகவும் சிறந்த இடம். இங்குதான் நிறைய காசுகளும் மணிகளும் கிடைக்கின்றன. மணிக்கிராமமும் இதற்கு இணையானதே; இங்கு மக்கள் தங்க நாணயம் எடுத்து விற்றுள்ளதாகவும் கூறுகிறார்கள். மேலும் புதைபொருள் வேலை தொடர்ந்து நடைபெற்றால் அரிய செய்திகள் வெளிப்படும் என்பது உறுதி.

மேற்கோள்கள்

1. Indian Archaeology A Review 1962—63 Page No 13. Wparf and remains of wooden poles.

2. Indian Archaeology A Review 1964—65 Page No. 24. Buddha Pada and Buddhist Vihara.

3. முதன் முதல் கட்டிய விகாரை கி. மு. 300ஐ சார்ந்தது என்பதற்கு உரிய சான்றுகள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. கி. மு. 2 அல்லது 1 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட "பரோத்" கல்வெட்டுக்களில் காகண்டியில் உள்ள சொர்ணம் பெண் துறவியின் மானியத்தைப் பதிவு செய்துள்ளது. "காகந்தி பிட்சுணி" என்பதாலும் புகாருக்கு காகந்தி என்ற பெயர் இருந்ததும் குறிபிடத்தக்கது. அத்துறவி இங்கிருந்து சென்ற துறவி என்பதும் அக்காலத்தே புகாரில் விகாரம் இருந்தது என்பதும் தெளிவாகிறது. (1800 ஆண்டுக்கு முற்பட்ட தமிழகம் பக்: 47)

4. மயிலை. சீனி. வேங்கடசாமி. 'பௌத்தமும் தமிழும்' பக். 25; 40, டி. வி. சதாசிவபண்டாரத்தார். 'காவிரிப்பூம்பட்டினம்.' பக்கம். 50-51.

5. Indian Archaeology. A Review 1963—64 Page No. 20. Reservoir.

6. அகஸ்டஸ் ஆட்சிக் காலத்திலிருந்து ஜீனோ ஆட்சிக் காலம் வரையுள்ள (கி. மு. 27 முதல் கி. பி. 491 வரை) உரோம நாணயங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் புதையுண்டு கண்டெடுக்கப் பட்டுள்ளன. (வி. கனகசபைப்பிள்ளை. '1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்.' பக்கம் 73. கழகவெளியீடு அப்பாத்துரை மொழிபெயர்ப்பு)

7. "பல்லவன் செப்பேடுகள் முப்பது" பக். 23-24 விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. "யக்ஷர்" என்ற தலைப்பில் ஆனந்த குமாரசாமி ஆங்கிலத்தில் எழுதிய நூலின் முதல் பாகத்தில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள ஆங்கில மொழி பெயர்ப்பின் தமிழாக்கம் தரப்பட்டுள்ளது.

8. Pallan kovil Jaina Copper-plate grant of Early Pallava period, by T. N. Subramaniam. Printed from Transactions of the Archaeslogical Society of South India. 1958—'59. Page. 67—68.

9. "காவிரிப்பூம்பட்டினம்" - தி. வை. சதாசிவ பண்டாரத்தார். பக்கம் 6-7. கி. பி: 1216-1238. மாறவர்மன் சுந்தரபாண்டியன் படையெடுப்பு- பாண்டியர் வரலாறு- பக்கம் 116. பண்டாரத்தார்.

   103ம்-பக்கம், இரண்டாவது பத்தி, 9-வது வரி: புத்தவிகாரம் உள்ள இடத்தில் முன்னர் நகரத்தார் விடுதி கட்டிய போது பெரிய புத்தர்சிலை (தங்கத்தால் ஆனது) ஒன்று கிடைத்ததாகவும் அதை விற்றே கட்டிடம் கட்டினார்கள் என்றும் வயதுமுதிர்ந்த பெரியவர்ஒருவர்கூறக்கேட்டேன். மேலையூரில் 1927ல் கண்டெடுக்கப்பட்டு சென்னை மியூசியத்தில் உள்ளது. "மைத்ரேயி" என்ற புத்த உருவம். இதை "மேலையூர் மைத்ரேயி" என்று குறித்துள்ளனர். தங்கமுலாம் பூசப்பெற்றது. கி. பி. 9 என்று டி. என். ராமச்சந்திரனும், கி. பி. 8 ஆம் நூற்றாண்டு என்று பி. ஆர். சீனுவாசனும். கருதுகிறார்கள்
   Story of Buddism with special reference to South India. By A. Aiyappan & P. R. Srinivasan, Madras museum. Page 79-80.

கடன் கோட்டு மக்கம். வட மலபாரின் நாட்டு நடனம்.

கே. கே. என். குருப்.

வட மலபாரின் நிலப்பகுதிக்கு கொளத்த நாடு என்றுபெயர். இது பரம்பரையான நாட்டுப் பண்பாட்டிற்கும் கலைகளுக்கும் பெயர் பெற்றது. 'தெய்யாட்டம்' (தேவராட்டம்) என்ற ஆட்டம் இங்கே ஆடப்படுகிறது. சங்ககாலத்துச் சடங்கு மரபுகளை இவ்வாட்டம் தன்வயப்படுத்தியுள்ளது. கூளி, வீரன், பிராம்மணன், பறையன் முதலிய கதை மாந்தர்களின் ஆட்டங்களைக் குறித்து சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் எழுதியுள்ளார். இவ்வாடல்களை அவர் கோலம்[1] என்ற பெயரால் அழைக்கிறார். நாட்டுப் பண்பாட்டுச் சடங்காகக் 'கோலம்' என்பது இலங்கையிலும் வழங்கிவருகிறது.[2]

தெய்யம் ஆடல் அல்லது கோலம் என்பது அணியும் அழகும் நிறைந்தது. சாதாரண மக்களின் தெய்வ நம்பிக்கையின் வெளிப்பாடாக விளங்குகிறது. கடன்கோட்டுத் தெய்வத்தின் பெயர் மக்கம். மக்கம் என்ற பெயரில் ஓர் ஆட்டம் இருக்கிறது. இவ்வாடல் நாயர் குலத்தைச் சேர்ந்த ஓர் கற்புடைப் பெண்ணின் நினைவைப் போற்ற எழுந்தது. ஒரு சோக நிகழ்ச்சியின் பாத்திரமாக இருந்து, பிற்காலத்தில் மக்களால் தெய்வமாக வணங்கப்பட்டவள் இவள். இந்த நாட்டுத் தெய்வத்தின் வரலாற்றையும் ஆட்ட முறைகளையும், அவைபற்றிய நம்பிக்கைகளையும் இக்கட்டுரையில் விளக்குவேன்.

இடம்

கொளத்தநாட்டுப் பகுதியில் பகவதிக்கு 'மக்கத்தில் போத்தி' என்ற பெயர் வழங்கி வருகிறது. இத்தெய்வம் அப்பகுதியில் மிகவும் பிரபலமானது, இதற்கென நடைபெறும் விழாவிற்கு 'தெய்யம்' என்பதே பெயர். வீடுகள் இல்லாத திறந்தவெளியில் தெய்யம் நடைபெறும். ஏனெனில் இவ்விழாவை ஓர் வீட்டில் நடத்தினுல் அவ்வீடு அழிந்துபோகும் என்று மக்கள் நம்புகிறார்கள். குத்துப்பரம்பா, செம்பிலோடு, மாவிலாயி,பிலத்தாரா, குன்ஹிமங்கலம் முதலிய ஊர்களில் 'மக்கம் தெய்யம்' என்ற கிராம தேவதை வழிபடப்படுகிறது. பிள்ளைப் பேற்றை விரும்புகிறவர்கள் தெய்ய ஆடலை நடத்துவார்கள்.

கண்ணனூருக்கு அருகிலுள்ள வெம்பிலோடு என்ற ஊரிலுள்ள 'சாலையில் புதிய வீட்டில்' என்ற கட்டிடத்தில் இத்தெய்யத்தின்'ஸ்தானம்' அல்லது கோயில் இருக்கிறது. மலையாள சகாப்தம் கும்ப மாதம் 13, 14ந் தேதிகளில் இத் தெய்வத்திற்குக் கொடை நடைபெறும். இவ் வீட்டில் குடியிருப்பவர்கள் கொடை நாட்களின் போது வீட்டைக் காலிசெய்து விடுவார்கள். (காலிவீடுமைதானம் போலாகி விடுகிறதாம்)

ஆட்டக்காரர்களும் சடங்குகளும்

இத்தெய்யத்தை வண்ணார்கள் ஆடுகிறார்கள். இவ்வாட்டத்தில் 'மக்கம்-திரா' என்றும் 'மக்கம் தெய்வம்' என்றும் இருவகைகள் உள்ளன. முதல் வகை ஆட்டம் கண்ணனூரின் தெற்கிலும், இரண்டாவது வகை ஆட்டம் கண்ணனூரின் வடக்கிலும் ஆடப்படுகிறது. அடிப்படையில் இவையிரண்டிற்கும் வேறுபாடு இல்லை. மக்கத்தோடு சேர்த்து அதன் குழந்தைகளான சாத்து, சீரு என்ற தெய்வங்களுக்கும் எடலாபுரம் சாமுண்டி, மயிலான் என்ற தேவதைகளுக்கும்

தெய்யம் எடுக்கிறுர்கள். ஆனல் 'ஒத்தக்கோலம்' என்ற விழாவில் மக்கம் தெய்வத்திற்கு மட்டுமே ஆட்டம் நடைபெறும்.

மக்கம் தெய்யத்தின் முடி தென்னேலையின் குருத்தால் பின்னப்படும். இதற்குக் 'குருத் தோலா' என்று பெயர். முடியில் 16 திரிகளும் 6 பந்தங்களும் எரியும். செக்கிமாலைகளால் முடி அலங்காரம் செய்யப்படும். தெய்வத்தின் இடுப்பில் இருந்து ஒரு வாள் தொங்கும். இதற்குச் 'சேதகம்' என்று பெயர். முகம் மஞ்சள், சிவப்பு நிறங்களால் தீற்றப்பட்டிருக்கும், ஆட்டக்காரன் மார்பில் மரத்தால் செய்யப் பட்ட முலைகளைக் கட்டிவிடுவார்கள். ஒவ்வொரு கையிலும் 6 வளைகளும் ஒரு சூடகமும் அவன் அணிந்துகொள்வான். இடுப்பில் அவன் 'வட்டோடா' என்ற ஒட்டியாணம் போன்ற தோர் கலனை அணிந்து கொள்ளுவான்.

மக்கத்தின் மகனுன சாத்துவின் உருவம் கடிவனூர் வீரனின் உருவம்போல் தோற்றத்தி லும், அணிகளிலும் இருக்கும். மக்கத்தின் மகளான சீருவை, தாயின் உருவம் போலவே செய்து தாயைப்போலவே அணி செய்வார்கள். ஆனல் முடியிலுள்ள திரிகள், பந்தங்களின் எண்ணிக்கை தாயின் முடியிலுள்ளதை விடக் குறைவாக இருக்கும். சீருவின் முடியில் 6 திரி களும், 4 பந்தங்களும் இருக்கும்.

எடலாபுரம் சாமுண்டி அல்லது பகவதியின் உருவத்தில் மரமுகமூடி முகத்தை மூடியிருக்கும். அம்முகமூடியில் சப்த மாதாக்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். மக்கத்தின் வட்டமுடி போன்று இதன் முடியிராது. தென்னேலையால் செய்யப்பட்ட கூம்பு வடிவமான முடியை சாமுண்டிக்கு அணிவார்கள். சாமுண்டிக்குப் பந்தங்கள் இல்லை. கையில் ஒரு வாள் இருக்கும்.

மயிலானுக்கு பலநிற ஆடைகளோ, குறிப் பிட்ட அணியோ இல்லை. இனக்குழு மனிதனைப் போல இவனுக்கு ஒரு தடியைக் கையில் கொடுத்திருப்பார்கள். பெண் தெய் வங்களுக்குரிய ஆட்டத்திற்கு 'தோட்டம்' அல்லது 'இளங்கோலம்' அல்லது 'வெள்ளாட்டம்' என்று பெயர். இது மாலையில் தொடங்கும்.

முடியை அப்பொழுது ஆட்டக்காரன் அணிந்து கொள்ள மாட்டான். ஆனல் 'சுற்றுக்கட்டு' என்ற ஓர் பட்டை இடுப்பைச் சுற்றி அவன் கட்டிக் கொள்ளுவான். ஆரம்பத்தில் பகவதிக்கு தோத்திரப்பாடல்கள் ஜபிப்பார்கள். ஆட்டக் காரன் ஆவேசம்கொண்டு ஆடுவான். கொட்டு முழக்கிற்கேற்ப அவன் ஆடுவான். கொட்டு தவிர சிங்கிகளும், குழலும், ஓபோவும் முழங்கும். நள்ளிரவில் ஆட்டம் முடிவடையும். இதன் பிறகு அவன் முடியணிந்து காலைவரை ஆடுவான்.

கள்ளும், பழங்களும், இளநீரும் தெய்வத் திற்குப் படைக்கப்படும். மக்கம் தெய்யமாக ஆடுபவன் சேவல்களை அறுத்து இரத்தத்தைத் தரையில் தெளிப்பான்.

கதை

மக்கத்தின் சோகமுடிவுதான் இத்தெய்வத் தின் கதையாகும். குன்னிமங்கலம் என்ற ஊரி லிருந்த கடங்கோட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் நாயர் பெண்ணின் வாழ்க்கை வரலாறே அக்கதை. பன்னிரண்டு சகோதரர்களுக்கு ஒரே தங்கை மக்கம். எல்லா சகோதரர்களும் அவளை நேசித்தனர். தம் கணவர்கள் சகோதரியை நேசிப்பது அவர்களுடைய மனைவியருக்குப் பிடிக்கவில்லை. சகோதர வாஞ்சையைக் கெடுத்து வெறுப்பாக மாற்ற அவர்கள் சமயம் பார்த்திருந்தார்கள். கோலாத்திரி மன்னனின் வீரர்களாக இச்சகோதரர்கள் பணிபுரிந்து வந்தனர். அவர்கள் வீட்டிலிருப்பதில்லை. ஒரு நாள் எம்மன் என்னும் வாணியன் வந்தான். மக்கம் வீட்டிற்கு விலக்கமாயிருந்ததால் வெளியே வராமல் அவனை வீட்டினுள் வந்து எண்ணெய்க் குடத்தை வைத்துவிட்டுப் போகச் சொன்னுள். அவன் வீட்டினுள் ஒரு அறை யினுள் வைத்துவிட்டுப் போனுன்.

மக்கத்தின் நாத்திமார்கள் இதைப் பார்த் தார்கள். தம் கணவர்களின் சகோதர வாஞ் சையை அழிக்க இதுவோர் சாக்காகும் எனக் கருதினர். சகோதரர்கள், போர் முடிந்து வீடு வந்தனர். மன்னனல் அச்சன்மார் என்ற பட்டம் பெற்று புகழோடு ஊர் திரும்பினர். தங்களது ஒரே தங்கையைப்பற்றி தம்மனைவிமார்

கூறிய பழியைக் கேட்டனர். அவள் கற்பிழந் தவள் என்றும், அதுவும் விலக்குக் காலத்தில் வாணியனோடு தொடர்பு கொண்டவள் என்றும் தம் மனைவியர் கூறியதைக் கேட்டு வெகுண்ட னர். சகோதர பாசம் மறைந்து வெறுப்பு மேலிட்டது.

தமது குலப்பெருமையை நிலைநாட்ட இந்த அவமானத்தைப் போக்க வேண்டுமென முடிவு செய்தனர். தூரத்தில் உள்ள ஒரு கோயிலில் கூத்துப் பார்க்கப் போக அவளையும் அவள் குழந்தையையும் அழைத்தனர். மக்கம் திடீ ரென்று அவர்கள் கோயிலுக்குப்போக அழைத் ததைக் கண்டு சந்தேகப்பட்டாள். தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று மன்றாடினாள். குன்னிமங்கலத்தில் உள்ள எல்லட்டாத்து பகவதியை வணங்கினாள். அவள் சகோதரர் களோடு கொளத்துவாயிலைத் தாண்டி, பலியப் பட்டம் ஆற்றையும் கடந்தாள். களரிவட்டுக் கல்லில் அவள் முப்பத்தைந்து பரதேவதைகளை வணங்கினாள். தெற்கு நோக்கிவந்து செம்பி லோட்டிலுள்ள சாலைவாயிலை அடைந்தார்கள். மக்கம் களைத்துப் போய் தனது சகோதரர்களைப் பார்த்துக் குழந்தைகளைத் தூக்கிக் கொள்ளச் சொன்னாள். அவர்கள் அவளையே குழந்தைகளை இடுப்பில் வைத்துக்கொள்ளச் சொன்னார்கள்.

சாலைவாயிலில் ஒரு பெரியவீட்டைக் கண்டு மக்கம், உள்ளேபோய் தண்ணீர் கேட்டாள். வீட்டில் இருந்தவர்களிடம் தான்கடன்கோட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று சொன்னாள். அவர்கள் பால் கொடுத்துக் குடிக்கச் சொன்னார் கள். அவள் மனம் குளிர்ந்து அவர்களுக்குத் தனது நகைகளை அளித்தாள். திரும்பிவந்தால் இவ்வீட்டிற்குவந்து பால்குடிப்பதாக வாக்களித் தாள். சகோதரர்களும் மக்கமும் மேலும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். காயலோடு என்னும் இடத்திற்கு வந்தார்கள். இங்கு ஆள் நடமாட்டம் இல்லை. ஒரு முஸ்லிம் பள்ளியும் ஒரு கிணறும் அங்கிருந்தன.

மக்கம் நீர் குடிக்கக் கிணற்றுப் பக்கம் போனாள். இவ்விடத்தில் தான் அவளைக்கொலை செய்ய வேண்டும் என்று சகோதரர்கள் தீர் மானித்தார்கள். அவள் நீர் இறைத்துத் தனது குழந்தைகளுக்குக் குடிக்கக் கொடுத்தாள். ஒரு சகோதரன் அவளை நெருங்கி, "பட்டப்பகலில் ஒரு நட்சத்திரம் தெரிகிறதே, பார்த்தாயா"? என்றான். அவள் தலைநிமிர்ந்து வானத்தைப் பார்த்தாள். ஒருவன் வாளை உருவினான், "ஐயோ குழந்தைகளைக் கொல்லாதே" என்று அவள் கதறினாள். ஒருவன் அவளை வெட்டினான். குழந்தைகளின் தலைகளையும் அரிந்து, அவளு டலையும், அவற்றின் உடல்களையும் கிணற்றுள் தள்ளினார்கள். எடலாத்து பகவதியும், மக்கத் தின் ஆன்மாவும் கொட்டியூர் சிவனிடம் சென் றார்கள். சிவன் அவளுக்குப் பகவதி என்று பெயர் கொடுத்து, பிள்ளையில்லாதவர்களுக்கு பிள்ளைவரமளிக்கும் ஆற்றலையும் அருளினார்.

மக்கம் பகவதி சாலையில் புதிய வீட்டி னுக்குப்போய் தனக்குக் கோயில் கட்டும்படி ஆணையிட்டாள். கதையின் பின்னுரை கொலை செய்துவிட்டுத் திரும்பிய சகோதரர்கள் பரஸ் பரம் வெட்டிக்கொன்றுகொண்ட நிகழ்ச்சியைக் கூறுகிறது. குன்னிமங்கலத்திற்குத் திரும்பிய சகோதரர்கள் ஒரு அரச மரத்தடியில் உட்கார்ந்து இளைப்பாறினார்கள்.ஒரு சகோதரன் 'அரசமரம் மாதிரிச் செழித்திருந்த தங்கள் குடும்பத்திற்கு கெட்டகாலம் வந்துவிட்டதே' என்று சொல்லி வருந்தினான். ஒவ்வொரு சகோதரனும் அதற்குத்தன்னைத் தவிர பிறர் தான் காரணம் என்று குற்றம் சாட்டினான். தங்கையையும் குழந்தைகளையும் கொன்ற தற்கும் அவ்வாறே குற்றம் சாட்டிக்கொண்டு சண்டையிட்டு ஒருவரையொருவர் கொன்று கொண்டார்கள். அரசமரத்தடியிலேயே அவர் கள் மாண்டார்கள்.

உட்பொருள் விளக்கம்

கற்புடைய மகளிரை வழிபாடு செய்தல் மிகப் பழமையான மரபாகும். கற்புடை மகளிர் தெய்வங்களாகப் போற்றப்பட்டனர். சங்க நூல்களில் கற்புடை மகளிருக்காகச் 'மாசதிக் கற்கள்' நடப்பட்டன என்ற குறிப்புகள் உள்ளன.[3] ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆடும் துணங்கை என்னும் வழக்கம் இருந்தது. இக் கூத்தை நடுகற்களைச் சுற்றி ஆடுவார்கள். 1500 ஆண்டு பண்பாட்டு முறையைப் பின்பற்றி எழுந்ததே மக்கம் தெய்யத்தின் வழிபாடும்; ஆட்டமும், நடுகல் வழிபாட்டுக்குப் பதில்

அவர்களைத் தெய்வமாக்கி, தெய்ய ஆட்டங்களை ஆடி வழிபடுவது பிற்காலத்தில் தோன்றியது.

'கிளிப்பாட்டு' என்ற வகைப் பாடல்களில் இக்கதைப் பாடப்படுகிறது. இவை நாட்டுப் பாடல்கள். கேரள நாட்டுப் பண்பாட்டியல் ஆராய்ச்சியாளர் டாக்டர் செலநாட்டு அச்சுத மேனன், மக்கத்தைக் கேரளத்துக் கண்ணகி என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், "மலையாள மொழியில் ஓர் இளங்கோவடிகள் பிறந்திருந்தால், அவர் மக்கம் சாவு பற்றியதோர் காவியத்தைப் பாடியிருப்பார்" என்று கூறுகிறார்.

'மக்கம்' கதை பெண்வழி உரிமைக் கூட்டு குடும்பத்தின் தெளிவான சித்திரத்தை அளிக்கிறது. சகோதரர்கள், சகோதரியையும், அவளுடைய குழந்தைகளையும் நேசிப்பதைப்பார்த்து மனைவிமார் பொறுமை கொள்ளுகிறார்கள். பரம்பரையாக தனதுகணவன் குடும்பத்தை விட கேரளத்தில் பெண்கள்தான் பிறந்த குடும்பத்தை நம்பியேஅந்தஸ்தோடு வாழமுடியும். தனிஉணர்வுகளை விடக் குடும்ப கௌரவம் சகோதரர்களால் மதிக்கப்படுகிறது. தங்கள் காலக்கற்பு பற்றியும், குடும்ப மதிப்பு பற்றியும் நிலவியிருந்த சமூகக் கருத்துக்கள், ஒழுக்க மதிப்புகளுக்கு இச்சகோதரர்கள் உட்பட்டவர்களே. தங்கள் மனைவியரின் கொடுஞ்சதிக்கு, இவர்கள் சமூகக் கருத்துக்களுக்குப் பணிந்து உடன்பட்டார்கள். ஓர்சிறிய கிராமத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி இன்றும் நாட்டுப்பண்பாட்டு வழிவழிப் பரப்புதல் மூலம் நாடுமுழுவதும் பிரபலமடைந்துவிட்டது.

அடிக்குறிப்புக்கள்

1. பர்ரோவும் எமனோவும், D. E. D. *1885* கொல்லம்
2. எம். டி. ராகவன். இலங்கை வரலாறு, சமுதாயம் பண்பாடுகளில் இந்தியா. (புதிய டில்லி *1964*) பக்கம் *129*.
3. பொருள் *60*
4. டாக்டர் சி. அச்சுதமேனன். பிரதட்சிணம் பக். *23*

மனித குலத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடும்
எல்லா ஞானவான்களுக்கும் உரிய
ஒரே பொது இலக்கிய மாத இதழ்

"ஞானரதம்."

இப்போது மாதந்தோறும் தேதி தவறாமல்
முதல் தேதியன்றே வெளியாகிறது.

ஆண்டுச் சந்தா ரூ. 6—00 அரையாண்டுச் சந்தா ரூ. 3—00
ஆயுள் சந்தா ரூ. 100—00
மாதந்தோறும் 25ம் தேதிக்குள் ரூ. 3—75 மட்டும் அனுப்பி,
10 பிரதிகள் பெற்று ஆங்காங்கே
இலக்கிய நண்பர்களுக்குள் பகிர்ந்தும் கொள்ளலாம்.

விவரங்களுக்கு:
நிர்வாகி, ஞானரதம்
58, 4-வது மெயின் ரோடு, காந்தி நகர், சென்னை-20.

சோவியத் ஆராச்சிக் கழகங்களில் தமிழ்-திராவிட மொழிகளில் ஆய்வுகள்.

நா. வானமாமலை

சோவியத் ஆராய்ச்சியாளர்கள் திராவிட மொழிகளை—முக்கியமாகத் தமிழ்மொழியை—நவீன மொழியியல் ஆய்வு முறைகளைக் கையாண்டு ஆராய்ந்து வருகிறார்கள். சோவியத் விஞ்ஞானக் கழகத்தின் இந்தியவியல் பிரிவில் கடந்த 10-15 ஆண்டுகளில், பல இந்திய மொழிகளின் இலக்கணம், மொழியியல், மொழி வரலாறு, ஒப்பியல் மொழி ஆராய்ச்சி முதலிய துறைகளில் ஆய்வுகள் நடத்தி வருகிறார்கள். பல ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்கள். அம்மொழிகள், அஸ்ஸாமீஸ், ஒரியா, பஞ்சாபி, லஹ்ண்டா, சிந்தி, நேபாலி, மராதி. காஷ்மீரி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சந்தாலி, நெவாரி முதலியனவாகும். இவ்வாராய்ச்சிகள் 1) ஆசிய மக்கள் பண்பாட்டு ஆராய்ச்சிக் கழகத்தின் இந்தியப் பிரிவு 2) மாஸ்கோ பல்கலைக் கழகத்தின் கீழ்த்திசை மொழிகள் பிரிவு 3) சோவியத் அயல்நாட்டு அமைச்சரகத்தின் அயல் மொழிகள் பிரிவு 4) லெனின் கிராடுப் பல்கலைக் கழகத்தின் கீழ்த்திசை மொழிகள் பிரிவு 5) தாஷ்கெண்ட் பல்கலைக் கழகத்தின் கீழ்த்திசை மொழிகள் பிரிவு—முதலிய நிறுவனங்களின் ஆதரவில் நடைபெறுகின்றன.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் திராவிட மொழிகளைப் பற்றிய ஆய்வுகள் பல சோவியத் கல்வி நிறுவனங்களில் அதிகமாயிற்று. திராவிட மொழிகளின் இலக்கிய வழக்கிலும், பேச்சு வழக்கிலும் சோவியத் ஆய்வாளர்கள் கவனம் செலுத்துகிறார்கள். 1958-59ல் சோவியத் மொழி இயலாளர் ஆந்த்ரனுவ் பேச்சுத் தமிழைக்கற்றுக்கொண்டு ஆராய்வதற்காகச் சென்னைக்கு வந்தார்.

கிரீர்ஸன், கோனுவ் என்ற மேல்நாட்டு ஆய்வாளர்கள், பேச்சுத் தமிழ் கொச்சையான பல வட்டார வழக்குகளின் தொகுப்பு என்றும் பண்டையத்தமிழ் என்ற செந்தமிழே விஞ்ஞானத்தையும், பண்பாட்டையும் வெளியிட வல்ல மொழியென்றும் எழுதினார்கள். அவர்களுடைய கூற்றை ஆதாரமற்றதென ஆந்த்ரனுவ் மறுத்தார். தமிழ் வட்டார வழக்குகளை ஒன்றுபடுத்தி, தற்காலத்தில் எல்லா வகையான சிந்தனை வெளியீடுகளுக்கும் ஒரு தேசீயத் தமிழ் மொழியைப் பேச்சு வழக்கில் தமிழர்கள் உருவாக்கி வருவதை ஆந்த்ரனுவ் நிருபித்தார். தற்காலத் தமிழின் இலக்கண உருவங்கள், பண்டைத் தமிழ் இலக்கியங்களின் இலக்கண உருவங்களோடு ஒத்திருக்கவில்லை யென்பதால் தற்கால வழக்கு பண்பட்டதன்று, கொச்சையானது, கீழ்த்தரமானது என்று கூறவியலாது என்று ஆந்த்ரனுவ் கூறினார். இன்று படித்த பண்பாடுடைய தமிழர்கள் பேச்சு வழக்கிலேயே தங்கள் சிந்தனைகளை எல்லாத் துறைகளிலும் வெளியிட்டு வருகிறார்கள். புறநானூற்றுத் தமிழில் சினிமாவிலோ, நாடகத்திலோ, நாவல்களிலோ உரையாடல்களை எழுத முடியாது. பண்டையத் தமிழில் தற்கால அறிவியல் பற்றியோ, அரசியல் பற்றியோ பேசமுடியாது. ஆயினும் தமிழர்கள் தற்கால விஞ்ஞான, அரசியல், சமூக வளர்ச்சி பற்றி பேச்சுத்தமிழில் தான் பேசுகிறார்கள். பண்டைத் தமிழ் சொல் வழக்கும், இலக்கண வழக்கும் தமிழர்களது தற்காலப் பேச்சுக்களிலிருந்து மறைந்து வருகிறது. பண்பாட்டு வளர்ச்சியும், ஒற்றுமையும், வட்டார வழக்குகளின் வித்தியாசங்களைக் குறைத்து வருகிறது. சில இலக்கணமாறுதல்களோடு, தமிழ்நாடு முழுவதற்கும் பொதுவான

ஒரு பொதுப் பேச்சுத்தமிழ் உருவாகிவருகிறது. தமது ஆய்வுகள் மூலம் ஆந்த்ரனுவ் இதனை வலியுறுத்தினர்,

திராவிட மொழிகளில் பல ஆய்வாளர்கள் தமிழுக்கே முக்கியமான கவனம் செலுத்துகிருர்கள். கிளாஸாவ் திருக்குறள், புறநானூறு இரண்டு நூல்களையும், வருணிப்புப் பகுத்தாய்வு (Descriptive analysis) செய்தார். இதனை அவர் கமீல் சுவலபிலோடு கூட்டாகச்செய்தார். தமிழ் மொழியின் வரலாற்று இலக்கணம் எழுதத் திட்டமிட்டு கமீல் சுவலபில்லும், ஆந்த்ரனுவும் அதனைச் செய்து முடித்தார்கள். அதற்குமுன் தமிழ் வரலாற்று இலக்கணம் பற்றிப் பல கட்டுரைகளை ஆந்த்ரனுவ் எழுதினர். கால விகுதிகள் பற்றி ஆந்த்ரனுவ் ஆராய்ந்தார். அவற்றில் நிகழ்காலம் பற்றிய அவருடைய ஆய்வுகள் முக்கியமானவை.

தமிழில் பயன்பாடுபற்றிய சொற்பாகுபாட்டை (Parts of speech) ருதின் ஆராய்ந்தார். அவற்றைப்பல சிக்கலான தேர்வுத் தகுதிகளை அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்த வேண்டும் என்று எழுதினர். சொல்லமைப்பு, சொற்களின் இணைப்பு, சொற்பொருள் இவை யாவையும் கவனித்துச் சொற்களின் பயன்பாட்டைப் பாகுபாடு செய்தல் வேண்டுமெனக் கூறினர்.

ஆந்த்ரனுவ் தற்காலத் தமிழ் மொழியின் இலக்கணம் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார். இதற்காக அவர் காலவாரியாக இலக்கியங்களிலுள்ள மொழிஅமைப்பை ஆராய்ந்து, தற்காலப் பேச்சு வழக்கோடு ஒப்பிட்டு தற்கால மொழி இயல் விதிகளுக்கேற்ப தமிழ் இலக்கணம் எழுதியுள்ளார்.

தமிழ் மொழியோடு ஒப்பிட்டு கன்னடம், தெலுங்கு, மலையாளம், பிராஹுயி முதலிய மொழிகளும் ஆராயப் படுகின்றன. சிறப்பான சில அம்சங்களும், மொழிவரலாறும் ஆராயப் பட்டுள்ளன. தெலுங்கு இலக்கியமொழியில் நூல்வழக்கையும், (கிரந்திக) பேச்சுவழக்கையும் தற்காலத்தில் நாவல் ஆசிரியர்கள் எப்படித் தொடர்பு படுத்துகிருர்கள் என்பதை பெத்ருனிச்சேவா ஆராய்ந்துள்ளார். தெலுங்கு மொழியில் கூட்டுவினைச் சொற்களின் அமைப்பு பற்றி ட்ஷெனிட், குராவ்என்ற ஆய்வாளர் ஆராய்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளார். டாஷ்டகோ என்னும் ஆய்வாளர் கன்னட மொழியில் தன்மை, படர்க்கை வினைமுற்றுக்களின் அமைப்பு பற்றி ஆராய்ந்துள்ளார்.

பத்தொன்பது திராவிட மொழிகளின் மொழியியலை ஒப்பிட்டு ஆராய்ந்து 'திராவிட மொழிகள்' என்ற ஓர் ஆய்வு நூலை ஆந்த்ரனுவ் வெளியிட்டார். அம்மொழிகளாவன: தமிழ், மலையாளம், கோத்தா, தோடா, கன்னடம், கொடகு, துளு, தெலுங்கு, கொலாமி, நய்கி, பார்ஜி, கடபா, கொண்டி, கொண்டா, குயி, குவி, குருஹ், மால்டோ, பிராஹுயி. இதற்கு முன் இவ்வளவு விரிவான ஒப்பியல் ஆராய்ச்சியை மேனுட்டார் எவரும் மேற்கொண்டதில்லை. திராவிட மொழிகளின் பொது ஒற்றுமைகளையும், திராவிட முற்காலப் பொது மொழி ஒன்றின் சிதைவின் விளைவாக திராவிட மொழிகள் பல தோன்றிய வரலாற்றையும் ஆந்த்ரனுவ் வெளிப்படுத்தியுள்ளார்.

திராவிட மொழிகளுக்கும், இந்தோ-ஐரோப்பிய மொழிகள், துருக்கியமொழிகள், யூரலிக் மொழிகள் ஆகிய மொழிக் குடும்பங்களுக்கும் இடையே உள்ள தொடர்புகளையும், ஒற்றுமை—வேற்றுமைகளையும், சோவியத் திராவிட இயலார் ஆராய்ந்துள்ளனர். வோரேபியேவ், டெஸியடாவ்ஸ்கி என்ற ஆய்வாளர்கள் இந்திய ஆரிய மொழிகளுக்கும், திராவிட மொழிகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளை ஆராய்ந்துள்ளார். திராவிட மொழிகளுக்கும் துருக்கிய மொழிகளுக்கும் இடையேயுள்ள வகை-ஒற்றுமைகளை கீரின்பர்க் என்ற அமெரிக்க ஆய்வாளர் ஆராய்ந்தார். அவருடைய ஆராய்ச்சிகளை விமர்சித்து கிளாஸாவ் ஒரு புதிய கொள்கையை உருவாக்கினர். தமக்குமுன் பல ஆய்வாளர்கள் செய்துள்ள ஆராய்ச்சி முடிவுகளை ஆராய்ந்து இலியிச் ஸ்விடிச் என்ற சோவியத் ஆய்வாளர் ஒரு கொள்கையை உருவாக்கியுள்ளார். உலகின் முக்கிய மொழிக் குடும்பங்களின் மொழிகளிலுள்ள அகராதிகளில் காணப்படும் சொற்பொருள் ஒற்றுமைகளை ஆராய்ந்து அவர் திராவிட, இந்தோ ஐரோப்பிய, யூரலிக், கார்த்வெல், செமிடிக் மொழிகள் 'நாஸ்டிராடிக் மொழிக் குடும்பம்' என்ற பொதுமொழிக் குடும்பத்தைச்

சேர்ந்த சிறுகுடும்பங்கள் என்ற கருத்தை வெளியிட்டார். ஆந்திரனுவ், திராவிட, இந்தோ ஆரிய மொழிகளை ஒப்பிட்டும், திராவிட, யூராலிக் மொழிகளை ஒப்பிட்டும், இம்மொழிகளின் ஒற்றுமைக் கூறுகளுக்கு வரலாற்றுப் போக்கான வளர்ச்சிகளும் தொடர்புகளுமே காரணம் என்று வலியுறுத்தினுர். பேச்சுக்கு வெளியீட்டுப் பயன்பாடே முக்கியமாதலால், ஒற்றுமைகள் தோன்றி, படிப்படியாக வலுவுறவோ, வலுக் குறையவோ செய்யும் என்று ஆந்திரனுவ் கருதினுர்.

தற்காலத்தில் லெனின்கிராடிலுள்ள மொழியியலார், கணிதவியலார், வரலாற்றியலார் ஆகிய துறைகளின் ஆய்வாளர்கள் சிந்து சமவெளி அடையாளங்களை ஆராய்ந்து வருகிருர்கள். இது திராவிட மொழியியலோடு தொடர்புடையது. அடையாளங்களையும், எழுத்துக்களையும் எலெக்ட்ரானிக் கம்ப்யூட்டர் மூலம் ஆராய்ந்து, வகை இயலில் இம்மொழி திராவிட மொழிகளின் குடும்பத்தோடு ஒற்றுமையுடையதென லெனின்கிராடு ஆய்வாளர்கள் கருதுகிருர்கள்.

அண்மையில் சோவியத் ஆய்வாளர் வேறு பல இந்திய மொழிகளையும், திபெத்திய, பர்மிய, மான்க்மெர் மொழிகளையும் ஆராய்கிருர்கள். தென்கிழக்காசிய மொழிகள் பலவற்றை லெக்காம்ஸேவ் ஆராய்கிருர். முண்டா மொழிகள் பலவற்றை அவர் ஆராய்ந்துள்ளார். சந்தாலி மொழியின் சொற்றொடர் இலக்கண விதிகளை ஆராய்ந்து அவற்றின் தனித்தன்மையைப் புலப்படுத்தியுள்ளார். இவர் முண்டா, சந்தாலி மொழிகளைப்பற்றிய ஆராய்ச்சியின் சுருக்கங்களைப் புலப்படுத்தியுள்ளார். திபேத்திய பர்மிய மொழிகளின் தொடர்புகளை கொரலேவ் ஆராய்கிருர். இவ்விரண்டு மொழிகளோடும் தொடர்புடைய பலமொழிகளை அவர் கற்றுவருகிருர். இவற்ருேடு தொடர்புடைய பல் இந்தியமொழிகள் உள்ளன. அவற்றுள் ஒன்று அஸ்ஸாமிய மொழி.

வருங்காலத்தில் இந்திய மொழிகளைப்பற்றி ஆய்வுகள் சோவியத் பல்கலைக் கழகங்களில் பெரிதும் விரிவடையும் என்று எதிர்பார்க்கலாம்.

நாமும் நமது பல்கலைக் கழகங்களில் ரஷிய மொழியையும், சோவியத் நாட்டில் வழங்கும் மொழிகளையும் கற்றுத்தரவேண்டும்.

ஆதாரங்கள்

1 Soviet Studies of India-Soviet booklets 1969.

2 Fifty years of Soviet Indology-Academy of Sciences. Inst. of Peoples of Asia-Moscow.

3 Souvenir of the Indo-Soviet cultural Society, Madras State Branch.

4 M. S. Andronov-Introduction of Dravidian languages,

5 M. S. Andronov-A descriptive grammar of literary and spoken Tamil.

6 Special materials supplied by the Information Department of U, S. S. R. Consulate General in Madras.

7 Studies in Indian literature- E. P. Chelyshev.

8 On the Translation of Indian literature in U. S. S. R. E. P. Chelyshev.

9 Studies in Indian languages M.S. Andronov

மாஸ்கோவில் திருக்குறள்.

டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.

பல்கலைக்கழக நிதிக்குழுவின் சார்பில் நான் ஓர் பண்பாட்டுக் குழுவின் உறுப்பினனாக சோவியத் யூனியனுக்குச் சென்றேன். அங்கு ஓர் வாடகைக்காரில் ஏறினேன். எனது நண்பர்களுக்காகச் சிறிதுநேரம் காரிலேயே காத்திருந்தேன். கார் டிரைவர் எனது கரிய நிறத்தைக் கவனித்தார். சோவியத் மக்கள் நிறமுடையவர்களிடம் இயல்பாகவே அதிக அன்பு காட்டுகிறார்கள். அதிகக் கருப்பாக இருப்பவர்களிடமும் அதிக அன்பு காட்டுகிறார்கள். எங்கள் டிரைவர் நான் ஆப்பிரிக்க வாசியென்று எண்ணியிருக்க வேண்டும். நான் இந்தியன் என்று கூறியதும் அவரது முகம் மலர்ந்தது. அவர் காந்தியும், நேருவும் பிறந்த நாடு என்று ஞாபகப் படுத்தி கொண்டிருக்க வேண்டும். இருப்பினும் அவருடைய ஆர்வம் திருப்தியடையவில்லை. அவருக்கு இந்தியாவைப் பற்றித் தெரியும். எனவே என்னிடம் பல கேள்விகள் கேட்டார். அவருக்குத் தெரியாது என்றெண்ணி நான் தமிழ் நாடு இந்தியாவின் தென்பகுதியில் உள்ளது என்று சொன்னேன். அவருடைய சந்தோஷம் அதிகமாயிற்று. தெரிந்த விஷயத்தை மேலும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் கேள்விகள் கேட்டார். குறள் உலகத்தின் பைபிள் என்று, நான் பெருமைப் படுவதுண்டு. அவர் "திருவள்ளுவரையும் குறளையும் பற்றித் தெரியுமா?" என்று என்னைக் கேட்டார். நான் தமிழ்ப் பேராசிரியர் என்பது அவருக்குத் தெரியாது. அது ஒரு சிறப்பான நூலென்றும், வீட்டு விஷயங்களிலிருந்து, சர்வதேசிய விஷயங்கள் வரை, இன்று நம்மை நோக்கியுள்ள பிரச்சனைகளையெல்லாம் பற்றிக் கூறுகிறதென்றும் அவர் விளக்கினார். யாரோ சொல்லி இவற்றையெல்லாம் அவர் கூறவில்லை. தானே தினம் இரண்டு குறள்களைப் படிப்பதாகச் சொன்னார். இந்த நிகழ்ச்சியை என்னால் மறக்கவே முடியாது. சொற்ப சம்பளம் பெறுகிற கீழ்நிலை ஊழியரான அவருடைய அறிவைக் கண்டு, அவருடைய நாட்டின் பெருமையை நான் உணர்ந்து கொண்டேன். இந்நிகழ்ச்சிக்குப் பின் இந்தியாவில் அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டில் படித்தவர்களில் கூட எத்தனைபேர் குறளைப் படித்திருப்பார்கள் அல்லது கேள்விப் பட்டிருப்பார்கள் என்று சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. மாஸ்கோவில் வாழும் பூர்ணம் சோமசுந்தரம், மாஸ்கோவில் உள்ள ஒரு அகெட மெஷியன் (ஒரு ஆய்வுப்பேராசிரியர்) தினந்தோறும் ஒரு குறட்பாவைப் படித்துச் சிந்திப்பதாகவும், அது எப்படி உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது என்று வியந்து கூறியதாகவும் சொன்னார்.

புகழ்பெற்ற அகெதெமிஷியனிலிருந்து, கார் டிரைவர் வரை அந்நாட்டில் குறளைப் படிக்கிறார்கள். அறிவுலகம் பரந்து, ஒழுக்கத்தின் பால் ஈடுபாடுகொண்டு, ஒரு சிறந்த நூலாசிரியரோடு நேரடித் தொடர்பு கொண்டு ஒரு வளமிக்க ஆன்மீக வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வமே அவர்களைப் பிறநாட்டு நல்லாசிரியர் நூல்களைக் கற்றறியத் தூண்டுகிறது. உலகப் பண்பாட்டின் சிறந்த அம்சங்களையெல்லாம் பலநாட்டு அறிஞர்களது நூல்களைக் கற்று அவர்கள் அறிந்து கொள்ளுகிறார்கள். தற்காலப் போரிடும் உலகில், உலகப் பேரறிஞர்களது சிறந்த நூல்களைக் கற்று, அவர்களது மனிதநேசத்தை தம்வயப் படுத்திக் கொள்ளுவதில் எவ்வளவு உயர்ந்த மனநிலையை இம்மக்கள் அடைகிறார்கள் என்று நினைத்துப் பார்த்தேன். "எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை" என்ற ஆங்கிலப் பழமொழிக்கேற்ப இவர்கள் வாழ்கிறார்கள் என்று எனக்குத் தோன்றியது. பரந்த அடிப்படையில் உருவான உள்ளப் பண்பாடு இவர்களிடம் உள்ளது. மற்ற நிலைகள் எப்படியிருப்பினும் இது ஒன்றே அவர்களுக்குச் சிறப்பையளிக்கவில்லையா?

இப்பொழுது பெர்ட்ராண்டு ரஸ்ஸல் கூறியதை நான் நினைத்துக்கொண்டேன். அவர் சோவியத் ரஷ்யாவிற்குச் சென்று திரும்பியதும் தத்துவஞானி கான்டின் (Kant) நூல்களை 10

லட்சம் பிரதிகள் அச்சிட்டு விற்றுவிடுகிற ஒரு அரசும், மக்களும் ஏதோ ஓர் அற்புதமான உயிர்த்துடிப்புடையவர்களாகவே இருத்தல் வேண்டும் என்று கூறினர். ஏனெனில் அவர்கள் போற்றுகிற மார்க்ஸ், லெனின் இவர்களுடைய தத்துவத்திற்கு காந்தின் தத்துவம் நேர் முரணானது. இதுவே அந்நாட்டு மக்களின் பரந்த பண்பாட்டிற்குச் சான்ருக விளங்குகிறது.

இதை மனதில் கொண்டே நான்,தமிழர்கள் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய சில பண்பாட்டுக் கூறுகளைக் கண்டறிய தேடிக்கொண்டிருந்தேன். எனவே லட்சக்கணக்கில் உலகில் சிறந்த ஆசிரியர்களது நூல்கள் வெளியிடப்படுவதையோ,அவையனைத்தும் சிலவாரங்களில் விற்றுப்போய்விடுவதையோ, நான் முக்கியப்படுத்திச் சொல்ல விரும்பவில்லை. டிக்கன்ஸின் நாவல்கள் லட்சக்கணக்கில் விற்கப்பட்டன என்று நான் கேள்விப்பட்டேன். இன்றும் பலர் புத்தகம் வாங்க விரும்புகிருர்கள். ஆனுல் புத்தகங்கள் கிடைக்கவில்லை. டிக்கன்ஸின் நாவல்களில் தற்காலத்தைக் குறித்த சிந்தனைகள் எவையும் இல்லையெனினும் அவருடைய நகைச்சுவை, பாத்திரப்படைப்பின் கலைத்திறன் ஆகியவை என்றும் அழியாமல் ஆர்வமூட்டுகிற தன்மையுடையன, என்று சோவியத் வாசகர்கள் கருதுகின்றனர். பிக்விக், மிக்காபர் ஆகிய பாத்திரங்களைப்பற்றி ரஷ்யர்கள் விவாதிக்கிருர்கள். நம்நாட்டில் ஆங்கிலம் படித்தவர்களுக்கு இத்தகைய இலக்கிய அறிவும் விமர்சனத் தகுதியும் இருக்கின்றனவா?"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற உயர்ந்த நெறியைப் போற்றிய பண்டைப்புலவர் வழித்தோன்றல்களான நம்முடைய இன்றையக் கல்வி முறையில் என்ன குறைபாடு இருக்கிறதென்று நாம் கண்டறிய வேண்டும். இதுபோகட்டும் சோவியத் நகரங்களின் பூங்காக்களில் புத்தக அலமாரிகள் உள்ளன. அங்கு புதிய புதிய புத்தகங்கள் விலைக்குக் கிடைக்கும். விலையும் குறைவு. தொழிலாளிகள் அப்புத்தகங்களை வாங்குகிருர்கள். தமிழ்ப்புத்தகங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். கல்கியின் நாவல் ஒன்று 50,000 பிரதிகள் சில வாரங்களில் செலவாயிற்று என்று கேள்விப்பட்டேன். இதனை சொற்ப எழுத்தறிவுடையவனும் படித்துவிடலாம். இந்தப்புத்தகத்தைப் போலவே எளிதில் விளங்காத குறளின் மொழிபெயர்ப்பும் ஆயிரக்கணக்கில் சில வாரங்களில் விற்றுபோய்விட்டதாம். இந்தப் புத்தகங்களையெல்லாம் ரூதின், ஆந்த்ரனுவ் போன்ற தமிழ் ஆராய்ச்சியாளர்கள் மட்டுமா வாங்குகிருர்கள்?அல்லது மிகவும் படித்தவர்கள் மட்டுமா வாங்குகிருர்கள்? இல்லை. எங்களுடைய கார் டிரைவர் குறளை வாங்கிப்படித்திருக்கிருர். அவர் ரஷ்ய மொழிபெயர்பைத்தான் படித்திருப்பார். அம்மொழிபெயர்ப்பைப்பற்றி சோவியத் தமிழ்ப் பேராசிரியர்களுக்கு அவ்வளவாகத் திருப்தி இல்லை. சீக்கிரத்தில் இன்னும் ஓர் புதிய செய்யுள் வடிவிலான மொழிபெயர்ப்பை வெளியிடப்போகிருர்கள். தமிழ்நாட்டில் இத்தனை பிரதிகள் குறளை வெளியிட்டால், சில வாரங்களில் விற்றுப்போகுமா? பல வருஷங்களிலாவது இவ்வளவு எண்ணிக்கையில் குறளை விற்றுவிடமுடியுமா? என்று நீங்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

தமிழர்கள் தமிழ்ப் பண்பாடு பற்றியும், தமிழ்மொழியைப் பற்றியும் பெருமை கொண்டிருப்பது நியாயமே. பிறமொழிகளைப் பற்றியும், பண்பாடுகளைப் பற்றியும் நமக்குத் தெரியுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டாம். தமிழை மட்டுமே எடுத்துக் கொள்ளுவோம். சோவியத் மக்களையும், சோவியத் அரசையும் போல நாம் பண்பாட்டை வளர்க்கிருேமா? நாம் இன்னும் வெகுதூரம் முயன்று உயர வேண்டியுள்ளது. நாம் திருப்தியடைந்துவிடக் காரணமில்லை. உலகநாடுகள் நம்மைப் பொருளாதார முற்றுகைக்கு உள்ளாக்கிய போது நமக்கு சோவியத் நாடு அளித்த வியத்தகு உதவியை மட்டுமின்றி அவர்கள் நமக்களிக்கும் பண்பாட்டு உதவி பற்றியும் நாம் அவர்களோடு செய்துகொண்ட சமாதான ஒத்துழைப்பு ஒப்பந்தம் நமக்கு நினைவூட்டுமாக.

Excavations at Pumpuhar.

Dr. K. V. Raman

Kaveripumpattinam or Pumpuhar, the celebrated port city of the Early Cholas, is now an insignificant fisherman's hamlet on the eastern coast of Tamilnad, where the River Kaveri joins the sea. Its flourishing commerce, its well-planned lay-out, beautiful mansions, the harbour area, the religious centres etc, are all eulogised in early Tamil works like the **Silappadikaram** the **Manimekhalai** and the **Pattinappalai**. The latter work gives graphic descriptions of the gay inhabitants of the area and their noble traits; the foreign merchants like the Yavanas (Greeco-Romans), who lived there for trade purposes; the artisans from places like Avanti and Ujjaini in upper India etc. The presence of temples for Siva, Vishnu, Balarama, Muruga as well as the Jain and Buddhist monasteries is attested by the works. According to the **Manimekhalai**, Goddess Champapati was the guardian deity of the city and indeed of the Jambudvipa as a whole (Jambudvia-Kavardhaivam). She was venerated by all the people, as She was the "Grand old Lady" or Thonmudatti, as the epic mentions. There is now an old and dilapidated brick temple at Kaveripumpattinam dedicated to Champapati. The foreign notices on Kaveripumpattinam are illuminating. There is reference in the **Periplus** to the two capitals of the Cholas in the region inland called Argaru (Uraiyur), and 'the coast country which lies on a bay', the latter obviously referring to the port city or the Pattinam. Ptolemy is more specific and he refers to the city as the 'Kaberis Emporion,'.

The early Prakrit literature of the Buddhists make references to the city. **The Question of King Milinda** a work of the beginning of the Christian era, refers to this city as Kolapattana, one of the best known ports of the times. In the Buddhist Jataka story, a certain Akitti is said to have settled down in one of the gardens near kaveripumpattinam.

But this great city, according to the **Manimekhalai**, was destroyed by the sea during the time of the Chola King Ilam Killi. The epic says that the Chola king had lost his son and, in his great grief, he forgot to celebrate the annual Indra festival. This enraged Goddess Manimekhalai who cursed the city to be swallowed (**Ani Nagar Tannai Alaikadal Kolga**). Though this reference is only to a supernatural incident, it may be taken as an echo of some actual sea-erosion or a high tidal-wave that lashed a part of the city. But apparently, the entire city was not lost. It was still in a good state even in the 5th Century A. D., when Buddhadatta, the great Buddhist scholar and poet, stayed in a **Vihara** and wrote his Prakrit work, the **Abhidammavatara**. This work described the city thus: "Kaveripattinam is inhabited by men and women of noble descent. The city is complete in all aspects and presented a beautiful app-

earance. There are many bazaars selling various goods like the precious gems. The city is full of lofty and palatial mansions, beautiful with entrance-towers".

In the 7th Century A. D., Sayavanam and Pallavaneswaram, two suburbs of Kaveripumpattinam, were sung by the **Tevaram** hymners, Appar and Sambandar. They refer to the places as "Kaveripattinathu Pallavanes-waram" and "Puhar-Sayakkade", clearly making reference to the parent town Puhar. Inscriptions of the 11th and 12th Centuries A. D. found in the temples at Sayavanam, mention the latter place as a part of Kaveripattinam in Nangur Nadu, a subdivision of Rajadhirajavalanadu (261 to 273 of 1911).

Archaeological Evidence: The explorations and excavations, conducted by the Archaeological Survey of India since 1962, have clearly established that, inspite of the constant duel between the land and the sea, the ancient city had not been fully engulfed and atleast a few portions of it are still lying buried. Surface exploration on the beach revealed the vestiges of ancient habitations like the ring-wells, pottery, b i-ck-bats and beads, strewn about the place. The ring-wells were covered by sand Habitation sites, going back to the time when the city was as the zenith of its glory, have been plotted at places like Vanagiri, Neidavasal and Kilaiyur. Square copper coins, bearing the royal crest of the Cholas, viz , the tiger on one side and the elephant on the other, black and-red-potsherds and the beads of semi-precious stones were found on the surface at the sites. Rouletted pottery of both grey and black fabric were also found. A Roman coin was found in the site called Vellaiyan Iruppu. Several beautiful terracotta figurines were found at places like Melapperumpallam, all showing that these places were once the centres of early culture and activities.

Detailed excavations done at three places resulted in the discovery of three monuments of outstanding importance in the history of Tamilnad. They are a brick-built wharf at Kilaiyur, a water-reservoir and a Buddhist monastery.

The wharf was found in a low-lying area and it was built of large-sized bricks (24 × 16 inches) and it was lined with sturdy wooden-poles for anchoring the boats 'Pattinappalai" described such wharves where the boats were moored to wooden poles for loading and unloading purposes, like a row of horses kept in a stable. Small boats used to ply in the back-waters of Kaveripumpattinam, carrying salt to the interior places in exchange for paddy. Radio-carbon analysis of the wooden-specimens has given its date as the third century B C.

Another important and elegant structure unearthed was a water-reservoir at Vanagiri. Situated about a mile away from the sea' it was made of an earthern bund with a facade built of bricks. It was beautifully designed with two graceful curves to receive the water and let into a pond. Probably a small channel from the river Kaveri or one of its numerous offshoots served as the feeding-channel. The paved inlet channel was covered by a corbelled arch.

But perhaps the most significant dis-

covery was that of a Buddhist monastery in the Melaiyur portion of Kaveripumpattinam. An entire wing of a Vihara, consisting of seven rooms, each about 8 feet square, was used for the residence of the Buddhist monks. Adjacent to this was another ornamental structure, perhaps a part of mandapa. The building walls, were decorated with beautiful stucco figures and paintings. On such exquisite, stucco-head, full of artistic grace, was found in the excavations A fine copper image of the Buddha in dhyana pose was found in one of the rooms A large lime-stone slab, bearing thesacred feet of the Buddha (Buddha-pada) and other auspicious symbols like the Purnaghata, Swastika etc. is strikingly reminiscent of similar ones found at the famous Buddhist centres of Andhra like Amaravati and Nagarjunakonda with which Kaveripumpattinam was undoubtedly in live contact.

The excavations so far done have clearly established that the sea-erosion had not done full damage to the ancient city and a few portions atleast lie buried in land. As has been observed by Sri K. R. Srinivasan, the two main difficulties that face the excavator in this area are extensive cultivatien and the present-day habitation. These two obstacles are quite formidable and the future excavations depend on finding a successful solution to these problems.

Statement - Form IV

The following is a Statement of ownership and other particulars about "Aaraaichi" magazine as required under rule 8 of the Registration of News papers (Central) Rules 1956.

Title of News paper	... Aaraaichi
Language	... Tamil and English
Periodicity	... Quarterly
Publisher's Name	... N. Vanamamalai
Nationality	... Indian
Address	... 258. Tiruchendur Road, Palayamcottai, Tirunelveli—2,
Place of Publication	-do
Printer's Name	... S Justin Nesamoni C M. S Press, Palayamcottai
Nationality	.. Indian
Address	... C. M. S. Press, Tiruchendur Road, Palayamcottai.
Editor's Name	... N. Vanamamalai
Nationality	... Indian
Address	... 258, Tiruchendur Road, Palayamcotta. Tirunelveli—2i
Owner's Name	... N. Vanamamalai.

I, N. Vanamamalai hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief

1—5—72
Palayamcottai

(Sd) *N. Vanamamalai.*

Sakthi Sugars Limited

Manufacturers of:

SUPERIOR QUALITY
WHITE CRYSTAL SUGAR

Producers of:

SORGHUM, MAIZE.
BAJRA, Ir 5 AND
OTHER HYBRID SEEDS
(CERTIFIED N. S. C.)

Registered Office:

72, SEN GUPTA STREET
P. B. NO. 960
RAMNAGAR
COIMBATORE - 9.